தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

தமிழ் இணையக் கல்விக்கழகம்

பழந்தமிழர் வாழ்வியலைப் பறைசாற்றும்
சங்க இலக்கியப் பாடல்கள்
தமிழ்-ஆங்கில விளக்கங்கள் மற்றும் ஓவியங்களுடன்

சங்கத்தமிழ் நாள்காட்டி

தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை

தமிழ் இணையக் கல்விக்கழகம்

உலக மொழிகளில் தொன்மை வாய்ந்த தமிழ்மொழியின் இலக்கியப் பெருமிதங்களான பத்துப்பாட்டிலும் எட்டுத்தொகையிலும் உள்ள அறிவுச் செல்வங்களை இன்றைய தலைமுறையினர் பெறுவது இன்றியமையாதது. இதற்கான பாதை அமைக்கும் முயற்சியாக, வாழ்க்கையையும் இயற்கையையும் மனித உணர்வுகளையும் படம்பிடித்துக்காட்டும் சிறந்த 366 சங்க இலக்கியப் பாடல்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவை பள்ளி, கல்லூரி மாணவர்கள் மற்றும் ஓவியர்களின் கைவண்ணத்தில் ஓவியங்களாகத் தீட்டப்பட்டுள்ளன. பாடல்கள், தெளிவுரை, ஆங்கில மொழிபெயர்ப்பு, ஓவியங்கள் ஆகியவற்றுடன் எல்லா ஆண்டுகளுக்கும் பொருந்தும் வகையில் மேசை நாள்காட்டியாக வடிவமைக்கப்பட்டுள்ளது. ஒப்பற்ற தமிழ்ச் சமூகத்தின் மரபினைக் கொண்டாடும் நோக்கில், இந்நாள்காட்டி தமிழ் இணையக் கல்விக்கழகத்தால், தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO) மற்றும் தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகத்தின் (SIPCOT) நிதி நல்கையுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

சங்கத்தமிழ் நாள்காட்டி

கருத்தாக்கம்

திரு. த. உதயச்சந்திரன், இ. ஆ. ப
தலைவர், தமிழ் இணையக் கல்விக்கழகம்.

முனைவர் வீ.ப. ஜெயசீலன், இ. ஆ. ப
மாவட்ட ஆட்சியர், விருதுநகர்.

திரு. சே.ரா. காந்தி, இ. ர. பா. ப
இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம்.

திருமதி. இரா. மதுரா
உதவி இயக்குநர், தமிழ் இணையக் கல்விக்கழகம்.

பாடல்கள் தேர்வு

டாக்டர் சங்கரசரவணன்
இணை இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.

முனைவர் ப. சரவணன்
உதவி இயக்குநர், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம்.

பாடல்கள், ஓவியங்கள் ஒருங்கிணைப்பு

முனைவர் சா. கருணாகரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, சென்னைக் கிறித்தவக் கல்லூரி.

திரு. ரா. வசந்தகுமரன்
ஓவியர், புதுச்சேரி.

ஆங்கில மொழிபெயர்ப்பு

திரு. ப. செந்தில்நாதன்
மொழிபெயர்ப்பாளர், சென்னை.

திருமதி. ச. நிரஞ்சனி
ஆங்கிலப் பேராசிரியர், அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

வடிவமைப்பு

பிரான்வதி டிஜிட்டல் சர்வீசஸ்
சென்னை.

நிதி நல்கை

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (TIDCO)
தமிழ்நாடு மாநில தொழில் மேம்பாட்டுக் கழகம் (SIPCOT)

படைப்பாக்கம்: தமிழ் இணையக் கல்விக்கழகம், சென்னை.

தமிழ் இணையக் கல்விக்கழகம் செயல்பாடுகள்

- இணையவழித் தமிழ்க் கல்வி
- கணினித் தமிழ் மென்பொருள்கள் உருவாக்கம்
- மின் நூலகம் (http://www.tamildigitallibrary.in)

காப்புரிமை ©

தமிழ் இணையக் கல்விக்கழகம்

https://www.tamilvu.org/

TamilVirtualAcademy

வி. மைதிலி
எஸ்.பி.ஓ.ஏ. பள்ளி மற்றும் இளநிலைக் கல்லூரி, சென்னை.

01

ஜனவரி

January

யாதும் ஊரே யாவரும் கேளிர்

யாதும் ஊரே; யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா;
நோதலும் தணிதலும் அவற்றோர் அன்ன;
சாதலும் புதுவது அன்றே; வாழ்தல்
இனிதுஎன மகிழ்ந்தன்றும் இலமே; முனிவின்
இன்னாது என்றலும் இலமே! (புறம். 192:1–6)

கணியன் பூங்குன்றனார்

பொருள்:

எல்லா ஊரும் என் சொந்த ஊர், எல்லா மக்களும் என் உறவினர்தான். நன்மையும் தீமையும், துன்பமும் அதன் தீர்வும் பிறரால் வருவது இல்லை. இறப்பு என்பதும் புதியது இல்லை. எனவே வாழ்தலை இன்பம் என்று மகிழ்வதும், துன்பம் என்று வெறுப்பதும் இல்லை.

Every town's our town; every man, our kinsman;
Good and bad happen not because of others;
Suffering and relief are similarly ordained;
Dying isn't something unknown;
Neither do we rejoice that life is a joy,
Nor in disgust, do we call it a misery.

ஜனவரி
JANUARY **02**



கோ. மதிஸ்குமார்
ஓவியர், இலங்கை.

அப்படிச் செய்ய மாட்டார்!

நீர் இன்று அமையா உலகம்போலத்
தம் இன்று அமையா நம் நயந்துஅருளி,
நறுநுதல் பசத்தல் அஞ்சிச்
சிறுமை உறுபவோ? செய்பு அறியலரே! (நற். 1:6–9)

கபிலர்

பொருள்:

நீர் இல்லை என்றால் இந்த உலகில் எதுவும் இல்லை. அதுபோல அவர் இல்லை என்றால் நான் வாழ மாட்டேன் என்பதை அறிவார். என்னுடைய நெற்றியில் பசலை படரும் அளவிற்குத் துன்பம் ஏற்படும் என அஞ்சி, என்னைப் பிரியும் சிறிய செயலைச் செய்யாமல் எனக்கு அருள்புரிவார்.

Like the world that cannot exist without water
I too cannot exist without him;
Will he ever do such mean stuff to let my fragrant forehead
Turn pale with sickness?
No, he won't.

03
ஜனவரி
January

எனக்கு அருள்வார்

தொல்கவின் தொலைய, தோள் நலம் சாஅய,
நல்கார் நீத்தனர் ஆயினும், நல்குவர்! (நற். 14:1–2)

மாமூலனார்

பொருள்:

தலைவர் என்னைப் பிரிந்ததால் என் அழகு தேய்ந்தது; தோள் வாட்டம் கொண்டது. மீண்டும் வந்து அவர் எனக்கு அருள்புரிவார்.

Making my former beauty fade and shoulders slump,
He abandoned me; Yet he is a good man.



கோ. மதிஸ்குமார்
ஓவியர், இலங்கை.

ஜனவரி
JANUARY 04

நெஞ்சே! எது நல்லது?

புணரின் புணராது பொருளே; பொருள்வயின்
பிரியின் புணராது புணர்வே; ஆயிடைச்
செல்லினும், செல்லாய் ஆயினும், நல்லதற்கு
உரியை–வாழி, என் நெஞ்சே! (நற். 16: 1–4)

சிறைக்குடி ஆந்தையார்

பொருள்:
காதலியோடு ஒன்றியிருந்தால் செல்வம் சேராது.
பொருளுக்காகப் பிரிந்துபோனால், காதலி துன்பம் அடைவாள்.
என் நெஞ்சே!, இந்த இரண்டில் எது நல்லது எனத்
தேர்ந்தெடுக்கும் உரிமை உனக்கு உண்டு.

If I choose to be with her, wealth won't embrace me;
If leave her to chase wealth, I will lose her embrace;
Whether I should leave or not leave
You decide what's good for me, my blessed heart.



கோ. மதிஸ்குமார்
ஓவியர், இலங்கை.

த. சதீஸ்வேலன்
ஓவியர், சென்னை.

05

ஜனவரி

January

தலைவனுடனான என் நட்பு

நிலத்தினும் பெரிதே; வானினும் உயர்ந்தன்று;
நீரினும் ஆர் அளவின்றே– சாரல்
கருங் கோல் குறிஞ்சிப்பூக் கொண்டு,
பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே! (குறுந். 3)

தேவகுலத்தார்

பொருள்:

மலைச் சாரலில் உள்ள குறிஞ்சிச் செடிகளில், பூக்கள் பூத்துள்ளன. அப்பூக்களிலிருந்து தேனீக்கள் தேனை எடுத்துப் பெரிய தேனடைகளை உருவாக்கும் நாட்டைச் சேர்ந்தவன் தலைவன். அவனோடு நான் கொண்ட காதலானது, பூமியைவிடப் பெரிது. வானைவிட உயர்வானது. கடலைவிட ஆழமானது.

Larger than the earth, loftier than the sky,
And Lot deeper than the ocean,
Is my love for the man from the hillside,
Where copious honey is drawn
From dark stemmed *kurinchi* flowers.

ஜனவரி JANUARY 06

ஆ. மகாதேவன்
ஓவியர், ஈரோடு.

யார் இவர்கள்? இரக்கத்திற்குரியவர்கள்!

வில்லோன் காலன கழலே; தொடியோள்
மெல்அடி மேலவும் சிலம்பே; நல்லோர்
யார்கொல்? அளியர்தாமே! (குறுந். 07: 1–3)

பெரும்பதுமனார்

பொருள்:

மூங்கில் நெருங்கி வளர்ந்திருக்கும் பாலை நில வழியில் கால்களில் வீரக் கழல்கள் அணிந்து, வில்லை ஏந்திய ஆடவனும், கையில் வளையலும் கால்களில் சிலம்பும் அணிந்து, பெண்ணும் செல்கிறார்கள். இவர்கள் யார்? இரக்கத்திற்கு உரியவர்கள்!

The archer's feet bear warrior's anklet;
The bangled girl's tender feet are adorned
With maiden's anklet; Who are these two?
So pitiable are they!

07

ஜனவரி

January

என்னிடம் மட்டும் பெருமொழி பேசுபவன்

எம்இல் பெருமொழி கூறி, தம்இல்,
கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல,
மேவன செய்யும், தன் புதல்வன் தாய்க்கே! (குறுந். 8: 3–6)

ஆலங்குடி வங்கனார்

பொருள்:

தலைவன், என் வீட்டிற்கு வரும்போதெல்லாம், என்னைப் பற்றிப் பெருமையாகப் பேசிக்கொள்வான். ஆனால், அவனது மகனை ஈன்ற தாயாகிய மனைவியின் வீட்டிற்குச் சென்றால், கண்ணாடியின் முன்நின்று கையைத் தூக்கினால் நிழல் உருவமும் கையைத் தூக்குவது போல, மனைவி சொன்னபடி எல்லாம் ஆடுவான்.

(The courtesan mocks him thus)
He talks much when he's in my house,
But in his house,
Like a mirror image lifting hands and leg
Reflecting actions of one in front of it,
He acts as per the wish of his son's mother.

கா. தனாஸ் தீபக் ராஜன்
ஓவியர், சேலம்.

ஜனவரி
JANUARY 08

எயினர் வழிப்பறி செய்யும் வழி

எறும்பி அளையின் குறுபல் சுனைய
உலைக்கல் அன்ன பாறை ஏறி,
கொடு வில் எயினர், பகழி மாய்க்கும்
கவலைத்து என்ப, அவர் தேர் சென்ற ஆறே! (குறுந். 12: 1–4)

ஓதலாந்தையார்

பொருள்:
தலைவன் தேரில் சென்ற வழியானது எறும்பின் அளை போல, இரண்டு பக்கத்திலும் சுனைகளைக் கொண்ட குறுகலான வழி: கொல்லரது உலைக்களத்து இரும்பைத் தாங்கும் கல்லைப் போன்ற வெம்மையுடைய பாறைகளைக் கொண்டது: வளைந்த வில்லையுடைய எயினர், கூர்தீட்டிய அம்பை வைத்துக்கொண்டு வழிப்பறி செய்யும் தன்மையுடையது.

Murderous hunters sharpen their arrows
On rocks that are as hot as a blacksmith's forge
And dotted with multiple small springs
Like pores that dot ant nests;
Such is the way my lord's chariot must cross!

கா. தனாஸ் தீபக் ராஜன்
ஓவியர், சேலம்.

கு. மோகன்ராஜ்
ஓவியர், கோயம்புத்தூர்.

09
ஜனவரி
January

பெருஞ்சோறு தந்த உதியஞ்சேரலாதன்

அலங்குளைப் புரவி ஐவரோடு சினைஇ,
நிலத்தலைக் கொண்ட பொலம்பூந் தும்பை
ஈரைம் பதின்மரும் பொருது, களத்து ஒழியப்
பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்!

(புறம். 2: 13–16)

முரஞ்சியூர் முடிநாகனார்

பொருள்:

அசையும் தலை அணி கொண்ட குதிரைகளுக்கு உரியவர்கள் பாண்டவர்கள். அவர்களுடன், தமதாக நாடுகளை ஆக்கிக்கொண்ட, பொன் தும்பை மாலை சூடிய துரியோதனன் முதலான கௌரவர்கள் நூறு பேரும் கோபத்துடன் போரிட்டனர். அவர்கள் இறக்கும்வரை, போர்க்களத்தில் இருபக்கத்தினருக்கும் அளவில்லாமல் பெருஞ்சோறு தந்தவன் சேரமன்னன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன்.

In the battle for land between the five (Pandavas)
Riding horses that toss their heads up and down,
And the Hundred (Kauravas) wearing golden *thumbai* flowers,
You fed both armies without any bias!

ஜனவரி JANUARY 10

பா. கோபி கிருஷ்ணன்
ஓவியர், மதுரை.

பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி

பொன் ஓடைப் புகர் அணிநுதல்
துன்அருந்திறல் கமழ்கடாஅத்து
எயிறுபடையாக எயில்கதவு இடாஅக்
கயிறுபிணிக் கொண்ட கவிழ்மணி மருங்கில்
பெருங்கை யானை இரும்பிடர்த் தலைஇருந்து
மருந்துஇல் கூற்றத்து அருந்தொழில் சாயாக்
கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி! (புறம். 3: 7–13)

இரும்பிடர்த்தலையார்

பொருள்:

பொன்னால் ஆன பட்டத்தை உடைய புள்ளிகள் கொண்ட மத்தகத்தில் வலிமையால் வெளிப்படும் மதநீரையும், பெரிய துதிக்கையையும், கோட்டைக் கதவை முட்டும் படைக்கலம் போன்ற தந்தத்தையும் கொண்டது போர் யானை. அந்த யானையின் மணி கோத்த கயிறு கட்டப்பெற்ற பெரிய கழுத்தில் அமர்ந்திருக்கும், யமனுக்கு இணையாகப் பகைவர் உயிரைப் பறிக்கும் வலிமையான வாளைக் கையில் ஏந்தியுள்ள பெரும் புகழுடைய வழுதியே!

Of unapproachable strength and smell of frenzy,
Neck adorned with jangling chains
Using its tusk as weapon to break down enemy forts –
Astride this elephant with massive trunk
Is famed Vazhuthi who doesn't tire of death and destruction!

11
ஜனவரி
January

சோழன் உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னி

நீயே, அலங்குஉளைப் பரீஇ இவுளிப்
பொலந்தேர்மிசைப் பொலிவுதோன்றி,
மாக்கடல் நிவந்து எழுதரும்
செஞ்ஞாயிற்றுக் கவினை மாதோ
அனையை ஆகன்மாறே
தாய்இல் தூவாக் குழவி போல,
ஓவாது கூஉம், நின் உடற்றியோர் நாடே! (புறம். 4: 13–19) பரணர்

பொருள்:

அசையும் தலை அணி சூடிய வேகமாகச் செல்லும் குதிரைகள் பூட்டப்பெற்ற பொன் தேரில் பொலிவுடன் நீ தோன்றுகிறாய். உன் தோற்றம், பெருங் கடலில் உதிக்கும் செஞ்சூரியனைப் போல் அழகுடன் விளங்குகிறது. ஆனால், உன்னுடன் பகைத்துப் போரிட்டவரின் நாடு, தாயை இழந்த குழந்தை பாலில்லாமல் தொடர்ந்து அழுவதைப் போல, கூக்குரலுடன் பொலிவிழந்து காணப்படுகிறது.

Riding a golden chariot driven by swift horses,
You are handsome like the golden sun
Rising from the dark sea! because of your nature,
The land of your enemies cries incessantly
Like an infant separated from its mother!



ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

ஜனவரி
JANUARY 12

பாண்டியன் பல்யாகசாலை
முதுகுடுமிப் பெருவழுதி

வடாஅது பனிபடு நெடுவரை வடக்கும்,
தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்,
குணாஅது கரைபொரு தொடுகடல் குணக்கும்,
குடாஅது தொன்றுமுதிர் பௌவத்தின் குடக்கும்,
கீழது முப்புணர் அடுக்கிய முறைமுதற் கட்டின்
நீர்நிலை நிவப்பின் கீழும், மேலது
ஆனிலை உலகத்தானும், ஆனாது
உருவும் புகழும் ஆகி! (புறம். 6: 1–8) **காரி கிழார்**

பொருள்:
வடக்கில் உள்ள பனி படர்ந்த இமயமலையை வடஎல்லையாகவும், தெற்கில் உள்ள வெள்ளப்பெருக்குடைய குமரி ஆற்றைத் தென் எல்லையாகவும், கிழக்கில் கரையில் அலை அடிக்கும் கடலைக் கிழக்கு எல்லையாகவும், மேற்கில் பழமை வாய்ந்த கடலை மேற்கு எல்லையாகவும் கொண்டது உன் நாடு. மண்ணுலகம், விண்ணுலகம், தேவர் உலகம் என்னும் மூன்றடுக்கு உலகத்தில் மண்ணுலகம் முதலாகத் தேவர் உலகம் வரை உன்னுடைய புகழ் பரவியுள்ளது.

May your fame and awe be unmatched in
Lofty snow-covered mountains to the North,
Formidable *kumari* river to the South,
Seas with shore crashing waves to the East,
Ancient ocean to the North,
Netherworld far below and heaven that's far above.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

13

ஜனவரி

January

பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

அறத்துஆறு நுவலும் பூட்கை மறத்தின்,
கொல்களிற்று மீமிசைக் கொடிவிசும்பு நிழற்றும்
எம் கோ வாழிய குடுமி தம் கோச்
செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த,
முந்நீர் விழவின் நெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே! (புறம். 9: 6–11)

நெட்டிமையார்

பொருள்:

அறம் தவறாமல் போர் புரியும் இயல்புடைய எம் மன்னன் பாண்டியன். அவன் வலிமை மிகுந்த யானையின் மேல் வீற்றிருந்து கொடி தாங்கினால் அக்கொடி விண்ணில் உள்ளோரையும் காக்கும் தன்மையுடையது. அவனுடைய முன்னோன் ஆன நெடியோன், கடல் தெய்வத்திற்கு விழா எடுத்தபோது கூத்தர்களுக்குப் பசும் பொன்னை அளவில்லாமல் வழங்கியவன். அந்நாளில் பாய்ந்த பஃறுளி ஆற்று மணலின் எண்ணிக்கையைவிடப் பல்லாண்டு நீ வாழ்வாயாக.

My ruler Mudhukudumi, a stickler for the rules of war,
Rides a ferocious elephant,
With the shadow of his fish emblem flag
Covering the entire world; may he live long,
Longer than the number of grains of sand in *pahruli* river!
His ancestor *nediyon* celebrated the festival of sea goddess
And donated purest gold to the bards of his country!

ஜனவரி JANUARY 14

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

சேரமான் யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை

மாந்தரஞ்சேரல் இரும்பொறை ஓம்பிய நாடே
புத்தேள் உலகத்து அற்று எனக் கேட்டு வந்து,
இனிது காண்டிசின்; பெரும! முனிவுஇலை,
வேறுபுலத்து இறுக்கும் தானையோடு,
சோறுபட நடத்தி நீ துஞ்சாய் மாறே! (புறம். 22: 34–38)

குறுங்கோழியூர் கிழார்

பொருள்:

மாந்தரஞ்சேரல் இரும்பொறை காத்த நாடு, தேவர் உலகத்தைப் போன்றது என மற்றவர் சொல்லக் கேட்டு வந்து உன்னைக் கண்டேன். பெருமானே! நான் சொல்வதைத் தவறாக எண்ண வேண்டாம். சோம்பல் அற்றவனான நீ, வேற்றுநாட்டுக்குப் படையெடுத்துச் செல்வதுடன், அதற்கு மாறாக உன்னுடைய நாட்டிலும் வேளாண்மை வளர்த்து, உணவுப் பொருள்களை விளையச் செய்வாயாக!

Hearing that the country protected by Mandharan Cheral Irumporai
Is far superior to the heavenly abode of celestials,
I came here and found that it's true my Lord!
You wage war on your enemies tirelessly;
Likewise please focus on harvest in your country too!

15

ஜனவரி

January

சோழன் நலங்கிள்ளி

'...கல்லென்
விழவுடை ஆங்கண் வேற்றுப்புலத்து இறுத்து,
குணகடல் பின்னது ஆக, குடகடல்
வெண்தலைப் புணரி, நின் மான் குளம்பு அலைப்ப,
வலமுறை வருதலும் உண்டு' என்று அலமந்து,
நெஞ்சுநடுங்கு அவலம் பாய,
துஞ்சாக் கண்ண, வடபுலத்து அரசே! (புறம். 31: 11– 17)

கோவூர் கிழார்

பொருள்:

பகைவர் நாட்டில் வெற்றிபெற்றுத் தங்கிய உன்னுடைய குதிரைப் படைகள், விழா நடக்கும் களத்தைப் போல ஆரவாரத்துடன், கிழக்கிலும் மேற்கிலும் உள்ள கடல்களுக்கு இடைப்பட்ட நிலப்பகுதி அதிரும் வகையில் வருகின்றன. அந்தப் படை, வெற்றி பெறும் நோக்கத்துடன் வட நாட்டை நோக்கி வரும் என்று வட நாட்டு அரசர்கள் கலங்கி, நடுங்கித் துயரத்துடன் தூக்கம் இல்லாமல் தவிக்கின்றனர்.

Your armies create festival like ruckus while in enemy country;
Leaving eastern seas to your back
And you march till western seas
That wash the hoofs of your horses .
The thought that you may turn right
Makes the rulers of northern regions shiver
And gives them sleepless nights.

ச.ப. வெங்கடேஷ்வரன்
ஓவியர், சென்னை.

ஜனவரி
JANUARY 16

வையையாற்றுப் புதுநீர்

புகை, பூ, அவி ஆராதனை, அழல் பல ஏந்தி,
நகை அமர் காதலரை நாளணிக் கூட்டும்
வகைசாலும், வையை வரவு! (பரி. 6: 11–13)

நல்லந்துவனார்

பொருள்:
வையையாற்றில் புது வெள்ளம் வந்ததும் அதில் நீராடுவதற்கு மகளிர் விரும்பினர். நீராடியபின் தம் கூந்தலை உலரச் செய்வதற்குரிய அகில் கட்டை முதலியவற்றையும், சூடிக் கொள்வதற்கும் ஆராதனைக்கும் உரிய பூக்களையும் வேறு பொருள்களையும் எடுத்துக்கொண்டனர். நீராடுவதற்கான உடைகளுடன் தங்கள் கணவன்மாரையும் அழைத்துக்கொண்டு வந்தனர்.

Fresh floods of *vaigai* make young women
Carry incense, sandal, flowers, and lamps
And go with their lovers to revel in the riverbank.

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை.

ரா. அர்ச்னா
மரபுக் கட்டடக்கலை மற்றும்
சிற்பக்கலைக் கல்லூரி, மாமல்லபுரம்.

17
ஜனவரி
January

அவள் காமநுகர்வு அறியாதவள்

நல்லாள் கரை நிற்ப, நான் குளித்த வைந் தடத்து,
நில்லாள் திரை மூழ்கி நீங்கி எழுந்து, என்மேல்
அல்லா விழுந்தாளை எய்தி, எழுந்து ஏற்று யான்
கொள்ளா அளவை எழுந்து ஏற்றாள்: கோதையின்
உள் அழுத்தியாள் எவளோ? தோய்ந்தது யாது? (பரி. 6: 87–91)

பொருள்: நல்லந்துவனார்

நான் (தலைவன்) வையையின் நீர்நிலையில் நீராடினேன். அதன் கரையில் நின்று நீராடிய பேதைப்பெண், கரையிலேயே நில்லாமல் நீரில் பாய்ந்து ஆழ்ந்தாள்; பின்பு மேலே எழுந்தாள். எழுந்தவள் நிலைகொள்ளாமல் என்மேல் சாய்ந்தாள். சாய்ந்தவளை நான் என் கையால் தூக்க முயன்றபோது அவளாகவே எழுந்தாள். அவள், காமநுகர்வு அறியாத இளம்பருவம் கொண்டவள். இதற்கு முன் என் மார்பில் இவளைப் போல் பூப்போல் அழுத்தியவள் யாரும் இல்லை. அவளிடம் என் மனம் எவ்வாறு பொருந்தியது?

A woman was standing
On the shore when I was bathing in a fresh pond.
She sank into the waves, rose up and fell on me.
Even before I embraced her, she who did not know
The situation rose up herself.
Who is the woman in my heart like this garland?
Where did I play in the water with her?

ஜனவரி
JANUARY **18**

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்

கவிர் ததை சிலம்பில் துஞ்சும் கவரி,
பரந்து இலங்கு அருவியொடு நரந்தம் கனவும்
ஆரியர் துவன்றிய பேரிசை இமயம்
தென்னங் குமரியொடு ஆயிடை
மன் மீக் கூறுநர் மறம் தபக் கடந்தே! (பதிற்று. 11: 21–25)

குமட்டூர்க் கண்ணனார்

பொருள்:

ஆரியர் நெருங்கி வாழும் இமயமலைச் சாரலில், கவரி மா படுத்து உறங்கும். பகல் வேளையில் மலைச் சாரலில் அது மேய்ந்த நரந்தம் புல்லையும் ஒளிபாயும் அருவி நீரையும் கனவில் கண்டு மகிழும். இந்த இமயமலைக்கும் தெற்கில் உள்ள குமரிக்கும் இடைப்பட்ட நாடுகளில் ஆணவம் கொண்ட மன்னர்களின் வீரம் கெடும்படி போரிட்டு வென்றவன்.

Yaks sleeping on slopes filled with coral trees,
Dream of the *narantham* grass they ate
And of wide waterfalls from which they drank,
In the well renowned Himalayas where Aryans live.
In the land between that mountain and southern Kumari,
You have ruined the strength of arrogant kings.

19

ஜனவரி

January

வளமான ஊர்

தொறுத்த வயல் ஆரல் பிறழ்நவும்,
ஏறு பொருத செறு உழாது வித்துநவும்,
கரும்பின் பாத்திப் பூத்த நெய்தல்
இருங்கண் எருமையின் நிரை தடுக்குநவும்,
கலிகெழு துணங்கை ஆடிய மருங்கின்
வளைதலை மூதா ஆம்பல் ஆர்நவும் ... (பதிற்று. 13: 1–6)

குமட்டூர்க் கண்ணனார்

பொருள்:

அறுவடை ஆன வயல்களில் ஆட்டுக் கிடை போடப்பட்டிருந்தது. மழை பெய்ததால் நீர் நிரம்பிய வயல்களில் ஆரல் மீன்கள் நீந்தின. ஆட்டுக் கடாக்கள் பொருத அந்த வயல்களில் சேறு நிரம்பியதால் உழவர்கள் உழாமலேயே விதைத்தனர். கரும்புப் பாத்திகளில் படுத்திருந்த எருமைகள் வெளியேற முடியாத அளவிற்கு நெய்தல் பூக்கள் மலர்ந்திருந்தன. பெண்கள் துணங்கைக் கூத்து ஆடிய இடங்களில் அவர்கள் சூடிய ஆம்பல் பூக்கள் உதிர்ந்துகிடந்தன. அவற்றை வளைந்த கொம்புடைய கிழட்டுப் பசுக்கள் மேய்ந்தன.

Eels prance in waters of cattle grazed fields,
Farmers sow seeds in fields where bulls fought,
Lilies overgrown amidst sugar cane
Block the way of buffaloes,
Old cows munch on flowers
That fell of dancing girls' grass skirts.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

ஜனவரி
JANUARY 20

தூங்காத ஊர் இது

பரியுடை நல்மான் பொங்கு உளை அன்ன
அடைகரை வேழம் வெண்பூப் பகரும்,
தண்துறை ஊரன் பெண்டிர்,
துஞ்சு ஊர் யாமத்தும், துயில் அறியலரே! (ஐங். 13)

ஓரம்போகியார்

பொருள்:
விரைந்து செல்லும் குதிரையின் தலையில் சூட்டிய தலை அணி போல், நீர்நிலையின் கரையில் வளர்ந்த நாணலில், வெண்மையான பூக்கள் பூத்திருக்கும். இத்தகைய குளிர்ந்த ஊரினை உடைய தலைவனின் பெண்கள், ஊர் தூங்கும் நள்ளிரவிலும் தூங்காமல் விழித்திருப்பர்.

He's from a cool port town
Where reeds on the sandy shores put out
White blossoms resembling head ornaments of fine, trotting horses.
Even when the town is sleeping at midnight,
The women of his town do not sleep.

க. சிவசாமி
ஓவியர், புதுக்கோட்டை.

மா. தருண்
ஓவியர், புதுச்சேரி.

21
ஜனவரி
January

நினைக்க நினைக்கத் துன்பமே!

அறுசில் கால அஞ்சிறைத் தும்பி
நூற்றிதழ்த் தாமரைப் பூச் சினை சீக்கும்,
காம்பு கண்டு அன்ன தூம்புடை வேழத்துத்
துறைநணி ஊரனை உள்ளி, என்
இறை ஏர் எல்வளை நெகிழ்பு ஓடும்மே! (ஐங். 20)

ஓரம்போகியார்

பொருள்:

ஆறு சிறிய கால்களையும் அழகிய சிறகுகளையும் உடைய தும்பி, நூறு இதழ்களை உடைய தாமரை மலரில் முட்டை இடும். அந்த முட்டைகளைத் தாமரையின் காம்பினைப் போன்ற நாணல் உரசி அழிக்கிறது. இத்தகைய நீர்நிலையை அருகில் உடையவன் தலைவன். அவனை நினைத்து நினைத்து வருந்துவதால் என் முன்கையில் உள்ள அழகிய வளையல்கள் நெகிழ்ந்து ஓடுகின்றன.

The fine and radiant bangles on my wrists loosened and slip
Due to incessant thinking of my hero of riverine region
With ghats where the hollow reed, resembling bamboo
Destroys the eggs, laid in the lotus flower of hundred petals
By the bee with pretty wings and six slim legs.

ஜனவரி
JANUARY 22

சொ.வி. ராஜ ராஜேஸ்வரி
ஓவியர், விருதுநகர்.

தேறலானது சுனை நீர்

கோழ்இலை வாழைக் கோள் முதிர் பெருங்குலை
ஊழுறு தீங்கனி, உண்ணுநர்த் தடுத்த
சாரல் பலவின் சுளையொடு, ஊழ்படு
பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்
அறியாது உண்ட கடுவன் அயலது
கறிவளர் சாந்தம் ஏறல் செல்லாது,
நறுவீ அடுக்கத்து மகிழ்ந்து கண்படுக்கும்...(அகம். 2: 1–7)
கபிலர்

பொருள்:

வழ வழப்பான இலைகளைக் கொண்ட வாழைக் குலையில் நன்கு பழுத்த பழங்களையும், தம்மை உண்டவர் பிற கனிகளை உண்ணாமல் தடுக்கும் பலாச் சுளையையும், பாறையில் உள்ள சுனையில் கலந்த தேனையும் ஓர் ஆண்குரங்கு உண்டது. அளவில்லாமல் உண்ட அந்தக் குரங்கு, மிளகுக் கொடிகள் படர்ந்த சந்தன மரத்தில் ஏற இயலாமல், மணம் வீசும் மலர்கள் உதிர்ந்திருக்கும் பாறையில் படுத்து உறங்கும்.

A male monkey, mistaking for water,
Drinks from the deep spring the fermented beverage of the fruits.
Disabled from climbing up a nearby vine–entwined sandal tree,
It enjoys a blissful sleep on the bed of fragrant blooms.

23
ஜனவரி
January

மணம் மிகுந்தது மலரா,
இவள் கூந்தலா?

கொங்கு தேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி!
காமம் செப்பாது, கண்டது மொழிமோ?
பயிலியது கெழீஇய நட்பின், மயில் இயல்,
செறி எயிற்று அரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீயறியும் பூவே! (குறுந். 02)

இறையனார்

பொருள்:

பூக்களைத் தேர்ந்தெடுத்து, தேனை உண்ணும் அஞ்சிறைத் தும்பியே! உன் விருப்பப்படி கூறாமல், நீ கண்டு அறிந்ததைச் சொல்வாயா? என்னோடு நெருங்கிய நட்புக் கொண்ட மயில் போன்ற அழகையும், வரிசையான பற்களையும் உடைய இந்தப் பெண்ணின் கூந்தலைப் போல, நறுமணம் உடைய பூக்கள், நீ அறிந்தவரையில் உண்டா?

O winged bee, which chooses blooms to feed on!
Tell me what you found and not what pleases me.
Is there a flower, more fragrant than the hair of my beloved,
Who has perfect teeth, peacock's nature and enduring love?



ஐந்தாம் உலகத் தமிழ் மாநாட்டு
விழா மலர், 1981.

ஜனவரி
JANUARY 24

விரைந்து வருவான்

பூத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாது உண் பறவை பேதுறல் அஞ்சி,
மணிநா ஆர்த்த மாண் வினைத் தேரன்,
உவக்காண் தோன்றும் – குறும்பொறை நாடன்
கறங்கு இசை விழவின் உறந்தைக் குணாது,
நெடும் பெருங்குன்றத்து அமன்ற காந்தள்
போது அவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவை! நின் மாண் நலம் படர்ந்தே! (அகம். 4: 10–17)

குறுங்குடி மருதனார்

பொருள்:

உறையூரின் கிழக்கே உள்ள பெரிய மலையில் நெருங்கி வளர்ந்துள்ள விரிந்த காந்தள் மலரைப் போன்று மணக்கும் உன்னை நினைத்தபடி தலைவன், சற்றுத் தொலைவில் வருகிறான். அவன் வரும் தேரில் பூட்டப்பெற்ற தலைஅணி சூடிய குதிரைகள் விரைவாக ஓடின. அதனால் தேரில் கட்டப்பெற்றிருந்த மணிகள் ஒலி எழுப்பின. அந்தச் சத்தம் கேட்டு, பூத்த சோலையில் இணைந்திருந்த வண்டுகள், தங்கள் இணையைப் பிரிந்து விடும் என்று அஞ்சிய தலைவன் மணியின் நாவினைச் சேர்த்துக் கட்டியபடி வருகிறான்.

O' friend who smells like the blossoming *kantal,*
Our hero, in his ornate chariot of steeds
And bells tied up so as not to disturb the union of bees,
Rushes onward, thinking all along of your great beauty.

பி.செ. சாந்த்சைனி
டான் மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி, தருமபுரி.

த. சதீஸ்வேலன்
ஓவியர், சென்னை.

25

ஜனவரி

January

பிரிந்தால் உயிர்வாழ மாட்டாள்

பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு,
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூ நீர் பயந்த துணைஅமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை, மாமலர்
மணிஉரு இழந்த அணிஅழி தோற்றம்
கண்டே கடிந்தனம் செலவே! – ஒண்டொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ, பிரிதும் நாம் எனினே! (அகம். 5: 21–28)

பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள்:

நான் பிரியப்போகிறேன் என்பதைக் குறிப்பால் உணர்ந்த தலைவி, தன் கண் பாவை மறையும்படியாகக் கண்ணீருடன், தன் மார்பில் மகனின் சிறிய தலையை அணைத்தபடி, அவனது தலையில் சூடிய பூவின் மணத்தை மோந்து பெருமூச்சு விட்டாள். அப்போது அம்மலர் வாடியது. பிரியும் எண்ணத்துடன் நான் அருகில் இருக்கும்போதே இப்படி வாடும் இவள், நான் பிரிந்து விட்டால் எவ்வளவு வருந்துவாள் என்று எண்ணி, பிரிந்து செல்லும் என் எண்ணத்தைக் கைவிட்டேன்.

She read my mind and shed a flood of trembling tears;
The *kalunir* blooms lost their hue with her breath of despair.
When I saw her stand, having lost all her charms,
I gave up the plan of going for wealth;
She will not hold her life the moment I leave her alone!

ஜனவரி
JANUARY 26

செ. கணேசமூர்த்தி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

தலைவனைப் பின்தொடர்ந்த தலைவி

தன்சிதைவு அறிதல் அஞ்சி, இன்சிலை
ஏறுடை இனத்த, நாறுஉயிர் நவ்வி!
வலைகாண் பிணையின் போகி, ஈங்குஓர்
தொலைவில் வெள்வேல் விடலையொடு, என் மகள்
இச்சுரம் படர் தந்தோளே! (அகம். 7: 9–13)

கயமனார்

பொருள்:

தலைவனோடு என் மகளுக்கு உள்ள உறவு எனக்குத் தெரிந்துவிடும் என அவள் அஞ்சினாள். அதனால் வேலை ஏந்திய விடலைப் பருவத்து இளைஞனுடன், வலையைக் கண்டு ஒதுங்கிப் போகும் ஆண்மானைத் தொடர்ந்து செல்லும் பெண்மானைப் போல இந்த மலைச் சாரலில் எங்கோ தொலைவில் போய்விட்டாள். ஆணும் பெண்ணுமாய்க் கலந்து மேயும் மான் கூட்டத்தில் தோன்றும் நவ்வி என்னும் இளைய பெண் மானே! நீ அவளைக் கண்டாயா?

Worried that we may know about her love,
My daughter, who has come of age,
Fled away with a youngster through this wilderness,
Like a female deer that flees away with its mate
After spotting a hunter's net.

27
ஜனவரி
January

கேட்பதற்கு யார் இருக்கிறார்கள்?

துளிதலைத் தலைஇய மணிஏர் ஐம்பால்
சிறுபுறம் புதைய வாரி, குரல் பிழியூஉ,
நெறிகெட விலங்கிய 'நீயிர் இச்சுரம்
அறிதலும் அறிதிரோ?' என்னுநர்ப் பெறினே! (அகம். 8: 15–18)
பெருங்குன்றூர்க் கிழார்

பொருள்:

நீலமணி போன்ற அழகிய கூந்தலை ஐந்தாகப் பின்னி முடிவதைப் போல இச்சுரத்தின் வழிகள் பின்னிக் கிடக்கின்றன. 'இச்சுரத்தில் பின்னிக் கிடக்கும் பாதையில் நீங்கள் செல்வதற்கு உரிய பாதையை அறிந்திருக்கிறீர்களா?' என நம் மீது இரக்கப்பட்டு யாராவது கேட்பார்கள் என்றால், நாம் செல்வதற்கு அது அரிய வழி இல்லை என்று சொல்லலாம் தோழி!

If there is some who, in all sympathy,
Would enquire us if we do know our passage
Through these various and misleading paths
Like the braided fivefold tresses.
But there is none, my friend!

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

ஜனவரி
JANUARY 28

கொடுங்காட்டிலும் பாதுகாப்பார்

துடி அடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்
பிடி ஊட்டி, பின் உண்ணும், களிறு எனவும் உரைத்தனரே!
அன்பு கொள் மடப் பெடை அசைஇய வருத்தத்தை
மென் சிறகரால் ஆற்றும், புறவு எனவும் உரைத்தனரே!
இன் நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்
தன் நிழலைக் கொடுத்து அளிக்கும், கலை எனவும்
உரைத்தனரே! (கலி. 11: 8-9, 12-13, 16-17)

பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள்:

'வறண்ட பாலை நிலக் காட்டில் யானைக்குட்டி கலக்கிய நீர், தெளிந்த பிறகு, தன் குட்டிக்கும், பெண் யானைக்கும் ஊட்டியபின் மீதம் இருப்பதை ஆண் யானை அருந்தும்; இலை தீய்ந்துபோன மரங்கள் நிறைந்த காட்டில் வெயில் துன்பத்தால் வாடும் தன் பெண் புறாவுக்கு ஆண் புறா, தன் சிறகுகளால் விசிறிக் கொடுக்கும்; வெயில் கொளுத்தும் காட்டில் நிழல் இல்லாமல் வருந்தும் பெண் மானை ஆண் மான் தன் நிழலில் இளைப்பாறச் செய்யும்' என்று தலைவர் சொன்னாரே!

Our lord said, "In a land of scorching heat,
The male elephant fed the available little water to his little-calf and mate
And quenched his thirst only after that".
"In a desert woe begone", he said,
"A male pigeon soothes its loving mate writhing in heat by flapping its soft wings".
He also said, "A stag gave his shade to his struggling doe
In that forest, where sweet shade is scarce"

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

29

ஜனவரி

January

கைவிடப்பட்ட பெண்டிர்

தோள்நலம் உண்டு துறக்கப் பட்டோர்
வேள் நீர் உண்ட குடை ஓரன்னர்!
நல்குநர் புரிந்து நலன்உணப் பட்டோர்
அல்குநர் போகிய ஊர் ஓரன்னர்!
கூடினர் புரிந்து குணன்உணப் பட்டோர்
சூடினர் இட்ட பூ ஓரன்னர்!
என ஆங்கு
யானும் நின்னகத்து அனையேன்! (கலி. 23: 8–15)
பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள்:

கணவரால் கைவிடப்பெற்ற மகளிர், தண்ணீர் வேட்கையினால் நீர் நிறைத்துக் குடித்த எச்சில் பனையோலைப் பட்டை போன்றவர் ஆவர். மனம் விரும்பிய கணவரால் இன்பம் துய்க்கப்பெற்று விடப்பெற்ற மகளிர் குடியிருந்தவர் நீங்கிச்சென்ற பாழடைந்த ஊர் போன்றவர். விரும்பிக் கூடிய கணவரால் அழகை நுகர்ந்து கைவிடப்பட்ட மகளிர் அணிந்தவர் வீசிய மலரைப் போன்றவர். நானும் உன்னிடத்தில் இவர்களைப் போலவே உள்ளேன்.

The women deserted after their beauties feasted on
Resemble the palm–leaf cup after the thirst is quenched.
The women forsaken by loved ones
Are like an abandoned town.
The women severed by their loved ones
Resemble the flowers thrown off after wear.

ஜனவரி
JANUARY 30

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

மெய்ம்மறந்து கிடந்தேன்

ஊசல் ஊர்ந்துஆட, ஒரு ஞான்று வந்தானை
ஐய! சிறிது என்னை ஊக்கி! எனக் கூற, 'தை யால் நன்று'
என்று அவன் ஊக்க, கை நெகிழ்பு
பொய்யாக வீழ்ந்தேன், அவன்மார்பில்: வாயாச்செத்து,
ஓய்யென ஆங்கே எடுத்தனன் கொண்டான்மேல்
மெய்அறியாதேன் போல் கிடந்தேன்மன்! (கலி. 37: 14–19)

கபிலர்

பொருள்:

நான் ஊஞ்சலில் ஆடிக்கொண்டிருந்தேன். அப்போது அங்கே வந்த தலைவனிடம், ஊஞ்சலை ஆட்டும்படி சொன்னேன். அவனும் மகிழ்ந்து ஆட்டினான். அப்போது ஊஞ்சலிலிருந்து கை வழுக்கி விழுவதைப் போல் பொய்யாக அவன் மார்பில் விழுந்தேன். நல்ல வாய்ப்பாகக் கருதி அவன் விரைந்து பிடித்துத் தன் மார்போடு அணைத்துக்கொண்டான். நான் மெய்ம்மறந்தவள்போல் கிடந்தேன்.

I'd been swinging, and there came this man;
I said, 'O noble one! rock this swing for a while';
As he rocked, I slipped on to his bosom by intent;
Taking it for truth, he took me up swiftly
And clasped me in his arms as I remained cuddled up
As if unconscious.

31

ஜனவரி

January

கானவர் ஆடும் குரவை

கொடுந்தொழில் வல்வில் கொலைஇய கானவர்
நீடு அமை விளைந்த தேக்கள் தேறல்
குன்றகச் சிறுகுடிக் கிளையுடன் மகிழ்ந்து,
தொண்டகச் சிறுபறைக் குரவை அயர! (திருமுரு. 194–197)

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

பொருள்:

கானவர், கொடிய தொழிலுக்குப் பயன்படும் பெரிய வில்லால் விலங்குகளைக் கொல்லும் இயல்புடையோர். மூங்கில் குழாயில் நீண்ட நாள் பதப்படுத்திய சுவையுடைய தெளிந்த கள்ளைத் தம் சிறுகுடியில் உள்ள சுற்றத்துடன் அருந்தி, தொண்டகச் சிறுபறையை அடித்து, குரவைக் கூத்து ஆடுவர்.

The forest dwellers, with their kin on hills in hamlets small,
Drink toddy aged in long bamboo pipes,
And perform the *kuravai* dance,
To the beats of the *thondakam* drums.

ர. மல்லிகா
ஓவிய ஆசிரியர், சென்னை.

பிப்ரவரி
FEBRUARY 01

சான்றோர் கூறும் செல்வம்

சான்றோர் செல்வம் என்பது, சேர்ந்தோர்
புன்கண் அஞ்சும் பண்பின்
மென்கண் செல்வம், செல்வம் என்பதுவே! (நற். 210: 7–9)
மிளைகிழான் நல்வேட்டனார்

பொருள்:

சான்றோர் கூறும் உண்மையான செல்வம் எதுவென்றால் தம்மிடம் அடைக்கலம் தேடி வந்தோரின் துன்பத்தை, தம் துன்பமாகக் கருதி, அதனைப் போக்கும் இனிய சொற்களைக் கூறும் அருள் உடையவராக இருக்கும் தன்மையே ஆகும்.

What wise men define as wealth
Is the generous heart that empathizes
With the suffering of one's kith and kin.

த. சதீஸ்வேலன்
ஓவியர், சென்னை.

02
பிப்ரவரி
February

நனி நாகரிகர்

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

முந்தை இருந்து நட்டோர் கொடுப்பின்
நஞ்சும் உண்பர் நனிநாகரிகர்! (நற். 355: 6–7)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

நீண்ட காலமாய் நட்புடன் இருப்பவர், நஞ்சினைக் கொடுத்து, 'உண்' என்றாலும் அதனை வாங்கிப் பருகுவதே உயர்ந்த நட்பின் அடையாளமான சிறந்த நாகரிகம் ஆகும்.

If friends step forward and offer,
The courteous will partake even poison.

பிப்ரவரி
FEBRUARY 03

சு. சுபா ஸ்ரீ
மாநிலக் கல்லூரி, சென்னை.

உமணர் எழுப்பும் ஓசை

...உமணர்
வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி,
கண நிரை கிளர்க்கும் நெடுநெறிச் சகடம்
மணல் மடுத்து உரறும் ஓசை கழனிக்
கருங்கால் வெண் குருகு வெரூஉம்! (நற். 4: 7–10)

அம்மூவனார்

பொருள்:

உப்பு வணிகர், வெண்மையான கல் உப்பை வண்டிகளில் மிகுதியாக ஏற்றி, விற்பதற்காகச் செல்வர். அந்த வண்டி எழுப்பும் ஓசை கேட்டு, ஆநிரைகள் பதறி எழும். மணல் வழியில் வண்டி செல்லும்போது ஏற்படும் உராய்வு ஓசை கேட்டு வயலில் இருக்கும் கரிய கால்களையுடைய வெள்ளை நாரை அஞ்சும்.

The black–legged cranes that graze in the paddy fields
Are scared by the din of the salt vendors
Who run their carts along the sandy tracts
Announcing the price of salt
And raise noise to cause the cattle on the way
To rise and move away.

04
பிப்ரவரி
February

கோசரின் வாய்ச்சொல்

தொல் மூதாலத்துப் பொதியில் தோன்றிய
நால் ஊர்க் கோசர் நன்மொழி போல,
வாய் ஆகின்றே தோழி! (குறுந். 15: 2–4)

ஔவையார்

பொருள்:

பழமையான ஆலமரத்தடியில் உள்ள பொதுமன்றத்தில் கூடும் நான்கு ஊர்களிலுள்ள கோசர்களின் வாய்ச்சொல் உண்மையாவதைப் போல, தலைவனோடு, உன்னுடைய மகள் கொண்ட நட்பானது உண்மையானது.

The love of our daughter for the young man
Has turned out to be as true as the prophesies of
The *kosar* tribe from four villages assembled near
The banyan tree in the public square, my friend!



கா. தனாஸ் தீபக் ராஜன்
ஓவியர், சேலம்.

பிப்ரவரி
FEBRUARY 05

ஆறலைக் கள்வர் நிறைந்த பாதை

...கள்வர்
பொன்புனை பகழி செப்பம் கொள்மார்,
உகிர்நுதி புரட்டும் ஓசை போல,
செங்கால் பல்லி தன் துணை பயிரும்
அம்கால் கள்ளி அம்காடு இறந்தாரே! (குறுந். 16)

பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள்:
தோழி! ஆறலைக் கள்வர்கள், இரும்பினால் செய்த அம்பின் கூர்மையான நுனியை நகத்தில் தேய்த்துப் பார்ப்பர். அப்போது எழும் ஓசையைப் போல ஆண் பல்லி ஓசை எழுப்பி, தன்னுடைய பெண் பல்லியை அழைக்கும். அப்படிப்பட்ட அடர்ந்த கள்ளிகள் நிறைந்த பாலை நிலத்தின் வழியாகத் தலைவர் பொருள் ஈட்டுவதற்காகப் பிரிந்து சென்றுள்ளார்.

He has gone across arid lands
Where the clicking sound of a red legged lizard
Calling its partner sounds like bandits
Sharpening metallic arrows with their nail tips.
This will remind him of you.

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

ச. ரகு
ஓவியர், கோயம்புத்தூர்.

06
பிப்ரவரி
February

மடல் ஏறுதல்

மா என மடலும் ஊர்ப; பூ எனக்
குவிமுகிழ் எருக்கங் கண்ணியும் சூடுப;
மறுகின் ஆர்க்கவும் படுப;
பிறிதும் ஆகுப – காமம் காழ்க்கொளினே! (குறுந். 17)

பேரெயின் முறுவலார்

பொருள்:

அவள் இருக்கும் தெருவிற்குச் சென்று பனை மடலால் செய்த குதிரையில் ஏறி வலம் வருவான். எருக்கம் பூ மாலையை அணிவான். தெருவில் போவோர் வருவோரெல்லாம் அவனைக் கண்டு ஆரவாரம் செய்வர். தலைவி மேல் கொண்ட மிகுதியான காதலால் இறக்கவும் துணிவான்.

They will ride a palm frond horse in public,
Adorn themselves with milkweed flowers,
And be mocked by others; and do much more,
Those whose love sickness has peaked.

பிப்ரவரி
FEBRUARY 07

ச. ரகு
ஓவியர், கோயம்புத்தூர்.

உயிர் சிறிது, காதல் பெரிது

யார் அஃது அறிந்திசினோரே? சாரல்
சிறுகோட்டுப் பெரும்பழம் தூங்கி யாங்கு, இவள்
உயிர் தவச் சிறிது; காமமோ பெரிதே! (குறுந். 18: 3–5)

கபிலர்

பொருள்:

சிறிய காம்பு, பெரிய பலாப் பழத்தை, மரத்துடன் பற்றிக்கொண்டிருப்பதைப் போல, இவளுடைய சிறிய உயிர், உன் மீது கொண்ட பெருங்காதலைப் பற்றிக்கொண்டிருக்கிறது. காதல் கூடவில்லை என்றால், அவளது உயிர் எப்போது பிரியும் என்பதை யார் அறிவார்?

Who else knows her plight?
Like a small twig in which a huge fruit hangs,
Her life is tenuous, but her love, immense!

08

பிப்ரவரி

February

அளவின்றிக் கொடுத்த கிள்ளிவளவன்

இரத்தி நீடிய அகன்தலை மன்றத்து,
கரப்பு இல் உள்ளமொடு வேண்டுமொழி பயிற்றி,
அமலைக் கொழுஞ்சோறு ஆர்ந்த பாணர்க்கு
அகலாச் செல்வம் முழுவதும் செய்தோன்
எம்கோன் வளவன் வாழ்க! (புறம். 34: 12–16)

ஆலத்தூர் கிழார்

பொருள்:

இலந்தை மரத்தை நடுவாகக் கொண்ட மன்றத்தில், பாணர்கள் பலர் வெளிப்படையாகப் பேசிக்கொண்டே, வரகுச் சோற்றுக் கட்டியைத் தேக்கிலையில் வைத்து உண்பர். அத்தகைய பாணர்க்குக் குறையாத பெருஞ்செல்வத்தை வழங்கிய எங்கள் மன்னர் வளவன் வாழ்க!

May my King Valavan live long,
He who gave away bountiful gifts
To the bards who sang his praise
With open heart and pleasing words
In the public square centered around Jujube tree.



ம. கோபிநாத்
ஓவியர், கரூர்.

பிப்ரவரி
FEBRUARY 09

பண்டைய போர் நெறி

கடிமரம் தடியும் ஓசை தன் ஊர்
நெடுமதில் வரைப்பின் கடிமனை இயம்ப,
ஆங்கு இனிது இருந்த வேந்தனோடு, ஈங்கு நின்
சிலைத் தார் முரசம் கறங்க,
மலைத்தனை என்பது நாணுத் தகவு உடைத்தே! (புறம். 36: 9–13)

ஆலத்தூர் கிழார்

பொருள்:

சோழனது வீரர்கள் சோலைகள்தோறும் காவல் மரங்களை வெட்டுகின்றனர். வெட்டும் ஓசை ஊரின் நீண்ட மதில்களைத் தாண்டி, கருவூர் அரண்மனை உள்ளும் ஒலிக்கிறது. அதனைக் கேட்டும் கருவூர் மன்னன் உள்ளேயே இருக்கிறான். அத்தகையவனுடன் உனது வில் போன்ற மாலை அணிவிக்கப்பட்ட போர்முரசு ஒலிக்கச் செய்து போரிட்டாய் என்றால் அது, நாணத்திற்கு உரியது.

It is shameful if you sounded your
Decorated war drums and went to war
With the contemptible king
Who stays put in his palace
Even after the sound of his royal tree being felled
Is heard upto his fort walls.



ஜா. ஜப்ரின் பீர்கான்
ஓவியர், திருநெல்வேலி.

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை

10
பிப்ரவரி
February

வையையில் புது வெள்ளம்

தான், நாற்றம் கலந்து உடன் தழீஇ வந்து தரூஉம் வையை,
தன் நாற்றம் மீது தடம் பொழில் தான், யாற்று
வெந்நாற்று வேசனை நாற்றம் குதுகுதுப்ப,
ஊர்ஊர் பறை ஒலி கொண்டன்று; உயர் மதிலில்
நீர் ஊர் அரவத்தால் துயில் உணர்பு எழீஇ... (பரி. 20: 11–15)

நல்லந்துவனார்

பொருள்:

வையை ஆற்றின் இரண்டு கரையிலும் உள்ள பெரிய சோலை மலர்களின் மணத்துடன், தண்ணீர் தன் மணத்தையும் கலந்து பாய்கிறது. அந்த வையை ஆற்றின் புதுவெள்ளம் பாய்வதால் தரையின் வெம்மை தணிந்து, மண் மணம் வெளிப்பட்டது. அந்த மண் மணத்தையும் சேர்த்து வந்த வைகை வெள்ளத்தைப் பார்த்து மகிழ்ந்த மக்கள், ஊர்தோறும் பறை ஒலித்தனர். அப்படி வந்த வெள்ளம், மதுரையின் மதில் சுவரில் மோதும்போது எழுந்த ஒலியால் உறங்கியோர் விழித்து எழுந்தனர்.

People love the fragrances from the groves on the
Banks and those from the heat of the river, and parai
Drums are heard in many joyous villages.
People rise up from their sleep to the sounds of water
Flowing against the fort walls.

பிப்ரவரி FEBRUARY 11

த. சதீஸ்வேலன்
ஓவியர், சென்னை.

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

மையல் கொண்ட ஏமம்இல் இருக்கையர்,
புதல்வர் பூங்கண் முத்தி, மனையோட்கு
எவ்வம் கரக்கும் பைதல் மாக்களொடு
பெருங் கலக்கு உற்றன்றால் தானே காற்றோடு
எரிநிகழ்ந்து அன்ன செலவின்
செருமிகு வளவ! நின் சினைஇயோர் நாடே! (புறம். 41: 13–18)

கோவூர் கிழார்

பொருள்:

காற்றுடன் தீயும் சேர்ந்தது போன்று போரிடுவதில் சிறப்புடைய வளவனே! உன்னைச் சினம்கொள்ளச் செய்தவர் நாட்டில் உள்ளோர், நீ படையெடுத்து வருவதை எண்ணிச் செய்வதறியாது கலக்கம் கொண்டு திகைக்கின்றனர். அந்நாட்டு ஆடவர்கள், தமது நாட்டிற்குப் பாதுகாப்பு இல்லை என்பதை அறிந்து, தம் பிள்ளைகளின் பூப்போன்ற கண்களில் முத்தமிட்டு, தம் வருத்தத்தைத் தம் மனைவியர் அறியாதபடி மறைத்துக் கலங்குகின்றனர்.

Nervous rulers in their unsteady thrones
Hide their fear from their wives
And kiss their children's eyes tenderly
While anxious about facing your fury
That's like fiery flame mixed with air, mighty Valava;
Such is the state of countries that angered you!

12
பிப்ரவரி
February

சோழன் சிபி

...கொடுஞ்சிறைக்
கூர் உகிர்ப் பருந்தின் ஏறு குறித்து ஒரீஇ,
தன்அகம் புக்க குறுநடைப் புறவின்
தபுதி அஞ்சிச் சீரை புக்க
வரையா ஈகை உரவோன்! (புறம். 43: 4–8)

தாமப்பல் கண்ணனார்

பொருள்:

வளைந்த சிறகையும் கூர்மையான நகத்தையும் கொண்ட பருந்தின் தாக்குதலுக்கு அஞ்சிய புறா ஒன்று, சோழன் சிபியை அடைந்தது. அந்தப் புறாவின் துன்பத்திற்கு வருந்தி, தாக்குவதற்கு வந்த பருந்திற்குப் புறாவின் எடைக்கு எடையாகத் தனது தசையை அரிந்து தராசுத் தட்டில் வைத்தான் சிபி. அத்தகைய உயிரைப் பொருட்படுத்தாத வள்ளல் தன்மை கொண்டவன் அவன்.

To avoid being killed by a sharp clawed eagle
A small pigeon sought refuge in the King's house;
Fearing for its life, he (Sibi Chakravarthy) offered the eagle
Equivalent quantity of his own flesh.

ஸ்ரேயா அனில்
பாரதி மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி, கோயம்புத்தூர்.

பிப்ரவரி
FEBRUARY 13

சோழன் நெடுங்கிள்ளி

...திறத்தல்:
மறவை ஆயின் போரொடு திறத்தல்:
அறவையும் மறவையும் அல்லை ஆக,
திறவாது அடைத்த திண்நிலைக் கதவின்
நீள்மதில் ஒருசிறை ஒடுங்குதல்
நாணுத் தகவு உடைத்து இது காணுங் காலே! (புறம். 44:12–16)

கோவூர் கிழார்

பொருள்:

கோட்டைக் கதவைத் திற! நீ வீரத்துடன் போரிட விரும்பினால் கோட்டைக் கதவைத் திறந்து போரிடு. அப்படி இல்லை என்றால் அறநெறிக்கு உட்பட்டு, உனது கோட்டையை முற்றுகையிட்டிருக்கும் நலங்கிள்ளியின் முன்தோன்றி 'இது உன்னுடையதுதான்' என்று வழங்கிவிடு. இந்த இரண்டில் ஒன்றைச் செய்யாமல், பெரிய மதிலின் ஒரு பக்கத்தில் ஒடுங்கியிருப்பது வெட்கப்படத்தக்கது!

If you're virtuous, surrender the fort and open the doors;
If you're valorous, break the siege and open the doors;
To be neither and keep the massive fort doors shut
While you hide in a corner, is shameful to see!

பா. யுவன் சங்கர்
அரசு மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி.

மோ. பிரீத்தி
ஓவிய ஆசிரியர், கடலூர்.

14
பிப்ரவரி
February

சேரமான் கோக்கோதை மார்பன்

கோதை மார்பின் கோதையானும்
கோதையைப் புணர்ந்தோர் கோதையானும்
மாக் கழி மலர்ந்த நெய்தலானும்
கள் நாறும்மே கானல்அம் தொண்டி!
அஃதுஎம் ஊரே! அவன்எம் இறைவன்! (புறம். 48: 1–5)

பொய்கையார்

பொருள்:

சேரன் மார்பில் விளங்கும் மாலையாலும், அவனை மணந்த மகளிர் அணிந்துள்ள மாலையாலும் பெரிய கழிநீர்நிலைகளில் பூத்துள்ள நெய்தல் பூக்களாலும் தொண்டி நகரில் தேன் மணம் கமழ்கிறது. அதுதான் எம்முடைய ஊர். அவனே எம்முடைய தலைவன்.

Aroma of flowers adorning the chest of *kokothai*
And flowers worn by his consorts
And lilies blooming in back waters of his country
Pervade the seaside town of *thondi*,
That's my town; he is my ruler!

பிப்ரவரி FEBRUARY 15

நீரில் விளையாட்டு

கோ. பாலாஜி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

யாறு ஆடுவாருள்
துரந்து புனல் தூவ, தூ மலர்க் கண்கள்
அமைந்தன; ஆங்கண் அவருள் ஒருத்தி,
கைபுதைஇயவளை
ஏக் கழுத்து நாணால் கரும்பின் அணை மென்தோள்
போக்கிச் சிறைப்பிடித்தாள்! ஓர் பொன்அம் கொம்பு
பரிந்து அவளைக் கைப்பிணை நீக்குவான், பாய்வாள்:
இரும்பு ஈர் வடி ஒத்து மைவிளங்கும் கண்ஒளியால்
செம்மைப் புதுப்புனல் சென்று இருள் ஆயிற்றே! (பரி. 7: 51–59)

மையோடக் கோவனார்

பொருள்:

வையை ஆற்றில் மகளிர் நீராடினர். அவர்களுள் சிலர், துருத்தியால் மற்றவர் மீது நீரைப் பாய்ச்சினர். அந்நீர் கண்ணில் பட்ட பெண்கள் இமைக்காமல் இருந்தனர். அவ்வாறு இல்லாமல் கண்களை மூடிக்கொண்டவளை, தோற்றவள் என்று சொல்லி, கரும்பு போன்ற தோளைக் கொண்ட அவளின் கையைக் கழுத்தில் அணிந்த பொன் கயிற்றால் கட்டிச் சிறைப்படுத்தினாள் ஒருத்தி. பொன்கொம்பு போன்ற இன்னொருத்தி, அவளை மீட்பதற்காகப் பாய்ந்தாள். பாய்ந்தவளின் மை பூசிய மாவடு கண்களால், செந்நிற வையையின் புதுவெள்ளம் இருள் நிறம் கொண்டது.

In the river, the young women play with each other, squirting water.
When one that tries to save her mate, who had lost the game,
Dives into the water,
She darkens the fresh, red floods with the kohl on her bright eyes.

16
பிப்ரவரி
February

ஊடல் கொண்ட தலைவி

சிகை கிடந்த ஊடலின் செங்கண் சேப்புஊர,
வகை தொடர்ந்த ஆடலுள் நல்லவர் தம்முள்,
பகை தொடர்ந்து, கோதை பரியூஉ, நனி வெகுண்டு,
யாறு ஆடு மேனி அணி கண்ட தன்அன்பன்
சேறு ஆடு மேனி திருநிலத்து உய்ப்ப, சிரம் மிதித்து,
தீர்வு இலது ஆகச் செருவுற்றாள்! (பரி. 7: 70–75)

மையோடக் கோவனார்

பொருள்:

வையையில் நீராடிய பெண்களில் ஒருத்தி, தலைவனைக் காதல் நோக்கத்துடன் பார்த்ததைத் தலைவி கண்டாள். ஊடல் காரணமாகச் சிவந்திருந்த அவளது கண்கள் மேலும் சிவந்தன: மிகுந்த கோபத்துடன் தன் மாலையை அறுத்தெறிந்தாள். அதைக் கண்ட தலைவன், சந்தனம் பூசப்பெற்ற தனது மேனி, நிலத்தில் படும்படியாக அவளைப் பணிந்து கெஞ்சினான். ஆனாலும், அவளது சினம் தீர்க்க முடியாத அளவிற்கு மிகுந்திருந்த காரணத்தால் அவள், தலைவனின் தலையில் உதைத்தாள்.

Her already reddened eyes reddened further
As she was angered by the girl looking at her lover
And she threw away her garland;
Fearing her wrath, he came and bowed in front of her
But she kicked his head and sulked.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

பிப்ரவரி
FEBRUARY 17

கோட்டையை அழிக்கும் சேரமான் படைகள்

மழைதவழ்பு தலைஇய மதில் மரம் முருக்கி,
நிரைகளிறு ஒழுகிய நிரைய வெள்ளம்
பரந்து ஆடு கழங்கு அழி மன் மருங்கு அறுப்ப,
கொடிவிடு குரூஉப் புகை பிசிர, கால்பொர,
அழல்கவர் மருங்கின் உருஅறக் கெடுத்துத்
தொல்கவின் அழிந்த கண்அகல் வைப்பின்...(பதிற்று. 15: 3-8)

குமட்டூர்க் கண்ணனார்



பொருள்:

சேரமன்னா! உன்னுடைய ஆண் யானைகள், மேகம் தங்கும் உயர்ந்த மதில் சுவர்களையும் காவல்காடுகளையும் அழித்துவிட்டு வரிசையாகச் செல்லும். பகை மன்னனின் படைகளையும் அரசச் சுற்றங்களையும் அழிக்கும். பகை நாட்டு ஊர்களில் மூட்டிய பெருந்தீயின் புகையானது கொடி போல் பறக்கும். அது காற்றோடு கலந்து சுழன்று எரிந்ததால் பகைவர் நாட்டின் பழமையான அழகு உருத் தெரியாமல் அழிந்தது.

O' Cheralathan! your battle elephants destroy
Lofty fort walls and protective forests of your enemies;
You set fires, and smoke from tall flames rise up with color,
Spreading sparks in the blowing winds, devastating cities.

பவித்ரா சி
ஸ்ரீ சாய்ராம் பொறியியல் கல்லூரி, காஞ்சிபுரம்.

18

பிப்ரவரி

February

வீரர்களுக்குத் தலைவன் சேரமான்

கடலவும் கல்லவும் யாற்றவும் பிறவும்
வளம் பல நிகழ்தரு நனந்தலை நன்நாட்டு,
விழவு அறுபு அறியா முழவு இமிழ் மூதூர்,
கொடி நிழல்பட்ட பொன்உடை நியமத்து,
சீர்பெறு கலி மகிழ் இயம்பும் முரசின்
வயவர் வேந்தே! (பதிற்று. 15: 16–20)

குமட்டூர்க் கண்ணனார்

பொருள்:

வெற்றி முரசு கொட்டும் சிறப்புமிகு வீரர்களின் தலைவனான நெடுஞ்சேரலாதனே! கடலில் விளைவனவும், மலையில் கிடைப்பனவும், ஆற்றால் பெறுவனவும், பிறவும்ஆன வளம் பலவும் திகழும் அகன்ற இடத்தையுடைய நல்ல நாடு சேர நாடு. அங்குள்ள பழமையான ஊர்களில் விழா முரசின் முழக்கம் இடைவிடாது ஒலிக்கும். கொடிகளின் நிழலில் உள்ள கடைத்தெருக்களில் பொன் குவிந்துள்ளது.

Ruler of the blessed Land
Where goods are produced from oceans,
Mountains, rivers and elsewhere,
Where drums reverberate joyously
In ancient towns that haven't had a break in festivities,
Where banners flutter in markets that trade in gold!
O' king of warriors, who beat roaring drums!

தி. சுந்தரவடிவேல்
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

பிப்ரவரி
FEBRUARY 19

கோ. பாலாஜி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

இளையவள் இவள்

நெறிமருப்பு எருமை நீல இரும்போத்து
வெறிமலர்ப் பொய்கை, ஆம்பல் மயக்கும்
கழனி ஊரன் மகள் இவள்;
பழன வெதிரின் கொடிப் பிணையலளே! (ஐங். 91)

ஓரம்போகியார்

பொருள்:

வளைந்த கொம்புடைய கரிய எருமைக் கடாவானது, மணமுள்ள பூக்கள் நிறைந்த பொய்கையில் உள்ள ஆம்பலைச் சிதைக்கும். அத்தகைய நீர் வளம் மிக்க வயல்களைக் கொண்ட ஊரனுக்கு மகள் இவள். வயல்களில் உள்ள கரும்பின் மலரால் தொடுக்கப்பட்ட நீண்ட மாலையை உடையவள் ஆவாள். (மணம் இல்லாத கரும்புப் பூ அணிந்த இவள், இன்னும் திருமணப் பருவம் அடையாதவள் என்பது குறிப்பு)

(O' hero,)
This girl is the daughter of the chief of the region
Where the bluish black male buffalo of curved horns
Ruins water–lilies in the lake with fragrant flowers.
She wears a long garland
Woven with sugarcane blooms from the fields.

20

பிப்ரவரி

February

மீனுக்கு நெல்

வலைவல் பாண்மகன் வால்எயிற்று மடமகள்
வராஅல் சொரிந்த வட்டியுள், மனையோள்
யாண்டுகழி வெண்ணெல் நிறைக்கும் ஊர!
வேண்டேம் பெரும, நின்பரத்தை
ஆண்டுச் செய் குறியோடு ஈண்டு நீ வரலே! (ஐங். 48)

ஓரம்போகியார்

பொருள்:

மீன் வலை வீசுவதில் வல்ல பாண் மகனும் வெண்மையான பற்களையுடைய இளைய பாண் மகளும் வரால் மீனைக் கொண்டு வந்து வட்டியில் கொடுத்தனர். அவர்கள் கொண்டு வந்த வட்டி நிறையப் பழைய வெண்ணெல்லைக் கொடுக்கின்ற வளம்நிறைந்த ஊரனே! உனது பரத்தை அங்கே உன்னிடம் காட்டிய குறிக்கேற்ப இங்கு நீ வருவதை நாங்கள் விரும்பவில்லை.

O' Lord of the habitat, where the white teethed tender girl
Of the fisherman, strong in casting net,
Exchanged basketful fish for a year old white paddy
We don't want you to visit us with mark,
Made by your harlot in her place.

து. ஸ்ரீரஞ்சினி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

பிப்ரவரி
FEBRUARY 21

தொண்டிப் பட்டினம் போன்ற அழகுடையவள்

பிரிதல் எண்ணினை ஆயின், நன்றும்
அரிது உற்றனையால் பெரும! உரிதுநின்
கொண்டு ஆங்குப் பெயர்தல்வேண்டும்! கொண்டலொடு
குரூஉத் திரைப் புணரி உடைதரும் எக்கர்ப்
பழந் திமில் கொன்ற புதுவலைப் பரதவர்
மோட்டு மணல் அடைகரைக் கோட்டுமீன் கொண்டி
மணம் கமழ் பாக்கத்துப் பகுக்கும்
வளம்கெழு தொண்டி அன்ன இவள் நலனே! (அகம். 10: 6–13)

அம்மூவனார்

பொருள்:

கீழ்க் காற்றால் மீனவர்கள் கடலுக்குள் செல்லவில்லை. கரையில் தாமே வந்து அகப்பட்ட சுறாமீனைப் பிடித்துப் பகுத்துக் கொண்டனர். இத்தகைய வளமான ஊர் தொண்டிப் பட்டினம். எங்கள் தலைவி, அப்பட்டினம் போன்ற அழகுடையவள். தலைவனே! நீ, அழகு நிறைந்த அவளைப் பிரிய நினைத்தாய் என்றால், அது உன்னால் இயலாது. நீ அவளை உன் ஊருக்கு அழைத்துக்கொண்டு செல்.

Great is her beauty.
Like the prosperous city of *tonti,*
Where fishermen relish with their kin
The shark that gets drifted from sea,
Evade a grievous sin by taking her with you.

சு. முரளிதரன்
ஓவிய ஆசிரியர் (ஓய்வு), சேலம்.

மு. கார்த்தி
அமெரிக்கன் கல்லூரி, மதுரை.

22
பிப்ரவரி
February

உன் மகன் எனக்கும் மகனே

யாவரும் விழையும் பொலந்தொடிப் புதல்வனைத்
தேர் வழங்கு தெருவில் தமியோன் கண்டே,
கூர் எயிற்று அரிவை குறுகினள்; யாவரும்
காணுநர் இன்மையின், செத்தனள் பேணிப்
பொலங்கலம் சுமந்த பூண்தாங்கு இளமுலை,
'வருகமாள என் உயிர்' எனப் பெரிது உவந்து,
கொண்டனள்! (அகம். 16: 5–11) சாகலாசனார்

பொருள்:

தெருவில் தனியாகத் தேரை உருட்டி விளையாடும் குழந்தையைப் பொன்னணிகள் அணிந்த உன்னுடைய காமக் கிழத்தி நெருங்கி, தெருவில் வேறு யாரும் இல்லாததைக் கவனித்து, உனக்கும் அவனுக்குமான உருவ ஒப்புமையைக் கண்டு உன்னுடைய மகன், தனக்கும் மகனாவான் என்று எண்ணி, 'என் உயிரே வருக' என்று, தன் மார்போடு அணைத்துக்கொண்டாள்.

Resembling you in his features,
Your young mistress took our toddler close
To her jeweled bosom,
Assured of the absence of bystanders.

பிப்ரவரி

FEBRUARY 23



ம.அ. நிர்மல் குமார் ,
ஓவியர், வேலூர்.

அறமில்லாத தாய்

...இவ்வூர்,
கொடிது அறி பெண்டிர் சொற்கொண்டு, அன்னை
கடி கொண்டனளே தோழி; பெருந்துறை,
எல்லையும் இரவும் என்னாது, கல்லென
வலவன் ஆய்ந்த வண்பரி,
நிலவு மணல் கொட்கும் ஓர் தேர் உண்டு எனவே!

(அகம். 20: 11–16)

உலோச்சனார்

பொருள்:

பெரிய இந்தக் கடற்கரை ஊரில் இரவு, பகல் பாராமல் தேர்ப் பாகன் இயக்கும், குதிரைகள் பூட்டப்பெற்ற தேர், நிலவு போன்ற வெண்மணலில் 'கல்' என்ற ஒலியுடன் வந்து போவது உண்டு. அதைக் கண்டு, தலைவன்தான் வருகிறான் என்று எண்ணிய தாய், இந்த ஊர்ப் பெண்கள் அலர் தூற்றும் கொடிய சொல்லையும் கேட்டு நம்மை வீட்டுக் காவலில் வைத்துவிட்டாள்.

The rumour of a noisy chariot
Roaming on the moon–white sands of our village
Made our mother to put us under strict surveillance.
What shall we do?

24

பிப்ரவரி

February

அருள்கூர்ந்து வந்துவிடு நெஞ்சே!

...வெண்பல்,
அவ்வயிற்று அகன்ற அல்குல் தைஇ,
தாழ்மென் கூந்தல், தடமென் பணைத்தோள்
மடந்தை மாண்நலம் புலம்ப, சேய்நாட்டுச்
செல்லல் என்று யான் சொல்லவும், ஒல்லாய்!
வினைநயந்து அமைந்தனை ஆயின், மனை நகப்
பல்வேறு வெறுக்கை தருகம் வல்லே,
எழு இனி, வாழி, என் நெஞ்சே! (அகம். 21: 2–9)

காவன் முல்லைப்பூதனார்

பொருள்:

வெண்மையான பற்கள், அழகிய வயிற்றைத் தொடர்ந்து அமைந்த பரந்த அல்குல், பின்னப்பட்ட தாழ்ந்த கூந்தல், மூங்கில் போன்ற தோள் ஆகியவற்றை உடையவள் காதலி. அவளுடைய பெண்மை நலம், துணையின்றி வருந்துமாறு அவளைப் பிரிந்து தொலைவில் உள்ள நாட்டுக்குச் செல்லவேண்டாம் என்று நான் சொன்னதை, நெஞ்சே நீ கேட்கவில்லை. பொருள் ஈட்டுவதையே குறிக்கோளாகக் கொண்டு வந்துவிட்டோம். அவள் உள்ளம் மகிழும்படியும் வீடு நிறையும்படியும் பலவகைப்பட்ட செல்வங்களை விரைவில் திரட்டித் திரும்பி விடுவோம், வா!

O heart! Despite my repeated protests
Of not letting her feminine grace wilt in isolation,
You have led me up to fetch abundant wealth.
Lead me so in all swiftness
To brighten our home with riches.

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

பிப்ரவரி
FEBRUARY 25

அறியாமையை எண்ணிச் சிரித்தேன்

நல்மனை, நெடுநகர்க் காவலர் அறியாமை
தன்நசை உள்ளத்து நம்நசை வாய்ப்ப,
இன்உயிர் குழைய முயங்குதொறும் மெய்ம்மலிந்து,
நக்கனென் அல்லெனோ யானே – எய்த்த
நோய்தணி காதலர் வர, ஈண்டு
ஏதில் வேலற்கு உலந்தமை கண்டே! (அகம். 22:16–21)

வெறிபாடிய காமக்கண்ணியார்

பொருள்:

இந்த நகரத்தில் உள்ள காவலர்கள் அறியாமல், என்மேல் கொண்ட விருப்பத்தால் தலைவர் இங்கு வந்தார். அவர் என்னைத் தழுவும் போது என் உயிர் அவருடன் இணைகிறது. இதை அறியாத நம் அன்னையர், எனக்கு நோய் ஏற்பட்டதாகக் கருதிச் சிறிதும் தொடர்பில்லாத வேலனுக்கு வெறியாட்டு நிகழ்த்துகின்றனர். அவர்களின் அறியாமையை நினைத்து நான் உடல் குலுங்கச் சிரித்தேன்.

My man appeared to remedy my malady;
And filled me with ecstasy, every time he hugged me.
Didn't I smile at the folly of my kin
Who, ignorant of my state,
Caused the Velan to exert himself in vain?

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

26
பிப்ரவரி
February

பனிக்காலத்தில் தனித்திருக்கும் தலைவி

வயங்கு கதிர் கரந்த வாடை வைகறை,
விசும்பு உரிவதுபோல், வியல் இடத்து ஒழுகி,
மங்குல் மாமழை, தென்புலம் படரும்
பனிஇருங் கங்குலும் தமியள் நீந்தி,
தம் ஊரோளே, நன்னுதல்; யாமே
உரவுச் சின வேந்தன் பாசறையேமே! (அகம். 24: 6–10, 18)

ஆவூர் மூலங்கிழார்

பொருள்:

சூரியனைக் கார்மேகம் மறைத்திருக்கும் விடியற்காலையில், வானம் தோல் உரிப்பது போல் மேகம் திரண்டு, பெரிய மழையாகப் பரந்த நிலப்பரப்பில் பெய்துவிட்டுத் தெற்கு நோக்கி நகர்ந்து போய்விட்டது. பனி பொழியும் இந்த வாடைக்காலத்தில் தலைவி, தனியே இரவைக் கழித்தபடி இருக்கிறாள். நானோ, இந்தப் பனிக்கால இரவில் பகைமன்னன்மேல் படையெடுத்து வந்திருக்கும் வேந்தனின் பாசறை யில் இருக்கிறேன்.

In this cool rainy season
Our lady suffers hard through the long and chill night;
We are in the military camp of our wrathful king.
We ponder upon her state in our absence!

பிப்ரவரி
FEBRUARY 27

ஹ. தமன்னா
வேலம்மாள் நியூஜென் பள்ளி, சென்னை.

உன்னை மணம்புரிய வந்துள்ளான்

தன் மலை பாட நயவந்து கேட்டு அருளி
மெய்ம் மலி உவகையன் புகுதந்தான் புணர்ந்து ஆரா
மென் முலை ஆகம் கவின் பெறச்
செம்மலை ஆகிய மலைகிழ வோனே! (கலி. 40: 31–34)
கபிலர்

பொருள்:

தலைவனின் மலையை நாம் புகழ்ந்து பாடினோம். அதனை மெய்ம்மறந்து கேட்ட அவன் மகிழ்ந்து அருள் புரிவதற்காக வந்தான். கனவில் தலைவியைச் சேர்ந்த அவன், நேரில் அவளைத் திருமணம் செய்து, அவளுடைய மெல்லிய மார்பு அழகுபெறுமாறு இணைந்து கொள்வதற்காக வந்தான்.

He heard to his heart's desire, our praise of his hill;
He has come with grace and joy
To embrace your delicate breasts,
Making you splendid and beautiful.

28

பிப்ரவரி

February

நகைக்கூட்டம் செய்தான் அக்கள்வன்

...யானும்
தன்னை அறியாது சென்றேன்; மற்று என்னை
வளை முன்கை பற்றி நலிய, தெருமந்திட்டு
'அன்னாய்! இவன் ஒருவன் செய்தது காண்' என்றேனா,
அன்னை அலறிப் படர்தர, தன்னை யான்
'உண்ணுநீர் விக்கினான்' என்றேனா, அன்னையும்
தன்னைப் புறம்பு அழித்து நீவ, மற்று என்னைக்
கடைக்கண்ணால் கொல்வான்போல் நோக்கி, நகைக்கூட்டம்
செய்தான் அக்கள்வன் மகன்! (கலி. 51: 8–16)

கபிலர்

பொருள்:

வந்திருப்பது தலைவன்தான் என்று அறியாமல் நானும், வாசலுக்குச் சென்று நீரை நீட்டினேன். அவனோ, என்னுடைய கையைப் பற்றி இழுத்துவிட்டான். நான் உடனே அலறிவிட்டேன். அன்னை அலறியடித்துக்கொண்டு வந்து 'என்ன?' என்று கேட்டாள். நான், அவனைக் காட்டிக்கொடுக்கக் கூடாது என்று எண்ணி, 'தண்ணீர் குடிக்கும்போது விக்கினான்' என்றேன். தாய் உடனே அவனது முதுகைத் தடவிக்கொடுத்தாள். அப்போது என்னைக் கொல்பவனைப் போலக் கடைக்கண்ணால் நோக்கி, சிரித்தான் அந்தக் கள்வன்.

I went out holding water in hand, unaware that it was him.
He seized my forearm;
Dismayed, I cried out; mother came out running,
I said, 'He hiccoughed as he drank'.
As mother stroked him over and over,
He, that thief, cast his oblique glance at me.

ச.ரே. பிரஹந்த்
குகை மேல்நிலைப் பள்ளி, சேலம்.

பிப்ரவரி FEBRUARY 29

உனக்குப் புகழ் கிடைக்கும்

அல்லல் களைந்தனன், தோழி! நம் நகர்
அருங்கடி நீவாமை கூறின், 'நன்று' என
நின்னொடு சூழ்வல், தோழி! 'நயம் புரிந்து
இன்னது செய்தாள் இவள்' என,
மன்னா உலகத்து மன்னுவது புரைமே! (கலி. 54: 16–20)

கபிலர்

பொருள்:

தலைவன் என்னைத் தழுவி, என் துன்பத்திலிருந்து நீக்கினான். நம் வீட்டில் வேறொருவருடன் ஏற்பாடு செய்யப்படும் திருமணம் நிகழாமல் இருக்கச் செய்தால் 'நன்று' என்று மகிழ்வேன். தோழி, நான் கொண்ட களவு வாழ்க்கையைக் கற்பு வாழ்க்கையாக அமைத்துக் கொண்டேன் என்று நீ நயமாக எடுத்துக் கூறி ஏற்றுக்கொள்ளச் செய்தால், நிலையற்ற உலகத்தில் நிலைத்த புகழுடன் வாழ்வாய்!

Relieved was my affliction of love, my confidante!
Beholden to you I should be
Were you to reveal to mother,
My union blameless and unswerving with my dear;
And if you do so, things abiding shall be yours
In this transient world.

கிறிஸ் நல்லரத்தினம்
ஓவியர், ஆஸ்திரேலியா.

01

மார்ச்

March

ப. கௌசிகா ஸ்ரீ
அரசு கவின் கலைக் கல்லூரி,
சென்னை.

விடியல் நேரம்

விளம்பழம் கமழும் கமஞ்சூல் குழிசி,
பாசம் தின்ற தேய்கால் மத்தம்,
நெய்தெரி இயக்கம் வெளில்முதல் முழங்கும்
வைகு புலர் விடியல்! (நற். 12: 1–4)

கயமனார்

பொருள்:

தயிர் கடையும் பானையில் விளாம்பழம் போட்டு வைப்பது வழக்கம். அப்படி விளாம்பழத்தின் மணம் நிறைந்திருக்கும் தயிர்ப் பானையில் மத்தினைக் கயிற்றால் கட்டி, தயிர் கடைவர். தயிரிலிருந்து வெண்ணெய் எடுப்பதற்காக அதிகாலையில் இவ்வாறு கடைவதால் தேய்ந்த மத்து எழுப்பும் ஒலியுடன் ஒவ்வொரு நாளும் விடிகிறது.

The early dawn is filled with the noise
Of curd churned for butter in wood apple smelling pots,
Setting in motion the churning rods tied to pillars,
Whose stems had become worn out
By constant pulling with cords.

மார்ச் 02

MARCH



ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

இப்போது தலைவன் கொடியவன்

என் கைக்கொண்டு தன் கண் ஒற்றியும்
தன் கைக்கொண்டு என் நல்நுதல் நீவியும்
அன்னைபோல இனிய கூறியும்
கள்வர் போலக் கொடியன் மாதோ! (நற். 28: 1–4)

முதுகூற்றனார்

பொருள்:

என் கையைக் கொண்டு தன் கண்ணில் ஒற்றிக் கொண்டான். தன் கையைக் கொண்டு என் நல்ல நெற்றியைத் தடவிக்கொடுத்தான். தாய் போல இனிய சொற்களைக் கூறி, களவுக் காலத்தில் அன்போடு இருந்தான் தலைவன். இப்போது என்னைப் பிரிந்து சென்று, கள்வன் போலக் கொடியவனாக உள்ளான்.

Once, our lover took my hands and pressed them
On his eyes, and stroked my charming forehead
Gently with his hands. He spoke
Kindly words with the affection of a loving mother.
Alas, now, he has turned wicked like brigands.

03
மார்ச்
March

உன் நிலை இரங்கத்தக்கது

கால் ஏமுற்ற பைதரு காலை,
கடல்மரம் கவிழ்ந்து எனக் கலங்கி உடன்வீழ்பு
பலர் கொள் பலகை போல,
வாங்க வாங்க நின்று ஊங்கு அஞர் நிலையே! (நற். 30: 7–10)

கொற்றனார்

பொருள்:

கடலில் புயல்காற்று வீசியதால் கப்பல் கவிழ்ந்துவிட்டது. அவ்வேளையில், கப்பலிலிருந்து விழுந்த பலரும் அங்கு மிதந்த பலகை ஒன்றைப் பிடித்துக்கொண்டனர். அப்பலகையை ஒவ்வொருவரும் தனித்தனியே இழுப்பதைப் போலப் பரத்தையர் ஒவ்வொருவரும் தனித்தனியே நின்று உன்னை இழுக்கும்போது நீ அடைந்த துன்ப நிலையை நான் கண்டேன்.

Like a wooden plank in the midsea,
Which all the victims hold on to at once,
When a vessel was hit by a hurricane strong,
Each one of your hetairas kept pulling you
Towards her. This plight of yours,
I witnessed with my own eyes, chief.

ச. யோகேஸ்வரன்
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

மார்ச்
MARCH
04

எவ்வியை இழந்த பாணர் போல

எவ்வி இழந்த வறுமை யாழ்ப் பாணர்
பூஇல் வறுந்தலை போலப் புல்லென்று
இனைமதி வாழிய நெஞ்சே! மனைமரத்து
எல் உறு மௌவல் நாறும்
பல்இருங் கூந்தல் யாரளோ நமக்கே? (குறுந். 19)

பரணர்

பொருள்:
வீட்டிற்கு அருகில் உள்ள மரத்தில் படர்ந்திருந்த முல்லைக் கொடியின் பூக்கள் மணக்கும் அடர்ந்த கரிய கூந்தலை உடைய இவள் இனி நமக்கு என்ன உறவோ? எவ்வி என்னும் வள்ளலை இழந்ததால் வறுமையுற்ற யாழ்ப் பாணர்களின் தலைகள், பொன்னாலான பூக்கள் இல்லாமல் பொலிவிழந்து காணப்படுவதுபோல், நெஞ்சே, நீயும் இனி, பொலிவிழந்து வருந்துவாயாக!

You suffer listlessly, my blessed heart,
Like the poor lute bards
Who have lost their patron Evvi!
She whose tresses are adorned with
Bright fragrant jasmine from our house
Has become a stranger to us.

அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

கா. தனாஸ் தீபக் ராஜன்
ஓவியர், சேலம்.

05
மார்ச்
March

உரவோர் உரவோராக!

அருளும் அன்பும் நீக்கித் துணைதுறந்து
பொருள்வயின் பிரிவோர் உரவோர் ஆயின்
உரவோர் உரவோர் ஆக!
மடவம் ஆக மடந்தை நாமே! (குறுந். 20)

கோப்பெருஞ்சோழன்

பொருள்:

என்மீது அன்பும் கருணையும் இல்லாமல் என்னை விட்டு, பொருள்தேடிச் செல்கிற அளவுக்கு அவருக்கு மன உறுதி உண்டு என்றால், அவர் அத்தகையவராகவே இருக்கட்டும். அவரைப் பிரிந்து வாழ வேண்டிய நான், உறுதியும் அறிவும் இல்லாதவளாகவே இருக்கிறேன்!

If those who leave their spouse
Forsaking love and affection
In search of wealth are wise,
Let him be wise! We'll be idiots, my friend!

மார்ச்
MARCH **06**

மீ. நவகிரீஸ்வரன்
அரசு கவின் கலைக் கல்லூரி, கும்பகோணம்.

இது வம்ப மாரி

புதுப் பூங்கொன்றைக்
கானம் 'கார்' எனக் கூறினும்
யானோ தேறேன்! அவர் பொய் வழங்கலரே! (குறுந். 21: 3–5)
ஓதலாந்தையார்

பொருள்:

கொன்றையங்காடு, கார் காலம் என்று உரைத்தாலும், நான் நம்ப மாட்டேன். ஏனெனில், தலைவர் பொய் சொல்லமாட்டார். கார் காலத்திற்குள் வருவேன் என்ற அவர், இன்னும் வரவில்லை. எனவே இப்போது வந்துள்ளது கார் காலம் இல்லை.

(The Hero promises to return before monsoon and the Heroine who awaits his arrival says...)
Even if the flowering woods proclaim it is monsoon,
I will not accept it; For he will never lie!

07

மார்ச்

March

அவன் செல்ல மாட்டான், வருந்தாதே!

நீர் வார் கண்ணை, நீ இவண் ஒழிய
யாரோ பிரிகிற்பவரே? (குறுந். 22: 1–2)

சேரமான் எந்தை

பொருள்:

நீ துயரத்தினால் கண்கள் நீர் சொரிய இங்கே தனியாக இருக்கிறாய்! இப்படி நீ இருக்கும்போது உன்னைப் பிரிந்து தலைவன் எப்படிச் செல்வான்? வருந்தாதே! அவன் செல்ல மாட்டான்.

My girl with teary eyes!
When you are here in distress,
How will he leave you alone and go away?

அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

மார்ச்
MARCH 08

சேரமான் தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை

குருதி வேட்கை உருகெழு முரசம்
மண்ணி வாரா அளவை, எண்ணெய்
நுரை முகந்து அன்ன மென்பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர,
இருபால் படுக்கு நின் வாள்வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும், நற்றமிழ் முழுது அறிதல் (புறம். 50: 5–10)

மோசி கீரனார்

பொருள்:
குருதி வேட்கைகொள்ளும் அரச முரசம், தூய்மைப் படுத்துவதற்காகக் கொண்டுசெல்லப்பட்டது. அது எண்ணெய் நுரை போன்ற மென்மையான முரசுக் கட்டில் என அறியாது நான் ஏறிப் படுத்துவிட்டேன். என்னைக் கண்ட நீ சினந்து வாளால் இருகூறாக வெட்டியிருக்கலாம். ஆனால், அதனைச் செய்யவில்லை. தமிழ் முழுதும் அறிந்தாய் என்பதற்கு இதுவே தக்க சான்றாகும்.

Unaware that the flower strewn cot
Is the resting place of the royal war drum
I, a poet, laid down on it to rest;
That you weren't angered at this insult and didn't cut me down
Shows you are well versed in our glorious Tamil!

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.



ச. தங்கவேல் முருகன்
அய்ய நாடார் ஜானகி அம்மாள் கல்லூரி
சிவகாசி.

09

மார்ச்

March

சோழன் குராபள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவன்

முந்நீர் நாப்பண் திமில்சுடர் போல,
செம்மீன் இமைக்கும் மாக விசும்பின்
உச்சி நின்ற உவவுமதி கண்டு,
கட்சி மஞ்ஞையின் சுரமுதல் சேர்ந்த,
சில்வளை விறலியும் யானும் வல்விரைந்து
தொழுதனம்! (புறம். 60: 1–6)

உறையூர் மருத்துவர் தாமோதரனார்

பொருள்:

கடல் நடுவே உள்ள படகில் வைக்கப்பட்ட விளக்கைப் போல, செவ்வாய் என்னும் விண்மீன் விளங்கும் வானத்தின் உச்சியில் முழு நிலவைக் கண்டோம். அது திருமாவளவனின் வெண்கொற்றக்குடை போலக் காட்சியளித்ததால், காட்டிற்கு வந்த நானும் சிறிய வளையல்களை அணிந்து, மயில் போன்ற அழகுடன் விளங்கும் விறலியும் விரைந்து வணங்கினோம்.

Myself and the peacock like songstress
Fell down and worshipped the moon many times
That looked like a lantern kept on a boat
In the middle of a sea.
(As if resembled your royal parasol protecting the earth)

மார்ச்
MARCH 10

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

உண்ட மயக்கத்தில் உழத்தியர்

செறுவின் தளம்பு தடிந்து இட்ட
பழன வாளைப் பரூஉக் கண் துணியல்
புது நெல் வெண் சோற்றுக் கண்ணுறை ஆக,
விலாப் புடை மருங்கு விசிப்ப மாந்தி,
நீடு கதிர்க் கழனிச் சூடு தடுமாறும்
வன்கை வினைஞர் புன்தலைச் சிறாஅர்
தெங்குபடு வியன்பழம் முனையின், தந்தையர்
குறைக்கண் நெடும்போர் ஏறி, விசைத்து எழுந்து
செழுங்கோள் பெண்ணைப் பழம் தொட முயலும்,
வைகல் யாணர் நன்னாட்டுப் பொருநன்! (புறம். 61: 3–12)

கோனாட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனார்

பொருள்:

வயலில் பரம்படிக்கும் கருவி துண்டித்த வாளை மீனின் பெரிய துண்டினைப் புதிய நெல் சோற்றுடன், விலாப் புடைப்ப உண்டனர் உழத்தியர். உண்ட மயக்கத்தில் அறுவடை செய்த தாள்களை எங்கு அடுக்குவது என்று தெரியாமல் தடுமாறினர். தாள்களை ஓரிடத்தில் ஆடவர் குவித்துவைத்தனர். அவர்களின் சிறுவர்கள் அதன் மீது ஏறி விளையாடும்போது அருகிலுள்ள தேங்காயைப் பறிக்காமல் உயரத்தில் இருக்கும் பனை மரத்தின் பழுத்த பழங்களைப் பறிக்கத் தாவினர். இத்தகைய வளம்கொண்ட நாட்டுக்குரியவன் சோழன்.

Belt fish in the fields cut down by plows
Are cooked as sides to fresh white rice
And eaten by farm women till their stomach bloat
That they are muddled about where to spread harvested long grains.
Their playing children climb on the tall haystacks
To pluck the fruits of palmyra palms.
There is abundant prosperity every day.

11
மார்ச்
March

போரில் வெற்றி எளிது அல்ல

வருதார் தாங்கி; அமர்மிகல் யாவது?
பொருது ஆண்டொழிந்த மைந்தர் புண்தொட்டு,
குருதிச் செங்கை, கூந்தல் தீட்டி,
நிறம்கிளர் உருவின் பேஎய்ப் பெண்டிர்
எடுத்துஎறி அனந்தல் பறைச் சீர் தூங்க,
பருந்து அருந்துற்ற தானையொடு செருமுனிந்து,
அறத்தின் மண்டிய மறப்போர் வேந்தர்
தாம் மாய்ந்தனரே! (புறம். 62: 1–8)

கழாத்தலையார்

பொருள்:

போர்க்களத்தில் முன்னால் வரும் படையுடன் போரிட்டு வெற்றிபெறுவது என்பது எளிது அல்ல. களத்தில் வீழ்ந்த வீரனின் காயத்தைத் தோண்டியதால் இரத்தம் தோய்ந்த கையைப் பேய்மகளிர் தங்கள் கூந்தலில் கோதிக் கொண்டனர். இரத்தமும் சேறும் கலந்த பல நிறத்துடன் காணப்பட்ட அவர்கள், ஒரே சீராக ஒலிக்கும் பறையின் தாளத்திற்கேற்ப ஆடுவர். போரில் இறந்தோர் உடலைப் பருந்துகள் தின்னும்படியாகப் பெரும்படையுடன் அறநெறிக்கு உட்பட்டு, வலிமையுடன் போரிட்ட இருபெரு மன்னரும் இறந்தனர்.

Foot soldiers fought valiantly at the front
And fell dead; ghastly ghouls dip their arms
Into the dead bodies and color their hair red
Dance to the slow beats of still sounding war drums;
Eagles circle around to eat the flesh.
And the two righteous kings have also
Perished in the valiant war.

அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

மார்ச் 12

MARCH 12

சோழன் கரிகால் பெருவளத்தான்

நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளிதொழில் ஆண்ட உரவோன் மருக,
களிஇயல் யானைக் கரிகால் வளவ!
சென்று அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! (புறம். 66: 1–5)

வெண்ணிக்குயத்தியார்

பொருள்:
பெரிய கடலில் மரக்கலத்தைச் செலுத்துவதற்கு, காற்றைப் பயன்படுத்தும் வழிமுறைகளை அறிந்து, கலத்தைச் செலுத்திய வல்லமை கொண்டவன் மரபில் வந்தவனே, மதம் கொண்ட யானையைப் போன்ற கரிகால் வளவனே! போரில் நேர்நின்று உன் வலிமை வெளிப்படுமாறு போரிட்டு வெற்றிபெற்றவனே!

Your ancestors set sail in the vast ocean,
Mastering the movement of wind
And making it work for them!
O' Karikala, akin to an aggressive elephant!
You showcased your strength by waging war on your foes
And destroying them!

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

வி. அர்ச்சனா
ஓவியர், திண்டுக்கல்.

13
மார்ச்
March

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன்

தைஇத் திங்கள் தண்கயம் போல,
கொளக்கொளக் குறைபடாக் கூழுடை வியனகர்,
அடுதீ அல்லது சுடுதீ அறியாது!
இருமருந்து விளைக்கும் நன்னாட்டுப் பொருநன்,
கிள்ளிவளவன்! (புறம். 70: 6–10)

கோவூர் கிழார்

பொருள்:

தை மாதத்தில் நீர் நிறைந்திருக்கும் குளிர்ந்த குளத்தைப் போலக் கொள்ளக் கொள்ளக் குறையாத சோற்றையுடைய வளமான நகர், சமைப்பதற்குப் பயன்படுத்தும் தீயைத் தவிர, பகைவரால் சுட்டெரிக்கும் தீயை அறியாதது. வயிற்றுப் பசி தீர்க்கும் உணவும் உடல் நோய் தீர்க்கும் மருந்தும் என்னும் இரண்டு மருந்துகளை விளைவிக்கும் நல்ல நாட்டின் வேந்தன் கிள்ளிவளவன்.

In towns that are as cool as winter ponds,
Food is cooked in never ending quantities:
Only those kitchen fires are known
While fire set by invaders is unknown
In Killi Valavan's glorious country!

மார்ச்
MARCH
14

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

சேரமான் கணைக்கால் இரும்பொறை

குழவி இறப்பினும், ஊன்தடி பிறப்பினும்,
ஆஅள் அன்று என்று வாளின் தப்பார்;
தொடர்ப்படு ஞமலியின் இடர்ப்படுத்து இரீஇய
கேள்அல் கேளிர் வேளாண் சிறுபதம்,
மதுகை இன்றி, வயிற்றுத் தீத் தணிய,
தாம் இரந்து உண்ணும் அளவை
ஈன்மரோ, இவ் உலகத் தானே? (புறம். 74)

பொருள்: **சேரமான் கணைக்கால் இரும்பொறை**

குழந்தை இறந்து பிறந்தாலும், தசைப் பிண்டமாகப் பிறந்தாலும் அவற்றை வாளால் வெட்டிப் பிளந்துதான் அடக்கம் செய்வது நம் மரபு. போரில் வாளால் வெட்டுப்பட்டு இறக்காமல், சங்கிலியால் பிணைக்கப்பட்ட நாய் போல, சிறையில் வாடும் நான், பகைவர் வழங்கும் நீரைக் கேட்டுப் பெற்றுக் குடிக்க மாட்டேன். வயிற்றுப் பசியைப் போக்குவதற்காக இரந்து உண்ணும் இழிநிலை கொண்டவனைத் தமிழ்கூறும் நல்லுலகத் தாய்மார் பெற்றெடுக்க மாட்டார்கள்.

Even if a baby is stillborn or born unformed
It'd still be considered part of the Royal clan
And be inflicted with battle wound (before burying);
Will such a clan give birth to one who's so weak
As to beg spiteful foes for water to assuage his hunger
Foes who demean him by keeping him chained like a dog?

15
மார்ச்

March

திருப்பரங்குன்றம் – மதுரை

வீழ்தும்பி வண்டொடு மிஞிறு ஆர்ப்ப, சுனைமலர,
கொன்றை கொடிஇணர் ஊழ்ப்ப, கொடிமலர்
மன்றல் மலர, மலர்க் காந்தள் வாய் நாற,
நன்று அவிழ் பல் மலர் நாற, நறை பனிப்ப,
தென்றல் அசைவரூஉம் செம்மற்றே அம்ம! நின்
குன்றத்தாற் கூடல் வரவு! (பரி. 8: 23–28)

நல்லந்துவனார்

பொருள்:

தும்பி, வண்டு, மிஞிறு ஆகியவை இசை பாடும். சுனைகளில் நீர்ப் பூக்கள் மலர்ந்திருக்கும். கொன்றை மரங்களில் கொடி போன்ற நீண்ட பூங்கொத்துகள் தொங்கும். முல்லைக் கொடி முதலான கொடிகளில் பூக்கள் மலர்ந்திருக்கும். காந்தள் மலர்ந்த இடம் எல்லாம் மணம் கமழும். நன்கு மலர்ந்த பல மலர்கள் தேன் துளிர்க்கும். அந்நறுமணங்களைக் கவர்ந்து தென்றல் காற்று வீசும். இத்தகைய இயல்புடையது திருப்பரங்குன்றத்திலிருந்து மதுரைக்குச் செல்லும் வழி.

Bees buzzing pleasantly, ponds filled with lilies,
Kondrai trees with cluster of yellow flowers,
Creepers blooming with fragrant jasmines
And breeze carrying these aroma – such scenes
Mark the way from Thirupparankundram to Madurai.

சூ. சௌந்தர்யா
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சிதம்பரம்.

மார்ச்
MARCH
16

போருக்குத் தயாராகும் வீரர்கள்

கொள்ளை வல்சிக் கவர்கால் கூளியர்
கல்லுடை நெடுநெறி போழ்ந்து சுரன் அறுப்ப,
ஒண்பொறிக் கழல்கால் மாறா வயவர்
திண்பிணி எஃகம் புலி உறை கழிப்ப,
செங்கள விருப்பொடு கூலம் முற்றிய
உருவச் செந்தினை குருதியொடு தூஉய்
மண்ணுறு முரசம் கண்பெயர்த்து இயவர்
கடிப்புடை வலத்தர் தொடித்தோள் ஓச்ச! (பதிற்று. 19: 1–8)

குமட்டூர்க் கண்ணனார்

பொருள்:

கொள்ளை கொண்ட உணவையும், போரை விரும்பும் கால்களையும் உடைய கூளிப் படையினர் என்னும் பாதை அமைக்கும் வீரர்கள், கற்கள் பொருந்திய பாதையைச் சரிசெய்வர். புள்ளிகள் அமைந்த வீரக் கழல் அணிந்த போர் மறவர்கள், சிறிய கைப்பிடியுடன் அமைந்த உறுதியான வாளினைப் புலித்தோல் உறையிலிருந்து எடுத்துப் போருக்குப் புறப்படத் தயாராயினர். செந்தினையைக் குருதியோடு கலந்து படையலிட்டனர். தூய்மையான முரசின் நடுவில் உள்ள கண்பகுதி அதிரும்படியாகக் குறுந்தடியைக் கொண்டு முரசு அறைவோர், முரசினை அடித்தனர்.

Strong legged scouts who take food from enemy country
Clear ways for your army across mountains and arid lands;
Anklet wearing soldiers who never take a step back
Unsheathe their swords and offer heaps of blood soaked grains
As sacrificial offering; drummers sound war drums smeared with blood.



நா. அல்ஃபியா
சிவராஜ் ஹோமியோபதி மருத்துவக் கல்லூரி
மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், சேலம்.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

17
மார்ச்
March

பொதுவிருந்து

வருநர் வரையார் வார வேண்டி,
விருந்துகண் மாறாது உணீஇய பாசவர்
ஊனத்து அழித்த வான்நிணக் கொழுங்குறை
குய் இடுதோறும் ஆனாது ஆர்ப்ப,
கடல் ஒலி கொண்டு செழுநகர் வரைப்பின்
நடுவண் எழுந்த அடுநெய் ஆவுதி! (பதிற்று. 21: 8–13)

பாலைக் கௌதமன்

பொருள்:

இறைச்சி வணிகர், விருந்து ஓம்புதற்கு வசதியாக, ஆட்டினை மணைமீது வைத்து வெட்டித் துண்டித்து, கொழுப்பு நீக்கி வழங்கினர். அதை வேகவைத்துத் தாளிக்கும்போது ஓசை எழும். சமைத்த உணவை உண்டவர் எழுப்பிய ஒலி, கடல் ஒலியைப் போல் இடைவிடாது அந்த நகரில் ஒலிக்கும். தம்மிடம் வருபவர்கள் அளவில்லாது உண்பதற்காக, ஆவுதி என்னும் வேள்வியில் நெய் ஊற்றுவது போல் நெய் ஊற்றிச் சமைத்த இறைச்சி உணவை வழங்கினான் பல்யானைச் செல்கெழு குட்டுவன்.

To let guests take as much as they wish and sate their hunger
Goat sellers cut fat dripping meat into pieces in chopping blocks;
Tempering sound of meat is like unceasing sound of waves
While cooking smoke rises as ghee is gushed to the dish
In the prosperous houses.

மார்ச்
MARCH
18

கோ. பாலாஜி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

தேர் எங்கே சென்றது?

வயலைச் செங்கொடிப் பிணையல் தைஇ,
செவ்விரல் சிவந்த சேயரி மழைக்கண்
செவ்வாய்க் குறுமகள் இனைய;
எவ்வாய் முன்னின்று மகிழ்ந! நின்தேரே? (ஐங். 52)

ஓரம்போகியார்

பொருள்:

தலைவி வயலையின் சிவந்த கொடியால் மாலை தொடுத்ததால். அவளது சிவந்த கைவிரல்கள் மேலும் சிவந்தன. அவளது, செவ்வரிகளை உடைய குளிர்ந்த கண்கள் உன் வரவை எதிர்பார்த்து மேலும் சிவந்தன; சிவந்த வாய் வறட்சி அடைந்தது. தலைவனே! உனது தேர் எவ்விடம் நோக்கிச் சென்றது?

Causing this woman with a red mouth, fingers that
Got redder stringing red *vayalai* vines as garlands,
And moist eyes with red lines,
To grieve, where, oh lord, has
Your chariot decided to go?

19

மார்ச்

March

இரவில் வராதே

பழனக் கம்புள் பயிர் பெடை அகவும்
கழனி ஊர! நின் மொழிவல்: என்றும்
துஞ்சுமனை நெடுநகர் வருதி;
அஞ்சாயோ, இவள் தந்தை கைவேலே? (ஐங். 60)

ஓரம்போகியார்

பொருள்:

சம்பங் கோழி, பெண் கோழியை அழைக்கும் வயல்வெளியை உடைய ஊரனே! உனக்கு ஒன்றைக் கூறுவேன். கேள்! எல்லோரும் உறங்கும் வேளையில் நீண்ட தொலைவில் உள்ள இந்நகருக்கு இரவிலே வருகிறாய். இவள் தந்தையின் கையில் உள்ள வேலுக்கு அஞ்ச மாட்டாயோ? நாங்கள் பெரிதும் அஞ்சி வருந்துகிறோம்.

O' Chief of the riverine region where the waterfowl of the lake
Responds to its mate's call; I wish to say this to you:
All days you come to our high mansion when its inmates fall asleep.
Don't you fear for the lance in the hand of this damsel's father?

இ. கிருத்திகா
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

மார்ச்
MARCH

20

வந்தால் கேடா வரும்?

கோடுஉயர் திணிமணல் துஞ்சும் துறைவ!
பெருமை என்பது கெடுமோ? ஒருநாள்
மண்ணா முத்தம் அரும்பிய புன்னைத்
தண்நறுங் கானல் வந்து, 'நும்
வண்ணம் எவனோ?' என்றனிர் செலினே! (அகம். 30: 11–15)

முடங்கிக் கிடந்த நெடுஞ்சேரலாதன்

பொருள்:

கரை உயர்ந்த மணல்திட்டில் உறங்கும் தலைவனே! தூய்மை செய்யாத முத்தைப் போன்ற அரும்புகள் உள்ள புன்னை மரங்கள் அடர்ந்த குளிர்ந்த கடற்கரைச் சோலைக்கு ஒருநாள் வந்து, 'எவ்வண்ணம் இருக்கிறீர்?' என்று கேட்டுவிட்டுச் சென்றால் உன் பெருமை கெட்டுப்போகுமோ?

This cool and fragrant garden by the sea
Is rich in *punnai* trees.
Should you choose to come here one day,
And ask us: "How are you?"
Will your honour suffer impairment?



செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

கோ. பாலாஜி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

21
மார்ச்
March

மொழிபெயர்த் தேயம் சென்றார் தலைவர்

புண்உமிழ் குருதி பரிப்பக் கிடந்தோர்
கண்உமிழ் கழுகின் கானம் நீந்தி,
'சென்றார்' என்பு இலர் தோழி! வென்றியொடு
வில் அலைத்து உண்ணும் வல்ஆண் வாழ்க்கை,
தமிழ்கெழு மூவர் காக்கும்
மொழிபெயர் தேஎத்த பல்மலை இறந்தே! (அகம். 31: 10–15)

மாமூலனார்

பொருள்:

போரில் பகைவரை அழித்து அந்த வெற்றியால் அடையும் பொருள்களை உண்டு வாழ்கின்ற வலிமை பொருந்திய வாழ்க்கையுடையோர் ஆண்கள். தமிழ்நாட்டை ஆளும் மூவராலும் பாதுகாக்கப்பெறும் வேற்றுமொழியுடைய நாடுகளில் போர் புரிவதற்காக, கொடிய பல மலைகளையும் கடந்து தலைவர் 'சென்றார்' என்று அவரை யாரும் தூற்றவில்லை. 'இவள் ஆற்றாது வருந்துகிறாள்' என்று என்னையே தூற்றுகின்றனர்.

Our hero crossed the terrible path beyond many hills;
Alas! The villagers do not blame him for leaving,
Oh friend! I am being blamed
For not being able to bear the separation!

மார்ச்
MARCH
22

கோ. மதிஸ்குமார்
ஓவியர், இலங்கை.

தேரை விரைவாகச் செலுத்துக!

செல்க, தேரே நல்வலம் பெறுந!
செந்தார்ப் பைங்கிளி முன்கை ஏந்தி,
'இன்று வரல் உரைமோ, சென்றிசினோர் திறத்து' என,
இல்லவர் அறிதல் அஞ்சி, மெல்லென
மழலை இன்சொல் பயிற்றும்
நாண்உடை அரிவை மாண்நலம் பெறவே! (அகம். 34:10,14–18)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

கழுத்தில் சிவந்த ஆரம் கொண்ட பச்சைக் கிளியைத் தன் முன் கையில் ஏந்தி, வீட்டில் இருப்பவர்கள் அறிந்துகொள்வார்களோ என்று அஞ்சி, மெதுவாக, என்னைப் பிரிந்துசென்றவர் பற்றி ஏதாவது சொல்வாயானால், 'அவர் இன்று வருவார்' என உரைப்பாயாக! என்று தம் மழலைச் சொல்லால் சொல்லிக்கொண்டிருக்கும் நாணம் மிக்க தலைவி மகிழும் வகையில், பாகனே! நம் தேரை விரைவாகச் செலுத்துவாயாக!

O charioteer! Speed up your chariot.
Afraid of being heard by the inmates,
My beloved would whisper to her parakeet:
"Should you desire to talk of our hero who had left us alone,
May you speak thus: "He will come here this day."

23

மார்ச்

March

மார்பில் உறங்கச் செய்யட்டும்!

போக்குஅருங் கவலைய புலவுநாறு அருஞ்சுரம்
துணிந்து, பிறள்ஆயினள் ஆயினும், அணிந்துஅணிந்து,
ஆர்வநெஞ்சமொடு ஆய்நலன் அளைஇ, தன்
மார்பு துணையாகத் துயிற்றுக தில்ல! (அகம். 35: 10–13)

குடவாயில் கீரத்தனார்

பொருள்:

என் மகள்,செல்வதற்கரிய பாலை நிலத்தின் புலால் நாறும் வழியில், தலைவனுடன் துணிந்து சென்றாள். தலைவனுக்கு உரிமையாகிவிட்ட அவள், இப்போது எனக்கு அயலாள் ஆகிவிட்டாள். அவளைத் தலைவன், அன்பு நிறைந்த உள்ளத்துடன், மலர் முதலியவற்றால் அழகுபடுத்தி, மகிழ்ந்து, தன் மார்பில் சாய்த்துத் துயிலச் செய்வானாக!

My daughter betook with her lover;
May the youngster who has eloped with my daughter
Bedeck her with great ardour
And enjoy her youth and splendour
And lull her to sleep on his chest.



செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

மார்ச்
MARCH
24

பிழைத்திருக்க முடியுமோ?

மருதமர நிழல், எருதொடு வதியும்
காமர் வேனில்மன் இது,
மாண் நலம் நுகரும் துணை உடையோர்க்கே! (அகம். 37:16–18)
விற்றூற்று மூதெயினனார்

பொருள்:

மருதமர நிழலில் எருதுகளுடன் உழவர்கள் தங்கியிருக்கும் இளவேனில் காலம் இது. இந்த இளவேனில் காலத்தில், ஒருவரை ஒருவர் பிரிந்து வாழும் வாழ்க்கையை உடையோர் ஆற்றியிருக்க முடியுமோ?

Under the umbrage of the *marutham* trees
The peasants rest with their bulls till sunset.
This sweet spring is
Only for those fortunate who have their lovers with them.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

ச. சர்வந்திகா
வேலம்மாள் வித்யாலயா பள்ளி, சென்னை.

25
மார்ச்
March

மன்னனே குற்றமுடையவன்

பேதுற்றாய் போலப் பிறர் எவ்வம் நீ அறியாய்!
யாதுஒன்றும் வாய்வாளாது இறந்து ஈவாய்! கேள், இனி;
நீயும் தவறு இலை; நின்னைப் புறங்கடைப்
போதர விட்ட நுமரும் தவறு இலர்;
நிறைஅழி. கொல்யானை நீர்க்கு விட்டாங்கு.
'பறை அறைந்து அல்லது செல்லற்க' என்னா
இறையே தவறு உடையான்! (கலி. 56: 28–34)

கபிலர்

பொருள்:

நீ எதுவும் அறியாதவள் போல மற்றவரின் வருத்தத்தைப் பொருட்படுத்தாமல், கேட்டவர்க்கு எந்தப் பதிலும் சொல்லாமல் போகிறாய்! இப்போது நான் சொல்வதைக் கேள்! நீயோ, உன்னை இப்பக்கத்தில் வரும்படி விட்ட உறவினரோ குற்றம் உடையவர் அல்லர். மதங்கொண்ட யானையை நீர்நிலைக்கு அழைத்துச் செல்லும்போது பறை முழக்கிச் செல்வதைப் போல, நீ வரும்போதும் பறை முழக்காமல் செல்ல வேண்டாம் என்று ஆணையிடாத மன்னனே குற்றமுடையவன்.

As if confused and not aware of the pain of others,
You move away without uttering anything.
You are not at fault, nor are your kindred
That let you out on parade; It's the lord, our ruler
Who decreed not the beating of the drum,
As done for the murderous elephant taken out to the fountain.

மார்ச்
MARCH
26

ர. மல்லிகா
ஓவிய ஆசிரியர், சென்னை.

ஒருமுறையாவது தழுவிச் செல்

...வேங்கைவீ
முற்று எழில் கொண்ட சுணங்கு அணிபூண் ஆகம்
பொய்த்து ஒருகால் எம்மை முயங்கினை சென்றீமோ,
முத்து ஏர் முறுவலாய்! நீ படும் பொன் எல்லாம்
உத்தி எறிந்துவிடற்கு! (கலி. 64: 26–30)

கபிலர்

பொருள்:

முத்துப் போன்ற பற்களையுடையவளே! நீ அடைந்த பசலையெல்லாம் இனி எக்காலத்திலும் உண்டாகாதபடி உன்னை மணக்கப் போகிறேன். இப்போது உன் மேனியில் படர்ந்துள்ள வேங்கை மலரைப் போன்ற பசலையை நீக்குவதற்காகப் பொய்யாகவாவது ஒருமுறை வந்து என்னைக் கட்டித்தழுவிச் செல்.

Let me have a clasp in passion simulated at least,
Against your bejewelled breasts
Wearing beauty spots of immaculate splendour
Like the grace of *venkai* flowers full blown;
I'll see thereon all your passion's ailment gone forever.

27
மார்ச்
March

நினைத்தால் சிரிப்பு வருகிறது!

கைப்படுக்கப்பட்டாய் சிறுமி! நீ, மற்று யான்
ஏனைப் பிசாசு; அருள்; என்னை நலிதரின்
இவ்வூர்ப் பலி நீ பெறாஅமல் கொள்வேன்,
எனப் பலவும் தாங்காது, வாய்பாடி நிற்ப,
முதுபார்ப்பான் அஞ்சினன் ஆதல் அறிந்து, யான் எஞ்சாது
ஒரு கை மணல்கொண்டு மேல் தூவக் கண்டே
கடிது அரற்றிப் பூசல் தொடங்கினன்... (கலி. 65: 16–22)

கபிலர்

பொருள்:

முதிய பார்ப்பான், ஒருவன் ஒரு நாள் இரவில் தலைவி நின்றிருந்த இடத்திற்கு வந்தான். வந்து, 'சிறியவளே! நீ என்னால் பிடித்துக்கொள்ளப்பட்டாய்! நான் ஓர் ஆண் பிசாசு. என்னிடம் நீ அன்பு காட்டு! என்னை ஏற்றுக்கொள்ளவில்லை என்றால் இந்த ஊரில் நீ பெறும் பலியை நானே பெற்றுக்கொள்வேன்' என்று வாயால் புலம்பினான். அவனது அச்சத்தைக் கண்ட நான், தயங்காமல் ஒரு கை மண்ணை அள்ளி அவன் மேல் வீசினேன். அவன் அலறியபடி பயந்து ஓடத் தொடங்கினான்.

At the dead of night, I did go to meet our beloved
And there came a man who uttered:
'O little maid! Take me for your love;
Were you to deny, I'd have all sacrificial offerings of the town usurp'.
As he uttered thus, a handful of sand I picked up
And spattered it on him; he then started wailing aloud.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

மார்ச்
MARCH 28

பாணர்களுக்குத் தேர் வழங்கும் கரிகாலன்

கோட்டின் செய்த கொடுஞ்சி நெடுந்தேர்
ஊட்டு உளை துயல்வர, ஓரி நுடங்க,
பால்புரை புரவி நால்கு உடன்பூட்டி,
காலின் ஏழ் அடிப் பின் சென்று, கோலின்
தாறு களைந்து, 'ஏறு' என்று ஏற்றி... (பொருந. 163–167)

முடத்தாமக்கண்ணியார்

பொருள்:

யானைத் தந்தத்தால் அமைக்கப்பட்ட வளைந்த முன்பகுதியைக் கொண்ட பெரிய தேரில் பால்போல் வெண்ணிறம் கொண்ட நான்கு குதிரைகள் பூட்டப்பட்டிருக்கும். அவற்றின் தலையில் அரக்கு வண்ணத்தில் தலை அணி இருக்கும். அவற்றின் கழுத்து மயிர் அசையும். அப்படிப்பட்ட தேரில் உங்களை ஏற்றுவதற்காகத் தனது சாட்டைக் கம்பில் உள்ள ஆணியை அகற்றியபடி ஏழு அடி பின்னால் பணிவாகச் சென்று நிற்பான் கரிகால் வளவன்.

On the chariot tall, adorned with ornaments made of ivory
And yoked with four steeds whose manes do shake,
He will urge you to mount
And he will then follow you for paces seven.

க. ரகுபதி
ஓவியர், புதுச்சேரி.

ர. மல்லிகா
ஓவிய ஆசிரியர், சென்னை.

29

மார்ச்

March

காவிரி வாழ்விக்கும் நாடு

கூனிக் குயத்தின் வாய் நெல் அரிந்து,
சூடு கோடாகப் பிறக்கி, நாள்தொறும்,
குன்று எனக் குவைஇய குன்றாக் குப்பை,
கடுந்தெற்று மூடையின் இடம் கெடக்கிடக்கும்,
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
ஆயிரம் விளையுட்டு ஆக,
காவிரி புரக்கும் நாடு கிழவோனே! (பொருந. 242–248)

முடத்தாமக்கண்ணியார்

பொருள்:

செந்நெல் விளைகின்ற ஒருவேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளையும். விளைந்த வயல்களில் வளைந்த அரிவாளால் நெற்கதிர்களை அறுத்து மலையாய்க் குவிப்பர். நாள்தோறும் இவ்வாறு அறுவடை நடப்பதால் அந்நெற்குவியலைச் சேமித்து வைப்பதற்குப் போதிய இடம் இல்லாமல், நன்கு தைத்த மூட்டைகளில் அடைத்து அவை எங்கும் கிடக்கும். இவ்வாறு காவிரியாறு பாய்ந்து வளம் நிறைக்கும் சோழ நாட்டிற்குரியவன் கரிகாலன்.

The farmers with their sickles bend to reap their harvests
And pile rice sheaves in stacks like mountains, in heaps.
The grains are stored in large bins enclosed in straw.
Each plot enclosed produces paddy thousand kalams full.
This is the realm of our king,
Where the river Kaveri provides abundance.

மார்ச்
MARCH **30**

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

கரிகாலன் வழங்கிய விருந்து

துராஅய் துற்றிய துருவை அம்புழுக்கின்
பராஅரை வேவை 'பருகு' எனத் தண்டி,
காழின் சுட்ட கோழ் ஊன் கொழுங்குறை
ஊழின் ஊழின் வாய்வெய்து ஒற்றி ... (பொருந. 103–106)

முடத்தாமக்கண்ணியார்

பொருள்:

அறுகம்புல்லை மேய்ந்த செம்மறிக்கிடாயின் வெந்த தொடை இறைச்சியையும் இரும்புக் கம்பியில் கோத்துச் சுடப்பட்ட இறைச்சித் துண்டங்களையும் 'உண்ணுங்கள், உண்ணுங்கள்' என்று எம்மை வற்புறுத்தித் தந்தான். (கரிகாலன்) அவற்றை நாங்கள் சூடு ஆறுவதற்காக வாயின் வலப்பக்கமும் இடப்பக்கமும் மாற்றி மாற்றி வைத்து உண்டோம்.

More than once he (Karikalan) pressed us much
To eat the well–cooked haunches thick of rams
And the fatty meat, roasted on iron rods.

31

மார்ச்

March

ஆடை வழங்கிய கரிகாலன்

நோக்கு நுழைகல்லா நுண்மைய, பூக் கனிந்து
அரவு உரி அன்ன அறுவை நல்கி, ... (பொருந. 82–83)

முடத்தாமக்கண்ணியார்

பொருள்:

இழை சென்ற இடம் இது என்று பார்க்க முடியாத வகையில் மிக நுட்பமாக நெய்யப்பட்டதும், பூக்கள் அமைக்கப்பட்டதுமான மிக மென்மையான பாம்பின் தோலைப் போன்ற ஆடைகளை எங்களுக்கு நல்கினான் (கரிகால் பெருவளத்தான்).

The King gave us clothing filled with designs of blooms,
So delicate like the skin of a snake,
That it was impossible to see the fine weave.

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

ஏப்ரல் APRIL 01

கள்வன் போல வந்தான்

ஐயவி அணிந்த நெய்யாட்டு ஈரணிப்
பசுநெய் கூர்ந்த மென்மை யாக்கைச்
சீர்கெழு மடந்தை ஈர்இமை பொருந்த
நள்ளென் கங்குல் கள்வன் போல
அகன்துறை ஊரனும் வந்தனன்! (நற். 40: 7–11)

கோண்மா நெடுங்கோட்டனார்

பொருள்:
மகனைப் பெற்றெடுத்த தலைவிக்கு வெண் சிறுகடுகுபோட்ட எண்ணெய் பூசி நீராடச் செய்தனர். அவளது மேனி, புதுநெய் போல் மென்மையாக விளங்கியது. அவள் தன், இரண்டு இமைகளும் பொருந்துமாறு மூடியபடி தூங்கிக் கொண்டிருந்தாள். அந்த நள்ளிரவு வேளையில் தலைவன், தன் மகனைப் பார்ப்பதற்காகத் திருடனைப் போல வீட்டிற்குள் வந்தான்.

The wife of the hero sleeps
After white mustard paste was rubbed for a bath
On the delicate body.
Like a thief the hero sneaks,
In the thick of night, into the house.



ம. மெட்வின் ஆன்லீ
சேரன் வித்யாலயா மெட்ரிக். மேல்நிலைப் பள்ளி
சின்னாளப்பட்டி.

ம.ச. ஜோசப்
ஓவிய ஆசிரியர் (ஓய்வு), சேலம்.

02

ஏப்ரல்

April

நறுமணத்திற்குத்தான் வண்டுகள் வந்தன

கண் கோள் ஆக நோக்கி, 'பண்டும்
இனையையோ?' என வினவினள் யாயே!
அதன் எதிர் சொல்லாளாகி, அல்லாந்து,
என் முகம் நோக்கியோளே: 'அன்னாய்! யாங்கு
உணர்ந்து உய்குவள்கொல்' என மடுத்த
சாந்த ஞெகிழி காட்டி
ஈங்கு ஆயினவால் என்றிசின் யானே! (நற். 55: 6–12)

பெருவழுதி

பொருள்:

கண்களால் கூர்ந்து நோக்கிய அன்னை, 'நீ முன்பு இப்படியா வண்டு மொய்க்கும்படியாக இருந்தாய்?' என்று கோபத்துடன் கேட்டாள். அதற்குத் தலைவியால் பதில் எதுவும் சொல்ல இயலவில்லை. அவள் துன்பத்துடன் என்னை நோக்கினாள். 'அன்னையே! வண்டுகள் வந்து மொய்ப்பதற்கான காரணத்தை இவள் எப்படி அறிவாள்?' என்ற நான், அடுப்பில் இருந்த சந்தனக் கொள்ளிக்கட்டையைக் காட்டி, 'இந்த மணத்தால்தான் வண்டுகள் வந்தன' என்று சொன்னேன்.

As bees swarmed your lover's shoulders
Our mother, with her killer eyes
Beheld it and asked, "Is this how it was in the past?"
My friend, utterly dazed, gazed at my face in a helpless state.
To this, I suddenly said: "O' mother, it is because of these!"
Pointing to the sandalwood pieces
Which were burning in the oven.

ஏப்ரல்
APRIL
03

சு. ஹரிணி
சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி
சென்னை.

மாட்டிடம் பாலருந்தும் குரங்குகள்

தடங்கோட்டு ஆமான் மடங்கல் மாநிரை,
குன்ற வேங்கைக் கன்றொடு வதிந்தென,
துஞ்சுபதம் பெற்ற துய்த்தலை மந்தி
கல்லென் சுற்றம் கை கவியாக் குறுகி,
வீங்கு சுரை ஞெமுங்க வாங்கி, தீம்பால்
கல்லா வன் பறழ்க் கைந்நிறை பிழியும்! (நற். 57: 1–6)

பொதும்பில் கிழார்

பொருள்:

சிங்கம் முதலான காட்டு விலங்குகள் தங்கியிருக்கும் மலையில் உள்ள வேங்கை மரநிழலில் வளைந்த கொம்பையுடைய காட்டுப் பசு தன் கன்றோடு வந்து தங்கியது. அது தூங்கத் தொடங்கியதைக் கண்ட பஞ்சுபோன்ற தலையையுடைய பெண் குரங்கு, 'கல்' என ஒலிக்கும் தன் குட்டிகளை ஒலிக்கவேண்டாம் என்று கையால் சைகை காட்டி, பசுவின் அருகில் சென்று அதன் பெரிய பால் மடியை அழுத்தி இழுத்து இனிய பாலைக் கறந்து, தன் குட்டிகளின் கை நிறையக் கொடுக்கும்.

A wild cow with its tender calf
Rests beneath a hill–side *vengai* tree.
On seeing them asleep, a downy–headed she–monkey
Silences its dinsome kin with the show of hand
And presses the cow's swollen teats for sweet milk,
Which her infants drink in handfuls!

04
ஏப்ரல்
April

பாடுக அகவன் மகளே!

அகவன் மகளே! பாடுக பாட்டே!
இன்னும் பாடுக பாட்டே! அவர்
நல்நெடுங் குன்றம் பாடிய பாட்டே! (குறுந். 23: 3–5)

ஔவையார்

பொருள்:

தெய்வங்களை அழைத்து, பாடி குறி சொல்லும் கட்டுவிச்சியே, பாடல்களைப் பாடுக. இன்னும் பல பாடல்களைப் பாடுக! நீ பாடிய பாடல்களுள் தலைவனது மலையைப் புகழ்ந்து பாடிய பாடலை மீண்டும் மீண்டும் பாடுக!

Oh' old fortune teller! Sing a song!
Sing it once more!
The song about his glorious hills!

ச. ரகு
ஓவியர், கோயம்புத்தூர்.

ஏப்ரல்
APRIL
05

கொடிய நாக்குடைய ஊர்

ஆற்று அயல் எழுந்த வெண்கோட்டு அதவத்து
எழு குளிறு மிதித்த ஒரு பழம் போலக்
குழைய, கொடியோர் நாவே!
காதலர் அகல, கல் என்று அவ்வே! (குறுந். 24: 3–6)

பரணர்

பொருள்:
ஆற்றங்கரைக்கு அருகில் இருக்கும் அத்தி மரத்திலிருந்து விழுந்த பழத்தை உண்பதற்காக ஏழு நண்டுகள் சண்டையிட்டு அதனை மிதித்து நசுக்கியதைப் போல, காதலரைப் பிரிந்திருக்கும் என்னுடைய நிலையைக் கொடிய நாக்குடைய இந்த ஊர் தூற்றுகிறது.

Like a fig that fell from the white branches
Of the fig tree in the river bank
Getting crushed by seven crabs fighting for it
My pitiable separation from my lover
Is fodder for this town's cruel tongues.



அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

06

ஏப்ரல்

April

யாராகியரோ?

யாயும் ஞாயும் யார் ஆகியரோ?
எந்தையும் நுந்தையும் எம் முறைக் கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல் நீர் போல,
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே! (குறுந். 40: 4–8)

செம்புலப்பெயல்நீரார்

பொருள்:

என் தாயும் உன் தாயும் உறவினர் இல்லை. என் தந்தையும் உன் தந்தையும் எம்முறையிலும் உறவினர் இல்லை. நானும் நீயும் எந்தக் குடியைச் சேர்ந்தோர் என்று அறிந்துகொள்ளவில்லை. செம்மண் நிலத்தில் பெய்த மழையால், மண்ணும் நீரும் கலந்து செந்நிறம் அடைவதைப் போல், நம்முடைய உள்ளங்கள் கலந்து ஒன்றாகி விட்டன.

What are our mothers to each other?
How are our fathers related?
You and I,
How did we know each other?
Like rainwater that falls and
Merges with the red earth,
Our loving hearts have become one.

அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

ஏப்ரல்

APRIL

07

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

அணிலாடும் முன்றில்

மக்கள் போகிய அணில் ஆடு முன்றில்,
புலப்பில் போல, புல்லென்று
அலப்பென் தோழி, அவர் அகன்ற ஞான்றே! (குறுந். 41: 4–6)

அணிலாடு முன்றிலார்

பொருள்:

பாலை நிலத்தில் உள்ள சிற்றூரில் வாழும் மனிதர்கள் அவ்வூரை விட்டுச் சென்ற பிறகு, அங்கே உள்ள முற்றங்களில் அணில்கள் விளையாடும். ஆள் நடமாட்டம் இல்லாமல் பொலிவிழந்த அந்த வீடுகளைப் போல, தலைவர் என்னைப் பிரிந்து சென்று விட்டால் நானும், பொலிவிழந்து விடுவேன்.

I lose my sparkle and languish,
Like the houses deserted by people
Where squirrels scamper in the courtyard –
When he moves away.

08

ஏப்ரல்

April

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

உடன்றுமேல் வந்த வம்ப மள்ளரை
வியந்தன்றும் இழிந்தன்றும் இலனே! அவரை
அழுந்தப் பற்றி, அகல்விசும்பு ஆர்ப்பு எழ,
கவிழ்ந்து நிலம் சேர அட்டதை
மகிழ்ந்தன்றும் மலிந்தன்றும் அதனினும் இலனே! (புறம். 77: 9–13)

இடைக்குன்றூர் கிழார்

பொருள்:

பகையுடன் வரிசை வரிசையாய் அணிவகுத்து வந்த புதிய படையினரைக் கண்டு பாண்டியன் நெடுஞ்செழியன், வியக்கவும் இல்லை, இகழவும் இல்லை. அவர்களை அழுத்தமாகப் பற்றி மேலே விரைந்து தூக்கி வானத்தில் ஒலி கேட்குமாறு நிலத்தில் அடித்துக் கொன்றதை நினைத்தும் அவன் மகிழவும் இல்லை, தன்னை உயர்வாகக் கொள்ளவும் இல்லை.

Looking at foes who kept coming on
He was neither afraid nor scornful;
As he held them tight and smashed them to the ground
To clamorous noise echoing in skies
He was neither happy nor boastful!

ச. ரகு
ஓவியர், கோயம்புத்தூர்.

ஏப்ரல்
APRIL
09

சோழன் போரவைக் கோப்பெருநற்கிள்ளி

என்னைக்கு ஊர்இஃது அன்மை யானும்
என்னைக்கு நாடுஇஃது அன்மை யானும்
ஆடுஆடு என்ப ஒரு சாரோரே
ஆடன்று என்ப ஒரு சாரோரே! (புறம். 85: 1–4)

நக்கண்ணையார்

பொருள்:

என் தலைவன் பெருநற்கிள்ளிக்கு ஊர் இந்த ஊர் அன்று. நாடும் இந்த நாடு அன்று. அவனுக்கு உண்டாகும் வெற்றியை இங்கிருப்பவருள் ஒரு பிரிவினர் அவனுக்கான 'வெற்றி! வெற்றி!' என்று உரைப்பர். மற்றொரு பிரிவினர் அவனது வெற்றி இல்லை என்று உரைப்பர்.

Since this isn't my man's town,
since this isn't my man's country,
"He won, he won", say some;
"He didn't" say others.

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

மு. ஜோதிகா
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி.

10

ஏப்ரல்

April

புலியின் குகை இதுதான்

சிற்றில் நல் தூண் பற்றி. நின்மகன்
யாண்டுளனோ? என வினவுதி! என்மகன்
யாண்டு உளன் ஆயினும் அறியேன், ஓரும்
புலி சேர்ந்து போகிய கல்அளை போல,
ஈன்ற வயிறோ இதுவே!
தோன்றுவன் மாதோ, போர்க் களத்தானே! (புறம். 86)

காவற்பெண்டு

பொருள்:

சிறிய வீட்டின் தூணைப் பற்றிக்கொண்டு, 'உன் மகன் எங்கே' எனக் கேட்கிறாய். என் மகன் எங்கிருப்பான் எனத் தெரியாது. புலி தங்கியிருந்து நீங்கிய குகை போல, அவனைப் பெற்றெடுத்த வயிறு இதுதான். அவன் போர்க்களத்தில் தோன்றுவான்.

Grasping the pillar of my humble home
You question me "Where's your son?";
I don't know where my son is;
This is the womb that birthed him;
He will surely come to the battlefield!

ஏப்ரல்
APRIL

11

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னை.

நெல்லிக்கனி தந்த அதியமான்

மன்னுக பெரும நீயே! தொன்னிலைப்
பெருமலை விடர் அகத்து அருமிசை கொண்ட
சிறிஇலை நெல்லித் தீங்கனி குறியாது,
ஆதல் நின் அகத்து அடக்கி,
சாதல் நீங்க எமக்கு ஈத்தனையே! (புறம். 91: 7–11)

ஔவையார்

பொருள்:

பழமையான பெரிய மலைப் பிளவின் உச்சியில், சிறிய இலை கொண்ட நெல்லிமரம் நின்றது. அதன் இனிய பழத்தைப் பெறுவது அரிது என எண்ணாமல், அதனைப் பறித்துக் கொண்டு வந்தாய். அதனால் ஏற்படும் பயனைப் பற்றி எனக்குத் தெரிவிக்காமல் உன் மனத்துக்குள் அடக்கிக் கொண்டாய். உண்டவரைச் சாகாமல் காக்கும் அந்தக் கனியை எனக்கு நீ தந்தாய்! நீ நிலைபெற்று வாழ்வாயாக!

May you love long, my Lord! Without telling me
The benefits of small leaved sweet gooseberries
That grow in hard to reach cliffs of ancient mountains,
You gave it to me and made me immortal!

12

ஏப்ரல்

April

மழலை இன்பமே இன்பம்!

யாழொடும் கொள்ளா, பொழுதொடும் புணரா,
பொருள்அறி வாரா, ஆயினும் தந்தையர்க்கு
அருள் வந்தனவால், புதல்வர்தம் மழலை! (புறம். 92: 1–3)

ஔவையார்

பொருள்:

மழலைச் செல்வங்களின் சொற்கள், யாழ் இசை போல இன்பம் தராது, பொருத்தமான நேரத்திலும் ஒலிக்காது; எவ்விதப் பொருளும் இருக்காது. ஆனாலும், தந்தையருக்கு அவை மிகுந்த களிப்பைத் தரும்.

Not sweet like a harp, inappropriate for the hour
Meaningless words – Yet, it pleases
Fathers to hear their infants' babble.

ஜனனி பிரதீப்குமார்
ஓவியர், சென்னை.

ஏப்ரல்
APRIL

13

அதியமான் நெடுமான் அஞ்சி

வரிஞிமிறு ஆர்க்கும் வாய்புகு கடாஅத்து
அண்ணல் யானை அடுகளத்து ஒழிய,
அருஞ்சமம் ததைய நூறி, நீ
பெருந்தகை விழுப்புண் பட்டமாறே! (புறம். 93: 12–15)
ஔவையார்

பொருள்:
பெரிய போர்த் தகுதி உடையவனே! வரியையுடைய தேனீ ஒலி எழுப்பி வாயில் வந்து புகும்படி பிளிறும் மத யானையோடு போர்க்களத்தில் போரிட்டாய். அந்த யானை இறக்கும்படி அதனைச் சிதற வெட்டி நீ வீழ்த்தியதில் விழுப்புண் பட்டாய்.

You felled the aggressive bull elephant in musth
With striped bees buzzing around its mouth
In battlefield and destroyed your enemies
In furious battle making them flee.
You bear your war wounds proudly.



அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

14

ஏப்ரல்

April

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

யானையைப் போன்றவன் அதியமான்

ஊர்க்குறு மாக்கள் வெண்கோடு கழாஅலின்
நீர்த்துறை படியும் பெருங்களிறு போல,
இனியை பெரும எமக்கே! மற்று அதன்
துன்னருங் கடாஅம் போல,
இன்னாய் பெரும நின் ஒன்னாதோர்க்கே! (புறம். 94)

ஔவையார்

பொருள்:

பெருமையுடைவனே! தன் வெண்மையான தந்தத்தை ஊரில் உள்ள சிறுவர்கள், கழுவுவதற்காக நீர்த் துறையில் பெரிய ஆண் யானை படிந்து கிடக்கும். அதைப் போல் வலிமைகொண்ட நீ, எங்களிடம் இனியவனாய் இருக்கிறாய்! அந்த யானைக்கு மதம் பிடித்தபோது எப்படிக் கொடியதாக இருக்குமோ அப்படி உன் பகைவர்க்கு நீ கொடியவனாக இருக்கிறாய்!

Like an elephant that reclines at the river front
for town children to wash its white tusk,
O' Noble one, you are pleasant to us;
but like a tusker that is uncontrollable when in musth,
You are misery incarnate to your enemies!

ஏப்ரல்
APRIL
15

ச. பாலகுருமூர்த்தி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஊழியும் ஊழி முடிவும்

உரு அறி வாரா ஒன்றன் ஊழியும்
உந்துவளி கிளர்ந்த ஊஎழூழ் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும் பனியொடு
தண்பெயல் தலைஇய ஊழியும் அவையிற்று
உண்முறை வெள்ள மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி அவற்றிற்கும்
உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்... (பரி. 02: 6–12)

கீரந்தையார்

பொருள்:

உருவம் அறியாமல் ஒலிக்கும் ஒலி மட்டுமே முதல் ஊழிக் காலத்தில் இருந்தது. அதனைத் தொடர்ந்து அசையும் காற்று வீசிய இரண்டாம் ஊழிக் காலம் தோன்றியது. காற்றின் இயக்கத்துடன் கூடிய, நெருப்புத் தோன்றிய மூன்றாம் ஊழிக் காலம் தோன்றியது. அதனைத் தொடர்ந்து பெரிய மழை பொழிந்த நான்காம் ஊழிக் காலம் தொடங்கியது. இம்மழையினால் உலகம் முழுவதும் வெள்ளம் சூழ்ந்தது. அதன் பிறகு வெப்பத்தால் நீர் ஆவியாகி, மலை கண்ணுக்குத் தோன்றி, இப்போது இருப்பது போன்ற ஐந்தாம் ஊழிக் காலம் இந்தப் பூமியில் தொடங்கியது.

Many an eon came and went as
The skies and earth wasted away
Then came the era of formless
That was born out of the cosmic sound
Followed by the era of swirling air
And then came the era of fire
Followed by the cosmic flood
And then was land formed.

16

ஏப்ரல்

April

ஆநிரைக்கு நீரூட்டும் கொங்கர்கள்

பொன்செய் கணிச்சித் திண்பிணி உடைத்துச்
சிறுசில ஊறிய நீர்வாய்ப் பத்தல்
கயிறு குறுமுகவை மூயின மொய்க்கும்
ஆ கெழு கொங்கர் ! (பதிற்று. 22: 12–15)

பாலைக் கௌதமன்

பொருள்:

இரும்பால் செய்த மண் வெட்டும் கருவியால் உறுதியான நிலத்தில் கிணறு தோண்டினர். அக்கிணற்றின் அடிப்பகுதியில் சிறிதளவு நீர் ஊறியிருந்தது. நீண்ட கயிறு கட்டி முகக்கும் சிறிய பாத்திரத்தில் நீர் எடுத்து அதைப் பசுவுக்குத் தண்ணீர் ஊற்றும் பத்தல் என்னும் தொட்டிகளில் ஊற்றினர். அத்தொட்டிகளைப் பசுக்கூட்டங்கள் நெருங்கி நிற்கும். இவ்வாறு பசுக்கூட்டங்களை மிகுதியாகக் கொண்டது கொங்கர் நாடு.

You overcame the land of Kongars
Where cows crowd to drink sparse water
Fetched from watering holes dug in
Hardened ground with iron pick axe.

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை

ஏப்ரல்
APRIL

17

பசிக்கு இசைக்கும் வயிரியர்

நிலம் பைதற்ற புலங்கெடு காலையும்
வாங்குபு தகைத்த கலப் பையர் ஆங்கண்
மன்றம் போந்து மறுகு சிறைபாடும்
வயிரிய மாக்கள் கடும்பசி நீங்க,
பொன்செய் புனைஇழை ஒலிப்பப் பெரிது உவந்து
நெஞ்சுமலி உவகையர் உண்டு மலிந்து ஆட ! (பதிற்று. 23: 3–8)

பாலைக் கௌதமனார்

பொருள்:

நிலம் பசுமையற்று வயல்கள் உலர்ந்த வறண்ட காலத்தில், பாணரும் கூத்தரும் பரிசுபெறும் நோக்கத்தில், ஊர்ப் பொது மன்றத்தை அடைந்து தம் இசைக்கருவிகளைச் செம்மையுற இசைப்பர். அவர்களின் பசி நீங்குமாறு, உண்பதற்கான உணவையும் பொன் அணிகலன்களையும் பரிசாகப் பெற்றனர். அந்த மகிழ்ச்சியில் அவர்கள் கள்ளை உண்டு மகிழ்ந்து கூத்தாடுவர்.

Even during parched season when fields turned barren
The bards took to the streets and public square
Where their hunger was satiated with gifts
Of grains and jewels, making them dance joyously.



சு. தமிழ்மணி
ஓவியர், சேலம்.

ச. ரகு
ஓவியர், கோயம்புத்தூர்.

18
ஏப்ரல்
April

பிறர் கூடிய மார்பைத் தழுவமாட்டேன்

பொய்கைப் பள்ளிப் புலவு நாறு நீர்நாய்,
வாளை நாள் இரை பெறூஉம் ஊர!
எம்நலம் தொலைவது ஆயினும்
துன்நலம் பெரும பிறர்த் தோய்ந்த மார்பே! (ஐங். 63)

ஓரம்போகியார்

பொருள்:

தலைவனே! பொய்கையில் வாழும் புலால் நாறும் நீர்நாய், வாளை மீனைக் காலையிலேயே இரையாகப் பெறும். இத்தகைய ஊரனே! உன்னைக் கூடி முயங்காமல் என் அழகு அழிவதாக இருந்தாலும் பிறரைக் கூடித் தழுவிய உன் மார்பைத் தழுவும் துன்பத்தை நான் அடையமாட்டேன்.

O' Chief of the habitat where the stenchy otter
Residing in the lake daily gets a sword – fish as its prey;
Even if our beauty goes to be spoiled
Never will we touch your bosom, embraced by others.

ஏப்ரல் APRIL 19

ந. கிருபாகரன்
அரசு கவின் கலைக் கல்லூரி
கும்பகோணம்.

குழந்தை பெற்றால் அழகு அழியுமோ?

கரும்பு நடுபாத்தியில் கலித்த ஆம்பல்,
சுரும்பு பசி களையும் பெரும்புனல் ஊர!
புதல்வனை ஈன்ற எம்மேனி
முயங்கன்மோ தெய்ய, நின் மார்பு சிதைப்பதுவே! (ஐங். 65)

ஓரம்போகியார்

பொருள்:

கரும்பை நடுவதற்குக் கட்டிய பாத்தியில் ஆம்பல் வளர்ந்து மலர்ந்திருந்தது. அந்த ஆம்பலில் அங்கே வரும் வண்டுகள் தேனை அருந்தும் ஊருக்குத் தலைவனே! புதல்வனைப் பெற்ற என் மேனியைத் தழுவ வேண்டாம். அது உன் மார்பின் அழகைக் கெடுத்து விடும்.

O' hero of the region with water resources,
In the parterre, meant for planting sugarcane,
Thrives the water lily, alleviating the bee's hunger;
Don't embrace my body, since I delivered a son,
If you do, it will spoil your chest's decoration.

20
ஏப்ரல்
April

நீ என் நிலையை அறியாமல் இருக்கிறாய்

'இன்னகை! இனையம் ஆகவும், எம்வயின்
ஊடல் யாங்கு வந்தன்று?' என, யாழ நின்
கோடு ஏந்து புருவமொடு குவவு நுதல் நீவி,
நறுங்கதுப்பு உளரிய நன்னர் அமையத்து,
வறுங்கை காட்டிய வாய்அல் கனவின்
ஏற்று ஏக்கற்று உலமரல்
போற்றாய் ஆகலின், புலத்தியால் எம்மே! (அகம். 39: 19–25)

மதுரைச் செங்கண்ணனார்

பொருள்:

'இனிய புன்னகை கொண்டவளே, என்னிடம் உனக்கு எவ்வாறு ஊடல் ஏற்பட்டது?' என்று கேட்ட தலைவன், கனவில் நான், உன்னுடைய புருவங்களையும் நெற்றியையும் கையால் தடவி, நறுமணக் கூந்தலையும் கோதி உன்னைத் தழுவ முயன்றேன். அப்போது விழித்துக்கொண்டேன். உன்னை எண்ணி ஏங்கிய என் மன வருத்தத்தை நீ அறிந்துகொள்ளவில்லை. அதனாலேயே நீ ஊடல் கொள்கிறாய்.

Oh woman! I saw you pushing up your bangles
That were slipping as you looked down with sorrow.
"Where is the need for sulking?" I said so,
Rubbing your rounded forehead and stroking your fragrant hair,
When I realised that it was all an empty dream.
Not understanding that, you are sulking!

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

ஏப்ரல்
APRIL
21

பிரிவால் அழகிழந்திருப்பாளோ?

நாம் பிரி புலம்பின் நலம் செலச் சாஅய்,
நம் பிரிபு அறியா நலனொடு சிறந்த
நல்தோள் நெகிழ, வருந்தினள் கொல்லோ!
மென்சிறை வண்டின் தண்கமழ் பூந்துணர்
தாது இன் துவலை தளிர் வார்த்து அன்ன
அம்கலுழ் மாமை கிளைஇய
நுண் பல் தித்தி மாஅயோளே? (அகம். 41: 10–16)

குன்றியனார்

பொருள்:

மெல்லிய சிறகு கொண்ட வண்டுகள் கிண்டுதலால்
மாமரக்கொத்துகளில் உள்ள தாதுடன் கூடிய தேன்துளி, தளிர்
இலையிலே ஒழுகியது. அதைப் போன்ற மாமை நிறமுடைய நுட்பமான
பல தேமல் புள்ளிகளைப் பெற்ற தலைவி, இதுவரை நான் பிரியாததால்
இயற்கை அழகுடன் விளங்கினாள். இப்போது நான் பிரிந்ததால்
தலைவியின் தோள்கள் மிகவும் மெலிந்து வருந்தினாளோ?

Owing to my constant embrace,
Her shoulders were full of charm once.
Will those charming shoulders now grow thin
Forsaking all their beauty at this spring season
Assailed by the loneliness
Caused by my separation?

மு.ஆ. சங்கரலிங்கம்
ஓவியர், சென்னை.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

சுற்றித்திரியும் எருமை

சேற்று நிலை முனைஇய செங்கண் காரான்,
ஊர்மடி கங்குலில் நோன் தளை பரிந்து,
கூர்முள் வேலி கோட்டின் நீக்கி,
நீர் முதிர் பழனத்து மீன் உடன் இரிய
அம் தூம்பு வள்ளை மயக்கி, தாமரை
வண்டு ஊது பனிமலர் ஆரும் ஊர! (அகம். 46: 1–6)

அள்ளூர் நன்முல்லையார்

பொருள்:

சேற்றில் நிற்கும் நிலையை வெறுத்த சிவந்த கண்களையுடைய எருமை, ஊரில் உள்ளோர் உறங்கும் நள்ளிரவில் வலிய கயிற்றை அறுத்துக்கொண்டு ஓடியது. அது வேலியைத் தன் கொம்பால் அகற்றிவிட்டு, மீன்கள் எல்லாம் ஓடும்படியாக நீர் நிறைந்த வயலில் இறங்கியது. அங்குள்ள வள்ளைக் கொடிகளை நிலைகுலையச் செய்து, வண்டுகள் தேன் அருந்தும் தாமரையின் குளிர்ந்த மலர்களைத் தின்னும் வளமான ஊருக்குத் தலைவனே!

My lord, flourished is your land,
Where a red–eyed buffalo scorns to stand in the mire,
And enters a watery field to feast upon the lotus blooms
Which are buzzed by bees.
On its entry, the fish move about panicky
And the beauteous *vallai*, gets crushed by its hooves.

ஏப்ரல் APRIL 23

வெ. கோகுல் கிருஷ்ணன்
விவேகானந்தா (சி.பி.எஸ்.இ.) பள்ளி
பாண்டிச்சேரி.

பெண்களே, நீங்கள் பொய் சொல்வீர்களோ?

'யாதோ, மற்று அம் மா திறம் படர்?' என
வினவி நிற்றந்தோனே! அவன் கண்டு
எம்முள் எம்முள் மெய்ம் மறைபு ஒடுங்கி
நாணி நின்றனெம் ஆக, பேணி
ஐவகை வகுத்த கூந்தல் ஆய் நுதல்
மைஈர் ஓதி மடவீர் நும்வாய்ப்
பொய்யும் உளவோ? என்றனன்! (அகம். 48: 13–19)

தங்கால் முடக்கொற்றனார்

பொருள்:

'புலி சென்றவழி எது?' என்று கேட்டபடி தலைவன் ஒருவன் வந்தான். நாங்கள் அவனைக் கண்டு ஒருவருக்குள் ஒருவராய் ஒடுங்கி நாணம் கொண்டு நின்றோம். அழகிய முன் நெற்றியில் படரும் 'ஐந்து பிரிவாக வகுக்கப்பட்ட கரிய கூந்தலை உடைய பெண்களே! உங்கள் வாயிலிருந்து பொய்யும் வருமோ?' எனக் கூறினான்.

O' dear mother, on the flowery hillside of *venkai,*
A young man rushed to us
As we had raised the false alarm: "Tiger! Tiger!"
We hid ourselves behind one another's back with shyness.
At this, he said: "O' young girls of charm! Could you utter lies too?"

24
ஏப்ரல்
April

அப்போதெல்லாம் வந்தான்...

கடல்பாடு அவிந்து, தோணி நீங்கி,
நெடுநீர் இருங்கழிக் கடுமீன் கலிப்பினும்;
வெவ்வாய்ப் பெண்டிர் கௌவை தூற்றினும்;
மாண் இழை நெடுந்தேர் பாணி நிற்ப,
பகலும் நம்வயின் அகலானாகி,
பயின்றுவரும் மன்னே! (அகம். 50: 1–6)

கருவூர்ப் பூதன் சாத்தனார்

பொருள்:

வலையில் மீன் கிடைக்காத வேளையில் மீனவர்கள், கடலில் தோணி செலுத்த மாட்டார்கள். அந்த வேளையிலும், பெரிய கழியில் மீன்கள் மிகுதியாகக் கிடைத்த வேளையில் அங்கே செல்லாமலும் அலர் தூற்றும் பெண்கள், கொடுமையான சொற்களால் அலர் தூற்றிய வேளையிலும் அச்சம் இல்லாமல் அழகிய தேரில் ஏறி வந்து, பகல் வேளையிலேயே நம்மை விட்டு அகன்று போகாமல் இருப்பான். அப்படிப்பட்ட தலைவன் இப்போது வரவில்லை.

The sea ceased to roar and the boats were not plying;
The women of slanderous tongue were busy
Spinning rumours about us;
Yet he was with us in a bright daytime, inseparable.
But gone are those days.

ஒய். ஜெனிகா ஜூடித்
பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரி
கன்னியாகுமரி.

ஏப்ரல்
APRIL
25

வெட்கமற்றது என் நெஞ்சம்!

நலத்தகை எழில் உண்கண் நல்லார், தம் கோதையால்
அலைத்த புண், வடு காட்டி அன்பு இன்றி வரின் எல்லா
புலப்பென் யான் என்பேன்மன்! அந்நிலையே அவன் காணின்
கலப்பென் என்னும் இக்கையறு நெஞ்சே! (கலி. 67: 6–9)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

மை பூசிய அழகான கண்ணையுடைய பரத்தையர் தங்கள் மாலைகளினால் அடித்த புண்ணையும், நகத்தாலும் பற்களாலும் உண்டாக்கிய வடுக்களையும் சுட்டிக் காட்டி, தலைவனுடன் சண்டையிட நினைத்திருந்தேன். ஆனால், அவனை நேரில் கண்டதும் என் நெஞ்சம் அவனுடன் நான் கூடுவேன் என்று சொல்கிறது. நான் என்ன செய்வேன்?

I'd resolve to sulk if he returned unloving,
Showing me the scars left by those enticing women;
Yet on seeing him, my ever–pliant heart
Goes out seeking his union!

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

26

ஏப்ரல்

April

நொந்துகொள்ளக்கூட உரிமையில்லை

ஊரன்மன் உரன் அல்லன்! நமக்கு என்ன உடன்வாளாது
ஓர் ஊர் தொக்கு இருந்த நின் பெண்டிருள் நேராகி,
களையா நின் குறி வந்து எம் கதவம் சேர்ந்து அசைத்த கை
வளையின்வாய் விடல் மாலை மகளிரை நோவேமோ
கேள் அலன் நமக்கு அவன் குறுகன்மின் என மற்றுஎம்
தோளோடு பகைபட்டு நினைவாடு நெஞ்சத்தேம்! (கலி. 68: 6–11)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

மருதநிலத் தலைவன் நமக்கு ஆதரவானவன் அல்லன் என்று பரத்தையர் கூறிக்கொண்டனர். அவர்கள் ஓர், ஊர் முழுவதும் குடியிருக்கும் அளவிற்கு எண்ணிக்கையில் பலர். அப்படிப்பட்ட பரத்தையரைப் போல் என்னைக் கருதிய அவர்கள் எல்லோரும், அவன் இங்கே இருக்கிறான் என்று கருதி வந்து வீட்டுக் கதவைத் தட்டினர். அந்தப் பரத்தையரை நொந்து கொள்ள முடியுமா? அவனுக்கும் எனக்கும் எந்தத் தொடர்பும் இல்லை, இங்கே வராதீர்கள்! என்று சொல்லிவிட்டு, உனது பிரிவை நினைத்து வருந்தியபடி நான் இருக்கிறேன்.

The whores aver, 'no abiding sustenance is this uran to us,'
But so much variance do their words mark as they return to you like i do.
Rendered thus i am to be comparable to your harlots!
Should I blame those whores– who would be at my doorstep
Finding you not at the rendezvous;
Announcing their arrival thro' their bangles' tinkling–
As they knock at the door?

ஏப்ரல்
APRIL
27

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

உன் துணங்கை என் உறக்கம் கெடுக்கிறது

அகல நீ துறத்தலின் அழுது ஓவா உண்கண் எம்
புதல்வனை மெய்தீண்ட பொருந்துதல் இயைபவால்!
நினக்கு ஒத்த நல்லாரை நெடுநகர்த் தந்து நின்
தமர் பாடும் துணங்கையுள் அரவம் வந்து எடுப்புமே! (கலி. 70: 11–14)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

நீ என்னைப் பிரிந்ததால் உறங்காமல் உள்ளன என்னுடைய கண்கள். உன் மகனின் மென்மை என்னைத் தீண்டுவதால் அக்கண்கள் உறங்கவும் கூடும். ஆனால் நீ, உன் இளமைப் பருவத்துக்கு ஏற்ற பரத்தையர்களை இந்த நகருக்குள் அழைத்துவந்து அவர்கள் சூழ இருந்து துணங்கைக் கூத்து ஆடுகிறாய். அந்த ஆரவாரம் என் உறக்கத்தைக் கெடுக்கிறது.

Her painted eyes that went crying as you left,
Might close to sleep with her son nestling up to her.
But the clamour of the *tunankai,* as the harlots' dance,
In lofty mansions you specially set, would awaken her.

28

ஏப்ரல்

April

உமணர் வளர்க்கும் குரங்குகள்

நோன்பகட்டு உமணர் ஒழுகையொடு வந்த
மகாஅர் அன்ன மந்தி, மடவோர்
நகாஅர் அன்ன, நளிநீர் முத்தம்
வாள்வாய் எருந்தின் வயிற்றகத்து அடக்கி
தோள்புறம் மறைக்கும் நல்கூர் நுசுப்பின்,
உளர்இயல் ஐம்பால் உமட்டியர் ஈன்ற
கிளர்பூண் புதல்வரொடு கிலுகிலி ஆடும்! (சிறுபாண். 55–61)

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

பொருள்:

வலிமையான எருதையுடைய உப்பு வணிகரின் வண்டிகள் வரிசை வரிசையாக வரும். அவ்வாறு வந்த வண்டிகளுக்கு இடையே பெண் குரங்குகள் ஊர்ந்து வரும். அந்தக் குரங்குகளைத் தங்கள் மகன்களைப் போல் பேணுவார்கள் உப்பு வணிகர்கள். ஐந்து பிரிவாகக் கூந்தலை அலங்கரித்த உமணப் பெண்களின் கூந்தல் அவர்களின் தோளையும் இடையையும் மறைக்கும். அப்பெண்கள் ஈன்ற குழந்தைகளுடன் அந்தக் குரங்குகள், பெண்களின் புன்னகை போன்ற முத்துகளைக் கிலுகிலுப்பைக்குள் போட்டுக் குலுக்கி, கடற்கரையில் விளையாடும்.

The monkey pets of the salt traders
Fill the oyster shells with pearls
And with these rattles
Play with the jewelled children of the traders' wives.

ஈ. பிரகாஷ்
ஓவியர், ஈரோடு.

ஏப்ரல்
APRIL 29

வள்ளல் பேகன்

வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்,
பெருங்கல் நாடன் பேகன்! (சிறுபாண். 84–87)

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

பொருள்:

வானத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்த மலைச்சாரலில் குளிரில் மயில் ஒன்று அகவியது. அதைக் கேட்டு, அது குளிரால் நடுங்குகிறது என்று கருதி அம் மயிலுக்குத் தன் மேலாடையை வழங்கினான் ஆவினன்குடியை ஆண்ட மன்னன் பேகன்.

There's Pekan, ruler of the mountain tracts,
Who gave away his cloak to a peacock wet
That wandered on the wooded slopes of hills
Made fertile by the fall of timely rains.

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

மு. தாமோதரன்
ஓவியர், சென்னை.

30
ஏப்ரல்
April

வள்ளல் வேள் பாரி

...சுரும்பு உண
நறுவீ உறைக்கும் நாக நெடு வழி,
சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்அருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரி! (சிறுபாண். 87–91)

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

பொருள்:

வண்டுகள் உண்ணும்படி தேன் சிந்தும் நறுமண மலர்கள் கொண்ட சுரபுன்னையையுடைய நீண்ட காட்டு வழி. அங்கே வளர்ந்து நின்ற சிறிய பூக்களையுடைய முல்லைக்கொடிக்கு, தன் பெரிய தேரைக் கொடுத்த வெண்மையான அருவி பாயும் பறம்பு மலைக்குத் தலைவன் பாரி.

There's Paari, the mountain chief of Parampu,
Who gave away his chariot to prop
A tiny–blossomed *mullai* plant that stood
In the long pathway of trees with blooms laden with honey.

மே
MAY

01



ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

கள் குடித்து மகிழ்ந்திருக்கும் வேட்டுவன்

உடும்பு கொலீஇ, வரி நுணல் அகழ்ந்து,
நெடுங்கோட்டுப் புற்றத்து ஈயல் கெண்டி,
எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல
பல்வேறு பண்டத் தொடை மறந்து, இல்லத்து
இருமடைக் கள்ளின் இன்களி செருக்கும் ... (நற். 59: 1–5)

கபிலர்

பொருள்:

வேட்டுவன், காட்டில் உடும்பைக் கொன்று, வரியுள்ள தவளையைப் பிடித்து, உயர்ந்த உச்சியையுடைய புற்றுகளிலிருந்து ஈசலைத் தோண்டியெடுத்து, வளைதடியால் முயலை வேட்டையாடினான். அவற்றையெல்லாம் தன் தோளில் சுமந்து வந்து தன் இல்லத்தில் வைத்ததை மறந்து, நன்கு புளித்த கள்ளை மிகுதியாகக் குடித்து, மகிழ்ந்திருப்பான்.

A hunter goes hunting the wild lizards,
Digs out striped toads, the winged termites,
And also hunts a hare during the day.
He makes a bundle of these and carries it home
Only to forget everything and sleep
After getting intoxicated with abundant toddy.

02

மே

May

விடியல் வேளை

மன்ற எருமை மலர் தலைக்காரான்
இன்தீம் பாற்பயம் கொண்மார் கன்று விட்டு
ஊர்க் குறுமாக்கள் மேற்கொண்டு கழியும்
பெரும்புலர் விடியலின் விரும்பிப் போத்தந்து ... (நற். 80: 1–4)

பூதன் தேவனார்

பொருள்:

விடியற்காலைப் பொழுதில் தொழுவத்திலுள்ள பெரிய தலையையுடைய எருமைகளின் இனிமையான பாலைக் கறந்தனர். அதன் பிறகு, கன்றுகளை மட்டும் தொழுவத்தில் கட்டிவிட்டு, இளம் சிறுவர்கள் எருமைகளை மேய்ப்பதற்காக அவற்றின் மேலே ஏறிக்கொண்டு புறப்படுவர்.

In the early dawn, the young village boys
Mount on the backs of the she–buffalos
And take them to the pastures for grazing,
Leaving behind their tender calves in the stalls
To secure the ideal quantity of their sweet milk.



மு. விஷாலி
பான் செக்கர்ஸ் மகளிர் கல்லூரி, தஞ்சாவூர்.

மே
MAY 03

பன்றி வேட்டையாடும் கானவர்

போகிய நாகப் போக்கு அருங்கவலை,
சிறுகண் பன்றிப் பெருஞ்சின ஒருத்தல்
சேறு ஆடு இரும்புறம் நீறொடு சிவண,
வெள் வசிப் படீஇயர், மொய்த்த வள்பு அழீஇ,
கோள்நாய் கொண்ட கொள்ளைக்
கானவர் பெயர்க்கும் சிறுகுடியானே! (நற். 82: 6–11)

அம்மள்ளனார்

பொருள்:
ஓங்கிய சுரபுன்னை மரங்களையுடைய செல்வதற்கரிய வழியில், சிறிய கண்ணும், பெருஞ் சினமும், சேற்றில் ஆடிய கரிய முதுகையும் உடைய ஆண்பன்றி, பாறைப் பிளவில் வைக்கப்பட்டிருந்த கண்ணியில் பிடிபட்டது. கண்ணியின் வாரைக் கடித்து அறுக்கும் வேட்டை நாய்கள், அப்பன்றியைப் பற்றிக்கொண்டன. அந்தப் பன்றியின் தசைகளோடு கானவர்கள் தங்கள் சிறுகுடிக்குத் திரும்புவர்.

In the forked forest of tall *naakam* trees,
A small–eyed boar got trapped and fell into an empty pit.
The hunting dogs, ruining the net straps, killed the bore
And the forest dwellers took its flesh for themselves.

கா. தனாஸ் தீபக் ராஜன்
ஓவியர், சேலம்.

04

மே

May

நட்பில் குறைவு ஏற்படாது

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

காமம் ஒழிவது ஆயினும், யாமத்துக்
கருவி மாமழை வீழ்ந்தென அருவி
விடர் அகத்து இயம்பும் நாட! எம்
தொடர்பும் தேயுமோ நின்வயினானே! (குறுந். 42)

கபிலர்

பொருள்:

நடுஇரவில், இடியுடன் கூடிய மின்னலுடன் பெரு மழை பெய்து, மலையருவிகள் ஆர்ப்பரிக்கும் குறிஞ்சி நிலத் தலைவனே! தலைவி மீது கொண்ட காதலுடன் நீ இரவில் வரவில்லை என்றாலும், உன்னிடத்தில் தலைவி கொண்டுள்ள நட்பில் குறைவு ஏற்படாது.

My lord! Clamor of waterfalls in your country
Tell of thunderous rains that fell earlier;
Even if you miss hanging out with us
Will our love for you ever wane!

மே
MAY
05

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

இருபேர் ஆண்மை செய்த பூசல்

'செல்வார் அல்லர்' என்று யான் இகழ்ந்தனனே!
'ஒல்வாள் அல்லள்' என்று அவர் இகழ்ந்தனரே
ஆயிடை இருபேர் ஆண்மை செய்த பூசல்,
நல் அராக் கதுவியாங்கு, என்
அல்லல் நெஞ்சம் அலமலக்கு உறுமே! (குறுந். 43)
ஔவையார்

பொருள்:

தலைவர் என்னைப் பிரிந்து செல்லமாட்டார் என்று நினைத்து, அவரைத் தடுக்காமல் இருந்தேன். அவரோ, என்னிடம் சொன்னால் இவள் உடன்படமாட்டாள் என்று நினைத்து, சொல்லாமலேயே சென்று விட்டார். எங்கள் இருவரின் ஆளுமையால் எங்களுக்குள் ஏற்பட்ட முரணில் நான் இப்போது நல்ல பாம்பு கடித்ததைப் போல் கலங்கியிருக்கிறேன்.

Thinking "he won't leave" I didn't forbid him;
Thinking "she won't agree", he left
Without telling us. Our big egos led us to bicker then.

06

மே

May

கண்கள் ஒளியிழந்துவிட்டன

காலே பரி தப்பினவே; கண்ணே
நோக்கி நோக்கி வாள் இழந்தனவே;
அகல் இரு விசும்பின் மீனினும்
பலரே மன்ற, இவ்வுலகத்துப் பிறரே! (குறுந். 44)

வெள்ளி வீதியார்

பொருள்:

நடந்து நடந்து என்னுடைய கால்கள் வருந்துகின்றன. போவோர் வருவோரைப் பார்த்துப் பார்த்து என் கண்கள் ஒளி இழந்துவிட்டன. என்னுடைய மகளும் அவள் தலைவனும் மட்டும் எங்கே என்று எனக்குத் தெரியவில்லை. அவர்கள் தவிர மீதம் உள்ளோர் அகன்ற பெரிய வானத்தில் உள்ள நட்சத்திரங்களைவிட அதிகமாய் உள்ளனர்.

My legs are faltering; eyes have dimmed
Looking out for them for so long;
There are as many people, other than them,
As there are stars in this universe!

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை.

மே
MAY 07

விரைந்து வருவார்

புன்கண் மாலையும் புலம்பும்
இன்றுகொல் தோழி! அவர் சென்ற நாட்டே! (குறுந். 46: 6-7)
மாமிலாடனார்

பொருள்:
தோழியே! தலைவர் சென்ற நாட்டில் பிரிந்தோரைப் புலம்பி வருந்தச் செய்யும் மாலைக் காலமும், பிரிந்து வாடுவோரும் இல்லையோ?

Twilight that torments lovers, and loneliness,
Does the country he has gone to, Not have these, my friend?



பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை.

த. ஷாலினி
நகராட்சி மேல்நிலைப்பள்ளி, சென்னை.

08

மே

May

வேள் பாரி

மரம் தொறும் பிணித்த களிற்றினிர் ஆயினும்
புலம்தொறும் பரப்பிய தேரினிர் ஆயினும்
தாளின் கொள்ளலிர்; வாளின் தாரலன்;
யான் அறிகுவென், அது கொள்ளும் ஆறே!
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி,
விரையொலி கூந்தல் நும் விறலியர் பின்வர,
ஆடினிர், பாடினிர், செலினே
நாடும் குன்றும் ஒருங்கு ஈயும்மே! (புறம். 109: 11–18)

கபிலர்

பொருள்:

மலை அடிவாரத்தில் மரங்கள் தோறும் யானைகளைக் கட்டி நிறுத்தினாலும், தேர்களை ஓட்டிக் கொண்டுவந்து நிறுத்தி இருந்தாலும் பறம்பு மலை அடிபணியாது. உங்களது வாள் வன்மையால் அதனைப் பெறமுடியாது. அதனை எப்படிப் பெறுவது என்பதை நான் அறிவேன். கேளுங்கள். நீங்கள் சிறிய யாழை வாசித்து, உம் மகளிர் விறலியர் கோலம்பூண்டு முன்னே வர, ஆடுவோரும் பாடுவோருமாகச் சென்றால் அவன் தன் நாட்டையும் குன்றையும் சேர்த்தே உங்களுக்குத் தருவான்.

Even with all your armies
You won't be able to subdue him;
I know how to get it from him –
If you go playing the harp along with your songstresses
And sing and dance his praise
He will give away his country along with hills too.

மே
MAY
09

அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

ஆதரவற்றோர் ஆனோம்!

அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவின்
எந்தையும் உடையேம்! எம் குன்றும் பிறர்கொளார்!
இற்றைத் திங்கள் இவ்வெண் நிலவின்
வென்றுஎறி முரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்! யாம் எந்தையும் இலமே! (புறம். 112)

பாரி மகளிர்

பொருள்:

மூவேந்தர் முற்றுகையிட்டிருந்த அன்றைய முழுமதி நாளில், நாங்கள் எம் தந்தையோடு இருந்தோம். எங்கள் பறம்பு மலையும் கைப்பற்றப்படவில்லை. இன்றைய முழுமதி நாளில், வெற்றி முரசையுடைய மன்னர்கள் எம்மலையைக் கைப்பற்றிக்கொண்டனர். நாங்கள் எங்கள் தந்தையையும் இழந்துவிட்டோம்.

On that day, under the white light of that moon,
We had our father and no enemies had taken the hill.
On this day, under the white light of this moon, the kings,
Whose royal drums announce the victory, have taken the hill.
And we! we have no father.

10

மே

May

பறம்பு மலையே, செல்கிறோம்!

பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேம் தொழுதுநிற் பழிச்சிச்
சேறும் வாழியோ, பெரும்பெயர்ப் பறம்பே!
கோல்திரள் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறுஇருங் கூந்தல், கிழவரைப் படர்ந்தே! (புறம். 113: 5–9)

கபிலர்

பொருள்:

பறம்பு மலையே! பாரி இல்லாததால் கையறு நிலையில் கலங்கிக் கண்ணீர் மல்க வருந்தி – உன்னை வணங்கி வாழ்த்துகின்றேன். திரண்ட வளையலை அணிந்துள்ள பாரி மகளிரின் மணம் கமழ்கின்ற கரிய கூந்தலைத் தீண்டுவதற்கு உரியவரிடம் அவர்களை ஒப்படைப்பதற்காக உன்னிடம் விடைபெற்றுச் செல்கிறோம்.

As Paari is dead, with tears streaming from our eyes
And not knowing what to do,
We bow to you and leave, O' famed Parambu hills,
In search of one who will wed these dark tressed girls
Wearing small bangles in their forearms.

ஜெ. சந்திரமோகன்
ஓவியர், ஓசூர்.

மே

MAY 11

தேர்களைக் கொடையளித்த மலையமான்

தொலையா நல்லிசை விளங்கு மலையன்
மகிழாது ஈத்த இழையணி நெடுந்தேர்
பயன்கெழு முள்ளூர் மீமிசைப்
பட்ட மாரி உறையினும் பலவே! (புறம். 123: 3–6)

கபிலர்

பொருள்:

அழியாத நல்ல புகழ் விளங்கும் மலையமான், மது உண்டு மகிழாமல் இருக்கும்போது வழங்கிய அலங்கரிக்கப்பட்ட பெரிய தேர்கள், பயன்நிறைந்த முள்ளூர் மலை உச்சியில் பெய்த மழைத் துளிகளைவிடப் பலவாகும்.

Gilded chariots gifted by sober Malayan
Of lasting fame are innumerable
Than bounteous rain drops over Mullur peaks.

கோ. மதிஸ்குமார்
ஓவியர், இலங்கை.

ப. ரக்ஷிதா
ஐ.எச்.எம். பெண்கள் மேல்நிலைப் பள்ளி
ஆவடி.

12
மே
May

மலையமான் திருமுடிக்காரி

பருத்திப் பெண்டின் பனுவல் அன்ன
நெருப்புச் சினந்தணிந்த நிணந்தயங்கு கொழுங்குறை
பரூஉக்கள் மண்டையொடு ஊழ்மாறு பெயர
உண்கும்! எந்தை, நின் காண்கு வந்திசினே!
நள்ளாதார் மிடல் சாய்த்த
வல்லாள! நின் மகிழ் இருக்கையே,
உழுத நோன்பகடு அழி தின்றாங்கு
நல்லமிழ்து ஆக நீ நயந்து உண்ணும் நறவே! (புறம். 125: 1–8)

வடம வண்ணக்கன் பெருஞ்சாத்தனார்

பொருள்:

பகைவரது வலிமையை அழித்த ஆளுமை மிக்க மலையமானே! பருத்தியில் நூல் நூற்கும் பெண், தூய்மை செய்து வைத்திருக்கும் பஞ்சினைப் போன்ற நெருப்பு ஆறிய கொழுப்புடன் சேர்ந்த இறைச்சித் துண்டை மது நிறைந்த குடங்களுடன் வழங்கினாய். உன்னை, உனது அவையில் காண வந்தேன். உழுத வலிமையான காளைமாடு வைக்கோலை விரும்பித் தின்பது போல, நீ பெற்ற பொருளை எல்லோருக்கும் அளித்தபிறகு, எஞ்சிய கள்ளினை விரும்பி உண்கிறாய். அது, நல்ல அமிழ்தம் ஆகட்டும்!

Soft cotton like chunky meat pieces along with toddy
You serve to those who come to your court seeking patronage;
I've come to meet you, the destroyer of enemies,
When you are happy in your court;
Like a bull that chews hay after a hard day's work
May the leftover toddy you partake be as sweet as nectar to you.

மே
MAY

13

அ. சிவகுமார்
ஓவியர், சேலம்.

முழவா? பலாப்பழமா?

மன்றப் பலவின் மாச்சினை மந்தி
இரவலர் நாற்றிய விசிகூடு முழவின்
பாடு இன் தெண்கண், கனிசெத்து அடிப்பின்
அன்னச் சேவல் மாறுஎழுந்து ஆலும்! (புறம். 128: 1–4)
உறையூர் ஏணிச்சேரி முட மோசியார்

பொருள்:

ஊர்ப் பொது மன்றத்தில் உள்ள பலா மரத்தில் பழுத்த பலாப்பழங்கள் தொங்கின. அவற்றிற்கு இடையே பாணர்கள் தங்கள் மத்தளத்தைத் தொங்க விட்டிருந்தனர். அதனைப் பலாப்பழம் என்று நினைத்த பெண்குரங்கு அதன் இனிய இசை எழுப்பும் கண்பகுதியில் தட்டியதும் அது முழங்கியது. அந்த முழக்கத்தைக் கேட்ட அன்னப் பறவை ஒலி எழுப்பியது.

Thinking that it was a jackfruit,
A female monkey beat on a tightly tied drum
Which was hung on a jackfruit tree's big branch by drummers.
On hearing the sound, a perturbed gander rose up and made noise.

14

மே

May

ஆய் அண்டிரனின் யானைக் கொடை

ஆஅய் அண்டிரன் அடுபோர் அண்ணல்
இரவலர்க்கு ஈத்த யானையின் கரவு இன்று
வானம் மீன்பல பூப்பின் ஆனாது
ஒருவழிக் கருவழி இன்றிப்
பெரு வெள்ளென்னின் பிழையாது மன்னே! (புறம். 129: 5-9)

உறையூர் ஏணிச்சேரி முட மோசியார்

பொருள்:

வானத்தில் நிறைந்திருக்கும் விண்மீன்களின் எண்ணிக்கையை விட மிகுதியான யானைகளை இரவலர்க்கு ஆய் அண்டிரன் வழங்குவான். வானத்தில் மேகமே இல்லாமல் விண்மீன்கள் இன்னும் மிகுதியாக இருந்தால் கூட அவன் வழங்கிய யானைகளுக்கு ஈடாகாது.

Number of elephants given away as gift
By mighty warrior Aai Andiran
Are far more than stars in the sky;
Even if stars are stacked together
Without any gap, they might not equal his gift.

கோ. மதிஸ்குமார்
ஓவியர், இலங்கை.

மே **15**
MAY

ஆயத்தோடு கூடு என்றாள், தாய்

நேரிழை நின்றுழிக் கண் நிற்ப, நீர் அவன்
தாழ்வுழி உய்யாது தான் வேண்டும் ஆறு உய்ப்ப
ஆயத்துடன் நில்லாள் ஆங்கு அவன் பின் தொடரூஉ,
தாய் அத்திறம் அறியாள் தாங்கி, தனிச் சேறல்
ஆயத்தில் கூடு என்று அரற்றெடுப்பத் தாக்கிற்றே
சேய் உற்ற கார் நீர் வரவு! (பரி. 11: 109–114)

நல்லந்துவனார்

பொருள்:

வையையாற்றில் பாய்ந்து ஒருவன் நீராடினான். அவ்வேளையில் கரையில் உறவினரோடு நின்ற ஒரு தலைவியைப் பார்த்தான். அவளும் அவனைப் பார்த்தாள். அப்போது வையை நீர், அவனை எதிர்த்திசையில் இழுத்துச்சென்றது. அவன் நீரோடு செல்வதைக் கண்ட அவள், அவன் ஆற்றில் போன வழியில் கரையிலே தொடர்ந்தாள். அவளின் காதலை உணராத தாய், அவளை, 'நீ தனியே செல்லாதே' என்று தடுப்பதுபோல் கூவினாள். அதனால் அப்பெண் அழுதாள். இவ்வாறு காதலரைத் துன்பத்தில் ஆழ்த்தும் வகையில் கார் காலத்தில் வையையில் புதுவெள்ளம் ஓடியது.

While he was transfixed looking at where she stood,
The river took him away in a different course;
So she left her kith and kin and moved towards him
While her mother shouted "Stay with your friends", to her dismay
As the reddish water of Vaigai crashed against the banks.



சு. தமிழ்மணி
ஓவியர், சேலம்.

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

16

மே

May

ஆரவாரம் மிக்க ஊர்

எல்வளை மகளிர் தெள்விளி இசைப்பின்,
பழனக் காவில் பசுமயில் ஆலும்,
பொய்கை வாயில் புனல்பொருபுதவின்,
வல்வாய் உருளி கதுமென மண்ட
அள்ளல்பட்டுத் துள்ளுபு துரப்ப
நல்லெருது முயலும் அளறுபோகு விழுமத்துச்
சாகாட்டாளர் கம்பலை யல்லது ... (பதிற்று. 27: 7–14)

பாலைக் கௌதமனார்

பொருள்:

ஒளி பொருந்திய வளையல் அணிந்த இளம்பெண்கள், நீர்த்துறைக்கு அருகில் உள்ள மருத மரத்தில் ஏறி, நெல் வயல்களில் கதிர் கொய்ய வரும் பறவைகளை விரட்ட, ஓங்கிக் குரலை இசைப்பர். அது கேட்டு அருகில் உள்ள சோலைகளில் இருக்கும் மயில்கள் ஆடத்தொடங்கும். பொய்கையின் மதகில் கசியும் நீர் ஒலி எழுப்பும். அந்த நீர் போகும் வழியில் நெய்தல் மலர்ந்துள்ள சேற்று நிலத்தில், எருதுகள் பூட்டப்பெற்ற வண்டியின் சக்கரங்கள் புதையும். வண்டி ஓட்டுபவர், சேற்றிலிருந்து சக்கரங்களை மீட்பதற்காக எருதுகளை ஓசை எழுப்பி விரட்டுவர். இவ்வாறாக பலவகையான ஒலிகள் நிறைந்த ஊர்.

The commotions heard in your country
Are the clear voices of the young women who climb on the trees
To chase away the birds that feed on the mature grains,
And the agitated noise of bullock cart drivers
Whose cartwheels are stuck in the rut
Of your country's flourishing paddy fields.

மே
MAY
17

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

குட்டுவனால் வளம் அழிந்த ஊர்

அகன்கண் வைப்பின் நாடு மன் அளிய!
விரவுவேறு கூலமொடு குருதிவேட்ட,
மயிர்புதை மாக்கண் கடிய கழற,
அமர்கோள் நேர் இகந்து ஆர் எயில் கடக்கும்
பெரும்பல் யானைக் குட்டுவன்
வரம்பில் தானை பரவா ஊங்கே! (பதிற்று. 29: 9–15)

பாலைக் கௌதமனார்

பொருள்:

பெரும்பல் யானைக் குட்டுவன், போர் முழக்கத்துடன் பகைவர் நாட்டுடன் போருக்குப் புறப்படுவதற்கு முன், பலவகைத் தானியங்களுடன் இரத்தம் கலந்து படையலிட்டனர்; எருதின் மயிர் சேர்ந்த தோல் போர்த்தப்பட்ட முரசின் பெரிய கண் பகுதியில் பேரொலி எழுப்பினர். அவன் போருக்குச் செல்லும்முன், வளம் நிறைந்ததாக இருந்த பகைவர் நாடு இனி இரங்கத்தக்கதாகும்.

These were countries with expansive towns
Before the legion of Kuttuvan with elephants
Destroyed them, sounding leather clad war drums,
Offering blood–soaked grains as sacrifice.

18

மே

May

உண்மையைச் சொல்லிவிடு

உடலினென் அல்லேன்! பொய்யாது உரைமோ!
யார் அவள், மகிழ்ந! தானே தேரொடு
தளர்நடைப் புதல்வனை உள்ளி, நின்
வளமனை வருதலும் வெளவியோளே! (ஐங். 66)

ஓரம்போகியார்

பொருள்:

மகிழ்நனே! தானே தேர் உருட்டி விளையாடும் தளர்ந்த நடையை உடைய மகனை நினைத்தபடி நீ இல்லத்துக்கு வரும்போது, உன்னைத் தடுத்துக் கவர்ந்து சென்றவள் யார்? நான் கோபத்துடன் இதனைக் கேட்கவில்லை. பொய்யில்லாமல் உண்மையைச் சொல்வாயாக!

O' Joyous Chief! I am not against you,
Tell me without lying:
Who was that witching woman, who seized you
During your return in the chariot to your wealthy villa,
Thinking of your tottering son?

ச. ரகு
ஓவியர், கோயம்புத்தூர்.

மே

MAY 19

இதை உன் மனைவி கேட்டிருக்க வேண்டும்

குருகு உடைத்து உண்ட வெள் அகட்டு யாமை
அரிப்பறை வினைஞர் அல்குமிசைக் கூட்டும்
மலரணி வாயில் பொய்கை ஊர! நீ
என்னை நயந்தனென் என்றி! நின்
மனையோள் கேட்கின் வருந்துவள் பெரிதே! (ஐங். 81)

ஓரம்போகியார்

பொருள்:

நாரைகள் உடைத்து உண்ட வெண்மையான வயிற்றைக் கொண்ட ஆமை இறைச்சியை அரிப்பறையை முழக்கும் உழவர், தங்கள் உணவுடன் சேர்த்து உண்பர். மலர்கள் மலர்ந்திருக்கும் பொய்கையை உடைய துறைக்குத் தலைவனே! 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று கூறுகிறாய். இதனை உன்னுடைய மனைவி கேட்டால் மிகவும் வருந்துவாள்.

O' Chief of the habitat, where the heron cracking
The white–bellied tortoise ate its flesh,
The residue of which is gathered for the drummers' supper
And where the flowers beautify the lake with steps;
You said that you desired me,
If your wife hears the same
Surely she will be sad.



செ. கணேசமூர்த்தி
அரசு கவின் கலைக் கல்லூரி
சென்னை.

பா. கோபி கிருஷ்ணன்
ஓவியர், மதுரை.

20
மே
May

பொருள்மீதே காதலர்க்குக் காதல்

விழுத்தொடை மறவர் வில் இட வீழ்ந்தோர்
எழுத்து உடை நடுகல் இன் நிழல் வதியும்
அருஞ்சுரக் கவலை நீந்தி, என்றும்
இல்லோர்க்கு இல் என்று இயைவது கரத்தல்
வல்லா நெஞ்சம் வலிப்ப, நம்மினும்
பொருளே காதலர் காதல்!
அருளே காதலர் என்றி நீயே! (அகம். 53: 10–16)

சீத்தலைச் சாத்தனார்

பொருள்:

மறவர் மறைந்திருந்து விட்ட அம்பினால் இறந்தவரின் பெருமை எழுதி வைக்கப்பட்ட நடுகல்லுக்கு அருகில் செந்நாய் ஒன்று தன் துணையுடன் தங்கியிருந்தது. இல்லை என்று இரப்போர்க்கு, இல்லை என்று சொல்லாத நம் தலைவன், அந்தக் கொடிய காட்டு வழியில் பொருள் தேடிப் போய்விட்டான். நம்மை விடவும் தலைவனுக்குப் பொருளின்மேல் தான் காதல் உள்ளது என்றேன். ஆனால் நீயோ, அவன், பொருள் மேல் கொண்ட காதலும் அருளுடன் கூடியது என்கிறாய்.

Our lover went on a long, deserted path of gore.
It seems, for him the wealth earned thus
Is more valuable than we are!
Yet you say, that it is for love of us he cares more!

மே
MAY
21

பா. கோபி கிருஷ்ணன்
ஓவியர், மதுரை.

கோவலர் குழலோசை

...மதவுநடைத்
தாம்பு அசை குழவி வீங்குசுரை மடிய,
கனைஅல் அம்குரல் கால்பரி பயிற்றி,
படு மணி மிடற்ற பயநிரை ஆயம்
கொடுமடி உடையர் கோல்கைக் கோவலர்
கொன்றை அம் குழலர் பின்றைத் தூங்க,
மனைமனைப் படரும் நனை நகுமாலை! (அகம். 54: 6–12)
மாற்றூர் கிழார் மகனார் கொற்றங் கொற்றனார்

பொருள்:

பசுக்கள், வீட்டில் கயிற்றால் கட்டப்பெற்ற கன்றுகளை நினைத்துக்கொண்டதால் பால் சுரக்கும் பெரிய மடியை உடையன. அவை கனைக்கும் குரலுடனும் கழுத்தில் ஒலிக்கும் மணியுடனும் விரைந்து வருகின்றன. ஆயர்கள், மடியில் பொருள்கள் மடித்து வைக்கப்பட்ட வேட்டியை உடையவராய், புல்லாங்குழல் இசைத்தவராய், கோலைக் கையில் உடையவராய் மாடுகளுக்குப் பின்னால் வருகின்றனர். மாடுகள் தங்கள் வீடுகளை அறிந்து அவற்றிற்குள் செல்லும் மாலைக் காலம்.

The herds of cows, after grazing, rush to their houses;
Their udders brim with milk and their nipples swell up
When they think of their calves.
The cowherds follow them slowly,
Playing on *konrai* pipes and holding their crooks.

22
மே
May

வீடு மாறி வந்துவிட்டாய்!

பரிவொடு வரூஉம் பாணன் தெருவில்
புனிற்று ஆப் பாய்ந்தெனக் கலங்கி, யாழ் இட்டு,
எம் மனைப் புகுதந்தோனே! அதுகண்டு
மெய்ம்மலி உவகை மறையினென் எதிர்சென்று
இம்மனை அன்று அஃது உம் மனை என்ற
என்னும் தன்னும் நோக்கி,
மம்மர் நெஞ்சினோன் தொழுது நின்றதுவே! (அகம். 56: 10–16)
மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

பொருள்:

பெரும் விருப்பத்துடன் பாணன் ஒருவன் பரத்தை வீட்டிற்குச் சென்றான். தெருவில் நின்ற கன்றை ஈன்ற பசு பாய்ந்ததால், அவன் தன் கையில் இருந்த யாழைக் கீழே போட்டுவிட்டு ஓடிவந்து என் இல்லத்துள் புகுந்தான். அதைக்கண்டு எனக்குள் உண்டான சிரிப்பை மறைத்துக்கொண்டு, 'இந்த வீடு நீ புகுவதற்குரிய வீடு அல்ல. நீ போக வேண்டிய வீடு அதுவாகும்' என்று அறிவுறுத்தினேன். அவன் மயக்கத்துடன் என்னைக் கையால் வணங்கி நின்றான். அதனை இப்போது நினைத்தாலும் எனக்குச் சிரிப்பை ஏற்படுத்துகிறது.

A cow sprang upon a Paanan;
At that, the paanan dropped down his *yaal* and rushed into our house;
I concealed my giggle and said unto him,
'This is not your house. It is yonder!'
At this, he stood worshipping me with folded hands.
It was fun, good fun, my friend!

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

மே
MAY 23

மணம் பேச வருகிறானடி

பல் பூங் கானல் பகல்குறி வந்து, நம்
மெய் கவின் சிதையப் பெயர்ந்தனன் ஆயினும்,
குன்றின் தோன்றும் குவவு மணல் ஏறி,
கண்டனம் வருகம், சென்மோ, தோழி!
தண் தார் அகலம் வண்டு இமிர்பு ஊத,
படு மணிக் கலி மாக் கடைஇ,
நெடு நீர்ச் சேர்ப்பன் வரூஉம் ஆறே! (நற். 235: 4–10)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

பூக்கள் மலர்ந்த நெய்தல் சோலையில் பகலில் வந்து இன்பம் நுகர்ந்து சென்றான் தலைவன். வண்டு தேன் உண்ணும் மாலை அணிந்த அவன், தனது தேரில் பூட்டிய குதிரைகளைச் செலுத்தும்போது அவற்றின் கழுத்து மணி ஒலிக்கும்படியாக மணம் பேசுவதற்காக வருகிறான். நாம் இந்தக் கடற்கரையில் இருக்கும் மணல் குன்றில் ஏறிப் பார்க்கலாம், வா!

Our lover, whose chest is adorned with a garland swarmed by bees,
Came during the day for trysts with you and has departed, ruining your body.
Let us climb on the sand dunes that resemble the hills, O' friend,
To see the path of the lord, where he comes riding his proud horses,
To marry you!

இரா. சௌம்யா
ஓவியர் / உதவிப் பேராசிரியர்
சென்னை.

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

24

மே

May

நோயுள் ஆழ்ந்திடாதே, தோழி

நோற்றோர் மன்ற தாமே கூற்றம்
கோளுற விளியார், பிறர் கொள விளிந்தோர் எனத்
தாள் வலம்படுப்பச் சேண்புலம் படர்ந்தோர்
நாள் இழை நெடுஞ்சுவர் நோக்கி, நோய் உழந்து
ஆழல் வாழி, தோழி! (அகம். 61: 1–5)

மாமூலனார்

பொருள்:

தம் பொருளை மற்றவர்களுக்குக் கொடுக்கும் முயற்சியில் உயிர் நீத்தவர் இவ்வுலகில் தவம் செய்தவரே ஆவார். இதற்காக நம்மைப் பிரிந்து தொலைவில் உள்ள நாட்டிற்குப் பொருள் தேடிச் சென்றவர் நம் தலைவர். அவர் சென்ற நாட்களைக் கணக்கிடுவதற்கு நீண்ட சுவரில் போட்ட கோடுகளை எண்ணி எண்ணித் துன்பத்துள் ஆழ்ந்திடாதே!

My friend, you sob every time
You behold the counting marks on the wall
Ever since our lover left us seeking wealth in a far–off place.
He resolved that those who die while performing acts of charity
Are fortunate and is determined to make his efforts fruitful.

மே
MAY
25



ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

கிழிந்த ஆடை சொல்லிவிட்டது

என்னை நீ செய்யினும், உரைத்து ஈவார் இல்வழி,
முன்அடிப் பணிந்து, எம்மை உணர்த்திய வருதிமன்!
நிரைதொடி நல்லவர் துணங்கையுள் தலைக்கொள்ள,
கரையிடைக் கிழிந்த நின் காழகம் வந்து உரையாக்கால்?

(கலி. 73: 14–17)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

நீ என்ன செய்தாலும் அதைப் பிறர் சுட்டிக்காட்டாத இடத்தில் உள்ளாய். வளையல் அணிந்த பரத்தையரோடு நீ ஆடிய துணங்கைக் கூத்தில் கிழிந்த உனது உடையுடன் வந்து பணிந்து என் ஊடலை விலக்க முயல்கிறாய். அந்தக் கிழிந்த ஆடையே உனது பரத்தமையை எடுத்துரைத்துவிட்டது.

If your cloth torn at the border,
By the *tunankai* dance of the goodly women,
Didn't come to convey it, none there'd be
To point your misdeeds, however grave they are;
You'd come to resolve my sulking, resorting to submission.

26
மே
May

இடப்பெயர்வும் குடியேற்றமும்

பண்புடை நல்நாட்டுப் பகை, தலை வந்தென
அது கைவிட்டு அகன்று ஒரீஇ, காக்கிற்பான் குடை நீழல்
பதி படர்ந்து, இறைகொள்ளும் குடிபோல, பிறிதும் ஒரு
பொய்கை தேர்ந்து அலமரும் பொழுதினான், மொய் தப
இறைபகை தணிப்ப அக்குடி பதிப்பெயர்ந்தாங்கு,
நிறை புனல் நீங்க வந்து... (கலி. 78: 4–9)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

தேனருந்தும் வண்டானது ஒரு பொய்கையிலிருந்து வேறு ஒரு பொய்கைக்குப் போய்த் தங்கும், மீண்டும் பழைய பொய்கைக்கு வரும். அந்த அளவிற்குப் பல பொய்கைகளைக் கொண்ட ஊரனே! நல்ல பண்புடைய நாட்டிலே பகை வந்துவிட்டது என அந்நாட்டைவிட்டுக் குடிமக்கள் நீங்கிச் செல்வர். தங்களைப் பாதுகாக்கும் தன்மை உடைய வேற்று நாட்டு மன்னனின் ஆட்சியில் அவர்கள் தங்கியிருப்பார்கள். தன் நாட்டுக்கு வந்த பகையை அந்த மன்னன் நீக்கிய பிறகு அக்குடிமக்கள் திரும்பத் தம் ஊருக்கு வந்து தங்குவர்.

Subjects of a virtuous land under siege, abandon it
For refuge in another town under another ruler's reign;
And later return home, as their monarch
Puts the foemen to rout!

இ. சந்தியா
சென்னை பெண்கள் மேல்நிலைப் பள்ளி
நுங்கம்பாக்கம்.

மே
MAY 27

மழலை மொழி பேசு அமுதமே!

பெரும! விருந்தொடு கைதூவா எம்மையும் உள்ளாய்,
பெருந்தெருவில் கொண்டாடி ஞாயர் பயிற்ற,
திருந்துபு நீ கற்ற சொற்கள் யாம் கேட்ப,
மருந்து ஓவா நெஞ்சிற்கு அமிழ்தம் அயின்று அற்றா
பெருந்தகாய் கூறு, சில. (கலி. 81: 11–15)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

பெருமானே! விருந்தினர் வருவதால் தொடர்ந்து பல வேலைகளைச் செய்துகொண்டிருந்தேன். நீ என்னைப் பற்றி நினைக்காமல் தெருவில் விளையாடியபோது செவிலித்தாயர் உனக்குத் திருத்தமான சொற்களைக் கற்பித்தனர். அப்படி நீ கற்ற சொற்களை நான் கேட்கும்படி கூறுவாயாக. உன் தந்தையைப் பிரிந்து வருந்தும் என் நெஞ்சத்தில் இனிமை உண்டாகும்படி உன் அமிழ்தம் போன்ற மழலைச் சொல்லில் பேசுவாயாக!

O' my noble one! you go oblivious of me
As I'm tied down, treating guests;
Do utter some words for me to delight in;
Words you've learnt to refinement
From the foster mothers at the main street.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

28

மே

May

வள்ளல் காரி

...கறங்குமணி
வால் உளைப் புரவியொடு, வையகம் மருள
ஈரநல்மொழி இரவலர்க்கு ஈந்த,
அழல் திகழ்ந்து இமைக்கும் அஞ்சு வருநெடுவேல்,
கழல் தொடித் தடக்கை காரி! (சிறுபாண். 91–95)

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

பொருள்:

மலையமான் திருமுடிக் காரி, ஒலிக்கிற மணியுடன் வெண்ணிறத் தலைஅணி அணிவிக்கப்பட்ட குதிரையையும் தனது நாட்டையும் மற்றவர்கள் மருளும்படியாக இரவலர்க்குக் கனிவுடன் வழங்கியவன்! போர்த் தெய்வமாகிய கொற்றவை எப்போதும் தன்னிடம் குடியிருக்கும்படி கழலையும் நீண்ட வேலையும் தாங்கியவன். அவனது கண்கள் சினத்துடன் நெருப்புப் போல் இருக்கும்.

Kaari adorned with sliding anklets
Gifted horses with jingling bells
And white plumes
And awed people with his kind, good words.
But his bright, tall spear caused terror.

மே
MAY
29

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

எயில்பட்டினப் பரதவர் தரும் விருந்து

...நுளைமகள் அரித்த
பழம்படு தேறல் பரதவர் மடுப்ப,
கிளை மலர்ப் படப்பைக் கிடங்கில் கோமான்,
தளைஅவிழ் தெரியல் தகையோன் பாடி
அறல் குழல் பாணி தூங்கி அவரொடு
வறல் குழல் சூட்டின் வயின்வயின் பெறுகுவீர்!

(சிறுபாண். 158–163)

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

பொருள்:

எயில்பட்டினத்தில் உள்ள பரதவப் பெண்கள் அரித்து எடுத்த கள்ளை, பரதவர் தாமும் அருந்தி, பாணராகிய உங்களுக்கும் வழங்குவர். அழகிய மலர்கள் மலர்ந்த சோலைகளைக் கொண்ட கிடங்கில் என்னும் பகுதியை ஆண்ட மாலை அணிந்த மன்னனைப் பாடி, குழல் இசையின் தாளத்திற்கு ஏற்ப விறலியர் ஆடினால் அந்த நகரில் எங்கே சென்றாலும் சுடப்பட்ட குழல் மீனையும் உணவையும் உண்பதற்காகப் பெறுவீர்.

If you go to Eyilpattinam,
With groves full of flower clusters
And sing the praises of the noble king of Kidangil
With perfect rhythm and beats
As your *viralis* dance, they will give you
Kulal fish dishes and aged liquor in all the houses.

30
மே
May

நல்லியக்கோடனின் கொடை

கருந்தொழில் வினைஞர் கைவினை முற்றி
ஊர்ந்து பெயர்பெற்ற எழில்நடைப் பாகரொடு
மாசெலவு ஒழிக்கும் மதனுடை நோன்தாள்,
வாள்முகப் பாண்டில் வலவனொடு தரீஇ... (சிறுபாண். 257–260)

இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

பொருள்:

சிறந்த தச்சர் செய்து முடித்தபின் அதில் ஏறிப்பார்த்து, நல்ல தேர் என்று புகழ்ப்பெற்ற தேரையும் யானைகளையும் அவற்றின் பாகனையும், குதிரையை விட வேகமாக இழுக்கும் வலிமை வாய்ந்த வெள்ளை எருதினையும் வண்டியையும் வண்டியோட்டியையும் பிற பொருள்களையும் தருவான் நல்லியக்கோடன்.

He (Nalliakodan) makes a present of a chariot fine
That rolls with ease and proves quite fit by use.
A bull he adds, and a driver.
He sends you then with other gifts too.

இர. ஹரிப்பிரியா
ஸ்ரீ அன்னை காமாட்சி இசை மற்றும்
கவின் கலைக் கல்லூரி, சென்னை.

மே
MAY 31

சுங்கவரி பெறும் பாதை

தடவு நிலைப் பலவின் முழு முதல் கொண்ட
சிறு சுளைப் பெரும் பழம் கடுப்ப, மிரியல்
புணர் பொறை தாங்கிய வடு ஆழ் நோன் புறத்து
அணர் செவி கழுதை சாத்தொடு வழங்கும்,
உல்கு உடை பெரு வழி கவலை காக்கும்
வில் உடை வைப்பின் வியன் காட்டு இயவின்... (பெரும்பாண். 77–82)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:
வளைந்து தாழ்ந்த பலாக்கிளையின் இரண்டு பக்கங்களிலும் பலாப்பழங்கள் தொங்குவது போல் கழுதையின் மேல் மிளகுப் பொதிகள் தொங்கும். அந்தக் கழுதையின் முதுகு, பொதி சுமந்து காய்ப்பு ஏறியிருந்தது. வணிகத்திற்காகப் பொருள்களை ஏற்றிக் கொண்டு வணிகர்கள் செல்லும் பாதைகளில் பாதுகாப்புக்காக வில்லேந்தி வீரர்கள் நிற்பர். அங்கே சுங்கவரி பெறப்பட்டது.

Merchants travel on wide roads where tolls are levied
Accompanied by their donkeys with scarred backs,
That carry loads of pepper sacks, well balanced,
Resembling jackfruits that grow on the curved branches of trees
These paths used by the merchants are
Protected by those with bows.



ஞா. கமலவேல்
ஓவியர், திருவாரூர்.

ச. செந்தில்குமார்
ஓவியர், சென்னை.

01
ஜூன்
June

யான் உற்ற நோயே

அழுதல் ஆற்றிசின் – ஆயிழை! ஒலி குரல்
ஏனல் காவலின் இடை உற்று ஒருவன்
கண்ணியன், கழலன், தாரன், தண்ணெனச்
சிறுபுறம் கவையினனாக, அதன்கொண்டு
அஃதே நினைந்த நெஞ்சமொடு
இஃது ஆகின்று யான் உற்ற நோயே! (நற். 128: 6–11)

நற்சேந்தனார்

பொருள்:

தோழியே, அழாதே! நான் உற்ற நோய் பற்றிச் சொல்கிறேன். தினைக் கதிர்க் காவலின் போது ஒருவன், கண்ணியும் மாலையும் அணிந்தவனாய் வீரக் கழலுடன் வந்தான். அவன் எனக்குப் பின்னால் வந்து என்னை முதுகுடன் சேர்த்து அணைத்துக்கொண்டான். அப்போதிருந்து அந்த நிகழ்ச்சியை நினைத்து, நினைத்து இப்படி ஆகிவிட்டது.

My malady is because my heart keeps thinking about him
And I am like this ever since the man whose head and chest
Adorned with wreaths, his feet decked with heroic anklets,
Clasped me from back and caused me feel a thrill
When I was guarding the millet crops!

ஜூன் 02
JUNE

கு. கோவிந்தராஜு
ஓவிய ஆசிரியர், ஓசூர்.

பொன்றும் நாள் இதுதானோ?

பயில்படை நிவந்த பல்பூஞ் சேக்கை
அயலும் மாண் சிறையதுவே; அதன்தலை
'காப்புடை வாயில் போற்று ஓ' என்னும்
யாமம் கொள்பவர் நெடுநா ஒண்மணி
ஒன்றுஎறி பாணியின் இரட்டும்
இன்றுகொல், அளியேன் பொன்றும் நாளே? (நற். 132: 6–11)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

பல பூக்கள் பரப்பிய உயர்ந்த படுக்கையும் சிறந்த காவலையும் உடையதாய் வீடு உள்ளது. அங்குக் 'காக்க வேண்டிய உங்கள் வீட்டுக் கதவுகளைப் பாதுகாப்பாகப் பூட்டிக் கொள்வீர்களாக' என்று இரவுக் காவலர் நீண்ட குரல் எழுப்புவர். அது பெரிய நாவின் மணியோசையைப் போல் கேட்கும். நள்ளிரவிலும் உறங்காமல் வீட்டுக் காவலில் இருக்கும் நான், சாகும் நாள் இன்றுதான் போலும்!

The well–furnished bed, strewn with flowers, in our house,
Is well–guarded with gates.
The night guards shout and ring their long tongued bells
To warn the townfolk to keep watch over their doors;
With such guarding, O' my friend, it seems that today is the day,
My poor life is destined to be doomed!

03
ஜூன்
June

ஆட்டினம் காக்கும் இடையர்

பாணிகொண்ட பல்கால் மெல்உறி,
ஞெலிகோல், கலப்பை அதளொடு சுருக்கி,
பறிப்புறத்து இட்ட பால்நொடை இடையன்
நுண்பல் துவலை ஒருதிறம் நனைப்ப,
தண்டுகால் வைத்த ஒடுங்குநிலை மடிவிளி
சிறுதலைத் தொழுதி ஏமார்த்து அல்கும்
புறவினதுவே! (நற். 142: 2–8) இடைக்காடனார்

பொருள்:
பல பிரிகயிறு கொண்ட மெல்லிய உறியையும், தீக்கடை கோல் முதலான கருவிகளை வைத்திருக்கும் தோல் பையையும், பனை ஓலையால் செய்த பாயையும் ஒன்றாகச் சேர்த்து முதுகில் கட்டியபடி இடையன், பால் விற்றுச் செல்வான். நுண்ணிய பல மழைத்துளிகள் அவன் உடலின் ஒரு பக்கத்தை நனைக்கும். கையில் வைத்திருக்கும் தண்டை ஊன்றி அதன் மேல் ஒரு கால் வைத்து ஒடுங்கிய நிலையிலிருந்து வாயை மடித்து சீழ்க்கை எழுப்புவான். அந்த ஒலியால் சிறிய தலையையுடைய ஆட்டு மந்தை, வேறுபக்கம் போகாமல் மயங்கி, இருந்த புலத்திலேயே தங்கும்.

A shepherd, who sells milk, holds in his hand a soft rope hoop.
On his back, he carries a leather bag containing kindling tools,
Along with a palm frond mat. He then stands,
Dampened by the raindrops, his legs resting on his staff,
And makes a whistling sound, hearing which,
The sheep remain in the fold, not straying anywhere.

பா. ஜீவநாதன்
ஓவியர், புதுச்சேரி.

ஜூன் JUNE 04

நானே உன் நெஞ்சுக்குரியவள்

அணில்பல் அன்ன கொங்குமுதிர் முண்டகத்து
மணிக்கேழ் அன்ன மாநீர்ச் சேர்ப்ப!
நீயாகியர் என் கணவனை
யானாகியர் நின் நெஞ்சு நேர்பவளே! (குறுந். 49)

அம்மூவனார்

பொருள்:

அணிலின் பல்லைப் போன்ற முள்ளையும் நீல மணி போன்ற நிறம்கொண்ட பூக்களையும் கொண்ட முண்டகச் செடிகள் நிறைந்த கடற்கரையையும் பெரிய கடலையும் உடைய தலைவனே! இப்பிறப்பு நீங்கி, மறு பிறப்பு வாய்த்தாலும், நீயே என்னுடைய கணவன் ஆகுக. அப்போதும் நானே உன்னுடைய நெஞ்சம் விரும்பும் காதலி ஆகுக.

O' lord of the shores,
Where the ocean is sapphire colored,
And *mundakam* bushes have thorns like teeth of squirrels!
Even if this life ends and we are born again,
You shall be my husband
And I shall be the one who has your heart!

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

05

ஜூன்

June

உறுதிமொழியை மறந்துவிடாதே!

எக்கர் நண்ணிய எம் ஊர் வியன் துறை,
நேர் இறை முன்கை பற்றி,
சூரரமகளிரோடு உற்ற சூளே! (குறுந். 53: 5–7)

கோப்பெருஞ்சோழன்

பொருள்:

மணல் மேடுகள் நிறைந்த எம் ஊர் நீர்த்துறையில், தெய்வ மகளிர் சாட்சியாக 'உன்னை மணப்பேன்' எனத் தலைவிக்கு நீ செய்து கொடுத்த சத்தியத்தை மறந்துவிடாதே.

In the presence of the Goddess at the waterfront
Of our town surrounded by sand dunes,
You held her (Heroine's) slender forearms
And promised to marry her.

ஜூன் 06
JUNE

இரா. சௌம்யா
ஓவியர்/உதவிப் பேராசிரியர், சென்னை.

பிரிவில்லாத காதல் வாய்க்கட்டும்

பூ இடைப்படினும் யாண்டு கழிந்தன்ன
நீர் உறை மகன்றில் புணர்ச்சி போலப்
பிரிவு அரிது ஆகிய தண்டாக் காமமொடு... (குறுந். 57:1–3)
சிறைக்குடி ஆந்தையார்

பொருள்:

மகன்றில் பறவை, தன் இணையுடன் நீந்தும் வேளையில் ஒரு பூ இடையில் விழுந்தாலும் அதைப் பல ஆண்டுகள் பிரிந்ததாகக் கருதி வருந்தும். அந்த மகன்றிலைப் போல் சிறு பிரிவும் இல்லாமல் இருப்பதே நான் கொண்ட காதலுக்குச் சிறப்பு.

Like water birds that suffer as if they've been years apart
If even a flower interrupts their embrace,
Inseparable were we with undying passion.

07

ஜூன்

June

காதல் நோயைப் பொறுத்துக்கொள்வது கடினம்

கைஇல் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய், நோன்று கொளற்கு அரிதே! (குறுந். 58: 4–6)
வெள்ளி வீதியார்

பொருள்:

சூரியன் சுட்டெரிக்கும் பாறையில் வைக்கப்பெற்ற வெண்ணெய், உருகி அந்தப் பாறையில் பரந்து போவதைக் கையில்லாத – வாய் பேசமுடியாத ஒருவன் தன் பார்வையாலேயே தடுக்க இயலாது. அதைப் போல் இந்தக் காதல் நோய் என் உடல் முழுவதும் பரவி, தாங்கமுடியாத துன்பத்தைத் தருவதைச் சொல்ல முடியாமல் தவிக்கிறேன்.

Like butter melting on a hot rock under the scorching sun,
Which an armless mute tried to guard with his sight
Spreads this malady;
It's hard to bear and uproot!

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

ஜூன்
JUNE **08**

கவரிமாவும் ஆய்க்குடியும்

நரந்தை நறும்புல் மேய்ந்த கவரி,
குவளைப் பைஞ்சுனை பருகி, அயல
தகரத் தண்ணிழல் பிணையொடு வதியும்,
வடதிசை அதுவே வான்தோய் இமையம்!
தென்திசை ஆஅய்குடி இன்றாயின்
பிறழ்வது மன்னோ இம்மலர்தலை உலகம்! (புறம். 132: 4-9)

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

பொருள்:

வடக்கே வானளாவிய இமயமலையில், நரந்தம் என்னும் நறுமணப் புல்லை மேய்ந்த கவரிமா, குவளை மலர்களையுடைய சுனையில் நீரைக் குடித்துவிட்டு, அருகிலுள்ள தகரம் என்னும் மணமிக்க மரத்தடியில் தன் இணையுடன் தங்கும். அந்த இமயச் சாரலுக்கு இணையாகத் தெற்கே சிறந்த குடியாக ஆய்குடியைக் கொண்ட பொதிகை மலை திகழ்கிறது. இவ்விரண்டும் இல்லையென்றால் இந்தப் பரந்த உலகம் உயர்வு, தாழ்வு என்னும் பேதத்தில் நிலைதடுமாறிவிடும்.

In the North, where yaks graze on aromatic grass
And drink fresh mountain spring water, is the Himalayas;
To the South lies the famed clan of Aai;
If not for these two, this world would have gone upside down.



கோ. மதிஸ்குமார்
ஓவியர், இலங்கை.

சி. உமாபதி
பாவை பள்ளி, நாமக்கல்.

09
ஜூன்
June

வையாவிக் கோப்பெரும் பேகன்

களங்கனி அன்ன கருங்கோட்டுச் சீறியாழ்,
நயம்புரிந்து உறையுநர் நடுங்கப் பண்ணி,
அறம் செய்தீமோ, அருள் வெய்யோய் என
இஃது யாம் இரந்த பரிசில், அஃது இருளின்
இனமணி நெடுந்தேர் ஏறி
இன்னாது உறைவி அரும்படர் களைமே! (புறம். 145: 5–10)

பரணர்

பொருள்:

களாப் பழம் போன்ற கரிய தண்டினைக் கொண்ட சிறிய யாழினை இசைத்து, கேட்போரைத் தலையசைக்கச் செய்வோம். நாங்கள் உன்னிடம் எதுவும் எதிர்பார்த்து வரவில்லை: ஆனால் ஒரு பரிசில் வேண்டுகிறோம். அருளை விரும்புபவனே! நீ அறத்தின்படி செயல்படுவாயாக! வீட்டில் உன்னைப் பிரிந்த கவலையுடன் இருக்கும் உன் தலைவியின் துன்பத்தைப் போக்குவதற்காக, மணி கட்டப்பட்ட தேரில் ஏறி விரைந்து செல்வாயாக! இதுதான் நீ எங்களுக்குத் தரும் பரிசில் ஆகும்.

O' Pekan, we play the dark stemmed lyre
To everyone's delight.
We ask you this favour;
Get on your majestic chariot,
Go to your wife who is pining for you.
And rid her of her separation pangs.

ஜூன் 10
JUNE

உ. லித்திகா வர்சு
ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரி, சேலம்.

கண்டீரக் கோப்பெரு நள்ளி

எந்நாடோ? என நாடும் சொல்லான்,
யாரீரோ? எனப் பேரும் சொல்லான்,
பிறர்பிறர் கூற வழிக்கேட்டிசினே
இரும்பு புனைந்து இயற்றாப் பெரும்பெயர்த் தோட்டி,
அம்மலை காக்கும் அணிநெடுங் குன்றின்
பளிங்கு வகுத்து அன்ன தீநீர்
நளிமலை நாடன் நள்ளிஅவன் எனவே! (புறம். 150: 22–28)
வன்பரணர்

பொருள்:

உன்னுடைய நாடு எது என்று கேட்டோம். அவன் சொல்லவில்லை. நீ யார் என்று கேட்டோம். அதற்கும் அவன் பதில் சொல்லவில்லை. அவனது நாட்டையும் பெயரையும் பிறர் கூறக் கேட்டுத் தெரிந்துகொண்டோம். பெரும்புகழ் கொண்ட தோட்டி மலைக்கும் அம்மலையில் பளிங்குபோல் பாயும் அருவிக்கும் உரியவனான நள்ளிதான் அவன் என்று அறிந்துகொண்டோம்.

He neither told which was his town nor his name:
I found from others that he was Nalli,
The ruler of the famed Thotti hills
Where clear water flows.

11

ஜூன்

June

வல்வில் ஓரி

நாட்டிடன் நாட்டிடன் வருதும்: ஈங்கு ஓர்
வேட்டுவர் இல்லை, நின் ஒப்போர் என,
வேட்டது மொழியவும் விடாஅன், வேட்டத்தில்
தான் உயிர் செகுத்த மான் நிணப் புழுக்கோடு,
ஆன் உருக்கு அன்ன வேரியை நல்கி,
தன்மலைப் பிறந்த தாவில் நன்பொன்,
பன்மணிக் குவையொடும் விரைஇக் கொண்ம்! (புறம். 152: 23–29)

வன்பரணர்

பொருள்:

'நாங்கள் சுற்றிவந்த பல்வேறு நாடுகளில் உன்னைப் போல் வேட்டையாடுவதில் சிறந்தோர் ஒருவரையும் காணமுடியவில்லை' என்று நாங்கள் சொல்வதற்கு விடாமல், அவன் வேட்டையாடிய மானின் கொழுத்த தசையுடன், பசு நெய்யை உருக்கியதைப் போன்ற மதுவைத் தந்தான். தம் மலையில் பிறந்த தூய்மையான தங்கத்தையும் பல மணிகளையும் சேர்த்து, 'இவற்றைப் பெற்றுக்கொள்ளுங்கள்' என்று கூறி எங்களுக்குத் தந்தான்.

'In all the countries we have seen
There's no better hunter than you',
Thus we praised him; without waiting for us to ask
He offered us deer meat, clear wine, gold and gems.

ப. சிவசுதன்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை.

ஜூன் JUNE 12

குமணன்

சிறுபொன் நன்கலம் சுற்ற இரீஇ,
கேடு இன்றாகப் பாடுநர் கடும்புஎன,
அரிதுபெறு பொலம்கலம் எளிதினின் வீசி
நட்டோர் நட்ட நல்லிசைக் குமணன்
மட்டார் மறுகின் முதிரத்தோனே!
செல்குவை ஆயின், நல்குவன் பெரிதுஎனப்
பல்புகழ் நுவலுநர் கூற வல்விரைந்து
உள்ளம் துரப்ப வந்தனென்! (புறம். 160: 9–16)

பெருஞ்சித்திரனார்

பொருள்:

'தங்கத்தாலான சிறிய வட்டில்களைச் சுற்றிலும் வைத்து, உண்ணச் செய்பவனும், 'நம்மைப் பாடுகின்ற பாணர் சுற்றம் கேடின்றி வாழ்க!' என்று பொன்னால் ஆன அணிகலன்களைத் தருபவனும், மிகுந்த நட்புக் கொள்பவனுமான குமணன், தேன் நிறைந்த முதிர மலையில் உள்ளான். நீ அவனிடம் சென்றால் உனக்கு அவன் மிகுதியான செல்வத்தை அளிப்பான்' என்று, உன்னுடைய புகழைச் சொல்லக் கேட்டு உன்னிடம் விரைவாக வந்தேன்.

As people told me "Kumanan of Mudiram hills
Values us bards, and gifts away
Rare jewels to those who sing his praise;
If you go and meet him, he will give you much more"
I came swiftly, driven by my heart's desire.



ஜா. கேத்ரின் ஜெசிகா
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஜா. கேத்ரின் ஜெசிகா
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

13
ஜூன்
June

எல்லோருக்கும் கொடு

இன்னோர்க்கு என்னாது, என்னோடும் சூழாது,
வல்லாங்கு வாழ்தும் என்னாது, நீயும்
எல்லோர்க்கும் கொடுமதி, மனை கிழவோயே!
பழந்தூங்கு முதிரத்துக் கிழவன்
திருந்துவேல் குமணன் நல்கிய வளனே! (புறம். 163: 5–9)
பெருஞ்சித்திரனார்

பொருள்:

மனைக்குரியவளே! பலாப்பழம் பழுத்துத் தொங்கும் முதிரமலைக்குத் தலைவனாகிய நேரான வேலையுடைய குமணன் நமக்குக் கொடுத்த செல்வத்தை, இவருக்குத்தான் தரவேண்டும் என்று இல்லாமலும், இன்னவர்க்கு இதனைத் தரலாமா என என்னிடம் கேட்காமலும், இதை வைத்துக்கொண்டு நன்றாக நாமே வாழலாம் என்று எண்ணாமலும் எல்லோருக்கும் வழங்குவாயாக!

O' my wife! Be generous with this wealth
Without discrimination and don't hoard it for ourselves;
This wealth has been granted to us by Kumanan,
The Lord of Mudiram Hills that is abundant with Jack fruits.

ஜூன் JUNE 14

சி. தெய்வேந்திரன்
ஓவியர், மதுரை.

குறவர் உணவு

மரைஆன் கறந்த நுரைகொள் தீம்பால்,
மான்தடி புழுக்கிய புலவுநாறு குழிசி,
வான்கேழ் இரும்புடை கழாஅது ஏற்றி,
சாந்த விறகின் உவித்த புன்கம்,
கூதளங் கவினிய குளவி முன்றில்,
செழுங்கோள் வாழை அகல்இலைப் பகுக்கும்! (புறம். 168: 8–13)

கருவூர்க் கதப்பிள்ளைச் சாத்தனார்

பொருள்:

மான் தசை பொரித்த வட்ட வடிவமான இரும்புப் பாத்திரத்தில் காட்டுப் பசுவிடம் கறந்த பாலை ஊற்றி, சந்தனக் கட்டையால் அடுப்பெரித்து, குறவர்கள் ஊன்சோற்றைச் சமைப்பர். அவ்வாறு சமைத்த உணவை காட்டு மல்லிகை மலர்ந்த முற்றத்தில் பெரிய வாழை இலையை விரித்துப் போட்டு எல்லோரும் பகுத்து உண்பர்.

In their front yard with jasmine blooms
The Kuravas eat together with others in a broad plantain leaf
Rice cooked in fresh milk drawn from wild cows
Made using sandalwood pieces set in fire.

15

ஜூன்

June

கடையெழு வள்ளல்கள்

...என ஆங்கு,
எழு சமம் கடந்த எழு உறழ் திணி தோள்
எழுவர் பூண்ட ஈகைச் செந் நுகம்! (சிறுபாண்: 111–113)
இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார்

பொருள்:

பேகன், பாரி, காரி, ஆய், அதியமான், நள்ளி, ஓரி என்னும் ஏழு வள்ளல்களும், தங்கள் தோள் வலிமையால் பல போர்களில் வெற்றி கொண்டனர். தங்கள் வள்ளல் தன்மையால் பெரும்புகழைச் சுமந்தனர்.

In days of yore, the Seven Great Patrons
Won all battles that they faced
By the strength of their mighty shoulders
And carried the burden of generosity.
(The Seven Great Patrons: Began, Paari, Kaari, Aai, Athiyamaan, Nalli, Ori)

ச. சர்வந்திகா
வேலம்மாள் வித்யாலயா பள்ளி, சென்னை.

ஜூன் 16
JUNE

கள் அருந்தும் வேட்டுவர்

காந்தளங் கண்ணி, கொலைவில் வேட்டுவர்
செங்கோட்டு ஆமா ஊனொடு காட்ட
மதனுடை வேழத்து வெண்கோடு கொண்டு,
பொன்னுடை நியமத்துப் பிழிநொடை கொடுக்கும்,
குன்றுதலை மணந்த புன்புல வைப்பு! (பதிற்று. 30: 9–13)

பாலைக் கௌதமனார்

பொருள்:

வளம் நிறைந்த கடைத்தெரு, குன்றுகள் நெருங்கியுள்ள வறண்ட பகுதியில் அமைந்திருக்கும். காந்தள் பூ மாலையையும் வேட்டைக்கான வில்லையும் உடைய வேடர், செந்நிறக் கொம்பையுடைய காட்டுப்பசுவின் இறைச்சியையும், வலிமையான யானையின் தந்தத்தையும் அந்தக் கடைத்தெருவுக்குக் கொண்டுவந்து கொடுத்து, அதற்கு ஈடாக, வடித்த கள்ளைப் பெறுவர்.

Hunters adorned with red flowers and carrying bows
Bring red–horned wild cow meat and elephant tusks
To exchange it for toddy in prosperous markets
In towns that are surrounded by hillocks.



ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

17

ஜூன்

June

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரல்

இறும்பூதால், பெரிதே கொடித் தேர் அண்ணல்
வடிமணி அணைத்த பணை மருள் நோன்தாள்
கடிமரத்தான் களிறு அணைத்து
நெடுநீர துறை கலங்க
மூழ்த்து இறுத்த வியன்தானை! (பதிற்று. 33: 1–5)

காப்பியாற்றுக் காப்பியனார்

பொருள்:

கொடி கட்டப்பட்ட தேர்களையுடைய மன்னனே! உனது ஆற்றல் வியப்பிற்கு உரியது. கழுத்தில் மணியும் முழவைப் போன்ற பெரிய கால்களும் உடைய யானைகளைப் பகைவர் நாட்டுக் காவல் மரத்தில் கட்டியுள்ளாய். அகழியில் உள்ள நீர் கலங்கும்படி முன்னேறித் தாக்கும் இயல்புடைய பெரிய தூசிப் படையோடு அந்த யானைகள் முன்னேறித் தாக்கும்.

O' Ruler with majestic chariots! I'm amazed!
Using strong legged elephants adorned with bells.
You destroyed the protective forests of your enemies;
Your massive army overran their waterfronts.

ஜூன் 18
JUNE

த. இராமச்சந்திரன், ஓவியர், தஞ்சாவூர்.

கழனி ஊரன் மகள்

நெறி மருப்பு எருமை நீல இரும்போத்து
வெறிமலர்ப் பொய்கை, ஆம்பல் மயக்கும்
கழனி ஊரன் மகள் இவள்,
பழன வெதிரின் கொடிப் பிணையலளே! (ஐங். 91)

ஓரம்போகியார்

பொருள்:

வளைந்த கொம்புகளையுடைய எருமைக் கடா, மணக்கும் பூக்கள் நிறைந்த பொய்கையில் உள்ள ஆம்பலைச் சிதைக்கும். அப்படிப்பட்ட வளமான வயல்களைக் கொண்ட ஊரனுக்கு மகளான தலைவி, வயல்களில் உள்ள கரும்பின் பூவினால் தொடுக்கப்பட்ட நீண்ட மாலையைச் சூடியுள்ளாள்.

(O' hero,)
This girl, wearing a long garland woven with flowers
From the sugarcanes in the fields
Is the daughter of the chief of the region
Where the bluish black male buffalo of curved horns ruins
The water lily in the lake.

19

ஜூன்

June

நானே வருவேன்

புணர்ந்த காதலியின் புதல்வன் தலையும்
அமர்ந்த உள்ளம் பெரிது ஆகின்றே,
அகன் பெரும் சிறப்பின் தந்தை பெயரன்
முறுவலின் இன் நகை பயிற்றி,
சிறுதேர் உருட்டும் தளர் நடை கண்டே! (ஐங். 403)

பேயனார்

பொருள்:

தலைவியையும் மகனையும் காணும் ஆர்வம் பெரிதாகும். சிறப்பு மிக்க தன் தந்தையின் பெயரைத் தாங்குவதற்காக மகன் பிறந்துள்ளான். அவன் சிரித்தபடி சிறிய தேரை உருட்டிக்கொண்டு தளர் நடைபோடுவதைக் காணும் இன்பம் அதனினும் பெரிது.

His heart swells up with pleasure
As he watches his son,
Borne by his loving wife,
The son named after his esteemed father,
Laugh merrily and push the wooden walker with unsteady steps.

மு. ஆனந்த்
ஆல்ஃபா கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சென்னை.

ஜூன் JUNE 20

மணியோசை கேட்கும்போதெல்லாம் கலங்குவாள்

மண்ணுடைக் கோட்ட அண்ணல் ஏஎறு,
உடன்நிலை வேட்கையின் மடநாகு தழீஇ,
ஊர்வயின் பெயரும் பொழுதில், சேர்பு உடன்,
கன்று பயிர் குரல, மன்று நிறை புகுதரும்!
ஆபூண் தெண்மணி ஐது இயம்பு இன்னிசை
புலம்புகொள் மாலை கேட்டொறும்
கலங்கினள்! (அகம். 64: 11–17)

ஆர்க்காடு கிழார் மகனார் வெள்ளைக் கண்ணத்தனார்

பொருள்:

புற்றின் மேல் பகுதியில் தனது கொம்பினால் குத்திய எருது அந்த மண் கொண்ட கொம்புடன், பசுவைத் தழுவியபடி ஊருக்குள் வரும். அந்த மாலை வேளையில் தொழுவத்தில் நிற்கும் கன்றுகளை நினைத்த அந்தப் பசுக்கள் ஒலி எழுப்பியபடி வரும். அப்பசுக்கள் கன்றுக்குப் பாலூட்டும்போது அவற்றின் கழுத்துமணி எழுப்பும் ஓசையைக் கேட்ட தலைவி, தலைவனை நினைத்து வருந்துவாள்.

Cows move, all the while calling their young.
The bulls with muddy horns return to embrace their mates.
My lady, staying indoors, grieves sorely thinking of him
At the tinkling of the pleasing bells that adorn the cattle.

பி. விஜய் ஆனந்தன்
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சென்னை.

ஜோ. ராபின் இஸ்ரேல்
ஓவியர், தஞ்சாவூர்.

21
ஜூன்
June

பிள்ளைகளைப் பெற்ற செம்மலோர்

இம்மை உலகத்து இசையொடும் விளங்கி,
மறுமை உலகமும் மறுஇன்று எய்துப,
செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச்
சிறுவர்ப் பயந்த செம்மலோர் எனப்
பல்லோர் கூறிய பழமொழி எல்லாம்
வாயே ஆகுதல் வாய்த்தனம் தோழி! (அகம். 66: 1–6)

செல்லூர்க் கோசிகன் கண்ணனார்

பொருள்:

தோழியே, பகைவரும் விரும்பும் குற்றம் இல்லாத அழகையுடைய குழந்தைகளைப் பெற்ற சிறந்தோர், இவ்வுலகத்தில் புகழோடு விளங்கி மறுமை உலகத்திலும் நிறைவான வாழ்வை அடைவர் என்று பலரும் கூறியுள்ளனர். இவையெல்லாம் உண்மை என்பதை நாமே கண்கூடாகப் பார்த்துவிட்டோம்.

O' my friend! There was for me an opportunity
To realize the truth, often cited by the wise, which says:
Fortunate are those who beget sons of flawless wisdom;
These live a life of renown in this birth
And will attain the next world without any blemish.

ஜூன் 22
JUNE

சி. பவித்ரா
ஓவியர், காஞ்சிபுரம்.

நடுகற்கள் நிறைந்த வழி

…அதர்தொறும்
பீலிசூட்டிய பிறங்குநிலை நடுகல்
வேல் ஊன்று பலகை வேற்று முனை கடுக்கும்
மொழிபெயர் தேஎம் தருமார், மன்னர்
கழிப்பிணிக் கறைத்தோல் நிரை கண்டன்ன
உவல்இடு பதுக்கை ஆள் உகு பறந்தலை,
நம் நலம் துறந்து உறைநர் சென்ற ஆறே! (அகம். 67: 9–14, 18)

நோய் பாடியார்

பொருள்:

இறந்து நடுகல்லாகிப் போன வீரர்களுக்கு, மயில்இறகு மாலை அணிவித்து, அவரவர் பயன்படுத்திய வேல்கள் நடப்பட்டு, கேடயங்கள் சார்த்தப்பெற்றிருக்கும். இந்த நடுகற்கள் காலட்படை வீரர்கள் அணிவகுத்து நிற்பதுபோல் தோற்றம் அளிக்கும். வேற்றுமொழி பேசும் நாட்டோரைப் பிடிப்பதற்காகப் பள்ளம் தோண்டி, அதை மூடி வைத்திருப்பர். அங்கே வரும் பகைவர், அந்தப் பள்ளத்தில் விழுந்து மாட்டிக் கொள்வர். அப்படிப்பட்ட குழிகள், கம்பத்தில் காயப்போடப்பட்ட தோலைப் போல் வரிசையாகக் காணப்படும். இப்படிப்பட்ட கொடுமையான வழியில், நம் தலைவர் நம்மைப் பிரிந்து சென்றுள்ளார்.

What am I to do my friend?
It is said that our lover crossed a wilderness
Where lies the gravestones of the dead
And their planted spears, their crests decked, with their shields.

23

ஜூன்

June

தனியனாகச் செல்கிறேன்

தோள்பதன் அமைத்த கருங்கை ஆடவர்
கனைபொறி பிறப்ப நூறி, வினைப்படர்ந்து,
கல்லுறுத்து இயற்றிய வல்உவர்ப் படுவில்,
பார்உடை மருங்கின் ஊறல் மண்டிய
வன்புலம் துமியப் போகி, கொங்கர்
படுமணி ஆயம் நீர்க்கு நிமிர்ந்து செல்லும்
சேதா எடுத்த செந்நிலக் குரூஉத் துகள்
அகல்இரு விசும்பின் ஊன்றித் தோன்றும்! (அகம். 79: 1–8)

குடவாயில் கீரத்தனார்

பொருள்:

தோளில் கட்டுச் சோற்றைத் தொங்கவிட்டிருக்கும் ஆடவர், கிணறு வெட்டும் தொழிலில் புகுந்து மிக்க தீப்பொறி பறக்கப் பாறைகளை வெட்டித் தோண்டுவர். மிக்க உவர்ப்புத் தன்மையுடைய அக்கிணற்றில் ஊறிய நீரைக் குடிப்பதற்காக ஆயரின் பசுக்கள், வலிய நிலங்கள் துகளாகும்படி தலையை உயர்த்திப் போகும். அதனால் எழுப்பப்பெற்ற செம்மண் புழுதியானது, சிவந்த வானத்தைப் போல் தோன்றும். அத்தகைய காட்டின்கண் தனியனாகச் செல்கிறேன்.

O' my heart, you passed through the wilderness
Where the men, digging a well, break rocks causing sparks;
And kine, to drink the water oozing from the well, proceed
Making the fine dusticles of the red soil float
That look like the red–hued crepuscular sky.

ஏ. ஆனந்தராஜு
கவின் கலை ஆசிரியர், புதுச்சேரி.

ஜூன் JUNE 24

யானைக் கன்றைப் பிரிக்கும் வேடர்

கறைஅடி மடப்பிடி கானத்து அலற,
களிற்றுக்கன்று ஒழித்த உவகையர், கலிசிறந்து,
கருங்கால் மராஅத்துக் கொழுங்கொம்பு பிளந்து,
பெரும்பொளி வெண்நார் அழுந்துபடப் பூட்டி,
நெடுங்கொடி நுடங்கும் நியம மூதூர்,
நறவுநொடை நல்இல் புதவுமுதற் பிணிக்கும்! (அகம். 83: 3–8)
கல்லாடனார்

பொருள்:

உரல்போன்ற அடியையுடைய இளம் பெண் யானை காட்டில் அலறுமாறு அதன் ஆண் கன்றைப் பிடித்த வேடர்கள் ஆரவாரம் செய்கின்றனர். வெண்கடம்ப மரத்தின் பெரிய கிளையை இரண்டாகப் பிளந்து அந்தக் கன்றை நிறுத்தி மரப்பட்டையில் உரித்த கயிற்றால் அழுந்தக் கட்டினர். பெரிய கொடிகள் அசையும் கடைத்தெருக்களையுடைய ஊரில் கள் விற்கும் வீட்டின் வாயிலில் அந்தக் கன்றைக் கட்டுகின்றனர்.

The men capture the tender calf of a young she–elephant
And tether its legs with the fibrous cord.
The calf is tied in front of the goodly house in the bazaar of a hoary town
Where banners flutter atop and toddy is bartered.



வி. சாய் சஞ்சய்
கே.ஆர்.எம். பொதுப் பள்ளி, சென்னை.

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை

25
ஜூன்
June

குழந்தையைக் கொஞ்சும் சிறிய தாயர்

நினக்கு யாம் யாரேம் ஆகுதும்? என்று,
வனப்பு உறக் கொள்வன நாடி அணிந்தனள்,
ஆங்கே, அரிமதர் உண்கண் பசப்ப நோய் செய்யும்
பெருமான் பரத்தைமை ஒவ்வாதி! என்றாள்
அவட்கு இனிதாகி விடுத்தனன் போகித்
தலைக்கொண்டு நம்மொடு காயும் மற்று ஈது ஓர்
புலத்தகைப் புத்தேள் இல் புக்கான், அலைக்கு 'ஒரு
கோல் தா!' நினக்கு அவள் யார் ஆகும்? (கலி. 82: 18–25)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

விளையாடச் சென்ற மகனை வழியில், இவன் தந்தையின் முதல் பரத்தை கண்டாள். 'உன்னுடைய முகத்தை நான் முத்தமிடுவதற்குக் காட்டு' என்றாள். அவன் தாங்கும் அளவிற்கு அணிகலன்களை அணிவித்தாள். பின்பு வேறொருத்தி வந்தாள். அவனைத் தழுவி முத்தம் தந்தாள். 'நாங்கள் உனக்குத் தாயாகும் முறைமை' என்று கூறினாள். 'நீ உன் தந்தையைப் போல் இருக்காதே' என்று கூறி விடுத்தாள்! என்று தோழி கூறினாள். அதைக் கேட்ட தலைவி சினந்து, 'இவனை அடிப்பதற்கு ஒரு கொம்பைக் கொண்டு வா' என்று சொல்லியபடி, மகனைப் பார்த்து, 'உனக்கு அவள் யார் என்று தெரியுமா?' என்று கேட்டாள்.

(The confidante says to the heroine)
Your son went to the quarters of the woman,
The one his father fell for, and extended pleasantries!
(The heroine says to her son) She snatches your father like an eagle;
Scars she'd stamp on his chest, with her bracelets and nails;
What's such a one, to you? Let me have a stick to beat you!

ஜூன் JUNE 26

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

மனப் புண்ணில் வேல் எறிந்தவன் உன் தந்தை

எள்ளலான், அம்மென் பணைத்தோள் நுமர் வேய்ந்த கண்ணியோடு
எம் இல் வருதியோ? எல்லா! நீ தன் மெய்க்கண்
அம்தீம் சொல் நல்லார் அணிந்த கலம் காட்டி,
முந்தை இருந்து மகன் செய்த நோய்த்தலை
வெந்த புண் வேல் எறிந்தற்றால், வடுவொடு
தந்தையும் வந்து நிலை! (கலி. 83: 26–31)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

மகனிடம், 'ஏடா! அழகுடைய மெத்தென்ற மூங்கில் போன்ற பிற தாயர் சூட்டிய மாலையுடன் நம் இல்லத்திற்கு நீ வருவாயோ?' என்று தலைவி சொன்னாள். அப்போது அங்கே தலைவன் வந்தான். 'நான் வருந்தும்படி, விருப்பத்திற்கு உரிய மகளிர் அணிந்த மாலை மற்றும் அணிகலன்களின் வடுக்களோடு வந்து, வெந்த புண்ணில் வேல் எறிந்தது போன்று நிற்கும் உன் தந்தையின் செயல் இதைப் போல்தான் உள்ளது' என்றாள்.

Should you come to me with the wreaths
Those mothers with soft bamboo–like shoulders put!
Above this grief there's the father now,
Showing the scars of the bruise on his body
Those honey–tongued women inflicted.

27

ஜூன்

June

தெய்வங்களை வணங்கி ஏறுதழுவும் பொதுவர்

அவ்வழி முழக்கு என, இடி என, முன் சமத்து ஆர்ப்ப
வழக்கு மாறு கொண்டு, வருபு வருபு ஈண்டி
நறையொடு துகள் எழ, நல்லவர் அணி நிற்ப,
துறையும் ஆலமும் தொல்வலி மராஅமும்
முறையுளி பராஅய், பாய்ந்தனர் தொழூஉ! (கலி. 101: 10–14)

சோழன் நல்லுருத்திரனார்

பொருள்:

ஏறு தழுவும் களத்தில் நறுமணப் புகையோடு, காளைகளின் குளம்படி பட்டு எழுந்த புழுதிப் புகையும் சூழ்ந்தன. மழை பெய்யும் ஒலி போலவும் இடி முழக்கம் போலவும் ஏறுகள் ஒவ்வொன்றும் மாறுபட்ட முறையில் நுழைந்தன. அந்தந்தக் காளைகளுக்குரிய பெண்கள் வரிசையாய் நின்றனர். ஏறுதழுவும் பொதுவர்கள் நீர்த்துறையிலும், ஆலமரத்தின் கீழும் மராமரத்தின் கீழும் வீற்றிருக்கும் தெய்வங்களை முறைப்படி வணங்கி, ஏறு தழுவும் தொழுவுக்குள் புகுந்தனர்.

The field roars with sounds like that of rain and thunder.
Fragrances spread and dust rises up with the bulls' ingress.
Lovely damsels assemble in array,
Brave men purposive and tenacious
Offer worship and jump right into the arena.

இளஞ்செழியன்
ஓவியர், மயிலாடுதுறை.

ஜூன் JUNE 28

இளந்திரையன் பெயரைச் சொன்னால் கிடைக்கும் விருந்து

முரவு வாய் குழிசி முரி அடுப்பு ஏற்றி,
வாராது அட்ட வாடு ஊன் புழுக்கல்,
வாடாத் தும்பை வயவர் பெருமகன்,
ஓடாத் தானை ஒண் தொழிற் கழல் கால்,
செவ் வரை நாடன் சென்னியம் எனினே!
தெய்வ மடையின் தேக்கு இலை குவைஇ, நும்
பை தீர் கடும்பொடு பதம் மிக பெறுகுவீர்! (பெரும்பாண். 99–105)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

பாணர்களே! வாடாத தும்பைப் பூவைச் சூடி வெற்றி பெற்றவனான வீரக் கழல் அணிந்த இளந்திரையனைத் தேடி வரும் பாணர்கள் நாங்கள் என்று சொல்லுங்கள். அப்படிச் சொன்னால் எயிற்றியர், கரடு முரடான வாயுடைய பானையில் தண்ணீர் ஊற்றிச் சமைத்த உணவைக் உப்புக் கண்டத்துடன் தெய்வத்திற்குப் படைப்பதுபோல் தேக்கு இலை நிறையும்படியாகத் தருவர். அதனை உங்கள் சுற்றத்துடன் உண்ணும் அளவிற்கு மிகுதியாகப் பெறுவீர்கள்.

The *eyin* women cook the rice grain with the brine.
You and your kin will get this food
With salted meat on teak leaves served,
When you claim to be a subject of the lord of hills,
Who owns a valiant army.



ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

29

ஜூன்

June

சே. ரூபஸ்ரீ
அறிஞர் அண்ணா அ.மே.பள்ளி
கும்பகோணம்.

எயினர் குடியிருப்பில் பெறும் விருந்து

வாழ் முள் வேலி சூழ் மிளை படப்பை,
கொடு நுகம் தழீஇய புதவின், செந்நிலை
நெடு நுதி வய கழு நிரைத்த வாயில்,
கொடு வில் எயினக் குறும்பில் சேப்பின்,
களர் வளர் ஈந்தின் காழ் கண்டு அன்ன,
சுவல் விளை நெல்லின் செவ் அவிழ்ச் சொன்றி,
ஞமலி தந்த மனவுச் சூல் உடும்பின்
வறை கால் யாத்தது, வயின்தொறும் பெறுகுவிர்!

(பெரும்பாண். 126–133)

கடியலூர் உருத்திரங் கண்ணனார்

பொருள்:

வளரும் முள் வேலி அமைக்கப்பட்டது எயினர் வீடுகள். அந்த வீடுகளின் வாயிலில் பாதுகாப்பிற்காக எழுமரம் தாழ்ப்பாள் போல் போடப்பட்டிருக்கும். வலிமையான கழுமரம் போல் கூர்மையான கம்புகள் வரிசையாக நடப்பட்ட அரணையும் கொண்டது அக்குடியிருப்பு. அங்கே நீங்கள் சென்றால் ஈந்தின் பெரிய விதை போன்ற செஞ்சோற்றுடன் வேட்டை நாய் பிடித்துக் கொண்டு வந்த கொழுத்த உடும்பின் கறியை வறுத்து, சோறு மறையும் படியாக வழங்கும் உணவை எல்லா வீடுகளிலும் பெறுவீர்கள்!

There are ramparts thatched with grass;
Hung are quivers full of arrows;
Hounds are chained; the fences live of thorns.
In many homes thither, they'll serve you red rice
And the fried flesh of the iguana too.

ஜூன் JUNE 30

மொ.சு. மோனிஷா
ஸ்ரீ அன்னை காமாட்சி இசை மற்றும்
கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஆயர் ஊர்களில் பெறும் விருந்து

அளை விலை உணவின் கிளை உடன் அருத்தி,
நெய் விலைக் கட்டிப் பசும்பொன் கொள்ளாள்,
எருமை, நல் ஆன், கரு நாகு பெறூஉம்
மடி வாய்க் கோவலர் குடி வயின் சேப்பின்,
இரும் கிளை ஞெண்டின் சிறு பார்ப்பு அன்ன
பசும் தினை மூரல் பாலொடும் பெறுகுவிர்! (பெரும்பாண். 163–168)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

ஆயர் மகள் மோர் முதலானவை விற்று, தான் ஈட்டிய பொருளை உறவினருக்குக் கொடுத்து உண்டு வாழ்கிறாள். அவள் நெய் விற்கும்போது அதற்குப் பதிலாகப் பொன்னைக் கொடுத்தால் அதை வாங்காமல் எருமையையும் பசுவையும் அவற்றின் கன்றுகளோடு பெற்று வருவாள். மடித்த வாயுடைய ஆயர் வாழும் இத்தகைய குடியிருப்பிற்குச் சென்றால், நண்டுக் குஞ்சு போன்ற சிறிய தினையரிசிச் சோற்றில் பால் கலந்து தருவார்கள்.

The *aye* woman sells buttermilk and feeds her kin;
With the ghee that is sold, she buys milk–buffaloes and dark milk–kine.
If you wish to stay at herdsmen's homes,
You will receive good milk and tinai rice
That looks like a brood of crabs.

01

ஜூலை

July

நெஞ்சம் அவரோடு சென்றுவிட்டது

குண கடல் முகந்து, குடக்கு ஏர்பு இருளி,
மண் திணி ஞாலம் விளங்க, கம்மியர்
செம்பு சொரி பானையின் மின்னி, எவ் வாயும்
தன் தொழில் வாய்த்த இன் குரல் எழிலி
தென்புல மருங்கில் சென்று அற்றாங்கு,
நெஞ்சம் அவர்வயின் சென்றென, ஈண்டு ஒழிந்து,
உண்டல் அளித்து என் உடம்பே! (நற். 153: 1–7)

தனிமகனார்

பொருள்:

கிழக்குத் திசையில் கடல் நீரை முகந்த மேகங்கள் மேற்கில் இருண்டு, கொல்லர் பட்டறையில் செம்புப் பானையிலிருந்து பறக்கும் பொறி போல மின்னி, இந்த உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் மழை பெய்கிறது. அதன் பிறகு அது தெற்கு நோக்கி நகர்கிறது. அதைப் போல என் மனம் அவருடன் போய்விட்டது. என் உடல் மட்டும் இங்கே உண்டு, உயிருடன் இருக்கிறது.

Scooping up water from the eastern sea
Dark clouds rise up and travel west
Dazzling like a copper pot cast by a coppersmith;
Those sweet sounding clouds do their job,
And having done so, move to the South and vanish;
Likewise my heart has gone away with him
While my life keeps guard o'er my wasted body.

வெ. கலைவாணி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஜூலை
JULY 02

இந்த ஊர் அலர் பேசி ஒழியட்டும்

புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச் சுவல்
கடுமான் பரிய கதழ் பரிகடைஇ,
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவு அயர்ந்திசினால் யானே!
அலர் சுமந்து ஒழிக, இவ்அழுங்கல் ஊரே! (நற்.149: 6–10)
உலோச்சனார்

பொருள்:

கடற்கரைச் சோலையில் பூத்த புதுமலரைக் குதிரையின் கழுத்து உரசியதால் அதன் சிவந்த கழுத்து மயிரில் மணம் பரவியது. அந்தக் குதிரை பூட்டிய தேரில் தலைவன், நள்ளிரவில் உன்னை உடன் அழைத்துச் செல்வதற்கு வருவான். நீ அவனுடன் சென்ற பிறகு இந்த ஊர் எதை வேண்டுமானாலும் பேசிவிட்டுப் போகட்டும்.

Let this town full of gossip mongers be accursed!
I am resolved to send you with your lover,
Who is the lord of the shores!
He will arrive here in his tall chariot, pulled by horses
With their manes spreading fragrance, owing to their contact
With the freshly blossomed blooms of the seaside groves.



மொ.சு. மோனிஷா
ஸ்ரீ அன்னை காமாட்சி இசை மற்றும்
கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ரா. ஜெயநந்தினி
இந்து மேல்நிலைப் பள்ளி, விருதுநகர்.

03
ஜூலை
July

இள முறுவல் கிடைத்தது

யாரையோ? நின்தொழுதனெம், வினவுதும்;
கண்டோர் தண்டா நலத்தை – தெண் திரைப்
பெருங்கடல் பரப்பின் அமர்ந்து உறை அணங்கோ?
இருங்கழி மருங்கு நிலைபெற்றனையோ?
சொல், இனி மடந்தை! என்றனென், அதன் எதிர்
முள் எயிற்று முறுவல் திறந்தன
பல்இதழ் உண்கணும் பரந்தவால் பனியே! (நற். 155: 5–11)
பராயனார்

பொருள்:

நீ யார்? உன்னைத் தொழுது கேட்கிறேன். பார்ப்போர் பார்வை மாறாத அழகு உடையவளே! நீ தெளிந்த அலைகளையுடைய பெரிய கடற்பரப்பில் வாழும் தெய்வமோ? பெரிய கழியின் பக்கத்தில் நிலைபெற்றிருப்பவளோ? ஏ பெண்ணே! பதில் சொல் என்றேன். அதற்குப் பதிலாக முள் போன்ற பல் தெரியும்படியாகச் சிரித்த அவள் கண்களில் பனிநீரைப் போல் கண்ணீர் அரும்பியது.

He said, "Pray, tell me who you are!
Are you a nymph, abiding in the waters of glittering waves
Or, are you an earthly lass living on the shore of this dusky creek?"
She then gently smiled, her thorny teeth a little exposed,
And her lotus–like eyes became tear–bedewed!

ஜூலை
JULY
04

இரா. சௌம்யா
ஓவியர்/உதவிப் பேராசிரியர், சென்னை.

நெஞ்சே சொல்!

ஈதலும் துய்த்தலும் இல்லோர்க்கு இல் எனச்
செய்வினை கைம்மிக எண்ணுதி! அவ்வினைக்கு
அம்மா அரிவையும் வருமோ?
எம்மை உய்த்தியோ, உரைத்திசின் நெஞ்சே! (குறுந். 63)
உகாய்க்குடி கிழார்

பொருள்:

நெஞ்சே! இரவலர்களுக்குக் கொடுக்கவும், இவ்வுலக இன்பங்களை அடையவும் பொருள் இல்லாதோரால் இயலாது; எனவே பொருள் தேடச் செல் என்கிறாய்! அப்படிப் பொருள் தேடப் போகும்போது என் காதலியும் என்னுடன் வருவாளோ? என்னை இயக்கும் நீ, பதில் சொல்!

You think of going out and making money
As pleasure and charity aren't for those who lack it;
But will that dusky girl too come along with me?
Tell me, my heart!

05

ஜூலை

July

அவர் இன்னும் வரவில்லை!

பல் ஆ நெடு நெறிக்கு அகன்று வந்தென,
புன்தலை மன்றம் நோக்கி, மாலை
மடக் கண் குழவி அலம்வந்து அன்ன,
நோயேம் ஆகுதல் அறிந்தும்,
சேயர் தோழி, சேய் நாட்டோரே! (குறுந். 64)

கருவூர்க் கதப்பிள்ளை

பொருள்:

மேய்ச்சலுக்காகப் பசுக்கள் நெடுந்தொலைவு சென்றுவிட்டன. மாலையில் அவற்றின் வருகைக்காகக் கன்றுகள் பொதுமன்றத்தைப் பார்த்தவாறு கவலையுடன் காத்திருக்கின்றன. அதைப் போல், தலைவர் வருவதற்குக் காலம் கடந்தால் நான் மிகவும் துன்பப்படுவேன் என்று அறிந்தும் மிகவும் தொலைவில் உள்ள நாட்டிற்குச் சென்ற தலைவர் இன்னும் வரவில்லை.

O' friend,
He who went far away still stays far away
Though he knows I yearn for his arrival
Like the distressed calves that await their mothers' return
Which went on long paths.

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

ஜூலை JULY 06

இரவில் வராதே!

கருங்கண் தாக் கலை பெரும் பிறிது உற்றென,
கைம்மை உய்யாக் காமர் மந்தி,
கல்லா வன் பறழ் கிளைமுதல் சேர்த்தி,
ஓங்குவரை அடுக்கத்துப் பாய்ந்து உயிர் செகுக்கும்
சாரல் நாட! நடுநாள்
வாரல், வாழியோ, வருந்துதும் யாமே! (குறுந். 69)

கடுந்தோள் கர வீரனார்

பொருள்:

ஆண் குரங்கு இறந்ததும், சோகம் தாங்காத பெண் குரங்கு தன் குட்டியைச் சொந்தங்களிடம் ஒப்படைத்துவிட்டு, உயர்ந்த மலை மீது ஏறி, தன்னை மாய்த்துக்கொண்டது. இத்தகைய மலைநாட்டைச் சேர்ந்தவனே! ஆபத்தான பாதையில், இரவில் வராதே. உனக்கு ஏதும் நேர்ந்து விட்டால் தலைவியால் தாங்கிக்கொள்ள முடியாது.

Unable to bear the misery of widowhood
After the death of dark eyed prancing male monkey,
It's loving female leaves its infant kid with relatives
And falls to death from the rising cliffs.
Please do not come through this dangerous path at night.
O lord, we will be greatly distressed if you do!



செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

07

ஜூலை

July



ச. ரகு
ஓவியர், கோயம்புத்தூர்.

வேனில் ஆனேறு போல மெலிந்தான்

யாம் தற்படர்ந்தமை அறியான், தானும்
வேனில் ஆனேறு போலச்
சாயினன் என்ப, நம் மாண் நலம் நயந்தே! (குறுந். 74: 3–5)
விட்ட குதிரையார்

பொருள்:

தலைவனை நினைத்து நீ உருகுவது தெரியாமல் அவன், வெயில் காலத்தில் வெப்பம் தாங்காமல் சோர்ந்து போகும் காளையைப் போல, உன் அழகை அனுபவிக்க முடியாமல் மெலிகிறான்.

Unaware that I pine for him
He withers away, longing for my beauty
Like a bull in hot summer.

ஜூலை
JULY
08

க. ஸ்ருதி
எம்.ஓ.பி. வைணவ மகளிர் கல்லூரி, சென்னை.

எப்போதும் தருபவன் பிட்டங் கொற்றன்

இன்று செலினும் தருமே, சிறுவரை
நின்று செலினும் தருமே, பின்னும்
முன்னே தந்தனென் என்னாது, துன்னி
வைகலும் செலினும் பொய்யலன் ஆகி,
யாம்வேண்டியாங்கு எம் வறுங்கலம் நிறைப்போன்,
தான் வேண்டி யாங்குத் தன்இறை உவப்ப
அருந்தொழில் முடியரோ, திருந்துவேல் கொற்றன்!

(புறம். 171: 1–7)
காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்

பொருள்:

இன்று சென்றாலும் தருவான். சிறிது நாள் கழித்துச் சென்றாலும் தருவான். முன்னே தந்தோம் என்று எண்ணாமல் நாள்தோறும் சென்றாலும் தருவான். போகும்போதெல்லாம் இல்லையென்று சொல்லாமல் எம் கலத்தை நிரப்புவான். அந்தப் பிட்டங் கொற்றன் என்னும் குறுநில மன்னன், தான் விரும்பியபடியே தன் அரசன் மகிழும்படியாக, செய்வதற்கரிய போர்ச் செயல்களை வெற்றியுடன் முடிப்பானாக!

If we go today, or later, he will be generous to us;
Nor will he ask "haven't I given you earlier ?" even on our daily visits,
But fill our empty bowls without fail;
May he be victorious in battlefield and satisfy his King.

09
ஜூலை
July

பசிப்பிணி மருத்துவன்
சிறுகுடிக்கிழான் பண்ணன்

முட்டை கொண்டு வன்புலம் சேரும்
சிறுநுண் எறும்பின் சில்லொழுக்கு ஏய்ப்ப,
சோறுடைக் கையர் வீறுவீறு இயங்கும்
இருங்கிளைச் சிறாஅர்க் காண்டும்; கண்டும்
மற்றும் மற்றும் வினவுதும், தெற்றென;
பசிப்பிணி மருத்துவன் இல்லம்
அணித்தோ சேய்த்தோ கூறுமின் எமக்கே! (புறம்: 173: 6–12)

சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன்

பொருள்:

மழைக்காலத்தை முன்பே அறிந்து, தம் முட்டைகளோடு மேட்டு நிலத்தை அடையும் சிறிய எறும்பு வரிசையைப்போலச் சோற்றைக் கலம்நிறைய வாங்கிக்கொண்டு சுற்றத்தாரோடு கூடிச் செல்கின்ற சிறுவர்களைக் காண்கிறோம். பசி வருத்தத்தாலும் வழி நடந்து வந்த களைப்பினாலும் மேலும் மேலும் விருப்பம் கொண்டு கேட்கிறோம். பசிப்பிணியைத் தீர்க்கும் மருத்துவனின் வீடு அருகில் உள்ளதா? தொலைவில் உள்ளதா? எமக்குச் சொல்லுங்கள்.

Like ants that carry their eggs during monsoon
We saw scattered groups of boys carrying rice;
We asked them "Is the house of the physician who cures hunger
Close by or far away? Please tell us"

பி. விஜய் ஆனந்தன்
ஆசான் நினைவு கலை மற்றும் அறிவியல் கல்லூரி
சென்னை.

ஜூலை JULY **10**

அளவில்லாது கொடுப்பான் காரியாதி

பெரும்பெயர் ஆதி, பிணங்கு அரில் குடநாட்டு
எயினர் தந்த எய்ம்மான் எறிதசைப்
பைஞ்ஞிணம் பெருத்த பசுவெள் அமலை,
வருநர்க்கு வரையாது தருவனர் சொரிய,
இரும்பனங் குடையின் மிசையும்
பெரும்புலர் வைகறைச் சீர் சாலாதே! (புறம். 177: 12–17)

ஆவூர் மூலங்கிழார்

பொருள்:

தன்நாட்டுக்கு உட்பட்ட குட நாட்டில் வேடர்கள் வேட்டையாடிக் கொண்டுவந்த பன்றியின் தசையைச் சோற்றோடு சமைத்து, வருபவர்களுக்கு எல்லாம் அளவில்லாமல் கொடுப்பான் காரியாதி. அதனை இரவலர்கள் பனங்குடையில் பெற்று உண்பர். விடியற்காலையில் காணும் அந்தக் கொடைக்காட்சியின் சிறப்பானது வேறு எதற்கும் ஈடாகாது.

Even the exorbitant gifts given away by the mighty kings
Is not equivalent to the sight
Where boars killed by hunters in the dense forest
Are cooked and served with rice in palm fronds
To all those who seek in the realm of Kaariyaadhi.

இரா. பன்னீர் செல்வம்
ஓவியர், சேலம்.

11
ஜூலை
July

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

யானை புகுந்த விளைநிலம்

அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே,
கோடி யாத்து நாடுபெரிது நந்தும்,
மெல்லியன் கிழவன் ஆகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு,
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே! (புறம். 184: 5–11)
பிசிராந்தையார்

பொருள்:

அறிவுடைய மன்னன் ஒருவன் குடிமக்களிடமிருந்து வரி வாங்கும் நெறியை அறிந்து வாங்கினால், அவனது நாட்டில் வாழும் குடிமக்கள், மகிழ்ச்சியுடன் வளமாய் வாழ்வார்கள். மன்னன் நெறிதவறி, தகுதி அறியாதவரோடும், மன்னன் விரும்பியதையே பேசும் ஆரவாரம் உடைய அமைச்சர்களோடும் கூடி, அன்பு கெடும்படி வரி வாங்கினால், யானை புகுந்த விளைநிலம் போல் யாருக்கும் பயனின்றிப் போகும்.

If a judicious ruler collects taxes as per rule,
His country yields a lot and prospers;
But, if a weak ruler hankers after wealth,
Then like an elephant overrun field,
That wealth is wasted by him and his country ruined.

ஜூலை
JULY

12



ச.தா. முகிலோவியா
அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி, கிருஷ்ணகிரி.

மன்னனே உயிர்!

நெல்லும் உயிர்அன்றே, நீரும் உயிர்அன்றே,
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்!
அதனால் யான்உயிர் என்பது அறிகை
வேல்மிகு தானை வேந்தற்குக் கடனே! (புறம். 186)

மோசி கீரனார்

பொருள்:

இவ்வுலகத்தவர்கள் நெல்லாலும் நீராலும் உயிர் வாழ வில்லை. தங்கள் நாட்டை ஆளும் மன்னன் செய்யும் நல்லாட்சியால்தான் உயிர் வாழ்கிறார்கள். எனவே, தன் நாட்டு மக்களுக்கு நான்தான் உயிர் என்று உணர்ந்து ஒரு மன்னன் தன் நாட்டுமக்கள் பாதுகாப்பாக வாழ்வதற்குக் கடமையாற்ற வேண்டும்.

It is the King who is the life of this wide world
And not paddy or water is!
And so it is incumbent upon a king who maintains an army
wielding many spears to know of himself: "I am this world's life!"

13

ஜூலை

July

காளையுடன் இன்று வருவாள்

மள்ளர் அன்ன மரவம் தழீஇ,
மகளிர் அன்ன ஆடுகொடி நுடங்கும்,
அரும்பதங் கொண்ட பெரும் பதவேனில்,
காதல் புணர்ந்தனள் ஆகி ஆய்கழல்
வெஞ்சின விறல்வேல் காளையொடு
இன்று புகுதரும் என வந்தன்று தூதே! (ஐங். 400)

ஓதலாந்தையார்

பொருள்:

ஆணைப் போல் நிமிர்ந்து நிற்கும் மரா மரத்தில் பெண்ணைப் போன்ற கொடிகள் படர்ந்திருக்கும். வேனில் காலத்திலும் காய், கனிகள் கிடைக்கும் வளமிக்க காட்டு வழியில் நம் மகள், காலில் கழலணிந்த, சினத்தைக் கொண்ட, வீரமிக்க வேல் தாங்கிய காளை போன்ற தலைவனுடன் மணம் புரிந்து சென்றாள். அவனுடன் அவள் இன்று வருவாள் என்று தூது வந்துள்ளது.

In the early spring,
When swaying vines embrace *maravam* trees,
Our daughter, united with her lover,
Who wears warrior-anklets and carries a victorious spear,
Will arrive today. The message has come!

கோ. பாலாஜி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஜூலை
JULY 14

செல்வத்துப் பயனே ஈதல்

தெண் கடல் வளாகம் பொதுமை இன்றி,
வெண்குடை நிழற்றிய ஒருமையோர்க்கும்,
நடுநாள் யாமத்தும் பகலும் துஞ்சான்
கடு மாப் பார்க்கும் கல்லா ஒருவற்கும்,
உண்பது நாழி உடுப்பவை இரண்டே,
பிறவும் எல்லாம் ஓரொக்கும்மே,
அதனால் செல்வத்துப் பயனே ஈதல்,
துய்ப்பேம் எனினே, தப்புந பலவே! (புறம். 189)

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

பொருள்:

கடலால் சூழப்பட்ட உலகத்தை ஒரே குடையில் ஆட்சி செய்யும் மன்னனுக்கும் நள்ளிரவிலும் பகலிலும் தூங்காமல் விலங்குகளை வேட்டையாடும் வேட்டுவனுக்கும் உணவாக நாழி அளவு போதும்; உடுப்பதற்கும் இரண்டு ஆடையே போதும்; பிற தேவைகளும் இத்தகையவே. எனவே செல்வத்தைச் சேர்த்ததன் பயன் பிறருக்குக் கொடுத்து உதவுவதே ஆகும். அவ்வாறன்றி, தானே அனுபவிக்க நினைத்தால் துன்பம் ஏற்படும்.

One who rules this world unrivaled under his royal standard,
And the one, who tracks wild game–
For both of them, the quantity of food served is one, clothes are but two;
Everything else is equal too;
The purpose of wealth is to share; if savored alone, much will be lost.



ச. தினேஷ்குமார்
ஓவியர், சென்னை.

ஞா. கமலவேல்
ஓவியர், திருவாரூர்.

15

ஜூலை

July

வெறியாடி முருகனைப் போற்றுதல்

தேம்படு மலர், குழை பூந் துகில், வடிமணி,
ஏந்து இலை சுமந்து, சாந்தம் விரைஇ,
விடை, அரை அசைத்த வேலன் கடிமரம்
பரவினர், உரையொடு பண்ணிய இசையினர்!
 விரிமலர் மதுவின் மரம் நனை குன்றத்து,
கோல்எரி கொளை நறை புகைக்கொடி ஒருங்கு எழ
மாலை மாலை அடி உறை! (பரி. 17: 1–7)

நல்லழிசியார்

பொருள்:

தேன் நிறைந்த மலர்கள், தளிர்கள், பூப்போன்ற ஆடைகள்,உருக்கி வார்க்கப்பட்ட மணி, நீண்ட வேல்,சந்தனம் முதலான படையல் பொருள்களுடன் தீப்பந்தங்களைத் தாங்கியபடி முருகனின் அடியார்கள் நின்றனர். இவற்றின் மணம் நிறைந்த புகையானது அங்கே கட்டப்பட்ட கொடியுடன் இணைந்து பரவியது. வேலன், ஆட்டுக்கடாவை மரத்தில் கட்டியபடி எல்லோருடனும் சேர்ந்து கடம்பமரத்தை வணங்கினான். மலர்கள் நிறைந்த மரங்கள் உள்ள திருப்பரங்குன்றத்து அடிவாரத்தில் ஒவ்வொரு மாலை வேளையிலும் இப்படி முருகனுக்குப் படையலிட்டனர்.

Singing the praise of Murugan's *kadamba* tree
Under which the sacrificial goat is tied,
They bring forth fragrant flowers and various objects of worship
Every evening in a medley of aroma and noise
To Thirupparankundram, where trees are drenched in honey.

ஜூலை
JULY

16

ஆ. ஹரிஹரன்
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

யானை அணிந்த வேங்கை மலர்

மறப்புலிக் குழூஉக் குரல் செத்து, வயக்களிறு
வரைசேர்பு எழுந்த சுடர்வீ வேங்கைப்
பூவுடைப் பெருஞ்சினை வாங்கிப் பிளந்து, தன்
மாயிருஞ் சென்னி அணிபெற மிலைச்சி,
சேஎர் உற்ற செல்படை மறவர்,
தண்டுடை வலத்தர், போர் எதிர்ந்து ஆங்கு
வழை அமல் வியன் காடு சிலம்பப் பிளிறும்! (பதிற்று. 41: 7–13)

பரணர்

பொருள்:

வலிமை மிக்க யானை, மலைப்பக்கத்தில் பூக்கள் நிறைந்த வேங்கை மரத்தைக் கண்டு, அதனைப் புலி எனக் கருதியது. சினத்துடன், அம்மரக்கிளையில் உள்ள மலர்க்கொத்துகளைத் தன் தலையில் படும்படி வளைத்துப் பிளந்தது. எதிரிப் படையினர் முன்பு, தம் கையில் வைத்துள்ள வேலினைக் காட்டி, வீரன் எழுப்பும் ஆரவார ஒலியைப் போல, சுரபுன்னை மரங்கள் வளர்ந்துள்ள காடு முழுவதும் எதிரொலிக்கும்படி அது பிளிறியது.

A strong elephant looks at striped flowers of *vengai* tree
And thinking it is a tiger's fur, breaks it clean
And holds the branch over its head and trumpets loudly
Like a spear wielding warrior roaring at his enemies in battlefield.

17

ஜூலை

July

வீணே கழியும் என் இளமை

கன்றும் உண்ணாது, கலத்தினும் படாது,
நல் ஆன் தீம் பால் நிலத்து உக்காஅங்கு,
எனக்கும் ஆகாது, என்னைக்கும் உதவாது,
பசலை உணீஇயர் வேண்டும்–
திதலை அல்குல் என் மாமைக் கவினே! (குறுந். 27)

வெள்ளி வீதியார்

பொருள்:

பசுவின் பாலானது அதன் கன்றும் உண்ணாமல், பாத்திரத்திலும் கறக்கப்படாமல் தரையில் சிந்தி வீணாவதைப் போல, எனது அழகு, எனக்கும் பயன் இல்லாமல், என் தலைவனுக்கும் கிடைக்காமல் பசலையால் வீணாகிறது.

Like a fine cow's sweet milk being wasted on the ground
Without feeding its calf or being milked into a pail,
My beauty will do me no good. Nor will they benefit my lover.
Since pallor is ruining it.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

ஜூலை JULY 18

எருமைகள் தங்கும் நீர்நிலை

மள்ளர் அன்ன தடங்கோட்டு எருமை,
மகளிர் அன்ன துணையொடு வதியும்,
நிழல் முதிர் இலஞ்சிப் பழனத்ததுவே!
கழனித் தாமரை மலரும்
கவின்பெறு சுடர் நுதல் தந்தை ஊரே! (ஐங். 94)

ஓரம்போகியார்

பொருள்:

அழகிய ஒளிவீசும் நெற்றியுடைய இவள் தந்தையின் ஊரில், வயல்களில் தாமரை மலரும்; வீரனைப் போன்ற பெரிய கொம்பை உடைய எருமை, தன் துணையுடன் பொய்கைக் கரை நிழலில் தங்கும்.

In the habitat of the father of my damsel
With chaming and dazzling forehead,
Lives the battler like buffalo
With big horns along with its belle like mate.
There, the lotus blooms in the field.

எஸ். புனிதா
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

மு. ரெங்கதுரை
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

19
ஜூலை
July

நோய்க்கு மருந்தானவள் அவள்

பழனப் பாகல் முயிறு மூசு குடம்பை,
கழனி எருமை கதிரொடு மயக்கும்,
பூக்கஞல் ஊரன் மகள், இவள்;
நோய்க்கு மருந்து ஆகிய பணைத் தோளோளே! (ஐங். 99)

ஓரம்போகியார்

பொருள்:

வயல்களில் உள்ள பாகல் இலையில் முயிறு என்னும் எறும்புகள் கூடு அமைத்து முட்டையிட்டு வாழும். அக்கூடுகளைச் சேற்று நிலத்தில் மேயும் எருமைகள் நெற்கதிர்களுடன் சேர்த்துச் சிதைக்கும். இப்படிப்பட்ட வளமான ஊரனின் மகளான இவள், நான் பெற்ற காதல் நோய் நீங்குவதற்கு மருந்தான திரண்ட மூங்கில் போன்ற தோள்களை உடையவள் ஆவாள்.

This damsel is the daughter of the lord
Of the habitat with plenty of flowers,
Where the buffalo, wandering in the fields
Ruins the paddy ears and the nest of swarming red ants
On the pakal climber in the field's edge;
She whose shoulders resemble the bamboo
Is the cure for my aliment.

ஜூலை
JULY
20

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

பேர் இல்கிழத்தி ஆகுக!

புதல்வன் பயந்த திதலை அவ்வயிற்று
வால்இழை மகளிர் நால்வர் கூடி,
கற்பினின் வழாஅ, நற்பல உதவிப்
பெற்றோன் பெட்கும் பிணையை ஆக! என
நீரொடு சொரிந்த ஈர்இதழ் அலரி
பல்இருங் கதுப்பின் நெல்லொடு தயங்க! (அகம். 86: 11–16)

நல்லாவூர் கிழார்

பொருள்:

மகனைப் பெற்ற அழகிய வயிற்றையுடைய மகளிர் நால்வர் ஒன்றுகூடி, 'கற்பில் தவறாது, நல்ல பல உதவிகளைச் செய்து, உன்னை மனைவியாகப் பெற்ற உன் கணவனை நீ பெரிதும் விரும்புகின்றவள் ஆவாய்!' என்று வாழ்த்தி, மங்கல நீருடன் நெல்லையும் பூக்களையும் கலந்து மணமக்களின் மீது தூவினர். அப்பூக்களும் நெல்லும் அவளது கரிய கூந்தலில் பொருந்தி விளங்கின.

With the paddy grains and the wet petals of flowers,
The bride was blessed by a quartet of women thus:
'May you lead a life of steadfast chastity!
May you be of manifold help to your husband!
May you be a loving and nurturing partner!'

21
ஜூலை
July

அதிகாலை வேளை

தீம்தயிர் கடைந்த திரள் கால்மத்தம்,
கன்றுவாய் சுவைப்ப, முன்றில் தூங்கும்
படலைப் பந்தர்ப் புல்வேய் குரம்பை,
நல்கூர் சீறூர் எல்லித் தங்கி,
குடுமி நெற்றி நெடுமரச் சேவல்
தலைக்குரல் விடியல்! (அகம். 87: 1–6)

மதுரைப் பேராலவாயார்

பொருள்:

சுற்றிலும் படலையும் பந்தலும் அமைக்கப்பட்ட புல்லால் வேயப்பெற்ற கூரைகளை உடைய சிறிய ஊரில் இரவில் தங்கினோம். அங்கே முற்றத்தில் தொங்கவிடப்பட்ட, தயிரைக் கடைந்த திரட்சியான மத்தினை, கன்றானது தன் வாயால் சுவைக்கும். அவ்வூரில் பெரிய மரத்தில் அடைந்த சேவலானது விடியற்காலையில் எழுந்து முதல் குரல் கொடுக்கும்.

O' my heart, you woke up from sleep
In the early dawn before the first call of the cock
In the village of thatched huts and churning rods
That are left hanging in the foreyards.

ஞா. சினேகா
ஸ்ரீ அன்னை காமாட்சி இசை மற்றும்
கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஜூலை
JULY 22

நரிகளை ஓட்டும் இடையர்

மறித் துரூஉத் தொகுத்த பறிப் புற இடையன்,
தண்கமழ் முல்லை தோன்றியோடு விரைஇ,
வண்டுபடத் தொடுத்த நீர்வார் கண்ணியன்,
ஐதுபடு கொள்ளி அங்கை காய,
குறுநரி உளம்பும் கூர் இருள் நெடுவிளி,
சிறுகண் பன்றிப் பெருநிரை கடிய,
முதைப்புனம் காவலர் நினைத்திருந்து ஊதும்
கருங்கோட்டு ஓசையொடு ஒருங்கு வந்து இசைக்கும்! (அகம். 94: 4–11)

நன்பலூர்ச் சிறுமேதாவியார்

பொருள்:

ஆட்டுக்குட்டிகளை ஒன்றாய் அடைத்த ஓலைக் கூடைக்கு வெளியே காவல் இருக்கும் இடையன், முல்லைப் பூவையும், தோன்றிப் பூவையும் கலந்து தொடுத்த மாலையை அணிந்துள்ளான். அவன், நள்ளிரவில், கொள்ளிக்கட்டையைத் தன் கையில் எடுத்துக்கொண்டு, இருளில் ஆட்டுக்குட்டிகளைக் கவ்வுவதற்கு வரும் குறுநரிகளை ஓட்டுவான். அப்போது, அவன் எழுப்பும் ஒலியானது, சிறிய கண்கொண்ட பன்றிக்கூட்டங்களை ஓட்டுவதற்கு முற்றிய தினைப்புனத்தைக் காப்பவர் ஊதும் பெரிய ஊதுகொம்பின் ஓசையுடன் ஒன்றாகச் சேர்ந்து ஒலிக்கும்.

A shepherd stands guard to the young lambs through the night.
The long whistling he makes in that midnight, to scare away the jackals,
Mingles with the sound of the long horn blown by the foresters
Who guard their millets against the big herds of wild boars.

ரா. அர்ச்னா
மரபுக் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி,
மாமல்லபுரம்.

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

23

ஜூலை

July

கொள்ளையர் நிறைந்த வழி

வாய்ப்பகை கடியும் மண்ணொடு கடுந்திறல்
தீப்படு சிறுகோல் வில்லொடு பற்றி,
நுரைதெரி மத்தம் கொளீஇ, நிரைப் புறத்து
அடிபுதை தொடுதோல் பறைய ஏகி,
கடிபுலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்,
இனம் தலைபெயர்க்கும் நனந்தலைப் பெருங்காடு!

(அகம். 101: 6–11)

மாமூலனார்

பொருள்:

செம்மறியாட்டுக் கிடாயின் கொம்பினைப் போன்ற பிடரியை மறைக்கும் தலைமயிரையும், சிவந்த கண்களையும் உடையவர் மழவர். அவர்கள் இருமல் முதலானவை வராமல் தடுப்பதற்காகப் புற்று மண்ணை வாயில் அடக்கிக்கொள்வர். நெருப்பு உருவாக்கும் அம்பையும் வில்லையும் தயிர் கடையும் மத்தையும் எடுத்துக்கொண்டு, ஆநிரைகள் உள்ள இடங்களுக்கெல்லாம் தம் கால்தடத்தை மறைக்கும் செருப்புகள் அணிந்துசென்று, அவற்றைக் கவர்ந்து செல்லும் அகன்ற இடத்தை உடைய பெருங்காட்டு வழியில் தலைவன் சென்றான்.

The forest is expansive,
Where warriors go to their foemen's lands
With clayey medicament, and churning sticks
And lift away the cows together with their young.
In such paths, the hero has gone.

ஜூலை 24
JULY

த. ராமச்சந்திரன்
ஓவியர், தஞ்சாவூர்.

கொடிச்சி பாடும் குறிஞ்சி

உளைமான் துப்பின், ஓங்கு தினைப்பெரும் புனத்துக்
கழுதில், கானவன் பிழி மகிழ்ந்து வதிந்தென;
உரைத்த சந்தின் ஊரல் இருங்கதுப்பு
ஐதுவரல் அசைவளி ஆற்ற, கைபெயரா
ஒலியல் வார்மயிர் உளரினள், கொடிச்சி
பெருவரை மருங்கில் குறிஞ்சி பாட! (அகம். 102: 1–6)

மதுரை இளம்பாலாசிரியன் சேந்தங்கூத்தன்

பொருள்:

சிங்கம் போன்ற வலிமையுடன், பெரிய தினைப்புனத்தில் ஓங்கிய பரணில், கானவன் கள்ளுண்டு களித்திருந்தான். அப்போது மயிர்ச்சாந்து பூசிய நீண்ட கூந்தலைக் காற்று உலர்த்த, அதனைத் தன் கையால் கோதியபடி அப்பெரிய மலைச்சாரலில் கேட்கும்படி குறிஞ்சிப் பண்ணைக் கொடிச்சி பாடினாள்.

On a loft, a hunter abides after quaffing toddy;
His spouse stokes with her fingers her spread–out tresses;
She allows them to be dried by the gently blowing wind
And sings on the hill the *kurinci pan*.

25

ஜூலை

July

காளையை அணைத்த காளை

எழுந்தது துகள்,
ஏற்றனர் மார்பு,
கவிழ்ந்தன மருப்பு,
கலங்கினர் பலர்,
அவருள் மலர்மலி புகல்எழ, அலர்மலி மணிபுரை நிமிர் தோள் பிணைஇ,
எருத்தோடு இமிலிடைத் தோன்றினன்! தோன்றி,
வருத்தினான் மன்ற அவ்ஏறு!
ஏறு எவ்வம் காணா எழுந்தார் எவன்கொலோ? (கலி. 102: 21–28)

சோழன் நல்லுருத்திரன்

பொருள்:

எங்கும் தூசு எழுந்தது. காளைகளுக்கு வீரர்கள் தம் மார்புகளைக் காட்டி அவற்றைத் தழுவினர். அவற்றின் கொம்புகள் கவிழ்ந்து குத்தின. பலர் களத்தில் வீழ்ந்தனர். அவர்களுள் தலைவி மீது விருப்பம் கொண்ட தலைவன், தம் பெரிய தோள்களால் அந்த வலிமையான ஏற்றைத் தழுவியவாறு திமிலில் பொருந்தித் தோன்றினான். அக்காளை வருந்தியது. அதனைக் கண்ட அக்காளைக்கு உரியோர் சினந்து எழுந்தனர்.

The men advanced offering their chest;
The horns of bulls lowered driving many into despair.
Amongst whom one there was, who held a damsel dear to him,
Put his arms fast around the bull's neck and sat on its hump;
As the bull reeled under affliction,
The goodly men, that own the bulls, stood up with rage.



சு. முரளிதரன்
ஓவிய ஆசிரியர் (ஓய்வு), சேலம்.

ஜூலை JULY 26

ஆயமகள் தோள்கள் எளியவை அல்ல

கொல் ஏற்றுக்கோடு அஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆயமகள்!
அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை,
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய – உயிர் துறந்து–
நைவாரா ஆயமகள் தோள்!
வளியா அறியா உயிர் காவல்கொண்டு,
நளிவாய் மருப்பு அஞ்சும் நெஞ்சினார் தோய்தற்கு,
எளியவோ ஆயமகள் தோள்? (கலி. 103: 63–70)

சோழன் நல்லுருத்திரன்

பொருள்:

கொல்லும் ஏற்றின் கொம்புக்கு அஞ்சும் வீரனை மறு பிறவியிலும் ஆய மகள் தழுவமாட்டாள். அஞ்சாமல், கொல்லும் தொழிலையுடைய ஏற்றைக் கொள்பவரையே ஆய மகளின் தோள்கள் சாரும். உயிரை ஒரு காற்றாக எண்ணாமல் அதனைப் பெரிதாகக் கருதி, கொடும் ஏற்றின் கொம்புக்கு அஞ்சுபவர்கள், தழுவுவதற்கு எளிமையானவை அல்ல ஆயமகளிரின் தோள்கள்.

The shoulders of the herdsmen lass
Would embrace the one that takes on the deathly bull;
Hard of access they would remain to one
Who holds one's life dear
And stays off the venture perilous.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

இரா. செளம்யா
ஓவியர் / உதவிப் பேராசிரியர், சென்னை.

27

ஜூலை

July

சீறும் காளையின் அழகைப் பார்!

பால்நிற வெள்ளை எருத்தத்துப் பாய்ந்தானை,
நோனாது குத்தும் இளங்காரித் தோற்றம் காண்!
இரிபு எழுபு அதிர்பு அதிர்பு இகந்து உடன்பலர் நீங்க,
வரி பரிபு இறுபு இறுபு குடர் சோரக் குத்தி தன்
கோடு அழியக் கொண்டானை ஆட்டித் திரிபு உழக்கும்
வாடா வெகுளி எழில் ஏறு கண்டை இஃது ஒன்று!
வெருவரு தூமம் எடுப்ப வெகுண்டு
திரிதரும் கொல்களிறு போன்ம்! (கலி. 104: 35–36, 39–44)

சோழன் நல்லுருத்திரன்

பொருள்:

பாலின் நிறமுடைய காளையின் கழுத்தில் ஒருவன் பாய்ந்தான். அதனைப் பொறுக்காத வேறு ஒரு காரிக் காளை, அவன் மேல் பாய்ந்து அவனைக் குத்தியதைப் பார்! பலரும் எழுந்து, அதிர்ந்து அவ்விடத்தை விட்டு நீங்கிச் செல்லும்படியாக வேறொரு காளை, தன் கொம்பைப் பிடித்தவனை விடாமல் விலா எலும்புகள் ஒடியவும், குடல் சரியவும் குத்தி அவனை அங்கும் இங்கும் ஆட்டி அலைக்கழித்தது. அதன் பிறகும் கோபம் குறையாமல் சீறும் இந்தக் காளையைப் பார்! அக்காளையை விரட்டுவதற்காகத் தூபப் புகையைப் புகைக்க, அது இன்னும் சினம் கொண்டு கொல்லும் யானை போலத் திரிந்தது.

A youth leaps over the milk–white bull's neck;
A young dark bull that bears not the youth's act,
Goes about goring him, leaving many a youth shivering.
Look at the bull breaking the bones and drawing out the bowels
Like a killer elephant that runs around infuriated
As it inhales the medicinal smoke!

ஜூலை 28
JULY

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்

சேர்ந்திருப்பதே இன்பம்

இதுவே, மடந்தை நாம் மேவிய பொழுதே!
உதுவே, மடந்தை நாம் உள்ளிய புறவே!
இனிதுடன் கழிக்கின், இளமை
இனிதால் அம்ம, இனிஅவர்ப் புணர்வே! (ஐங். 415)

பேயனார்

பொருள்:

தலைவியே! இது தான் நாம் இணைந்த கார் காலம். தொலைவில் தெரிகிறதே, அதுதான் நாம் சந்தித்த காட்டுப் பகுதி. கருத்து ஒத்த நாம் இருவரும் சேர்ந்து மகிழ்ந்திருந்தால் இந்தக் கார்காலம் இனிதாகும்.

Oh young woman, this is the time that I yearned for;
That forest is what I thought about.
Youth will be sweet when lovers unite.

29
ஜூலை
July

முள்ளிப்பூ மாலை கட்டும் சிறுமியர்

முகை சூழ் தகட்ட பிறழ் வாய் முள்ளிக்
கொடும் கால் மா மலர் கொய்துகொண்டு, அவண
பஞ்சாய்க் கோரை பல்லின் சவட்டி,
புணர் நார்ப் பெய்த புனைவின் கண்ணி
ஈர் உடை இரும் தலை ஆரச் சூடி,
பொன் காண் கட்டளை கடுப்ப, கண்பின்
புன் காய்ச் சுண்ணம் புடைத்த மார்பின்,
இரும்பு வடித்து அன்ன மடியா மென் தோல்! (பெரும்பாண். 215–222)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

உழவரின் அழகிய பிள்ளைகள், முள்பொருந்திய அரும்புகளுடைய முள்ளியின் கரிய மலரைப் பறிப்பர். அவர்கள் கோரைப் புல்லைப் பறித்து, அதைத் தங்கள் பல்லினால் நாராகக் கிழிப்பர். அந்த நாரினால் முள்ளிப் பூவைத் தொடுத்து, தங்கள் தலை நிறையச் சூடிக்கொள்வர். கண்பு என்னும் சம்பங்கோரையின் காயில் உள்ள சுண்ணத்தைத் தம் மார்பின் தகரத்தைப் போன்ற மெல்லிய தோலில், பொன் உரை கல்லில் பொன் துகள் இருப்பதைப் போல் பூசிக் கொள்வர்.

The ploughmen's pleasing pretty children
Wear upon their chests a fine paste made of *kanpu* seeds.
They, then, with the blooms of the budded *mulli* plant
Make fine garlands and deck their nitty heads.

க. சிவசாமி
ஓவியர், புதுக்கோட்டை.

ஜூலை

JULY 30

தாயர் விரைந்து வருவர்

சிறுதாம்பு தொடுத்த பசலைக் கன்றின்,
உறுதுயர் அலமரல் நோக்கி, ஆய்மகள்
நடுங்கு சுவல் அசைத்த கையள்! 'கைய
கொடுங் கோல் கோவலர் பின்நின்று உய்த்தர,
இன்னே வருகுவர் தாயர்' என்போள்,
நன்னர் நன்மொழி கேட்டனம்! (முல்லை. 12–17)

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார்
மகனார் நப்பூதனார்

பொருள்:

சிறு கயிற்றால் கட்டப்பெற்ற இளங்கன்று, பசியால் அடைந்த துயரத்தால், தாய்ப்பசுவின் வரவை ஏங்கியபடி பார்க்கும். அப்போது ஆய மகள் ஒருத்தி, தனது கைகளைக் கட்டியபடி, 'கோலைக் கையில் தாங்கிய கோவலர் பின்னே நின்று செலுத்த, உன்னுடைய தாய்ப்பசு விரைந்து வரும்' என்று கன்றிடம் சொல்லிய நல்ல மொழியை நாங்கள் கேட்டோம்.

The cowherdess with her shivering hands
That clasped her shoulders,
Told a tethered calf distressed
Its dam would soon return
By the staves of cowherds urged.

சி. தெய்வேந்திரன்
ஓவியர், மதுரை.

ப. சிவசுதன்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை.

31
ஜூலை
July

பாசறையில் மன்னன்

ஒரு கை பள்ளி ஒற்றி, ஒரு கை
முடியொடு கடகம் சேர்த்தி, நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படை கொள் நோன் விரல்,
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி,
அரசு இருந்து பனிக்கும் முரசு முழங்கு பாசறை!

(முல்லை. 75–79)

காவிரிப்பூம்பட்டினத்துப் பொன்வணிகனார்
மகனார் நப்பூதனார்

பொருள்:

தன் ஒரு கையைப் படுக்கைமீது வைத்து, மற்றொரு கையால் தலையைத் தாங்கியவனாய், போரின் நிலை குறித்து நினைத்து இரவைப் போக்கினான் மன்னன். மறுநாள் நடைபெற்ற போரில் பகைவரைக் குறித்துக் காட்டி, படை நடத்திச் சென்று வெற்றி பெற்ற பின், அவன் பாசறையில் முரசு முழங்கும்படி மாலை அணிந்து வீற்றிருந்தான்.

The chieftain does not sleep,
So keen is he to join the next day's fray.
Plunged in thoughts of war, he then to battle goes.
With a mighty sword, he kills his foes,
And lasting glory gains.
Now in his room, the chieftain rests.

ஆகஸ்ட் AUGUST 01

க. கணேசன்
ஓவியர், திண்டுக்கல்.

அவள் கண்களைக் காண்பதற்கு முன்புவரை

நயனும் நண்பும் நாணு நன்கு உடைமையும்
பயனும் பண்பும் பாடு அறிந்து ஒழுகலும்
நும்மினும் அறிகுவென் மன்னே!
...இவள்
அரிமதர் மழைக்கண் காணா ஊங்கே! (நற். 160: 1–3, 10, 11)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

பாங்கனே! குளிர்ந்த கண்களையுடைய தலைவியைக் காண்பதற்கு முன்பு வரை, அறத்துடன் பழகும் முறையும் நட்பும் நாணமும் பயன் தரும் வகையில் செயல்படுவதும் நற்பண்பும் பிறர் தன்மை அறிந்து ஒழுகும் பண்பாடும் உன்னைப் போலவே என்னிடமும் இருந்தன.

O my friend! There was a time,
When I excelled you in equity, friendliness,
Modesty, usefulness, cultured mien and amicability.
But it was prior to meeting this girl of tranquil eyes!

02

ஆகஸ்ட்

August

மழை வேண்டி, குறவர் எடுக்கும் வழிபாடு

அமர்க்கண் ஆமான் அருநிறம் முள்காது
பணைத்த பகழிப் போக்கு நினைந்து, கானவன்,
'அணங்கொடு நின்றது மலை வான் கொள்க' என,
கடவுள் ஓங்குவரை பேண்மார், வேட்டு எழுந்து,
கிளையொடு மகிழும் குன்ற நாடன்! (நற். 165: 1–5)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

பெரிய கண்ணை உடைய காட்டுப்பசுவின் நெஞ்சில் குறிவைத்து, கானவன் ஓர் அம்பினை எய்தான். அந்த அம்பு குறி தவறியது. குறி தவறியதால், இந்த மலையில் ஒரு தெய்வம் இருக்கிறது என்று எண்ணினான். அந்தத் தெய்வத்திடம் மழை வேண்டிப் பூசை செய்வோம் என்று கருதி, தன் உறவினர்கள் எல்லோரையும் அழைத்துக் கொண்டு வந்து படையல் போட்டு மகிழும் மலை நாட்டுத் தலைவன்.

As his dart misses its target, a wild cow,
A hunter ascibes it to the fury of a powerful hill deity.
To allay her, he prays with his kin,
For the rain clouds to settle on the hill.

சு. தேவா
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஆகஸ்ட்
AUGUST
03

குறவர் உண்ணும் தேன்

சுரும்பு உண விரிந்த கருங்கால் வேங்கைப்
பெருஞ்சினைத் தொடுத்த கொழுங்கண் இறாஅல்,
புள்ளுற்றுக் கசிந்த தீம் தேன் கல்அளைக்
குறக் குறுமாக்கள் உண்ட மிச்சிலைப்
புன்தலை மந்தி வன்பறழ் நக்கும்! (நற். 168: 1–5)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:
கரிய அடிப்பாகத்தையுடைய வேங்கை மரப் பூக்களில் உள்ள தேனை வண்டுகள் உண்ணும். அந்த மரக் கிளையில் தொங்கிய தேன்கூட்டிலிருந்து வடிந்த தேன், பாறை இடுக்கில் தேங்கியது. குறவர் குடிச் சிறுவர்கள் அந்தத் தேனை உண்டனர். எஞ்சிய தேனை, சிறிய தலையை உடைய குரங்குக் குட்டிகள் நக்கும்

Venkai trees are loaded with honey–laden flowers;
When buzzed by swarms of bees
The dripping honey fills the pits on the rock below,
The mountain dwellers relish it;
The leftover honey is enjoyed by the infants of the downy–headed monkeys.



ஜே. ரெக்ஸ்லின் ஷோபனா
ஓவியர், திருவண்ணாமலை.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

04
ஆகஸ்ட்
August

உண்மையைச் சொல்

நீ கண்டனையோ? கண்டார்க் கேட்டனையோ
ஒன்று தெளிய நசையினம் மொழிமோ! (குறுந். 75: 1–2)
படுமரத்து மோசி கீரனார்

பொருள்:

பாணனே! தலைவன் வருவதை நீ கண்டாயா? அல்லது வருவதைக் கண்ட பிறர் கூறியதைக் கேட்டாயா? தலைவனின் வருகை குறித்த உண்மை நிலையை அறிந்துகொள்ள விரும்புகிறேன். சொல்வாயாக!

(The Heroine enquires with the bard about the Hero's return)
Did you see for yourself? Or heard from those who saw?
I'd like to know for sure; please tell me!

ஆகஸ்ட் AUGUST 05

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

கொல்லிப்பாவை போன்றவள்

கருங்கண் தெய்வம் குடவரை எழுதிய
நல்இயல் பாவை அன்ன இம்
மெல்இயல் குறுமகள் பாடினள் குறினே! (குறுந். 89: 4–6)
பரணர்

பொருள்:

அச்சம் தரும் கொல்லி மலையின் மேற்குப் பக்கத்தில், பெரிய கண்களையுடைய கொல்லிப் பாவையின் ஓவியம் தீட்டப்பெற்றுள்ளது. அந்தக் கொல்லிப் பாவையைப் போல் அழகான மென்மைத் தன்மை கொண்ட தலைவி, பாடிக் கொண்டே உரலில் இடிக்கிறாள்.

This pleasant young girl resembles
The painting of beautiful dark eyed goddess
Drawn on west side of *kolli* hills.

06
ஆகஸ்ட்
August

அவர் செல்லமாட்டார், அழாதே!

வினையே ஆடவர்க்கு உயிரே, வாள்நுதல்
மனை உறை மகளிர்க்கு ஆடவர் உயிர் என
நமக்கு உரைத்தோரும் தாமே,
அழாஅல் தோழி! அழுங்குவர் செலவே! (குறுந். 135)

பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள்:

ஆண்களுக்குத் தொழில் செய்து பொருள் ஈட்டுவது உயிராகும். அழகான நெற்றியுடைய, இல்வாழ்க்கையில் ஈடுபட்ட பெண்களுக்கு அவர்தம் ஆடவர்களே உயிராவர் என்று நமக்கு எடுத்துக் கூறியவர் தலைவர். அப்படிப்பட்டவர் உன்னை விட்டுப் பிரிந்து போக மாட்டார். அழாதே!

It was he who told us "Work is the life of men;
But men are life of bright faced homebound women"
So don't cry my friend! He will not leave.

கா. தனாஸ் தீபக் ராஜன்
ஓவியர், சேலம்.

ஆகஸ்ட் AUGUST 07

முழவும் யாழும்

அரு விலை நறும் பூத் தூஉய், தெருவில்
முதுவாய்க் கோடியர் முழவொடு புணர்ந்த
திரி புரி நரம்பின் தீந்தொடை ஓர்க்கும்! (பட்டினப். 252–254)
கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:
விழாக் காலங்களில், அரிய மதிப்புடைய மணக்கும் பூக்களைத் தெருவில் தூவுவர். கூத்தர்கள், பெரிய வாய்ப்பகுதியைக் கொண்ட முழவினையும் நன்கு முறுக்கேறிய நரம்புகளைக் கொண்ட இனிய இசையை வழங்கும் யாழினையும் இசைப்பர்.

In the grand festivals celebrated
On the streets strewn with expensive fragrant flowers,
Artists with ancient wisdom danced and sang
With sweet sounds of drums
And *yaal* with tightly twisted strings.

த. சதீஸ்வேலன்
ஓவியர், சென்னை.

08
ஆகஸ்ட்
August



ய.ச.ஓவியா
ஸ்ரீ பாரதி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
குன்னத்தூர்.

பண்பில்லாதவன் படைத்த உலகம்

படைத்தோன் மன்ற, அப்பண்பிலாளன்!
இன்னாது அம்ம, இவ்வுலகம்!
இனிய காண்க, இதன் இயல்பு உணர்ந்தோரே! (புறம். 194:5–7)

பக்குடுக்கை நன்கணியார்

பொருள்:

படைப்புத்தொழிலைச் செய்பவன் பண்பில்லாதவன். இந்த உலகத்து இயற்கை என்பது கொடியது. வாழும் முறை அறிந்தோர், துன்பத்திலும் இன்பம் காணுமாறு வாழ்க்கையை அமைத்துக் கொள்வர்.

He created this world with inequality, the unjust one!
This world is full of pain;
Those who realize its nature,
Do good deeds.

ஆகஸ்ட்
AUGUST
09

பா. சிவாணி
லலித் கலாக்ஷேத்ரா, கோயம்புத்தூர்.

எத்திசைச் செலினும்

அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென,
வறுந்தலை உலகமும் அன்றே! அதனால்
காவினெம் கலனே, சுருக்கினெம் கலப்பை,
மரம்கொல் தச்சன் கைவல் சிறாஅர்
மழுவுடைக் காட்டகத்து அற்றே,
எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே! (புறம். 206: 8 –13)

ஔவையார்

பொருள்:

இவ்வுலகம் அறிவும் புகழும் உடையவர்கள் இல்லாமல் வெறுமை ஆகிவிடவில்லை. ஆதலால், நான் எனது காவுதடியை எடுத்து அதில், இசைக் கருவிகள் இருக்கும் பையைக் கட்டிவிட்டேன். கோடரியுடன் தச்சரின் சிறுவர்கள் காட்டுக்குள் சென்றால் அவர்களுக்குத் தேவையான மரங்கள் கிடைக்கும். அதைப் போல் என்னைப் போன்றோர், எத்திசைக்குச் சென்றாலும் அங்கு எனக்குச் சோறு கிடைக்கும் (பரிசில் கிடைக்கும்).

This world hasn't run out of famed wise people!
So I gather my musical things and leave this place;
Forests will always provide for skilled carpenters;
Whichever direction I go, there will be those who value me.

10
ஆகஸ்ட்
August

வேறிடம் செல்கிறேன் இளவெளிமானே!

பெரிதே உலகம், பேணுநர் பலரே!
மீளி முன்பின் ஆளிபோல,
உள்ளம் உள்அவிந்து அடங்காது, வெள்ளென
நோவாதோன் வயின் திரங்கி
வாயா வன்கனிக்கு உலமருவோரே! (புறம். 207: 7–11)

பெருஞ்சித்திரனார்

பொருள்:
திறமையுடைய புலவருக்கு உலகம் பெரியது. அப்புலவரை விரும்புவோரும் உலகத்தில் பலர். எனவே வலிமையுடைய யாளி அடங்கி இருப்பதைப் போல் நானும் இருக்கமாட்டேன். பொழுது விடிந்த பின்னும் பரிசில் பெறலாம் என்று ஒடுங்கி இருப்போரைப் போல், பழுக்காத கனிக்காகக் காத்திருப்பவன் நான் இல்லை!

Wide is this world, many are the benefactors;
So is there anyone who will wait for unripe fruits
Given away callously, making alms–seekers fume
Like an enraged mythical beast?



எம். கோகுல் கிருஷ்ணன்
ஓவியர், கோயம்புத்தூர்.

ஆகஸ்ட்
AUGUST

11

அறிந்து கொடு அதியமானே!



யாங்கு அறிந்தனனோ, தாங்கு அருங் காவலன்?
காணாது ஈத்த இப்பொருட்கு யான் ஓர்
வாணிகப் பரிசிலன் அல்லேன்! பேணி,
தினைஅனைத்து ஆயினும், இனிதுஅவர்
துணைஅளவு அறிந்து, நல்கினர் விடினே! (புறம். 208: 5–9)
பெருஞ்சித்திரனார்

பொருள்:

பகைவரால் தடுப்பதற்கரிய மன்னன், என்னைப் பற்றி என்ன கருதினான்! என்னைப் பார்க்காமலேயே தந்த இப்பொருளைப் பெற்றுச் செல்ல, நான் ஒன்றும் வருவாயைப் பெரிதாக எண்ணும் பரிசிலன் அல்லன். பரிசிலரை நேரில் சந்தித்து, விருப்பத்துடன் கொடுத்தால் தினையளவு சிறிய பொருளாயினும் அது சிறந்த பரிசில் ஆகும்.

I am not just an alms seeker to take theses gifts
The mighty ruler gave even without seeing me;
Of much more value is even a small gift
Given appreciating the wisdom of the seeker.

ம.அ. நிர்மல் குமார்
ஓவியர், வேலூர்.

12
ஆகஸ்ட்
August

கோப்பெருஞ்சோழனின் நட்பு

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

தென்னம் பொருப்பன் நன்னாட்டு உள்ளும்
பிசிரோன் என்ப, என் உயிர் ஓம்புநனே!
செல்வக் காலை நிற்பினும்
அல்லல் காலை நில்லலன் மன்னே! (புறம். 215: 6–9)

கோப்பெருஞ்சோழன்

பொருள்:

தென்பொதிகை மலையையுடைய பாண்டிய நாட்டில், தொலைவாக உள்ள பிசிர் என்னும் ஊரில் என் உயிரைக் காக்கும் நண்பன் உள்ளான். செல்வம் மிகுந்திருக்கும் காலத்தில் என்னிடம் அவன் வராமல் இருந்தாலும், நான் துன்பம் அடையும் இக்காலத்தில் வராமல் இருக்கமாட்டான்.

In the blessed southern Pandya kingdom
Is Pisirandhayar, a friend and keeper of my life;
Though he wasn't with me when I was prosperous,
He will be there for me when I'm suffering.

ஆகஸ்ட் AUGUST 13



பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

முகம் காணா நட்பு

'வருவன்' என்ற கோனது பெருமையும்,
அது பழுது இன்றி வந்தவன் அறிவும்,
வியத்தொறும் வியத்தொறும் வியப்பு இறந்தன்றே!
அதனால் தன்கோல் இயங்காத் தேயத்து உறையும்
சான்றோன் நெஞ்சுறப் பெற்ற தொன்று இசை
அன்னோனை இழந்த இவ்வுலகம்
என் ஆவதுகொல், அளியது தானே! (புறம். 217: 7–13)

பொத்தியார்

பொருள்:

இவன் வருவான் என்று கோப்பெருஞ்சோழன் துணிந்து சொல்லிய பெருமையையும், அவன் சொல்லிய சொல் பிழைபடாது வந்த பிசிராந்தையாரின் அறிவையும் எண்ணிப் பார்க்கும்போது வியப்புக்கு மேல் வியப்பாக இருக்கிறது. தன் செங்கோலாட்சி நடக்காத நாட்டில் வாழும் சான்றோனின் நெஞ்சத்து அன்பைப் பெற்ற கோப்பெருஞ்சோழனை இழந்த இந்த நாடு இனி என்ன ஆகுமோ? இது இரங்கத்தக்கது!

The greatness of the King who made his faraway friend
Visit him in times of his distress,
And the wisdom of the friend who came are remarkable;
Pitiable is this world that has lost a king
Who inspired wise men even in countries he didn't rule.

14
ஆகஸ்ட்
August

கூற்றுவனை வையலாம் வாருங்கள்!

...அத்தக் கோனை
நினையாக் கூற்றம் இன்னுயிர் உய்த்தன்று!
பைதல் ஒக்கல் தழீஇ அதனை,
வைகம் வம்மோ வாய்மொழிப் புலவீர்!
நனந்தலை உலகம் அரந்தை தூங்க,
கெடுவில் நல்லிசை சூடி
நடுகல் ஆயினன், புரவலன் எனவே! (புறம். 221: 7–13)

பொத்தியார்

பொருள்:

சிறந்த தன்மைகளைக் கொண்டவன் என்று எண்ணிப் பார்க்காமல், கூற்றமானது கோப்பெருஞ்சோழனது உயிரைக் கொண்டுசென்றது. மெய்ம்மையுடைய புலவர்களே! கேடு இல்லாத நல்ல புகழ் மாலையைச் சூடி நம்மைக் காப்பவன், இந்த உலகத்தில் உள்ளோர் வருந்தும்படியாக நடுகல் ஆயினான் என்று சொல்லி, நமது உறவினரை அழைத்துக் கொண்டு போய், அந்தக் கூற்றுவனை வையலாம் வாருங்கள்!

Thoughtless of his deeds, *kootruvan* seized the life of our virtuous king;
Let us berate *kootruvan,* O poets of honest words,
For causing this wide world to suffer
And making the famed man who sheltered us
To become a memorial stone!

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

ஆகஸ்ட் AUGUST 15

மயிலா? நானா?

ஒள் ஒளி மணிப்பொறி ஆல் மஞ்ஞை நோக்கித் தன்
உள்ளத்து நினைப்பானைக் கண்டனள், திரு நுதலும்!
உள்ளியது உணர்ந்தேன், அஃது உரை! இனி, நீ எம்மை
எள்ளுதல் மறைத்தல் ஓம்பு! என்பாளைப் பெயர்த்து, அவன்
காதலாய்! நின் இயல், களவு எண்ணிக் களி மகிழ்
பேதுற்ற இதனைக் கண்டு, யான் நோக்க, நீ எம்மை
ஏதிலா நோக்குதி, என்று ஆங்கு உணர்ப்பித்தல்
ஆய் தேரான் குன்ற இயல்பு! (பரி. 18: 7–14)

குன்றம் பூதனார்

பொருள்:

மணி நிறப் புள்ளிகளைக் கொண்ட மயில் ஆடுவதைப் பார்த்த கானவனிடம், 'இம்மயில் என்னைவிட அழகில் சிறந்தது என்று நினைத்து நீ என்னை மனத்துள் இகழ்கிறாய். அதை மறைக்கப் பார்க்கிறாய்!' என்று கூறி ஊடல் கொண்டாள் கொடிச்சி. அதற்கு அக்கானவன், 'இம்மயிலைக் கண்ட நான், அது உன்னுடைய அழகைக் களவாடிவிட்டது என எண்ணி நின்றேன். நீ அதை அறியாமல் உன்னை இகழ்ந்ததாக எண்ணுகிறாய்' என்று சொல்லி அவளுடைய ஊடலைத் தீர்க்க முயன்றான். இத்தகைய காட்சிகளையுடையது அழகிய தேரை உடைய பாண்டிய மன்னனின் திருப்பரங்குன்றம்.

For being lost in the thoughts of a gleaming peacock that he beheld,
The man attempted to console his beloved,
Who mistook his musings for complaints of her shallow beauty.
Such is the nature of the mountain, belonging to the Pandiyan king.



ஜெ. தினகரன்
அரசு கவின் கலைக் கல்லூரி
சென்னை.

16

ஆகஸ்ட்

August

கற்களால் உயர்ந்த இமயமலை

அமைவரல் அருவி இமயம் வில் பொறித்து,
இமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்
தன்கோல் நிறீஇத் தகைசால் சிறப்பொடு!
(பதிற்று. இரண்டாம் பத்தின் பதிகம் 4–6)
குமட்டூர்க் கண்ணனார்

பொருள்:

அருவி பாயும் இமயச்சாரலில் வில் சின்னத்தைப் பொறித்து, கடலால் சூழப்பட்ட நிலப்பகுதியைத் தமிழகம் என நிறுவி, சிறப்புடன் ஆட்சி செய்த இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்.

He carved his insignia – a bow symbol
On the Himalayas with perennial waterfalls,
And ruled splendidly with a just scepter,
The entire *Tamilakam* surrounded by loud oceans as its fences.
(Imayavaramban Neduncheralaathan)

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

ஆகஸ்ட்
AUGUST 17

மு. ரெங்கதுரை
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

பழையனை வெற்றிகொண்ட செங்குட்டுவன்

படுபிணம் பிறங்க, பாழ்பல செய்து,
படுகண் முரசு நடுவண் சிலைப்ப,
வளன் அற நிகழ்ந்து வாழுநர் பலர்பட,
கருஞ்சினை விறல்வேம்பு அறுத்த
பெருஞ்சினக் குட்டுவன்! (பதிற்று. 49: 13–17)

பரணர்

பொருள்:

இறந்துவிழும் பிணங்கள் எங்கும் குவிந்தன. எல்லாவற்றையும் பாழ் செய்து ஒலிக்கும் போர் முரசு ஒலித்தது. அப்பழையனின் செல்வம் முழுவதும் கெட, அங்கு வாழ்வதற்குரியோர் இல்லாமல் போகும்படி, பெரும்போர் புரிந்த செங்குட்டுவன், அவனது வலிமையான காவல் மரமான வேம்பினை வெட்டி வீழ்த்தினான்.

The furious King *Kuttuvan*
Destroyed his foes and proclaimed victory,
Sounding his war drum in battlefield piled up with dead bodies,
Killing young warriors and cutting down the royal neem tree.

18
ஆகஸ்ட்
August

அவளை நன்கு அறிவோம்

கண்டிகும் அல்லமோ கொண்க! நின் கேளே,
வண்டல் பாவை வௌவலின்
நுண்பொடி அளை இக்கடல் தூர்ப்போளே! (ஐங். 124)

அம்மூவனார்

பொருள்:

தலைவனே! கடலின் அலை வந்து, தான் செய்த வண்டல் மண் பாவையை இழுத்துச் சென்றதால், கோபத்துடன் நுண்ணிய மணலை அள்ளி, அதனைக் கடலில் வீசித் தூர்க்கத் துணிந்தவள் தலைவி. அப்படிப்பட்ட உனது அன்பிற்கு உரியவளை நாங்கள் நன்றாக அறிவோம்.

O Chief, have we not seen your love–mate
Who scooped the fine dust, at the sea
Which stole her sand–toy away.

ச. சாந்தி
ஓவியர், சென்னை.

ஆகஸ்ட்

AUGUST

19

நான் துன்பமின்றி இருப்பது எப்படி?

எக்கர் ஞாழல் செருந்தியொடு கமழத்
துவலைத் தண் துளி வீசிப்
பயலை செய்தன பனிபடு துறையே! (ஐங். 141)

அம்மூவனார்

பொருள்:

தோழியே! நீரினால் அடித்துவரப்பட்ட மணல் பரந்த நிலத்தில் ஞாழலின் மலர், செருந்திப் பூவுடன் மணம் கமழ்கிறது. நீர்த்துறையில் மழையானது, குளிர்ந்த துளிகளைப் பசலை கொண்ட என்மேல் வீசிக் கொடுமை செய்தது. (கார் காலம் வந்த பிறகும் தலைவன் வராததால் தலைவியின் மேனியில் பசலை படர்ந்தது.)

(Dear friend) The blooms of *gnaalal* and *cerunti* on the dune,
Which emit fragrance, and the cool drops of the cool ghats
Which sprayed, gently, intensified the pallid hue on me.

ரா. அர்ச்னா
மரபுக் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி
மாமல்லபுரம்.

20
ஆகஸ்ட்
August

ச. சாந்தி
ஓவியர், சென்னை.

மறி துள்ளும் சீறூர்

பூங்கொடி அவரைப் பொய்அதள் அன்ன
உள்இல் வயிற்ற, வெள்ளை வெண்மறி,
மாழ்கி அன்ன தாழ் பெருஞ்செவிய,
புன்தலைச் சிறாரொடு உகளி, மன்றுழைக்
கவை இலை ஆரின் அம்குழை கறிக்கும்
சீறூர் பல பிறக்கு ஒழிய! (அகம். 104: 8–13)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

புதர்களில் படர்ந்த அவரையின் உள்ளீடு இல்லாத காய் போன்ற வயிற்றையும், தாழ்ந்து தொங்கும் பெரிய காதுகளையும் கொண்டவை வெள்ளாட்டுக்குட்டிகள். அவை சிறிய தலையையுடைய சிறுவர்களோடு துள்ளிக் குதித்து விளையாடிய பின், மன்றத்தில் உள்ள அத்தி மரத்தின் இளம் தளிரைக் கடிக்கும். இத்தகைய சிற்றூர் பலவற்றைக் கடந்து வந்தாய்!

Fast ran your chariot past many a village
Where the lambs, white and soft, having frisked with the boys
Graze the split leaves of *aathi* that grow beside the common yard.
Thus have you arrived here this evening.

ஆகஸ்ட் 21
AUGUST

முட எருதுக்கு உணவூட்டும் சிறுவர்

வல்ஆண் அருமுனை நீந்தி, அல்லாந்து,
உகுமண் ஊறு அஞ்சும் ஒருகாற் பட்டத்து
இன்னா ஏற்றத்து இழுக்கி, முடம் கூர்ந்து,
ஒரு தனித்து ஒழிந்த உரனுடை நோன் பகடு
அம்குழை இருப்பை அறைவாய் வான்புழல்
புல் உளைச் சிறாஅர் வில்லின் நீக்கி,
மரை கடிந்து ஊட்டும் வரைஅகச் சீறூர்! (அகம். 107: 12–18)

காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்

பொருள்:

பாலை நிலத்தின் போர் முனையைக் கடந்து வந்த எருது ஒன்று, ஓடையில் சறுக்கும் மண்கொண்ட ஏற்றத்தில் சறுக்கி விழுந்ததால் அதன் ஒரு கால் முடம்பட்டு, ஒரு தனியிடத்தில் கிடந்தது. சிறிய தலைமயிரை உடைய சிறுவர்கள், அழகிய தளிரையுடைய இருப்பையின் மலரை, வில்லால் உதிர்த்து, எருதுக்கு அருகில் போட்டு அதனை உண்ணச் செய்தனர். அந்தத் தளிரை உண்ண வரும் மரை மானை அவர்கள் விரட்டும் காட்சியை உடையது மலைச் சாரலில் உள்ள சிற்றூர்.

Beyond this are villages nestling in the hills;
Here, a strong bull plodded its way through a sloping path,
Slipped and broke its leg to grieve sorely all alone.
The urchins of the village strike with their darts
And cause the tender leaves, as also the blooms, to fall;
They chase away the competing *marai* deers
And feed the forlorn bull.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

22
ஆகஸ்ட்
August

குளிர்ந்த கண்களுடன் காத்திருப்பாள்

நெடுங்கொடி நுடங்கும் வான்தோய் புரிசை,
யாமம் கொள்பவர் நாட்டிய நளிசுடர்
வானக மீனின் விளங்கித் தோன்றும்,
அருங்கடிக் காப்பின், அஞ்சுவரு மூதூர்த்
திருநகர் அடங்கிய மாசுஇல் கற்பின்,
அரிமதர் மழைக்கண், அமைபுரை பணைத்தோள்,
அணங்குசால், அரிவையைக் காண்குவம்! (அகம். 114: 9–15)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

வானத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்த மதிலில் நீண்ட கொடிகள் அசையும். அந்த மதிலைக் காப்போர் இரவில் ஏற்றிய விளக்குகள் வானில் உள்ள மீன்களைப்போல் காட்சியளிக்கும். அரிய காவலையுடையதும் பகைவர்க்கு அச்சத்தைத் தருவதுமான பழமையான ஊர் அது. அவ்வூரில் செல்வம் நிறைந்த இல்லத்தில், கற்பு நெறியுடன் செவ்வரி படர்ந்த குளிர்ந்த கண்களையும் மூங்கில் போன்ற தோள்களையும் கொண்ட அழகிய தலைவி, கவலையுடன் உள்ளாள். தேர்ப்பாகனே! அவளைப் போய்க் காண்போம்.

O Charioteer!
Let us go to meet my divine and flawlessly chaste love
Who is in profound grief, born of her loneliness:
In our town dreadful to the foes
And where lamps lit up by the night guards on the fort walls
Look bright like the stars in the heavens.

பா. சிவாணி
லலித் கலாக்ஷேத்ரா, கோயம்புத்தூர்.

ஆகஸ்ட் AUGUST 23

ஊர் திரும்புவது உண்மையாய் நிகழும்

நன்கலம் களிற்றொடு நண்ணார் ஏந்தி,
வந்துதிறை கொடுத்து, வணங்கினர்! வழிமொழிந்து
சென்றீக என்ப ஆயின், வேந்தனும்
நிலம் வகுத்து உறாஅ ஈண்டிய தானையொடு
இன்றே புகுதல் வாய்வது நன்றே! (அகம். 124: 1–5)

மதுரை அறுவை வாணிகன் இளவேட்டனார்

பொருள்:

பகைவர்கள் அவர்களாகவே, அணிகலன்களையும் ஆண் யானைகளையும் திறையாகக் கொடுத்து வணங்கினர்; பணிவாகப் பேசி, 'சென்றருளுக' என வேண்டினர். பகைவர் அவ்வாறு பணிந்ததால் நம் மன்னனும் அவர்களின் நாட்டை அவர்களுக்கே கொடுத்துவிட்டு, அளவிட முடியாத படையுடன் இன்றே ஊருக்குத் திரும்புவது நிகழும்.

As foes paid their tributes– fine ornaments and elephants
And bowed at our lord's feet,
Our lord, with his immense army,
Will return to his capital, today itself.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

வே. ஜயனேஷ்வர்
இலயோலா கல்லூரி, சென்னை.

24
ஆகஸ்ட்
August

கொற்கைத் துறைமுகம்

இவர்திரை தந்த ஈர்ங்கதிர் முத்தம்,
கவர்நடைப் புரவிக் கால்வடுத் தபுக்கும்,
நல்தேர் வழுதி கொற்கை முன்துறை! (அகம். 130: 9–11)
வெண்கண்ணனார்

பொருள்:

அலைகள் கரையில் பரப்பிய குளிர்ந்த ஒளியையுடைய முத்துகள், குதிரையின் காலில் காயத்தை ஏற்படுத்தி, அதன் நடையைக் கெடுக்கும். இந்த இயல்பு கொண்டது நல்ல தேரையுடைய பாண்டியனின் கொற்கைத் துறைமுகம்.

Korkai is the seaport of the Pandiyas,
Where dashing breakers wash ashore the shining pearls
That obstruct the passage of beauteous steeds.

ஆகஸ்ட் 25
AUGUST

இரா. சௌம்யா
ஓவியர்/உதவிப் பேராசிரியர், சென்னை.

ஏறு தழுவும் பொதுவர்

அவரைக் கழல உழக்கி, எதிர் சென்று சாடி,
அழல்வாய் மருப்பினால் குத்தி, உழலை
மரத்தைப் போல் தொட்டன ஏறு!
தொட்ட தம் புண்வார் குருதியால் கை பிசைந்து, மெய் திமிரி,
தங்கார் பொதுவர், கடலுள் பரதவர்
அம்பி ஊர்ந்தாங்கு ஊர்ந்தார்! (கலி. 106: 20–25)

சோழன் நல்லுருத்திரன்

பொருள்:

தொழுவத்திலிருந்து விடுபட்ட காளைகள் ஆயர்கள் ஓடும்படி மிதிக்கும். ஓடாமல் நின்றவர்களை எதிர்சென்று கூரிய கொம்பால் குத்திச் சாடி உழலை மரத்தின் துளையைப் போல் உடலைத் துளையாக்கும். காளைகளினால் துளைக்கப்பெற்ற தம் புண்களிலிருந்து வடியும் குருதி வழுக்குவதால் மணலில் கையைப் பிசைந்துகொள்வர். உடம்பிலும் அம்மணலைப் பூசிக் கொள்வர். கடலுக்குள் பரதவர் சிறிய படகில் தாவி ஏறுவதைப் போல் மீண்டும் காளையைத் தழுவினர் ஆயர்கள்.

The bulls take on the men with their fiery horns, goring them;
The injuries resemble wooden bars with holes, placed in doorways.
Blood oozing from the wounds, the herdsmen daub sand
Over their bodies and come capturing the bulls
Like the maritime men rafting on the seas.

26
ஆகஸ்ட்
August

தலையில் சூடிக்கொண்டேன்

...தொழுவத்து,
சில்லைச் செவி மறைக் கொண்டவன் சென்னிக் குவி முல்லைக்
கோட்டம் காழ்கோட்டின் எடுத்துக்கொண்டு ஆட்டிய
ஏழை இரும்புகர் பொங்க, அப்பூ வந்து என்
கூழையுள் வீழ்ந்தன்று மன்
அதனை, கெடுத்தது பெற்றார்போல் கொண்டு யான் முடித்தது! (கலி. 107: 5–10)

சோழன் நல்லுருத்திரன்

பொருள்:

தொழுவத்திலிருந்து விடுபட்ட சிறிய செவி கொண்ட காளையைக் களத்தில் எதிர்கொண்டு தழுவியவனின் தலையில் இருந்த முல்லைப் பூமாலையை, தன் கொம்பால் எடுத்து ஆட்டியது அந்தக் கரும்புள்ளிக் காளை. அப்போது அப்பூமாலை வந்து என் கூந்தலில் விழுந்தது. தொலைந்து போன பொருள் கிடைத்தது போல அம்மாலையை எடுத்து நான் சூடிக்கொண்டேன்.

That man, with the arched jasmine wreath on his head,
Seized the wild bull that took up his wreath over its horns.
The bull swayed off the wreath that came to settle over my tresses;
I grabbed it as if regaining a thing unmade.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

ஆகஸ்ட்
AUGUST
27

தயவுசெய்து வேறிடம் செல்லேன்!

இவள்தான் வருந்த நோய் செய்து இறப்பின் அல்லால், மருந்து அல்லள்
'யார்க்கும் அணங்காதல் சான்றாள்' என்று ஊர்ப்பெண்டிர்,
'மாங்காய் நறுங்காடி கூட்டுவேம் யாங்கும்
எழுநின் கிளையொடு போக' என்று தத்தம்
கொழுநரைப் போகாமல் காத்து முழுநாளும்
வாயில் அடைப்பவரும்! (கலி. 109: 21–26)

சோழன் நல்லுருத்திரன்

பொருள்:

பார்க்கும் ஆண்கள் எல்லோரும் துன்பம் அடையும்படியாகக் காதலில் வீழ்த்தி இறக்கச் செய்யும் தன்மையுடையவள் என்று கருதிய அவ்வூர்ப் பெண்டிர், அவள் கொண்டுவரும் மோருக்குப் பதிலாக நாம் அனைவரும் கஞ்சியை மாங்காயுடன் சேர்த்துக் குடிப்போம் என்று முடிவெடுத்தார்கள். அப்படிச் செய்தால் இங்கே மோர் விற்க முடியவில்லை என்று அவள் தன் உறவினருடன் வேறு ஊருக்குப் போய்விடுவாள் என்று கருதிய அப்பெண்கள் தங்கள் கணவர், வெளியே வராமல் வீட்டின் வாயிலை அடைத்தார்கள்.

(On the sight of the beautiful woman selling buttermilk)
The women of the village speak thus:
"The source of affliction to all she is;
Let's go then for the odorous mango pickles";
And they confine their husbands in their homes,
Guarding the doorway all day thro'.



கு. மகேஷ்வரிப்பிரியா
ஓவியர், சிவகாசி.

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

28
ஆகஸ்ட்
August

வளமான மருத நிலம்

**தச்சச் சிறாஅர் நச்சப் புனைந்த
ஊரா நல் தேர் உருட்டிய புதல்வர்
தளர் நடை வருத்தம் வீட, அலர் முலைச்
செவிலி அம் பெண்டிர் தழீஇ, பால் ஆர்ந்து,
அமளி துஞ்சும் அழகு உடை நல் இல்!**

(பெரும்பாண். 248–252)
கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

தச்சரின் குழந்தைகளும் விரும்பும் வகையில் செய்த ஊர்ந்து செல்லும் நல்ல தேரை உருட்டி விளையாடிய புதல்வரின் பசியைப் போக்கிட, பூப்போன்ற முலையைக் கொண்ட செவிலித் தாயர், பாலை ஊட்டுவர். பால் குடித்த புதல்வர் படுக்கையில் படுத்து உறங்கும் அழகுடைய வீடுகளைக் கொண்டது மருத நிலம்.

Children who roll their beautiful toy chariots that
Are coveted by the children of carpenters, get tired,
And embrace and drink abundant milk from their
Foster mothers and sleep in their fine, lovely houses
Of the prosperous *Marutham* land.

ஆகஸ்ட் AUGUST 29

இரா. ஹரிப்பிரியா
ஸ்ரீ அன்னை காமாட்சி இசை மற்றும்
கவின் கலைக் கல்லூரி, சென்னை.

கலங்கரை விளக்கம்

இரவில் மாட்டிய இலங்கு சுடர் ஞெகிழி,
உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும்,
துறை பிறக்கு ஒழியப்போகி, கறைஅடிக்
குன்று உறழ் யானை மருங்குதல் ஏய்க்கும்
மஞ்சள் முன்றில், மணம் நாறு படப்பை,
தண்டலை உழவர் தனிமனை! (பெரும்பாண். 350–355)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

உப்புநீர்க் கடலில் ஓடும் கப்பல்களுக்குக் கரையைக் காட்டுவதற்காக ஒளி பொருந்திய விளக்கைத் தாங்கிய கலங்கரை விளக்கம், கடற்கரையில் அமைந்துள்ளது. அந்தக் கடற்கரையைக் கடந்து போனால் உரல் போன்ற கால்களைக் கொண்ட யானையின் உடலை ஒத்த உழவர் குடியிருப்புகள் தோன்றும். அங்கே முன் பகுதியில் உலர்த்திய மஞ்சளும் பின் பகுதியில் மணக்கும் பூந்தோட்டமும் கொண்ட தனித்தனி வீடுகள் நிறைந்திருக்கும்.

A Light house there is that appears to prop the sky,
In it are lamps that shine to guide the ships.
In groves where ploughmen live,
The huts are thatched with dry, plaited leaves of coconut trees
Resembling elephants with mortar–like legs.

30
ஆகஸ்ட்
August

தலையாலங்கானத்துப் போர்

கால் என்னக் கடிது உராஅய்,
நாடு கெட எரி பரப்பி,
ஆலங்கானத்து அஞ்சுவர இறுத்து,
அரசுபட அமர் உழக்கி,
முரசு கொண்டு களம் வேட்ட,
அடுதிறல் உயர் புகழ் வேந்தே! (மதுரை. 125–130)

மாங்குடி மருதனார்

பொருள்:

காற்று வீசுவதைப் போல் விரைவாக, பகைவரின் நாடு அழியும்படி தீயைப் பரப்பி, தலையாலங்கானத்தில் நடைபெற்ற போரில், எதிர்த்த ஏழு மன்னர்களும் இறக்கும்படி வென்று, மற்ற மன்னர்க்கும் அச்சம் உண்டாகுமாறு செய்து, அம்மன்னரின் முரசுகளைக் கைப்பற்றி மறக்கள வேள்வியைச் செய்த பேராற்றல் வாய்ந்தவன் பாண்டியன் நெடுஞ்செழியன்!

O warrior great!
You did fly like the wind, spread the fire around,
Destroy the country of your foes, encamp
At *aalangaanam* scarring them,
Cut down their chiefs and seize their drums.

க. பவித்ரா
ஓவியர்.

ஆகஸ்ட்
AUGUST
31

நெடுஞ்செழியனின் படை வேகம்

விரிகடல் வியன் தானையொடு,
முருகு உறழப் பகைத் தலைச் சென்று,
அகல் விசும்பின் ஆர்ப்பு இமிழ,
பெயல் உறழக் கணை சிதறி,
பல புரவி நீறு உகைப்ப,
வளை நரல, வயிர் ஆர்ப்ப,
பீடு அழியக் கடந்து அட்டு, அவர்
நாடு அழிய எயில் வௌவி ... (மதுரை. 179–186)

மாங்குடி மருதனார்

பொருள்:

பாண்டியன் நெடுஞ்செழியனே! கடல் போன்ற பெரும்படையுடன் போர் புரியும் முருகப் பெருமானைப் போல, பகைவர் இடத்திற்குச் சென்றாய். படையெழுச்சி முழக்கம் வானை எட்ட, மழை போன்று அம்புகளை எய்து, குதிரைகள் ஓடுவதால் துகள்கள் மேலே எழுந்திட, சங்குகள் முழங்க, கொம்புகள் ஒலிக்க, பகைவரின் வீரம் அழியும்படி வென்று அவர்களது நாடுகளைப் பாழாக்கி, அரண்களைக் கைப்பற்றினாய்!

You, like the god of war, attack thy foes,
Your army's shouts resounding throughout the skies.
You reduce the states of your foes and destroy their lands,
Making wide and ancient kingdoms yours.

ஜெ. சந்திரமோகன்
ஓவியர், ஓசூர்.



சு. தமிழ்மணி
ஓவியர், சேலம்.

01
செப்டம்பர்
September

ஆநிரைகளோடு வரும் யானைக் கன்றுகள்

நீர் நசைக்கு ஊக்கிய உயவல் யானை
வேனில் குன்றத்து வெவ்வரைக் கவாஅன்
நிலம்செல, செல்லாக் கயந்தலைக் குழவி
சேரிஅம் பெண்டிர் நெஞ்சத்து எறிய
ஊர் ஆன்கன்றொடு புகுதும்! (நற். 171: 1–5)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

நீர் வேட்கை கொண்ட யானைகள், வெயில் காலத்தில் மலையடிவாரத்தை நோக்கி நெடுந்தொலைவு செல்லும். அவற்றோடு செல்ல முடியாத மெல்லிய தலையையுடைய யானைக்கன்றுகள், நின்று விடும். அவை, பசுவின் கன்றுகளோடு சேர்ந்து ஊருக்குள் புகும். இதனைக் கண்டு, சேரியில் வாழும் அழகிய பெண்கள் அஞ்சுவர்.

The elephant herd that grieves of acute thirst,
Walks into the foothills seeking water,
While its soft–headed calves
Enter a hamlet along with the calves of the cows,
To the fright of the village women.

செப்டம்பர் SEPTEMBER 02

என் உடன்பிறந்தவள் இந்தப் புன்னை

விளையாடு ஆயமொடு வெண் மணல் அழுத்தி,
மறந்தனம்! துறந்த காழ் முளை அகைய,
நெய் பெய் தீம் பால் பெய்து இனிது வளர்ப்ப,
நும்மினும் சிறந்தது நுவ்வை ஆகும், என்று
அன்னை கூறினள், புன்னையது நலனே!
அம்ம, நாணுதும் நும்மொடு நகையே! (நற். 172: 1–6)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

நண்பர்களுடன் விளையாடிய போது, நாங்கள் மணலில் அழுத்தி வைத்த புன்னை விதை முளைத்து வந்தது. அதற்கு நெய்யும் பாலும் ஊற்றி வளர்த்தோம். அது எங்களால் வளர்க்கப்பட்டதால் 'உங்கள் தங்கை போல் ஆகும்' என்று தாய் கூறினார். தங்கை போன்ற இந்தப் புன்னை மரத்தின் நிழலில் உன்னுடன் நகைத்து மகிழ்வதற்குத் தலைவி வெட்கப்படுகிறாள்.

While playing, we pressed a mature *punnai* seed
Into the white sand and forgot all about it.
The seed sprouted forth and we nourished it into a tree.
Our mother said, "This tree is your younger sister";
And so, she (Heroine) feels shy to laugh and play with you
Under this tree.

த. லோகேஷ்
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

03
செப்டம்பர்
September

மடல் ஏறுதல்

சிறுமணி தொடர்ந்து, பெருங் கச்சு நிறீஇ,
குறுமுகிழ் எருக்கங் கண்ணி சூடி,
உண்ணா நல்மாப் பண்ணி, எம்முடன்
மறுகுடன் திரிதரும் சிறு குறுமாக்கள்! (நற். 220: 1–4)
குண்டுகட் பாலியாதனார்

பொருள்:

பனை மடலால் குதிரை செய்து, அதற்கு மேலாடை அணிவித்து, சிறிய மணிகளைக் கழுத்தில் கட்டினார்கள். அதன்மேல் எருக்கம்பூ மாலையைச் சூடிய தலைவன், உணவு உண்ணாத அக்குதிரையின் மேல் ஏறி உட்கார்ந்தான். அக்குதிரையைச் சிறுவர்கள், தெருவில் இழுத்துக்கொண்டு வருகின்றனர்.

I am now mounted on a horse
Wrought of palmyra stems, and decked with a wreath
Of small bells and a piece of cloth.
I am wearing a garland of the tiny blooms of the *erukkam.*
The young boys follow me through the streets.

செ. கணேசமூர்த்தி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

செப்டம்பர் SEPTEMBER 04

என்ன வியப்பு!

ஓங்கு மலை நாடன் சாந்து புலர் அகலம்
உள்ளின் உள்நோய் மல்கும்!
புல்லின் மாய்வது எவன்கொல்? அன்னாய்! (குறுந். 150:3–5)
மாடலூர் கிழார்

பொருள்:
தோழியே! மலைநாட்டைச் சேர்ந்த தலைவனின் சந்தனம் பூசிய மார்பினை நினைத்தால், காதல் நோய் பெருகுகிறது. அம்மார்பை அணைத்தால், அந்நோய் தீருகிறது. என்ன வியப்பு!

If I think of the sandal painted chest
Of my Lord of the rising hills, my love sickness grows;
On embracing that chest it vanishes; What sorcery is this?



ஜெ. மணிகண்டன்
கவின் கலை ஆசிரியர் (ஓய்வு),
புதுச்சேரி.

05

செப்டம்பர்

September

அவனோடு இருப்பதே இன்பம்

தண்கடல் படுதிரை பெயர்த்தலின், வெண்பறை
நாரை, நிரை பெயர்ந்து அயிரை ஆரும்,
ஊரோ நன்றுமன், மரந்தை
ஒரு தனி வைகின், புலம்பு ஆகின்றே! (குறுந். 166)

கூடலூர் கிழார்

பொருள்:

மரந்தை என்னும் ஊருக்கு அருகில், குளிர்ந்த கடலில் உண்டான அலைகள் மீன்களை நகர்த்தின. அயிரை மீன்களுக்காக அங்குத் திரிந்துகொண்டிருந்த நாரைகள், மீன்கள் நகரும் திசையை நோக்கி நகர்ந்தன. அதைப் போல், தலைவனுடன் சென்று அவனுடன் இருப்பதே இன்பம் தருகிறது. அவனைப் பிரிந்து இருப்பது மிகவும் வருந்தச் செய்கிறது.

As cool waves of the sea displace fish in backwaters
Flocks of stork too move where the fish moved;
Such pleasant town is *Marandhai* when I'm with him,
But when I'm alone it causes me anguish.

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை.

செப்டம்பர் SEPTEMBER 06

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை.

இனிது! இனிது!

தான் துழந்து அட்ட தீம் புளிப்பாகர்,
இனிது எனக் கணவன் உண்டலின்,
நுண்ணிதின் மகிழ்ந்தன்று, ஒள்நுதல் முகனே!

(குறுந். 167:4–6)
கூடலூர் கிழார்

பொருள்:

தலைவி தான் செய்த, இனிய புளிக் குழம்பைத் தலைவனுக்குப் பரிமாறினாள். அதனை மிக இனிது என்று சொல்லி, அவன் உண்டான். அதனால் அவளது ஒளி பொருந்திய நெற்றியைக் கொண்ட முகத்தில் மென்மையான மகிழ்ச்சி தோன்றியது.

As her husband appreciated and ate
The sweet and sour gravy cooked by her,
Her bright face lit up demurely!

07

செப்டம்பர்

September

பிரிந்தால் உயிர் வாழ்வது உறுதியில்லை

புனல் புணை அன்ன சாய் இறைப் பணைத் தோள்
மணத்தலும் தணத்தலும் இலமே!
பிரியின் வாழ்தல் அதனினும் இலமே! (குறுந். 168: 5–7)
சிறைக்குடி ஆந்தையார்

பொருள்:

புனல் விளையாட்டில் பயன்படும் தெப்பத்து வளைந்த மூங்கில் போன்ற தோளைக்கொண்ட தலைவியைச் சேர்ந்தால் பிரிய இயலாது; பிரிந்தால் உயிருடன் வாழ்வது அதைவிடவும் இயலாதது.

Her curved, thick shoulders seem like rafts
That glide on water.
To hug her shoulders and let go would be impossible;
If I were to leave her, living would become even more impossible.

ஜோ. ராபின் இஸ்ரேல்
ஓவியர், தஞ்சாவூர்.

செப்டம்பர் SEPTEMBER 08

கலம்செய் கோவே!
கலம்செய் கோவே!



கொடி நுடங்கு யானை நெடுமா வளவன்–
தேவர் உலகம் எய்தினன் ஆதலின்,
அன்னோன் கவிக்கும் கண்ணகன் தாழி,
வனைதல் வேட்டனை ஆயின், எனையதூஉம்
இருநிலம் திகிரியா, பெருமலை
மண்ணா வனைதல் ஒல்லுமோ, நினக்கே? (புறம். 228: 10–15)

ஐயூர் முடவனார்

பொருள்:

கொடிகள் அசைகின்ற பெரிய யானைகளையுடையவன் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன். அவன் வான் உலகத்தை அடைந்தான். அவனுக்காகப் பெரிய தாழியை வனைய நினைத்தால், பூமியைச் சக்கரமாகவும் பெரிய மலையை மண்ணாகவும் கொண்டு வனைய உன்னால் முடியுமோ?

Our King Neduma Valavan has left for the celestial world;
If I ask you to make a burial urn for him,
You'd have to make this earth a potter's wheel
And break down the lofty Mountain for clay;
Is that possible for you?

சத்யா ந பிரபு
ஓவியர், சென்னை.

பா. சிவாணி
லலித் கலாக்ஷேத்ரா, கோயம்புத்தூர்.

09
செப்டம்பர்
September

சேரமான் வானுலகம் அடைந்தான்

அஞ்சினம்! எழுநாள் வந்தன்று இன்றே!
மைந்துடை யானை கைவைத்து உறங்கவும்,
திண்பிணி முரசம் கண்கிழிந்து உருளவும்,
காவல் வெண்குடை கால்பரிந்து உலறவும்,
கால்இயல் கலிமாக் கதிஇல வைகவும்,
மேலோர் உலகம் எய்தினன்! (புறம். 229: 17–22)

கூடலூர் கிழார்

பொருள்:

நாங்கள் அஞ்சியபடியே விண்மீன் விழுந்த ஏழாம் நாள் வந்தது. வலிமையான யானை கையை நிலத்தில் நீட்டி வைத்து உறங்கவும், திண்மையான முரசு கிழிந்து உருளவும், வெண்கொற்றக்குடையின் காம்பு சரிந்து சிதையவும், குதிரைகள் கதியில்லாமல் கிடக்கவும், யானைக்கட்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை வானவர் உலகம் அடைந்தான்.

Just as we feared, the seventh day came
Since we saw the shooting star;
Elephants rest their trunks on ground,
War drums torn, Royal parasol broken,
Horses lie listlessly as our King ascended to heaven.

செப்டம்பர் SEPTEMBER 10

கு. மோகன்ராஜ்
ஓவியர், கோயம்புத்தூர்.

மயிலிறகு சூட்டப்பெற்ற அதியமானின் நடுகல்

இல்லாகியரோ, காலை மாலை!
அல்லாகியர், யான் வாழும் நாளே!
நடுகல் பீலி சூட்டி, நார்அரி
சிறுகலத்து உகுப்பவும், கொள்வன் கொல்லோ!
கோடு உயர் பிறங்கு மலை கெழீஇய,
நாடுடன் கொடுப்பவும் கொள்ளாதோனே! (புறம். 232)

ஔவையார்

பொருள்:

அதியமான் இல்லாது போன காலையும் மாலையும், நான் வாழும் நாளும் எனக்கு இல்லாது போகட்டும். உயர்ந்த மலையுடன் கூடிய நாடு முழுவதும் கொடுத்தபோதும் பெற்றுக்கொள்ளாதவன் அதியமான். அத்தகையவன், இன்று நடப்பட்ட கல்லாக மயில் இறகு சூட்டப்பட்டுக் காணப்படுகிறான். தெளிந்த கள்ளை இந்தக் கலத்தில் கொடுக்கவும் அவன் ஏற்றுக் கொள்வானோ?

Let there be no mornings or evenings!
Let it be meaningless, the days that I will live!
His memorial stone is adorned with peacock feathers
And filtered liquor is offered to it.
Will he accept them?
The man who would not
Accept a mountain country with soaring peaks!

11

செப்டம்பர்

September

அறுவை மருத்துவம்

மீன்தேர் கொட்பின் பனிக்கயம் மூழ்கிச்
சிரல் பெயர்ந்தன்ன நெடுவள் ஊசி
நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின் ... (பதிற்று. 42: 2–4)
பரணர்

பொருள்:

மீனைக் கொத்துவதற்காக நீர்நிலையில் வட்டமடிக்கும் மீன்கொத்திப் பறவை, நீரில் பாய்ந்து மீனைக் கொத்திப்பிடித்துவிட்டு, உடனே மேல் எழும்பிப் பறப்பதைப் போல் புண்பட்ட வீரர்களின் மார்பில் நீண்ட ஊசியை உள்ளே செலுத்தி வெளியே எடுத்துத் தைப்பர்.

Like the movement of the sharp–beaked kingfishers
That constantly dive in and out of the cold ponds in search of fish,
The wounds on the chests of your mighty warriors are sewed repeatedly
Using long, bright needles.

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

செப்டம்பர் SEPTEMBER 12

முதுமை இரங்கத்தக்கது

நெடுநீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து,
குளித்து மணல் கொண்ட கல்லா இளமை
அளிதோ தானே! யாண்டு உண்டு கொல்லோ?
தொடித்தலை விழுத்தண்டு ஊன்றி, நடுக்குற்று,
இரும் இடை மிடைந்த சிலசொல்
பெரு மூதாளரேம் ஆகிய எமக்கே! (புறம். 243: 9–14)

தொடித்தலை விழுத்தண்டினார்

பொருள்:
ஆழமான நீரையுடைய மடுவில், துடும் என்று ஒலியெழும்படி குதித்து, முழுகி, கீழே தரைக்குச் சென்று அங்கிருந்த மணலைக் கொண்டுவந்து காட்டும் இயல்புடையது அந்த இளமைக்காலம். குனிந்த தலையுடன், பருத்த கோலை ஊன்றித் தளர்ந்து, பேசும்போது இடையிடையே இருமல் வந்து சில சொற்கள் மட்டுமே பேசி வாழும் எம்மைப் போன்றோரின் இந்த முதுமைக்காலம் இரங்கத்தக்கது!

Where went our youth when we dived into the deep lake
And brought back sand from the lake bed?
Now we tremble as we walk with a walking stick
And hardly can speak a few words without coughing
Pitiable are we!

சத்யா ந பிரபு
ஓவியர், சென்னை.

13

செப்டம்பர்

September

எயினர் குடில்கள்

நீள் அரை இலவத்து அலங்கு சினை பயந்த
பூளை அம் பசுங்காய் புடை விரிந்து அன்ன
வரிப் புற அணிலொடு, கருப்பை ஆடாது,
யாற்று அறல் புரையும் வெரிந் உடைக் கொழு மடல்,
வேல் தலை அன்ன வைந்நுதி, நெடுந்தகர்
ஈத்து இலை வேய்ந்த எய்ப் புறக் குரம்பை!

(பெரும்பாண். 83–88)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

ஆற்று மணலில் தோன்றும் கோடுகளைப் போன்ற முதுகினைக் கொண்ட ஈந்தின் ஓலையால் வேயப்பட்ட கூரையையும் முள்ளம்பன்றியின் முதுகு போன்ற பின்பகுதியையும் உடையது எயினர் குடில்கள். நீண்ட அடிப்பகுதியை உடைய இலவ மரத்தின் காய் முதிர்ந்து, வெடித்து உள்ளிருக்கும் பஞ்சு வெளிப்படுவது போல் முதுகில் வரிகளை உடைய அணிலும் எலியும் நுழையாதபடி அந்தக் குடில்கள் அமைந்திருக்கும்.

The huts, that resemble the backs of porcupines,
Are woven with thick fronds of date palms–
Their back sides like the river sand
And the sharp ends like the tips of spears–
Into these huts, squirrels with striped backs
That look like the open cotton pods of *ilavam* trees,
And rats, are unable to get in.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

செப்டம்பர் 14
SEPTEMBER

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

தாமரை மலர் போன்ற காஞ்சிமாநகரம்

...பல் இதழ்த்
தாமரைப் பொகுட்டின் காண்வரத் தோன்றி,
சுடுமண் ஓங்கிய நெடு நகர் வரைப்பின்! (பெரும்பாண். 403–405)
கடியலூர் உருத்திரங் கண்ணனார்

பொருள்:

பல இதழ்களைக் கொண்ட தாமரைப் பூ விரிந்திருப்பதைப் போன்றது காஞ்சி மாநகர். அதன் நடுவில் தாமரைப் பூவின் நடுவிலிருக்கும் காய்போல் அமைந்திருப்பது இளந்திரையனின் அரண்மனை. அதனைச் சுற்றி, சுட்ட செங்கலால் கட்டப்பெற்ற பெரிய மதில் அமைந்துள்ளது.

The town of Kaanchi is like the many–petaled lotus flower.
In it's center, like a receptacle, is the fortress of Ilanthiraiyan,
Surrounded by large walls made with baked bricks.

15

செப்டம்பர்

September

யானை உண்ட மிச்சில்

பல் மணம் மன்னு பின் இருங்கூந்தலர்,
கன்னிமை கனிந்த காலத்தார், நின்
கொடி ஏற்று வாரணம் கொள்கவழ மிச்சில்
மறுஅற்ற மைந்தர் தோள் எய்தார்! மணந்தார்
முறுவல் தலையளி எய்தார், நின் குன்றம்
குறுகிச் சிறப்பு உணாக்கால்! (பரி. 19: 89–94)

நப்பண்ணனார்

பொருள்:

திருப்பரங்குன்றத்தில் கொடியேற்றும் நாளில், யானை உண்டு எஞ்சிய கவளத்தைச் சிறப்புடையதாக எண்ணி மகளிர் உண்பர். அவ்வாறு உண்ணாவிட்டால், மகளிர் தம்மை மணந்துகொண்ட கணவரின் புன்முறுவலுடன் கூடிய அன்பைப் பெறமாட்டார்; கன்னித் தன்மை முதிர்ந்த மகளிர், நல்ல காதலரைப் பெறமாட்டார். அந்த எஞ்சிய கவளத்தை உண்ட மகளிர் அந்த நன்மைகளைப் பெறுவது உறுதி.

Women wearing fragrant flowers in their hair
Will not receive the affection of their lovers
Unless they come to your hillock and partake
The leftovers of food fed to your Royal Elephant.
(Denotes a prayer ritual)

இ. ஜெயபாலன்
ஓவியர், சென்னை.

செப்டம்பர் SEPTEMBER 16

வல்லவன் சேரமான்

சுடர்நுதல், மடநோக்கின்,
வாள்நகை, இலங்குஎயிற்று,
அமிழ்து பொதி துவர்வாய் அசை நடை விறலியர்
பாடல்சான்று நீடினை உறைதலின்,
வெள்வேல் அண்ணல் மெல்லியன் போன்ம்என,
உள்ளுவர் கொல்லோ, நின் உணராதோரே? (பதிற்று. 51: 19–24)

காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்

பொருள்:

ஒளி பொருந்திய நெற்றியையும் கள்ளமில்லாப் பார்வையையும் மிக்க ஒளியையுடைய பற்களையும், அமிழ்தம் போன்ற வாய்நீர் உடைய சிவந்த வாயையும், மெல்லிய நடையையும் உடைய விறலியர் பாடினர். அப்பாடல்களைக் கேட்டு நீ, நீண்ட நேரம் தங்கினாய்! அதனால் வேல் தாங்கிய சேரன், ஐம்புல இன்பங்களுக்கு ஆட்படுபவன் என்று, உன்னுடைய இயல்பை உணராதார் எண்ணுவார்களோ?

As you spend time listening to songs sung
By graceful songstresses with bright forehead,
Innocent eyes, red lips, and shiny teeth,
Those unaware of your valor may think you as weak.



ஏ. ஆனந்தராஜு
கவின் கலை ஆசிரியர், புதுச்சேரி.

கு. மோகன்ராஜ்
ஓவியர், கோயம்புத்தூர்.

17
செப்டம்பர்
September

சேரமான் ஆடிய துணங்கை

சுடரும் பாண்டில் திருநாறு விளக்கத்து,
முழாஇமிழ் துணங்கைக்குத் தழூஉப் புணை ஆக,
சிலைப்பு வல்லேற்றின் தலைக்கை தந்து, நீ
நளிந்தனை வருதல், உடன்றனள் ஆகி,
உயலும் கோதை ஊரல் அம் தித்தி! (பதிற்று. 52: 13–17)

காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்

பொருள்:

பாண்டில் விளக்கின் ஒளியிலே முழவு முழங்கியது. துணங்கைக் கூத்தாடும் மங்கையர் கைக்கோத்துக் கொள்ளும்போது, முழங்கும் வலிய எருதைப் போல முதற்கை தந்து, நீ அம்மகளிருடன் நெருங்கி ஆடினாய். அதனால் அசையும் மாலையையும் பரவிய தேமலையும் குளிர்ந்த கண்களையும் கொண்ட உன் மனைவி உன்னிடம் ஊடல் கொண்டாள்.

In the soft light of oil lamps, girls hold hands
And dance to the Goddess;
You, like a strong bull,
Step in to hold hands with them and dance closely
Upsetting your garland wearing moist eyed wife.

செப்டம்பர் SEPTEMBER 18

ம. சோபனா, தேனி
தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்.

தழையுடைக்கு விலை

எக்கர் ஞாழல் மலர் இல் மகளிர்
ஒண்தழை அயரும் துறைவன்,
தண்தழை விலை என நல்கினன் நாடே! (ஐங். 147)
அம்மூவனார்

பொருள்:

மணல் குன்றில் வளர்ந்துள்ள ஞாழல் மரத்தில் மலர் இல்லாததைக் கண்ட மகளிர், அதன் ஒளி பொருந்திய தளிரைப் பறித்துத் தொடுத்து அணிந்தனர். இத்தகைய துறைக்குத் தலைவன், நீ அணியும் தழையுடைக்காகத் தனது நாட்டையே விலையாகக் கொடுத்தான்.

The man from the shore,
Where women who are unable
To find *gnaalal* flowers in the sand dunes,
Wear garments made with its bright leaves,
Gave his country as bride price.

19
செப்டம்பர்
September

கண்கள் மலர்ந்தன

புன்னை நுண்தாது உறைத்தரு நெய்தல்
பொன்படு மணியின் பொற்பத் தோன்றும்
மெல்லம் புலம்பன் வந்தென,
நல்ல ஆயின தோழி, என் கண்ணே! (ஐங். 189)
அம்மூவனார்

பொருள்:

தோழி! புன்னை மலரின் நுண்ணிய மஞ்சள் நிறத் துகள் நீல நிற நெய்தல் மலரில் படியும். அது பார்ப்பதற்குப் பொன்னுடன் நீலமணி கலந்த தன்மை போல் தோன்றும். இத்தகைய கடற்கரையின் தலைவன், என்னை மணந்துகொள்வதற்காக வந்துள்ளான். அதனால் என் கண்கள் மலர்ந்தன.

Since the lord of the delicate shores,
Where *punnai* trees drop their fine pollen on *Neythal* blooms,
Making them appear lovely like sapphires set in gold,
Has arrived, my eyes have become beautiful, oh friend.

மான்சி சௌகான்
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

செப்டம்பர் SEPTEMBER 20

கரந்தை வீரர்களின் நடுகற்கள் நிறைந்த பாதை

வீளை அம்பின் விழுத் தொடை மழவர்,
நாள் ஆ உய்த்த நாம வெஞ்சுரத்து,
நடைமெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்
கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்,
பெயரும் பீடும் எழுதி, அதர்தொறும்
பீலி சூட்டிய பிறங்குநிலை நடுகல்,
வேல்ஊன்று பலகை வேற்றுமுனை கடுக்கும்! (அகம். 131: 6–12)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

விரைந்து செல்லும் அம்பினை மிகுதியாகக் கொண்ட வெட்சி மறவர், விடியற்காலையில் பசுக்களைக் கவர்ந்துகொண்டுபோன அச்சம் பொருந்திய காட்டுவழியில், நீண்ட தொலைவு நடந்து வந்ததால், நடை ஓய்ந்துவிட்ட கன்றின் கண்ணிலிருந்து கண்ணீர் வழிந்தது. அந்தக் கண்ணீரைத் துடைக்கும் பொருட்டு ஆநிரையை மீட்கப் போரிட்ட கரந்தை மறவர் உயிர் துறந்தனர். அவர்களது பெயரும் பெருமையும் எழுதி, பீலி சூட்டப்பெற்ற நடுகற்கள் அருகில் வேலும் கேடயமும் சார்த்தப்பெற்றுள்ளன. அவை பார்ப்பதற்குப் பகைவர், போர் முனையில் நிற்பது போல் தோன்றும்.

The *vetci* warriors lead away at early dawn the kine of their foes;
Their calves stay behind, weary of walking with their mothers.
Then, the *karantai* warriors restore them to their mothers
And thus wipe off their tears though some fall dead in that attempt;
For them are installed hero–stones with their names and deeds;
Beside them are planted their spears and shields.



சு. முரளிதரன்
ஓவிய ஆசிரியர் (ஓய்வு), சேலம்.

21
செப்டம்பர்
September

மா. ஸ்ரீநிலவன்
அரசு கவின் கலைக் கல்லூரி,
கும்பகோணம்.

கூந்தல் போர்வையில் மறைத்தாள்

பெரும்புழுக்குற்ற நின் பிறைநுதல் பொறி வியர்
உறுவளி ஆற்ற, சிறுவரை திற என,
ஆர்வ நெஞ்சமொடு போர்வை வவ்வலின்,
உறைகழி வாளின் உருவுபெயர்ந்து இமைப்ப,
மறைதிறன் அறியாள் ஆகி, ஒய்யென
நாணினள் இறைஞ்சியோளே, பேணி
இரும்பல் கூந்தல் இருள்மறை ஒளித்தே! (அகம் 136: 21–26,29)

விற்றூத்து மூதெயினனார்

பொருள்:

முதல் நாள் இரவில், தலைவி தன் உடல் முழுவதும் போர்த்தியிருந்ததால், மிக்க புழுக்கம் அடைந்தாள். அதனால் அவளது நெற்றியில் வியர்வை அரும்பியது. காற்றுக்காக அவளது ஆடையைத் திற எனச் சொல்லி, அவள் முகத்தைப் பார்க்கும் ஆவலுடன் அந்த ஆடையைப் பற்றி இழுத்தேன். உறையிலிருந்து உருவிய வாள் போன்று அவளது வடிவம் மின்னி வெளிப்பட்டது. அதனை மறைக்கும் வகையை அறியாமல் வெட்கம் கொண்ட அவள், தன்னுடைய கூந்தலை விரித்து அதனையே போர்வையாகக் கொண்டு தன் மேனியை மறைத்துக்கொண்டாள்.

My beloved concealed her body with an unrumpled garment:
I approached her and removed the garment with great eagerness.
At that, her body dazzled like a sword unsheathed!
She, knew not to conceal herself, covered her parts
With the help of her long tresses.

செப்டம்பர் 22
SEPTEMBER 22

கு. மோகன்ராஜ்
ஓவியர், கோயம்புத்தூர்

நெல்லுக்கு உப்பு

வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி,
என்றூழ் விடர குன்றம் போகும்
கதழ்கோல் உமணர் காதல் மடமகள்
சில்கோல் எல்வளை தெளிர்ப்ப வீசி,
நெல்லின் நேரே வெண்கல் உப்புஎனச்
சேரி விலைமாறு கூறலின் மனைய! (அகம். 140: 3–8)

அம்மூவனார்

பொருள்:

உப்பினை வண்டியில் நிறைய ஏற்றி அதனை விற்பதற்காக, வறண்ட மலைப்பிளவுகள் கொண்ட குன்றுகளைக் கடந்து உப்பு வணிகர் சென்றனர். அவ்வாறு போகும்போது எருதினை விரைவாக ஓட்டுவதற்காகக் கையில் கோலை வைத்திருந்தனர். அந்த உப்பு வாணிகரின் மகள், தன் வளையல் அணிந்த கைகளை வீசி, 'நெல்லுக்கு ஒத்த அளவினதே வெண்மையான உப்பு' என்று ஊரில் விலை கூறி விற்கிறாள்.

My object of love is a clanswoman dear to the salt vendors.
As she moved into the street swinging her hands, adorned with bangles,
She announced thus:
"We barter the white crystals of salt for paddy,
The measure of exchange being the same."

23

செப்டம்பர்

September

கார்த்திகைத் திருநாள்

மழைகால் நீங்கிய மாக விசும்பில்
குறுமுயல் மறுநிறம் கிளர, மதிநிறைந்து,
அறுமீன் சேரும் அகல்இருள் நடுநாள்,
மறுகு விளக்குறுத்து, மாலை தூக்கி,
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய
விழவுடன் அயர வருகதில் அம்ம! (அகம். 141: 6–11)

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

பொருள்:

மழை பெய்து ஓய்ந்த வானத்தில் சிறிய முயலைப்போல் களங்கத்துடன் சந்திரன் விளங்கியது. ஆறு விண்மீன்கள் சேர்ந்து தோன்றும் இருள் சேர் நள்ளிரவில் தெருக்களில் எல்லாம் விளக்குகளை வரிசையாய் ஏற்றி, மாலைகளைத் தொங்கவிட்டுள்ள பழமையான வெற்றியையுடைய ஊர்களில், பலரும் ஒன்றாகச் சேர்ந்து கார்த்திகை விழாவைக் கொண்டாடினர். அவ்விழாவைக் கொண்டாடுவதற்காகத் தலைவர் வரவேண்டும் என்று விரும்பினாள் தலைவி.

May he come back soon to celebrate with us
The *kaarthigai* festival observed by all folks,
Who gather to light the streets with lamps
And hang garlands everywhere in our village.
That is a festival observed at midnight
When the full moon glows in the unclouded skies.

மு.ஆ. சங்கரலிங்கம்
ஓவியர், சென்னை.

செப்டம்பர் SEPTEMBER 24

வடுக்கொள முயங்கினாள்

கடல்மீன் துஞ்சும் நள்ளென் யாமத்து,
உருவுகிளர் ஓவினைப் பொலிந்த பாவை
இயல் கற்றன்ன ஒதுக்கினள் வந்து,
பெயல்அலைக் கலங்கிய மலைப்பூங் கோதை
இயல்எறி பொன்னின் கொங்குசோர்பு உறைப்ப,
தொடிக்கண் வடுக்கொள முயங்கினள்,
வடிப்புறு நரம்பின் தீவிய மொழிந்தே! (அகம். 142: 20–26)

பரணர்

பொருள்:

கடல் மீன்கள் உறங்கும் நள்ளிரவில் அழகாக வரையப்பட்ட ஓவியப் பாவை நடந்து வருவது போல, தலைவி மெல்ல நடந்து தனது குறியிடத்திற்கு வந்தாள். அவள், மழையால் அலைக்கப்பட்ட மலைப் பூக்களால் ஆகிய மாலையணிந்திருந்தாள். அந்த மாலையில், கொல்லரது உலைக்களத்தில் அடிக்கும்போது தெறித்து விழும் பொன்னைப் போல் தேன்துளி சிதறியது. யாழிசை போல் இனிய மொழி பேசி, மார்பில் அணிந்த வளையம் என் மார்பில் வடு ஏற்படுத்தும்படியாக என்னைத் தழுவினாள்.

In this dark midnight, came here our sweetheart
And embraced us so passionately
That her bosom left on our body their impress;
Her words sweet like the strumming of a *yaal,*
And her wreaths with blooms dripping with honey.



ஏ. வெரோனிகா
தியாகராஜர் கல்வியியல் கல்லூரி, மதுரை.



ச. விஜிபாபு
ஓவியர், சேலம்.

25
செப்டம்பர்
September

ஆயர் திருமணம்

தருமணல் தாழப் பெய்து, இல் பூவல் ஊட்டி,
எருமைப் பெடையொடு, எமர் ஈங்கு அயரும்
பெருமணம் எல்லாம்! (கலி. 114: 12–14)

சோழன் நல்லுருத்திரன்

பொருள்:

கொண்டுவந்து குவித்த மணலைப் பரப்பி, இல்லத்தினைச் செம்மண் பூசி அலங்கரித்து, தெய்வமாய்ப் பெண் எருமையின் கொம்பை வைத்து, எம் உறவினர் திருமணத்தை நடத்தி வைக்கின்றனர்.

Fetching sands and spreading them out,
Painting the house with red–earth
Placing the horns of female buffaloes for worship–
With these, the preparations for the marriage
Are being made by my kin.

செப்டம்பர் SEPTEMBER 26



கு. கோவிந்தராஜு
ஓவிய ஆசிரியர், ஓசூர்.

அங்கு வந்தால் கூடுவேன்

யாய் வருக ஒன்றோ! பிறர் வருக! மற்றுநின்
கோ வரினும் இங்கே வருக! தளரேன் யான்,
நீ அருளி நல்கப் பெறின்!
நின்னை யான் சொல்லினவும் பேணாய்! நினைஇ,
கனைபெயல் ஏற்றின் தலை சாய்த்து, எனையதூஉம்
மாறுஎதிர் கூறி, மயக்குப்படுகுவாய்!
கலத்தொடு யாம் செல்வுழி நாடி, புலத்தும்
வருவையால் நாண்இலி நீ! (கலி. 116: 10–17)

சோழன் நல்லுருத்திரன்

பொருள்:

தலைவன்: நீ, என்மீது அருள்கொண்டு என்னைக் கூடுவதற்கு உடன்பட்டால், உன் தாய் வந்தாலும் வரட்டும், அல்லது வேறு யார் வந்தாலும் வரட்டும், அவர்கள் அல்லாமல் உன்னுடைய தந்தையே வந்தாலும் வரட்டும். நான் அஞ்சமாட்டேன்.

தலைவி: நான் கூறியவற்றைப் பற்றிக் கவலைகொள்ளாமல் கூடலையே நினைத்து, பெருமழையின்போதும் தலையைச் சாய்த்து நிற்கும் எருது போல நிற்கிறாய். என்ன சொன்னாலும் அதனை மறுத்துப் பேசி என்னை மயக்குகிறாய். வெட்கம் இல்லாத நீ, நாளைக்கு நான் பால் கொண்டுபோகும்போது மாடு மேய்க்கும் இடத்திற்கு வா!.

Hero: "Were you to bless me with your love,
wouldn't halt whoever comes our way,
Be it mother or an stranger, or be it even your father".

Heroine: "Unmindful of all I've told, you go obsessed with passion,
Should you come pursuing me, to the field too,
As I go carrying the pitcher of milk?"

27
செப்டம்பர்
September

மணந்துவிடு சேர்ப்பனே

இறைவளை நெகிழ்ந்த எவ்வநோய் இவள் தீர,
உரவுக் கதிர் தெறும் என ஓங்கு திரை விரைபு, தன்
கரை அமல் அடும்பு அளித்தாஅங்கு
உரவுநீர்ச் சேர்ப்ப! அருளினை அளிமே! (கலி. 127: 19–22)
நல்லந்துவனார்

பொருள்:
தலைவனே! கடற்கரையில் படர்ந்துள்ள அடும்புக் கொடியைச் சூரியன் சுடும் என்று, அதன் மேல் அலையானது நீர்த் துளிகளைத் தெளிக்கும். அதைப்போல் உன்னைப் பிரிந்ததால் தன் வளைந்த தோள்வளை விழும்படி வருந்தும் தலைவியின் துன்பத்தைப் போக்கும் வகையில் மணம் செய்ய வேண்டும்.

Like the waves rushing forth to shelter
The *atumpu* vine from the sun's scorching rays,
Do extend the grace of your love
For her to end her passion's torment
Which saw her bangles slip off.

ப.அ. ரகுராமன்
அண்ணா பல்கலைக்கழகம், சென்னை.

செப்டம்பர் SEPTEMBER 28

மதங்கொண்ட யானை

இருதலைப் பணிலம் ஆர்ப்ப, சினம் சிறந்து,
கோலோர்க் கொன்று, மேலோர் வீசி,
மென்பிணி வன்தொடர் பேணாது காழ் சாய்த்து,
கந்து நீத்து உழிதரும் கடாஅ யானை! (மதுரை. 380–383)

மாங்குடி மருதனார்

பொருள்:
முன்னும் பின்னும் சங்குகள் ஒலிக்க, சினம் மிகுந்து
குத்துக்கோல்காரரைக் கொன்று, மேலிருக்கும் பாகரை வீசி,
கால்சங்கிலியை மதிக்காமல், கட்டுத்தறியை முறித்து,
கம்பத்தை விட்டுச் சென்று, மதுரை நகரில் சுழன்று திரியும்
மதங்கொண்ட யானை.

The elephant that is in heat,
Kills those who use the prods enraged,
Flings down its keepers, breaks its pegs
Regarding not the chains with which it is tied,
And moves about beyond its post.

ஞா. கமலவேல்
ஓவியர், திருவாரூர்.

29
செப்டம்பர்
September

பழுது பார்க்கப்படும் மரக்கலம்

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

பெருங்கடல் நீந்திய மரம்வலி உறுக்கும்
பண்ணிய விலைஞர்! (பதிற்று. 76: 4–5)
அரிசில் கிழார்

பொருள்:

கடலில் காற்றும் மழையும் மோதியதால் மரக்கலத்தின் உறுதி தளர்ந்தது. அதைக் கரைக்குக் கொண்டு வந்த கடல் வணிகர் அதன் பழுதினைப் போக்கினர்.

The trade ships that ply in the oceans
Are fixed by merchants after its return,
As they are battered by strong winds and waves.

செப்டம்பர் 30
SEPTEMBER 30

பு. கீர்த்திவாசன்
வேலம்மாள் வித்யாலயா பள்ளி, சென்னை.

மதுரை அறம்கூறு அவையம்

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி,
செற்றமும் உவகையும் செய்யாது காத்து,
ஞெமன் கோல் அன்ன செம்மைத்து ஆகி,
சிறந்த கொள்கை அறம் கூறு அவையம்! (மதுரை. 489–492)

மாங்குடி மருதனார்

பொருள்:

அறம் நாடி வந்தோரின் அச்சத்தையும் வருத்தத்தையும் நீக்கி, சினமும் மகிழ்ச்சியும் கொள்ளாமல் சமநிலையில் காத்து, துலாக்கோலைப் போன்ற நடுவுநிலைமையுடன் அறத்தைக் கொள்கையாகக் கொண்டோர் விளங்கும் அறம் கூறும் அவையம்.

In the courts of Madurai, there are just judges who expound the law
And from the suitors' minds remove all fear and greed.
With fair impartial minds they ponder things
As though they weighed them in a pair of scales.

01

அக்டோபர்

October

முள்ளம்பன்றி வேட்டையாடிய கானவர்

வன் கைக் கானவன் வெஞ்சிலை வணக்கி,
உளமிசைத் தவிர்த்த முளவுமான் ஏற்றையொடு,
மனைவாய் ஞமலி ஒருங்கு புடை ஆட,
வேட்டுவலம் படுத்த உவகையன், காட்ட
நடுகால் குரம்பைத் தன் குடிவயின் பெயரும்! (நற். 285: 3–7)

மதுரைக் கொல்லன் வெண்ணாகனார்

பொருள்:

வலிய கையையுடைய கானவன், தன் கொடிய வில்லை வளைத்து அம்பைத் தொடுத்து ஆண் முள்ளம்பன்றியைக் கொன்றான். அதனை எடுத்துக்கொண்டு வேட்டையில் வெற்றியடைந்த மகிழ்ச்சியோடு காட்டின் உள்பகுதியில் உள்ள தன் சிறிய குடிலுக்குள் சென்றான். மனையிலிருந்த நாய்கள் அவனைக் கண்டு சுற்றி விளையாடின.

A strong-handed forester splits the chest of a porcupine
With his dart and takes home its body,
His heart overflowing with the joy of triumph!
As he reaches his hut, all his pet-dogs
Gleefully bark and surround him.

ம.ச. ஜோசப்
ஓவிய ஆசிரியர் (ஓய்வு), சேலம்.

அக்டோபர் OCTOBER 02

இறகினை அம்பில் கட்டும் வேட்டுவர்

கொன்று ஆற்றுத் துறந்த மாக்களின் அடுபிணன்
இடுமுடை மருங்கில், தொடும் இடம் பெறாஅது,
புனிற்று நிரை கதித்த, பொறிய முதுபாறு
இறகு புடைத்து இற்ற பறைப் புன்தூவி
செங்கணைச் செறித்த வன்கண் ஆடவர்! (நற். 329: 2–6)
மதுரை மருதங்கிழார் மகனார் சொகுத்தனார்

பொருள்:
பாலை நிலத்தின் வழியில் கொலைசெய்யப்பெற்றவர்களின் பிணங்கள் புதைக்கப்படாமல் நாற்றம் வீசியபடி, அங்கங்கே கிடந்தன. அவற்றின் அருகில் இருந்த புள்ளிகளை உடைய, புதிதாகக் குஞ்சு பொரித்த பருந்து, அந்தப் பிணங்களை உண்ணாமல் சிறகடித்துப் பறக்கும். அப்போது உதிர்ந்த அதன் இறகினை எடுத்த கானவன், தனது அம்பின் ஒரு பக்கத்தில் இறுகக் கட்டினான்.

Unable to feed upon the corpses of the wayfarers,
Killed and left unburied by the brigands;
An aged vulture sheds soft feathers as it flies away from the stink,
The brigands collect them and fasten to their blood–stained darts.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

03

அக்டோபர்

October

தாயானாள் என் தலைவி

புதல்வன் ஈன்றெனப் பெயர் பெயர்த்து, அவ்வரித்
திதலை அல்குல் முதுபெண்டு ஆகி,
துஞ்சுதியோ, மெல்அம்சில் ஓதி? என,
பல்மாண் அகட்டில் குவளை ஒற்றி,
உள்ளினென் உறையும் என்கண்டு, மெல்ல
முகைநாண் முறுவல் தோற்றி,
தகைமலர் உண்கண் கை புதைத்ததுவே! (நற். 370: 5–11)

உறையூர்க் கதுவாய்ச் சாத்தனார்

பொருள்:

புதல்வனைப் பெற்றுத் தந்ததனால் தாய் என்று பெயர் பெற்று, அழகிய வரிகளுடன் வெண்புள்ளி போன்ற தேமலையும் உடைய அடிவயிற்றினைக் கொண்டவள் படுத்திருந்தாள். அப்போது அங்கே வந்த தலைவன், 'முதுமை அடைந்ததால்' இவ்வாறு தூங்குகிறாயோ? என்று கூறியவாறே அவளது வயிற்றில் குவளை மலரால் ஒற்றினான். அவள் கண் விழித்து, முல்லையின் மொட்டுப்போல் புன்னகை பூத்து, அழகிய மைபூசப்பெற்ற கண்களைக் கையால் மூடிக்கொண்டாள்.

My beloved blessed our clan with a son;
Praising her, I stroked her stomach with a bloom of *kuvalai*;
She smiled gently with her teeth shining, like the *mullai* buds.
And covered her kohl–rimmed eyes with her hands.

செ. தங்கவேலு
ஓவியர், சேலம்.

அக்டோபர் OCTOBER 04

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை.

ஆதரவு அற்றதாகியது அருள்

பெயல் மழை துறந்த புலம்பு உறு கடத்துக்
கவை முடக் கள்ளிக் காய் விடு கடு நொடி
துதை மென் தூவித் துணைப் புறவு இரிக்கும்
அத்தம் அரிய என்னார், நத்துறந்து,
பொருள்வயின் பிரிவார்ஆயின், இவ் உலகத்துப்
பொருளே மன்ற பொருளே,
அருளே மன்ற ஆரும் இல்லதுவே! (குறுந். 174)

வெண்பூதி

பொருள்:

மழை பெய்யாத பாலை நிலத்தில் கள்ளிச் செடியின் காய் வெடித்துச் சிதறும்போது எழும் சத்தத்தால் இணைப் புறாக்கள் அஞ்சி ஓடும். இத்தகைய கொடிய பாலை வழியில் தனியாகப் போவது பாதுகாப்பற்றது என்று கருதாமல், நம்மை விட்டுப் பொருள் தேடிச் சென்றான் தலைவன். அப்படியென்றால், இவ்வுலக வாழ்க்கைக்கு எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படும் பொருள்தான் உயர்வானதோ? அருளை ஏற்பார் யாரும் இல்லையோ?

Irrespective of hardships faced on the parched way
Where a pigeon couple part away
On hearing the sound of the *kalli* fruit crack,
If he still goes away in search of wealth,
Then in this world wealth is all that matters;
Love doesn't matter at all.

05
அக்டோபர்
October

அதுதான் எங்கள் ஊர்

கல்லென் கானத்துக் கடமா ஆட்டி
எல்லும் எல்லின்று! ஞமலியும் இளைத்தன!
செல்லல் ஐஇய! உது எம் ஊரே! (குறுந். 179: 1–3)

குட்டுவன் கண்ணன்

பொருள்:

ஆரவாரமுடைய காட்டில் குறவர்கள், கடமாவை வேட்டையாடி முடிக்கவே அன்றைய நாள் கழிந்தது. உடன்வந்த வேட்டை நாய்களும் சோர்ந்தன. இவ்வேளையில் செல்ல வேண்டாம். ஐய! எம் ஊர் அதோ இருக்கிறது.

Having hunted bison in the noisy forest the whole day
The hunting dogs are tired; daylight too has dimmed;
My Lord! Our town is nearby.
(An invitation to stay at her town)



வே. சங்கீதா
ஓவியர், சேலம்.

அக்டோபர்
OCTOBER
06

காண்பார் அல்லவா தோழி!

சென்ற நாட்ட, கொன்றைஅம் பசுவீ
நம்போல் பசக்கும் காலை, தம்போல்
சிறுதலைப் பிணையின் தீர்ந்த நெறிகோட்டு
இரலை மானையும் காண்பர்கொல், நமரே! (குறுந். 183: 1–4)

ஔவையார்

பொருள்:

நம்மைப் பிரிந்து தலைவர் சென்ற நாட்டில், கார் காலத்தில் நம்மைப் போல் பசலை படர்ந்த கொன்றை மரத்தின் மலர்களையும், சிறிய தலையையுடைய பெண்மானைப் பிரிந்த முறுக்கிய கொம்புகளைக் கொண்ட இரலை ஆண் மானையும் அவர் காண்பார் அல்லவோ, தோழி!

In the town he has gone to, yellow flowers bloom
Just like my freckles, during monsoon;
A blackbuck with gnarled horns stands
Separated from it's small headed doe.
Will my lover see them?

அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

07

அக்டோபர்

October

கண் வலையில் அகப்பட்ட என் நெஞ்சம்



ஜெ. மணிகண்டன்
கவின் கலை ஆசிரியர் (ஓய்வு)
புதுச்சேரி.

...மாண்தகை நெஞ்சம்
மயில்கண் அன்ன மாண் முடிப் பாவை
நுண் வலைப் பரதவர் மடமகள்
கண் வலைப் படூஉம் கானலானே! (குறுந். 184: 4–7)

ஆரிய அரசன் யாழ்ப் பிரமதத்தன்

பொருள்:

மயிலின் தோகையைப் போன்ற நீண்ட கூந்தலை உடையவளும், செம்மையாக உருவாக்கப்பெற்ற பாவை போன்றவளுமான அவள், நுண்ணிய வலைகளையுடைய பரதவரின் மகள். இளமை பொருந்திய அவளது கண் வலையில் அகப்பட்டு அங்குள்ள கடற்கரைச் சோலையிலேயே என்னுடைய நெஞ்சம் தங்கிவிட்டது.

She's the daughter of fisherfolk with fine nets;
My blessed heart has been snared
By the eyes of that beauty,
With hair that's dark like eyes in peacock feathers.

அக்டோபர் OCTOBER 08

அ. அருளரசன்
அரசு கவின் கலைக் கல்லூரி சென்னை.

இன்பநுகர்வும் துறவும்

கறங்குவெள் அருவி ஏற்றலின், நிறம் பெயர்ந்து
தில்லை அன்ன புல்லென் சடையோடு
அள்இலைத் தாளி கொய்யுமோனே,
இல்வழங்கு மடமயில் பிணிக்கும்
சொல்வலை வேட்டுவன் ஆயினன், முன்னே! (புறம். 252)

மாற்பித்தியார்

பொருள்:

வெண்மையான அருவி நீர் படுவதால் தில்லை மரத்தின் இலையின் நிறம் பழுப்பு நிறமாக மாறும். அப்படிப் பழுப்பு நிறம் பெற்ற சடை முடியுடன்இப்போது தாளி இலையைப் பறிக்கிறார் துறவி. இவரே, முன்பு தன் மனைவியைக் கவரும் வகையில் சொல்வலை வீசி வேட்டையாடுபவனாக விளங்கினார்.

The roaring white waterfalls dulled
His braided hair to the color of *thillai* leaves.
He who now gathers fresh leaves in a forest as an ascetic,
Once hunted his homebound naïve woman with his words.

09

அக்டோபர்

October

வென்று வந்தான்

யார்கொலோ, அளியன் தானே? தேரின்
ஊர்பெரிது இகந்தன்றும் இலனே! அரண்எனக்
காடுகைக் கொண்டன்றும் இலனே! காலைப்
புல்லார் இனநிரை செல்புறம் நோக்கி,
கையின் சுட்டிப் பைஎன எண்ணி,
சிலையின் மாற்றியோனே! (புறம். 257: 5–10)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:
யார் அவன்? இரங்கத்தக்கவன்! ஆராய்ந்து பார்த்தால் இவன் தன் ஊரை விட்டுச் சென்றதும் இல்லை. காட்டிற்குச் சென்று மறைந்துகொண்டதும் இல்லை. இன்று காலையில் பகைவரின் ஆநிரைகள் செல்லும் வழியைப் பார்த்து அவற்றைக் கவர்வது பற்றி எண்ணி, மீட்க வந்த கரந்தை வீரர்கள் அனைவரும் நடுகல் ஆகும்படியாகப் போரிட்டு அழித்து வந்துள்ளான்.

He hadn't stepped out of his town
Nor camouflaged himself in the forest till now;
Yet, he watched and counted the enemy's cattle,
And seized them with the help of his bow.

அ. அருளரசன்
அரசு கவின் கலைக் கல்லூரி
சென்னை.

அக்டோபர் OCTOBER 10

முன்னெச்சரிக்கையுடன் செல்க!

ஏறுஉடைப் பெருநிரை பெயர்தர, பெயராது
இலைபுதை பெருங்காட்டுத் தலைகரந்து இருந்த
வல்வில் மறவர் ஒடுக்கம் காணாய்!
செல்லல், செல்லல், சிறக்க நின் உள்ளம்! (புறம். 259: 1–4)

கோடை பாடிய பெரும்பூதனார்

பொருள்:

ஆநிரைகளைக் கவர்ந்து வரும் வீரர்கள் அந்த ஆநிரைகளின் பின்னால் செல்லாமல், மீட்க வரும் கரந்தை வீரரை எதிர்கொள்வதற்காக இலை சூழ்ந்த காட்டில் தங்கள் தலையை மறைத்துக்கொண்டு வில்லுடன் பதுங்கி இருப்பர். எனவே காவல் புரிவோரைக் கருதாமல் செல்லற்க! உனது முயற்சி வெற்றி பெறட்டும்.

O' warrior, wait, don't rush forward;
Beware of skilled archers who stay back
Hiding in the leafy forest, as the herd
Of bulls and cows they stole move ahead.



கோ. மதிஸ்குமார்
ஓவியர், இலங்கை.

அ. ஜான் ரிச்சர்டு
அரசு கவின் கலைக் கல்லூரி
சென்னை.

11
அக்டோபர்
October

சூளுரைத்து வென்றான்

முன்ஊர்ப் பூசலின் தோன்றி, தன்னூர்
நெடுநிரை தழீஇய மீளியாளர்
விடுகணை நீத்தம் துடி புணை ஆக,
வென்றி தந்து கொன்றுகோள் விடுத்து
வையகம் புலம்ப வளைஇய பாம்பின்,
வைஎயிற்று உய்ந்த மதியின் மறவர்,
கையகத்து உய்ந்த கன்றுடைப் பல்லான்
நிரையொடு வந்த உரையன்! (புறம். 260: 12–19)
வடமோதங்கிழார்

பொருள்:

போரில், தன் ஊரின் ஆநிரைகளைக் கவர்ந்த வீரர்களால் தொடர்ந்து எய்யப்பட்ட அம்பு வெள்ளத்தை, தன் உடுக்கையையே புணையாகக் கொண்டு தடுத்துக் கடந்தான். பகைவரைக் கொன்று, அவர்கள் கவர்ந்துசென்ற ஆநிரைகளை மீட்டான். உலகில் உள்ளோர் வருந்தும்படியாக விண்ணில் பாம்பிடம் மாட்டிய நிலவு மீண்டதைப் போலக் கன்றையுடைய ஆநிரைகளுடன் வருவேன் என்ற அவனுடைய சொல் உண்மையாகும்படி மீட்டு வந்தான் அந்தக் கரந்தை வீரன்.

When the next towns people seized his town's cattle,
He went to battle, crossed their flood of arrows
With just his drum as a raft, felled their chief
And brought back the cattle as he promised.

அக்டோபர் 12
OCTOBER

ரா. கார்த்திக்ராஜா
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஊர் விழாக்கோலம் பூணட்டும்

நறவும் தொடுமின்! விடையும் வீழ்மின்!
பாசுவல் இட்ட புன்கால் பந்தர்ப்
புனல்தரு இளமணல் நிறையப் பெய்ம்மின்!
ஒன்னார் முன்னிலை முருக்கி, பின்நின்று,
நிரையொடு வரூஉம் என்னைக்கு
உழையோர் தன்னிலும் பெருஞ்சாயலரே! (புறம். 262)

மதுரைப் பேராலவாயார்

பொருள்:

பகைவரின் தூசிப்படையை வீழ்த்தித் திரும்பும் போது தன் படைக்குப் பின்னால் ஆநிரையுடன் வருகிறான் என் தலைவன். அவனுடன் வருவோர் அவனை விடவும் களைப்புடன் வருவர். எனவே மதுவைப் பிழிந்து வையுங்கள். ஆட்டுக் கடாயை வெட்டுங்கள். பசுமையான தழையினால் வேயப்பட்ட கால்நாட்டப்பட்ட பந்தலின்கீழ் நீரால் அடித்துவரப்பெற்ற ஆற்றுமணலை நிறையப் பரப்புங்கள்.

Strain the toddy! Slaughter a male goat!
In a pavilion with pale columns, roofed over with green leaves,
Spread the fresh sand brought by streams.
My lord is approaching now with a herd.
But more tired than him are the men beside him
Who had ruined the enemy vanguard.

13
அக்டோபர்
October

ஆநிரைகளை மீட்ட மாவீரன் பண்ணன்

ஊர்நனி இறந்த பார்முதிர் பறந்தலை,
ஓங்குநிலை வேங்கை ஒள் இணர் நறுவீப்
போந்தை அம் தோட்டின் புனைந்தனர் தொடுத்து,
பல்ஆன் கோவலர் படலை சூட்ட
கல்ஆயினையே! (புறம். 265: 1–5)
சோணாட்டு முகையலூர்ச் சிறுகருந்தும்பியார்

பொருள்:

உயர்ந்து வளர்ந்திருக்கும் வேங்கை மரத்தின் ஒளியும் மணமும் நிறைந்த மலர்களைப் பறித்து, அதனைப் பனை நாரினால் பல ஆநிரைகளைக் கொண்ட ஆயர்கள் தொடுத்தனர். அவர்கள், அந்த மாலையை உனக்குச் சூட்டி வணங்குமாறு ஊருக்கு வெளியே உள்ள வறண்ட நிலத்தில் நடுகல்லாக நிற்கிறாயே!

O' my lord! You have turned to a hero stone now,
In the wasteland faraway from town,
Worshipped by cattle herders who garland it
With bright fragrant flowers of *vengai* tree.

ர. ஆர்த்தி
அரசு கவின் கலைக் கல்லூரி
சென்னை.

அக்டோபர் 14
OCTOBER 14

அந்தோ! என் தலைவனின் குதிரை

மா வாராதே! மா வாராதே!
எல்லார் மாவும் வந்தன, எம்இல்
புல்லுளைக் குடுமிப் புதல்வன் தந்த
செல்வன் ஊரும் மா வாராதே!
இருபேர் யாற்ற ஒருபெருங் கூடல்
விலங்கிடு பெருமரம் போல,
உலந்தன்று கொல், அவன் மலைந்த மாவே! (புறம். 273)

எருமை வெளியனார்

பொருள்:

என் தலைவனின் குதிரை வரவில்லை! என் தலைவனின் குதிரை வரவில்லை! மற்றோர் சென்ற குதிரைகள் எல்லாம் திரும்பி விட்டன. சிறிய குடுமியைக் கொண்ட என் மகனின் தந்தை சென்ற குதிரை மட்டும் வரவில்லை. இரு ஆறுகள் ஒன்றுசேருமிடத்தில் அந்த நீரைத் தடுப்பதற்காகக் குறுக்கே போடப்பட்ட பெரிய மரமானது நிலை குலைந்து வீழ்ந்ததைப் போல, என் தலைவன் போருக்குச் சென்ற குதிரை இறந்து வீழ்ந்தது போலும்!

His horse is not coming back!
Everyone else's horses have come back! The one that belongs
To the man of wealth who fathered the son of our house,
Has not come back! Like a huge tree that might have been caught
At the meeting place of two rivers of great size,
Has the horse, that he was fighting on, fallen?

ஜெ. ஜீவகன்
ஓவியர், சேலம்.

சி. தெய்வேந்திரன்
ஓவியர், மதுரை.

15
அக்டோபர்
October

பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

ஆவும் ஆன்இயல் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடையீரும் பேணித்
தென்புலம் வாழ்நர்க்கு அருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்,
எம்அம்பு கடிவிடுதும்! நும்மரண் சேர்மின்! (புறம். 9: 1–5)
நெட்டிமையார்

பொருள்:

பசுக்களும் பசுவின் இயல்புடையோரும் பெண்களும் நோயுடையோரும் இறந்தோருக்கு ஈமக்கடன் செய்யும் ஆண்மக்களைப் பெறாதோரும் பாதுகாப்பான இடத்திற்குச் செல்லுங்கள். நாங்கள் எங்கள் அம்புகளை விரைவாகச் செலுத்தப்போகிறோம்.

Cows, honourable men with the nature of cows, women, diseased,
And those living with no sons to perform the precious last rites,
Take refuge! We are ready to shoot volleys of arrows!

அக்டோபர் 16
OCTOBER

க. சக்தி
ஓவியர், சென்னை.

ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் பெறும் திறை

வென்று கலம் தரீஇயர் வேண்டுபுலத்து இறுத்து, அவர்
வாடா யாணர் நாடுதிறை கொடுப்ப,
நல்கினை ஆகுமதி, எம்என்று அருளிக்
கல்பிறங்கு வைப்பின் கடறு அரை யாத்த! (பதிற்று. 53: 1–4)

காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்

பொருள்:

பகைவரிடம் செல்வங்களைத் திறையாகப் பெறுவதற்குத் தகுந்த இடமாக அவர்களின் நாட்டிற்கு அருகிலேயே போய்த் தங்குவாய்! அதனால் அப்பகைவர் உன்னை வெல்வது அரிது என்று எண்ணி, 'யாம் நுமக்குத் தரும் இந்த அணிகலன்களையும் குறையாத வருவாயை உடைய எங்கள் நாடுகளையும் திறையாகப் பெற்று, அருள் புரியவேண்டும்' என்று பணிவாக வேண்டுவர். அவர்களின் நாட்டை நீ அவர்களுக்கே திருப்பி அளித்துவிட்டு, மலைகளும் காடுகளும் நிறைந்த உன் பழமையான ஊருக்குத் திரும்புவாய்!

You invade enemy countries and stay put there
To seize their wealth; those Kings hand over
Their entire country as tribute and plead mercy;
Accepting it you return to your old town in the lofty hill.

17

அக்டோபர்

October

மிகச் சிறந்த போர் வீரன் அவன்

மேல்வரும் களிற்றொடு வேல்துரந்து, இனியே,
தன்னும் துரக்குவன் போலும் ஒன்னலர்
எஃகுடை வலத்தர் மாவொடு பரத்தர,
கையின் வாங்கி, தழீஇ,
மொய்ம்பின் ஊக்கி, மெய்க்கொண்டனனே! (புறம். 274: 3–7)

உலோச்சனார்

பொருள்:

தன்னைக் கொல்ல வந்த யானையின் நெற்றியில் வேலைப் பாய்ச்சினான். பகைவர்கள் குதிரைமீதமர்ந்து அவனை வேலால் தாக்கும்போது அவ்வேலைப் பிடுங்கி அவர்களைத் தாக்கி, குதிரையுடன் வீழ்த்தினான். பகைவரின் தலைவனைத் தோளால் மோதி, கையினால் தூக்கிப்பிடித்தபடி நின்றான்.

He hurls his spear at the elephant charging at him,
Catches the spear thrown at him by the enemy
And hurls it back at them; He fights their chief,
Lifts him up and slams down, killing him.

ஜோ. ராபின் இஸ்ரேல்
ஓவியர், தஞ்சாவூர்.

அக்டோபர் OCTOBER 18

சூரர மகளிர் போன்றவள்!

கடல்கோடு செறிந்த, வளைவார் முன்கை,
கழிப்பூத் தொடர்ந்த இரும்பல் கூந்தல்,
கானல் ஞாழல் கவின்பெறு தழையள்
வரையர மகளிரின் அரியள் என்
நிறையரு நெஞ்சம் கொண்டு ஒளித்தோளே! (ஐங். 191)

அம்மூவனார்

பொருள்:

கடற்கரையில் அலையினால் கரையில் சேர்க்கப்பட்ட சங்கினை அறுத்து உருவாக்கப்பட்ட வளையல் அணிந்த முன் கையையும், கழியில் மலர்ந்த மலர்களால் ஆன மாலை அணிந்த கூந்தலையும், கடற்கரையில் நின்ற ஞாழலின் தழையால் செய்த உடையையும் உடையவள். சூரர மகளிர் போல் பெறுவதற்கு அரிய அவள், என் உள்ளத்தை எடுத்து எங்கோ மறைத்துக்கொண்டாள்.

The damsel, who has disappeared after taking my resolute heart,
Has tight bangles, made of sea–conch, on her long wrists.
She who wears the wreathed blooms of lagoon on her dark and manifold tresses
Has dressed in fine attire of *gnaalal* leaves from the littoral grove,
And is rare to attain like the nymphs residing in the hills.

ஜா. கேத்ரின் ஜெசிகா
அரசு கவின் கலைக் கல்லூரி
சென்னை.



அ. மோகன்
பாவை பொறியியல் கல்லூரி, நாமக்கல்.

19
அக்டோபர்
October

மலைநாடனைக் கருதி வாட்டம் ஏன்?

குறுங்கை இரும்புலிக் கோள்வல் ஏற்றை,
நெடும்புதல் கானத்து மடப்பிடி ஈன்ற
நடுங்கு நடைக் குழவி கொளீஇய, பலவின்
பழந்தூங்கு கொழுநிழல் ஒளிக்கும் நாடற்கு,
கொய்தரு தளிரின்வாடி, நின்
மெய் பிறிதாதல் எவன்கொல்? அன்னாய்! (ஐங். 216)

கபிலர்

பொருள்:

தோழியே! குறுகிய முன் கால்களையுடைய பெரிய ஆண் புலி, பெரிய புதர்கள் நிறைந்த காட்டில், யானை ஈன்ற கன்றைப் பற்றுவதற்காக, பழங்கள் தொங்கும் பலாமரத்தில் பதுங்கியிருக்கும். அந்த மலை நாடனுக்காக, நீ கொய்த தளிர்போல வாட்டம் அடைந்து காணப்படுவது ஏன்?

Oh mother! why is your body without luster,
Like a plucked tender sprout that has wilted?
Is it because of your lover
From the country where a big, murderous male tiger
With short front legs hides in the dense shade
Of a jackfruit tree bearing fruits,
And stalks a young tottering calf of a she–elephant
In the forest with tall bushes?

அக்டோபர் OCTOBER 20

ரா. அர்ச்னா
மரபுக் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி
மாமல்லபுரம்.

அந்தோ! என்ன செய்துவிட்டேன்

கூழுடைத் தந்தை இடனுடை வரைப்பின்,
ஊழ்அடி ஒதுங்கினும் உயங்கும் ஐம்பால்
சிறுபல் கூந்தல் போது பிடித்து அருளாது,
எறிகோல் சிதைய நூறவும், சிறுபுறம்,
எனக்கு உரித்து என்னாள், நின்றஎன்
அமர்க்கண் அஞ்ஞையை அலைத்த கையே! (அகம். 145: 17–22)
கயமனார்

பொருள்:

நெல் முதலிய தானிய வளம் உடையவன் இவளுடைய தந்தை. அவனது இல்லத்தில் மெல்ல நடந்தாலும் வருந்தும் இயல்புடைய தலைவி, ஐந்து வகையாகப் பின்னி முடிக்கப்படும் கூந்தலை உடையவள். அக்கூந்தலைப் பற்றி, இரக்கம் இல்லாமல் கோலால் முதுகில் அடித்தேன். அவள், 'இது எனக்குரிய முதுகு. அடிக்காதே!' என்று கூறாமல் நின்றாள். அத்தகையவளைத் துன்புறுத்திய என் தீய கைகள் துன்பத்தை அடைக!

In her father's house, abounding in food–stuffs,
When my daughter walked but a few steps, felt pained;
(When once) I caught hold of her tresses and mercilessly beat her,
She stood unflinching, as though the beaten back was someone else's.
May those cruel hands of mine which beat her undergo sufferings.

21
அக்டோபர்

October

பறவைகள் விரும்பிய ஆய் எயினன்

கடும்பரிக் குதிரை ஆஅய் எயினன்
நெடுந்தேர் மிஞிலியொடு பொருது களம்பட்டென,
காணிய செல்லாக் கூகை நாணி,
கடும்பகல் வழங்கா தாஅங்கு! (அகம். 148: 7–10)

பரணர்

பொருள்:

பறவைகளைக் காக்கும் ஆய் எயினன் குதிரையில் விரைந்து செல்லும் இயல்புடையவன். அவன், மிஞிலியோடு போர் செய்து போர்க்களத்தில் இறந்தான். அத்தகையவனைப் பறவைகள் பகல் வேளையில் போய்ப் பார்த்தன. பகலில் பார்வை இல்லாத கூகையால் அவனைப் பார்க்க முடியவில்லையே என்று வருந்தியது.

Grieved the owl in its hole alone in broad day–light
As it could not attend the funeral (during day time)
When Ay Eyinan fell dead
When he fought with Minili of tall chariots.

பா. ப்ரணவ்
ஓவியர், மாமல்லபுரம்.

அக்டோபர் OCTOBER 22

முசிறித் துறைமுகம்

...சேரலர்
சுள்ளிஅம் பேரியாற்று வெண்நுரை கலங்க,
யவனர் தந்த வினைமாண் நன்கலம்
பொன்னொடு வந்து கறியொடு பெயரும்
வளம்கெழு முசிறி! (அகம். 149: 7–11)
எருக்காட்டூர்த் தாயங்கண்ணனார்

பொருள்:

சேர மன்னரின் சுள்ளி என்ற பேரியாற்றின் நுரை சிதற, யவனர் கொண்டு வந்த மரக்கலம், பொன்னுடன் வந்து மிளகுடன் மீண்டு செல்லும். இத்தகைய வளம் வாய்ந்தது முசிறித் துறைமுகம்.

Muciri is a prosperous city
To which the vessels of the Yavanas
Come laden with gold and return with pepper,
Agitating the foaming waters of the great *Sulli* river of the Chera kings.

தா. காட்சன் டேனியல்
ஸ்ரீ அன்னை காமாட்சி இசை மற்றும் கவின் கலைக் கல்லூரி, சென்னை.



பா. சிவானி
லலித் கலாக்ஷேத்ரா, கோயம்புத்தூர்.

23
அக்டோபர்
October

நீயும் நடுங்கினாயோ தோழி?

ஒடுங்கு ஈர் ஓதி நினக்கும் அற்றோ?
நடுங்கின்று, அளித்து, என் நிறை இல் நெஞ்சம்
... கரவாது
ஒல்லென ஒலிக்கும் இளையரொடு வல்வாய்
அரவச் சீறூர் காண,
பகல் வந்தன்றால், பாய்பரி சிறந்தே! (அகம். 160: 1–2, 15–18)

குமுழிஞாழலார் நப்பசலையார்

பொருள்:

பாய்கிற குதிரை பூட்டப்பெற்ற தலைவனது தேர், ஊரில் உள்ள சிறுவர்கள் ஆரவாரம் செய்யும்படியும், வாயால் பழித்துப் பேசும் பெண்கள் பார்க்கும் வகையிலும் பகலிலே வந்தது. இதனைக் கண்டு இது நன்மையாக இருக்கலாம் என்று எண்ணாமல், என் நெஞ்சம் நடுங்குகிறது. கரிய கூந்தலையுடைய தோழியே! உன் நெஞ்சமும் நடுங்கியதோ?

The chariot of our lover now visits us by broad daylight.
This is witnessed by the gossipy folks of our small village.
At this, my agitated heart trembles;
O my friend of well–combed tresses! Is it so with you too?

அக்டோபர்
OCTOBER 24

வி.சு. ஆதித்தியன்
கேம்பிரிட்ஜ் மெட்ரிக். மேல்நிலைப்பள்ளி
அம்பாசமுத்திரம்.

எருமையிடம் பால் உண்ணும் யானைக் கன்று

கயந்தலை மடப்பிடி பயம்பில் பட்டென,
களிறு விளிப்படுத்த கம்பலை வெரீஇ,
ஒய்யென எழுந்த செவ்வாய்க் குழவி,
தாதுஎரு மறுகின் மூதூர் ஆங்கண்
எருமை நல்ஆன் பெறுமுலை மாந்தும்! (அகம். 165: 1–5)

பெயர் அறியப்படாத புலவர்

பொருள்:

மென்மையான தலையையும் இளமையையும் உடைய பெண் யானை, பள்ளத்தில் விழுந்தது. அதனைக் கண்ட ஆண் யானை வருந்திப் பிளிறியது. அதன் பிளிறலைக் கேட்டு அஞ்சிய யானைக் கன்று, பழமையான ஊருக்குள் மகரந்தம் சிதறியுள்ள தெருவில் புகுந்து, எதிரே வந்த எருமையின் மடியில் பாலை உண்டது.

A tusker trumpets aloud on the sight of its mate
Slipping into a trench, and its red–mouthed calf
Dreads the shouts and flees away to be suckled by a buffalo
In a hoary hamlet with streets rich in pollen.

25

அக்டோபர்

October

நனவிலும் காண்பேன்

கனவினால் கண்டேன் தோழி! காண் தகக்
கனவின் வந்த கானல் அம் சேர்ப்பன்,
நனவின் வருதலும் உண்டு என
அனைவரை நின்றது, என் அரும்பெறல் உயிரே! (கலி. 128: 23–26)

நல்லந்துவனார்

பொருள்:

தோழியே! கடற்கரைச் சோலையை உடைய தலைவனை நான் கனவில் கண்டேன். கனவில் முழுமையாக வந்த அவன், நனவிலும் வருவான் என்னும் எண்ணத்தினாலேயே என் உயிர் எதிர்பார்த்து இருக்கிறது.

All this I dreamt, O my confidante!
And my prized life abides on the verge,
The wish, the lord of the littoral tract,
Who appeared in dream, will be around
In the flesh too, sustaining that life.

பா. ஜீவநாதன்
ஓவியர், புதுச்சேரி.

அக்டோபர் 26
OCTOBER

என் காதலுக்குப் பரிசு, மடல் குதிரையே!



படரும் பனை ஈன்று மாவும் சுடர்இழை
நல்கியாள் நல்கியவை
பொறை என் வரைத்து அன்றி, பூநுதல் ஈத்த
நிறையழி காமநோய் நீந்தி, அறைஉற்ற
உப்பு இயல் பாவை உறையுற்றது போல,
உக்குவிடும் என் உயிர்!
பூளை, பொல மலர் ஆவிரை வேய் வென்ற
தோளாள் எமக்கு ஈத்த பூ
உரிது என் வரைத்து அன்றி ஒள்ளிழை தந்த
பரிசு அழி பைதல் நோய் முழ்கி எரிபரந்த
நெய்யுள் மெழுகின் நிலையாது பைபயத்
தேயும் அளித்து என் உயிர்! (கலி. 138: 12–23) நல்லந்துவனார்

பொருள்:

அழகிய நெற்றியை உடைய என் காதலி, எனக்குத் தந்தது பனை மடலால் செய்த குதிரையே. என் உயிர் என்னுடைய கட்டுப்பாட்டில் இல்லாமல் அவள் தந்த காதல் நோயில் நீந்தி, உப்பினால் செய்த பொம்மை, மழைநீரைச் சேர்ந்தது போல ஆயிற்று. மூங்கில் போன்ற தோள்களையுடையவள் எனக்கு அளித்த பூக்கள் பூளைப்பூவும், ஆவிரம் பூவுமே. என்னால் விரும்பப்பட்டவள் தந்த, இக்காதல் நோயால், நெருப்பிடைப் பட்ட மெழுகு உருகுவதைப் போல என் உயிர் மெதுவாகத் தேய்கிறது.

This affliction I am in, and this horse of palmyra stems
Are given by that woman whom I've lost my heart to.
My life goes wasting away like salt in a pan that melts in rain;
She has given me but *poolai* and *aavirai* blooms,
And my life goes wearing away in paces
Like the wax flung into a burning flame.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

27

அக்டோபர்

October

துயரத்திலிருந்து விடுபட்டாள்!

அன்னையோ! எல்லீரும் காண்மின்! மடவரல்
மெல்நடைப் பேடை துணைதர, தன்சேர்ந்த
அன்ன வான் சேவல் புணர்ச்சிபோல் ஒள்நுதல்
காதலன் மன்ற அவனை வரக்கண்டு, ஆங்கு
ஆழ்துயரம் எல்லாம் மறந்தனள், பேதை
நகை ஒழிந்து, நாணுமெய் நிற்ப, இறைஞ்சி,
தகை ஆகத் தையலாள் சேர்ந்தாள் நகைஆக,
நல்எழில் மார்பன் அகத்து! (கலி. 147: 64–71)

நல்லந்துவனார்

பொருள்:

மடம் பொருந்திய மெல்லிய நடையையுடைய அன்னப்பறவை விரைந்து செல்ல, அதைப் பின்தொடரும் அன்னச் சேவலைப் போல, தலைவியைத் தலைவன் காணவந்தான். அவன் வருவதைக் கண்டு, தான் பட்ட துயரம் எல்லாம் மறந்தாள். இவளைப் பார்த்து இந்த ஊரவர் நகைத்த நகை ஒழிந்து, போன நாணமும் வந்து சேர்ந்தது. உடலில் பொலிவு உண்டாகும்படியாக மனத்தில் மகிழ்ச்சி நிறையுமாறு அந்த அழகனோடு சேர்ந்தாள்.

She fell into despair, her bracelets slipped off.
When like the amorous union of the swans
This maid of radiant forehead eyed her lover's return,
All her anguish vanished; her heart filled with ecstasy;
And united she was in grace to her lover.

ச. சாந்தி
ஓவியர், சென்னை.

அக்டோபர் 28
OCTOBER

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

மதுரையின் கடை வீதி

கோடு போழ் கடைநரும், திருமணி குயினரும்,
சூடுறு நன்பொன் சுடர் இழை புனைநரும்,
பொன் உரை காண்மரும், கலிங்கம் பகர்நரும்,
செம்பு நிறை கொண்மரும், வம்பு நிறை முடிநரும்,
பூவும் புகையும் ஆயும் மாக்களும்,
எவ்வகைச் செய்தியும் உவமம் காட்டி,
நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கின்
கண்ணுள் வினைஞரும் பிறரும் கூடி! (மதுரை. 511–518)

மாங்குடி மருதனார்

பொருள்:

சங்கினை அறுத்து வளையல் செய்பவர்களும், அழகிய மணிகளில் துளை இடுபவர்களும், பொன்னினால் அணிகலன்களைச் செய்பவர்களும், பொன்னைக் கல்லில் தேய்த்து அதன் தூய்மைத்தன்மை காண்பவர்களும், துணி விற்பவர்களும், கச்சுகளை விற்பவர்களும், செம்பினை எடையிட்டு வாங்குபவர்களும், மலர்களையும் நறுமணப் புகைப்பொருள்களையும் நன்றாக ஆராய்ந்து வாங்குபவர்களும், நுண்மாண் நுழைபுலத்துடன் ஓவியம் தீட்டும் ஓவியக் கலைஞர்களும் பிற கலைஞர்களும் வணிகர்களும் கூடிநிற்கும் இடம் மதுரையின் கடைவீதி.

Those who make fine bangles from conch shells,
The goldsmiths that make bright jewels from gold,
Those who trade in clothes, those who buy copper by the weight,
Those who stitch fine garments and those who could paint pictures,
All these craftsmen and traders
Are found in the market streets of Madurai.

29

அக்டோபர்

October

மதுரையில் இருந்த அன்னச் சாலைகள்

...பலவின் சுளையும்,
வேறுபடக் கவினிய தேமாங்கனியும்,
பல்வேறு உருவின் காயும், பழனும்,
கொண்டல் வளர்ப்பக் கொடி விடுபு கவினி
மென் பிணி அவிழ்ந்த குறு முறி அடகும்,
அமிர்து இயன்றன்ன தீம்சேற்றுக் கடிகையும்,
புகழ்படப் பண்ணிய பேர் ஊன் சோறும்,
கீழ் செல வீழ்ந்த கிழங்கொடு, பிறவும்,
இன்சோறு தருநர் பல்வயின் நுகர! (மதுரை. 527–535)

மாங்குடி மருதனார்

பொருள்:

மதுரையில் உள்ள அன்னச் சாலைகளில் பலாவின் சுளையையும், பல்வேறு மாம்பழங்களையும், பல்வேறு வடிவம் கொண்ட காய்களையும், பழங்களையும், மழைபொழிந்ததால் வளர்ந்த கீரைகளையும், அமுதை வார்த்தாற்போல் உள்ள இனிய சாற்றையுடைய கற்கண்டுத் துண்டுகளையும், பலரும் புகழும்படி சமைத்த பெரிய இறைச்சித் துண்டுகள் கலந்த ஊன்சோற்றையும், கிழங்குகளையும் வழங்கினர். அவற்றைப் பெற்றவர்கள் பல இடங்களிலும் அமர்ந்து உண்பர்.

Food is served to many, at Madurai,
With the pulps of honeyed jack and the mangoes, ripe and unripe;
Greens that grow abundant in the timely rains;
Sweet sugar–candy that tastes like ambrosia kind;
Rice cooked with chunks of flesh; and edible roots dug up from land.



ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

அக்டோபர் 30
OCTOBER

தனிமைத் துயரில் தலைவி

நரை விராவுற்ற நறு மென் கூந்தல்
செம்முகச் செவிலியர் கைம்மிகக் குழீஇ,
குறியவும் நெடியவும் உரை பல பயிற்றி,
'இன்னே வருகுவர் இன் துணையோர்' என,
உகத்தவை மொழியவும்! (நெடுநல். 152–156)

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரர்

பொருள்:

நரை மயிர் கொண்ட மென்மையான கூந்தலையும், சிவந்த முகத்தையும் உடைய செவிலித் தாயர், பலர் திரண்டு வந்து, பல முறை "விரைவில் வருவார் உன்னுடைய இனிய கணவர்" என்று மனத்துக்கு இனியவற்றைக் கூறினர்.

Attendants with iron–grey tresses,
Speak good words of comfort to their mistress,
And tell her things, untrue and true, give assurance
That her dear spouse will speedily return from war.



பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

ஜெ. சந்திரமோகன்
ஓவியர், கிருஷ்ணகிரி.

31
அக்டோபர்
October

மலர் சூடும் மங்கையர்

புள் ஆர் இயத்த விலங்கு மலைச் சிலம்பின்,
வள் உயிர் தெள் விளி இடை இடைப் பயிற்றி,
கிள்ளை ஓப்பியும், கிளை இதழ் பறியா,
பை விரி அல்குல் கொய் தழை தைஇ,
பல் வேறு உருவின் வனப்பு அமை கோதை, எம்
மெல் இரு முச்சிக் கவின் பெறக் கட்டி,
எரி அவிர் உருவின் அம் குழைச் செயலைத்
தாது படு தண்ணிழல் இருந்தனம் ஆக!

(குறிஞ்சி. 99–106)
கபிலர்

பொருள்:

பறவைகள் ஒலிக்கும் புனத்தில், மழைபெய்து தூய்மையாக்கிய பாறையில் கிளிகளை ஓட்டியும் புற இதழ்களைக் களைந்து தொடுத்த தழை உடையை உடுத்திக்கொண்டும் பல்வேறு நிறம் கொண்ட பூமாலைகளைக் கூந்தலில் அழகு பொருந்தச் சூட்டியும், நெருப்புப்போல் விளங்கும் நிறம் கொண்ட அழகிய தளிரையுடைய அசோக மரத்தினது பூந்தாது விழுகின்ற குளிர்ந்த நிழலில் நாங்கள் இருந்தோம்.

We piled the blooms upon high rain–washed rocks.
We shouted out loud words at intervals to frighten parrots off
And graced our soft dark crowns with many–hued fair snoods.
We laid ourselves beneath *asoka* trees of cooling shades.

நவம்பர் NOVEMBER 01

பா. செந்தில் குமார்
ஓவியர், சென்னை.

மெலியும் என் நெஞ்சு

செவ்வரைச் சேக்கை வருடைமான் மறி
சுரை பொழி தீம் பால் ஆர மாந்தி,
பெருவரை நீழல் உகளும் நாடன்
கல்லினும் வலியன்–தோழி!
வலியன் என்னாது மெலியும், என் நெஞ்சே!

(குறுந். 187)

கபிலர்

பொருள்:

தோழி! சிவந்த மலைச் சாரலில் வருடை மான் குட்டி, தன் தாய்மடியில் பாலை வயிறு நிறையக் குடித்துவிட்டு மலையின் நிழலில் துள்ளி விளையாடும் நாட்டிற்குத் தலைவன், மலையை விடவும் வலிமையானவன் என்று கருதாமல் என்னுடைய மனம், அவனை எண்ணி எண்ணி மெலிகிறது.

The man from the country–where a mountain goat kid
Drinks its mother's abundant, sweet milk to the full,
And romps around in the steep mountain's shade–
Is tougher than rock, my friend.
My heart is suffering,
Not considering that he is strong.

02
நவம்பர்
November

விரைந்து செலுத்துக!

இன்றே சென்று வருதும்; நாளைக்
குன்று இழி அருவியின் வெண் தேர் முடுக,
இளம் பிறை அன்ன விளங்கு சுடர் நேமி
விசும்பு வீழ் கொள்ளியின் பைம் பயிர் துமிப்ப,
கால் இயல் செலவின், மாலை எய்தி,
சில் நிரை வால் வளைக் குறுமகள்
பல் மாண் ஆகம் மணந்து உவக்குவமே! (குறுந். 189)

மதுரை ஈழத்துப் பூதன் தேவன்

பொருள்:

பாகனே! இன்று புறப்படுவோம். நாளைக்கு நமது பணியை நிறைவு செய்து வருவோம். குன்றில் விழும் அருவியைப் போல வெண் தகடுகள் பதிக்கப்பட்ட தேர் செல்லும்போது, அதன் சக்கரங்கள், பயிர்களைத் துண்டாக்கும் விரைவுடன் காற்றைப் போல் மாலையில் திரும்பி வந்து தலைவியுடன் மகிழ்ந்து இருப்போம்.

Let us leave today and return tomorrow riding the white chariot,
Its wheels splendid and whirling as fast as the wind,
So that I can reach home by evening,
To embrace the chest of the young woman
And rejoice in her company.

த. சதீஸ்வேலன்
ஓவியர், சென்னை.

நவம்பர்
NOVEMBER **03**

அன்பு அவ்வளவுதானா?

வேம்பின் பைங்காய் என் தோழி தரினே,
தேம் பூங்கட்டி என்றனிர்! இனியே,
பாரி பறம்பின் பனிச் சுனைத் தெண்ணீர்
தைஇத் திங்கள் தண்ணிய தரினும்,
வெய்ய உவர்க்கும் என்றனிர்!
ஐய! அற்றால் அன்பின் பாலே! (குறுந். 196)

மிளைக் கந்தனார்

பொருள்:

தலைவனே! என் தோழி முன்பு உங்களுக்கு வேப்பங்காயைக் கொடுத்தாலும், வெல்லக்கட்டி என்று சொல்லி மகிழ்ந்து உண்டீர். இப்போதோ, பாரியின் பறம்பு மலையின் இனிய குளிர்ந்த சுனை நீரைக் கொடுத்தாலும் சூடாக உள்ளது, உவர்க்கிறது என்கிறீர். உம்முடைய அன்பு அவ்வளவு தானா?

When my friend gave you bitter neem fruit then
You said it was sweet like jaggery;
Now, even if she gives you cool water
That's sweet like spring waters from Paari's hills
It's hot and salty you say;
My lord! What happened to your love?

ஜெ. மணிகண்டன்
ஆசிரியர் (ஓய்வு), புதுச்சேரி.

ஜெ. மணிகண்டன்
ஆசிரியர் (ஓய்வு), புதுச்சேரி.

04
நவம்பர்
November

அவளையே நினைத்திருந்தேன்!

...நெறிமுதல்
கடற்றில் கலித்த முடச்சினை வெட்சித்
தளை அவிழ் பல்போது கமழும்
மை இருங்கூந்தல் மடந்தை நட்பே!

(குறுந். 209: 4–7)

பாலை பாடிய பெருங்கடுங்கோ

பொருள்:

பொருள்தேடிச் செல்லும் வழியில், வேறு ஒன்றையும் நான் நினைக்கவில்லை. காட்டு வழியில் தழைத்து வளர்ந்துள்ள வெட்சியின் பூக்களைக் காணும்போது தலைவியின் நீண்ட மை போன்ற கூந்தலின் மணம் எனக்குத் தோன்ற அவளிடம் கொண்ட காதலை எண்ணியபடியே சென்றேன்.

As I pass through the wilderness in search of wealth,
In the blooming branches of *vetchi,*
Buds unfurl their petals aromatically,
Reminding me of my love for the dark haired lover.

நவம்பர் NOVEMBER 05



ஜெ. மணிகண்டன்
ஆசிரியர் (ஓய்வு), புதுச்சேரி.

காக்கைக்கு உணவு

திண் தேர் நள்ளி கானத்து அண்டர்
பல் ஆ பயந்த நெய்யின், தொண்டி
முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு
எழு கலத்து ஏந்தினும் சிறிது–என் தோழி
பெருந் தோள் நெகிழ்த்த செல்லற்கு
விருந்து வரக் கரைந்த காக்கையது பலியே! (குறுந். 210)

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்

பொருள்:

உறுதியான தோளினைக் கொண்டவன் கண்டீரக் கோப்பெரு நள்ளி. அவனது காட்டில் இடையர்க்கு உரிய பல பசுக்கள் இருந்தன. அவற்றிடமிருந்து பெற்ற நெய்யை, வெண்ணெல் அரிசியால் சமைக்கப்பட்ட சோற்றுடன் கலந்து, ஏழு பாத்திரங்களில் வைத்து ஏந்தி நின்றாலும் தலைவன் வருகையை அறிவிப்பது போல் கரைந்த காக்கைக்குப் போதிய பலி ஆகாது.

My friend, we are obliged to the crow
That cawed and announced his arrival
And lifted the misery off your drooping shoulders.
Hence, any amount of food that we offer to the crow
Will only be a small reward!

06
நவம்பர்
November

சேரலாதன் கோட்டையும் அகழியும்

செம்பொறிச் சிலம்பொடு அணித்தழை தூங்கும்
எந்திரத் தகைப்பின் அம்புடை வாயில்,
கோள்வல் முதலைய குண்டுகண் அகழி,
வானுற ஓங்கிய வளைந்துசெய்புரிசை,
ஒன்னாத் தெவ்வர் முனை கெட விலங்கி,
நின்னின் தந்த மன்எயில்! (பதிற்று. 53: 6–11)

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்

பொருள்:

உனது பகைவர்களைக் களத்தில் பொருது நீ வென்று கைப்பற்றிய கோட்டையில் பகைவனின் உருவத்தைப் பாவை போல் அமைத்து அதற்குச் சிவந்த புள்ளிகளைக் கொண்ட சிலம்பையும் தழை மாலையையும் அணிவித்து வாயிலில் வைத்திருப்பர். எந்திரங்களைக் கொண்டதும் தானே எய்யும் அம்புகளைக் கொண்டதும் அந்தக் கோட்டை வாயில். கொல்லும் தன்மையுடைய முதலைகளைக் கொண்டது அதன் ஆழமான அகழி. வானத்தைத் தொடும் அளவிற்கு உயர்ந்தும் வளைந்தும் அமைக்கப்பட்டது அதன் மதில்.

The fortress that you seized has
Curved and decorated walls reaching to the sky.
Guarded by murderous crocodiles in moats,
It has arrow–firing implements in its gates
From where volleys of arrows are launched.

ஆ. மகாதேவன்
ஓவிய ஆசிரியர், ஈரோடு.

நவம்பர்
NOVEMBER 07

தனி ஒருவனாய்!

திணிநிலை அலறக் கூவை போழ்ந்து, தன்
வடிமாண் எஃகம் கடிமுகத்து ஏந்தி,
ஓம்புமின், ஓம்புமின், இவண்! என ஓம்பாது,
தொடர்கொள் யானையின் குடர்கால் தட்ப,
கன்றுஅமர் கறவை மான,
முன்சமத்து எதிர்ந்த தன் தோழற்கு வருமே! (புறம். 275: 4–9)

ஒரூஉத்தனார்

பொருள்:

பகைவர் வளைத்துச் சூழ்ந்திருந்த வேளையில், அப்படையின் பின்பகுதியைப் பிளந்துகொண்டு, தன்னால் வடிக்கப்பட்ட வேலை முகத்துக்கு நேராகக் கையில் தாங்கியபடி விரைந்து போரிட்டுக்கொண்டு முன்னேறினான். 'அவனைப் பிடியுங்கள்! பிடியுங்கள்!' என்று பகைவீரர்கள் தடுக்க முயன்றபோது அவர்களைத் தாக்கியபடி சென்றான். சங்கிலியால் கட்டப்பட்ட யானை அத்தடையுடன் முன்னேறுவதுபோல் முன்னேறிய அவன், கன்றை நினைத்து விரைந்து செல்லும் பசுவைப் போல, தன் நண்பன் போர் செய்துகொண்டிருக்கும் முன்படைக்குத் துணையாக வந்தான்.

He breaks through the rear guard of the enemy
As they shout 'Stop him, stop him!',
And moves forward to his encircled friend
Despite being entangled by impediments,
And fought in the frontline like a chained elephant.

ச. யோகேஸ்வரன்
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

ஸ்ரீகணேஷ்
ஓவியர், சிதம்பரம்.

08
நவம்பர்
November

மகன் மாவீரன் எனக் கேட்ட தாய்

வால்நரைக் கூந்தல் முதியோள் சிறுவன்,
களிறுஎறிந்து பட்டனன் என்னும் உவகை,
ஈன்ற ஞான்றினும் பெரிதே! கண்ணீர்
நோன்கழை துயல்வரும் வெதிரத்து
வான்பெயத் தூங்கிய சிதரினும் பலவே! (புறம். 277: 2–6)

பூங்கண் உத்திரையார்

பொருள்:

வெண்மையாக நரைத்த கூந்தலையுடைய முதியவளின் மகன், போரிலே தன்னை எதிர்த்து வந்த யானையைக் கொன்று தானும் இறந்தான் என்று சான்றோர் சொன்ன சொல்லைக் கேட்டு அந்தத் தாய் அடைந்த மகிழ்ச்சி, அவனைப் பெற்றபோது அடைந்த மகிழ்ச்சியைவிடப் பெரிதாகும். அந்த மகிழ்ச்சியுடன் அவள் சொரிந்த கண்ணீர், மழை பெய்தபோது மூங்கிலில் தங்கியிருக்கும் நீர்த்துளிகளைவிடப் பலவாகும்.

Joy of the old lady with greyed hair when she heard
That her son was killed after slaying the battle elephant
Was more than what she felt when she birthed him;
Her happy tears were far more than rain drops in bamboo leaves.

நவம்பர்
NOVEMBER 09

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியன்

சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை
அருஞ்சமஞ் சிதையத் தாக்கி, முரசமொடு
ஒருங்கு அகப்படேஎன் ஆயின், பொருந்திய...
ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி
மாங்குடி மருதன் தலைவனாக,
உலகமொடு நிலைஇய, பலர்புகழ் சிறப்பின்
புலவர் பாடாது வரைக! (புறம். 72: 7-9, 13-16)

தலையாலங்கானத்துச் செருவென்ற
பாண்டியன் நெடுஞ்செழியன்

பொருள்:

என்னைப்பற்றி இழிசொல் சொல்லிப் போருக்கு வந்துள்ள மன்னரைப் போரில் எதிர்கொண்டு தாக்கி, வென்று அவர்களையும் முரசுகளையும் கைப்பற்றுவேன். அவ்வாறு கைப்பற்றவில்லை என்றால், நல்ல அறிவு மிக்க மாங்குடி மருதனைத் தலைவனாகக் கொண்ட பலரால் போற்றப்படும் புலவர்கள், என் நாட்டைப் போற்றிப் பாடாமல் இருக்கட்டும்!

If I do not attack those enraged kings of disparaging words
And ruin their drums,
Let the poets with great skill,
Their leader Mankudi Maruthan with his vast learning,
And others firmly established in this earth,
Sing no more about my country!

10
நவம்பர்
November

போர்க்களத்தில் ஆடுபவன்

வலம்படுமுரசம் துவைப்ப, வாள்உயர்த்து,
இலங்கும் பூணன், பொலங்கொடி உழிஞையன்,
மடம் பெருமையின் உடன்று மேல்வந்த
வேந்து மெய்ம்மறந்த வாழ்ச்சி
வீந்துஉகு போர்க்களத்து ஆடும்கோவே! (பதிற்று. 56: 4–8)

காக்கைப் பாடினியார் நச்செள்ளையார்

பொருள்:

வெற்றி முரசானது ஒலிக்கும்படி வாளை உயர்த்தி, ஒளி பொருந்திய வீரக்கழலை அணிந்து, பொன் போன்ற உழிஞைப் பூவைச் சூடிப் போருக்குச் சென்ற ஆடுகோட்பாட்டுச் சேரலாதன், அறியாமை மிகுதியால் போருக்குவந்து, தங்கள் உயிரைத் துறந்தோர் நிறைந்த போர்க்களத்தில் ஆடுகிறான்

As victorious war drum sounds, my king
Adorned with golden creepers and shining armor
Raises his sword and dances the dance of death
In the battlefield dispatching his deluded foes to heaven.

ச. ரகு
ஓவியர், கோயம்புத்தூர்.

நவம்பர் NOVEMBER 11

மணிக்கற்களைப் பெறும் உழவர்

சிறியிலை வேலம் பெரிய தோன்றும்,
புன்புலம் வித்தும் வன்கை வினைஞர்,
சீருடைப் பல்பகடு ஒலிப்பப் பூட்டி,
நாஞ்சில் ஆடிய கொழுவழி மருங்கின்
அலங்குகதிர்த் திருமணி பெறூஉம்! (பதிற்று. 58: 14–18)

காக்கைப்பாடினியார் நச்செள்ளையார்

பொருள்:

சிறிய இலைகளையுடைய வேல மரங்கள் மிகுதியாக உள்ள புன்செய் நிலங்களை உழுது பயிர்செய்யும் உழவர்கள், சிறந்த காளைகளை, நுகத்தடியில் பூட்டி உழுகின்றனர். அவர்கள் கொழு சென்ற ஏர்ச் சாலின் பக்கத்தில் ஒளிக் கதிரையுடைய விலைமதிப்பில்லாத மணிகளைப் பெறுவர்.

Farmers plow rain–fed fields abundant in *velam* trees,
With plows pulled by strong oxen.
In the ploughed fields, they find gems
That emit radiating bright rays.

மு. சஞ்சீவி ராமன்
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

12
நவம்பர்
November

செ. கணேசமூர்த்தி
அரசு கவின் கலைக் கல்லூரி
சென்னை.

கண்கள் அருவியாகின்றன

குன்றக் குறவன் ஆர்ப்பின் எழிலி
நுண்பல் அழிதுளி பொழியும் நாட!
நெடுவரைப் படப்பை நும்மூர்க்
கடுவரல் அருவி காணினும் அழுமே! (ஐங். 251)

கபிலர்

பொருள்:

குறவன், தன் உற்றாருடன் மழையை விரும்பி, வழிபாடு நடத்திப் போற்றினால் மழை பொழியும். இப்படிப்பட்ட மலை நாடனே! தலைவி, உன் ஊரில் அருவி பாய்வதைப் பார்த்தாலும், அது உன்னுடைய மலையிலிருந்து விழும் அருவி என்று நினைத்து அழுகிறாள்.

O' hero of the country, where if the inhabitant of the hill
Creates tumultuous sound while praying,
(In response) The cloud pours out plenty of rain drops.
Even if she sees the waterfalls, descending rapidly
From your habitat of lengthy mountain and gardens,
She sheds tears thinking of you.

நவம்பர் NOVEMBER 13

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

ஆழ உழுது விதைக்கும் உழவர்

குடிநிறை வல்சிச் செஞ்சால் உழவர்,
நடைநவில் பெரும் பகடு புதவில் பூட்டி,
பிடி வாய் அன்ன மடி வாய் நாஞ்சில்,
உடுப்பு முக முழுக்கொழு மூழ்க ஊன்றி!

(பெரும்பாண். 197–200)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

உழும் தொழிலை உடைய உழவர்கள் மிகுந்த உணவைப் பெறுகின்றர். அவர்கள், நன்றாக ஏர் உழும் பெரிய எருதுகளை நுகத்தில் பூட்டி, பெண் யானையின் வாயைப் போன்ற வளைந்த வாய் உடைய கலப்பையின், உடும்பு போன்ற முகத்தை உடைய கொழு மறையும்படியாக ஆழமாக உழுது விதைத்தனர்.

The farmers with abundant food
Yoke huge oxen that are trained to walk.
They plough their fields by thrusting down the ploughs
That resemble the curved mouths of she–elephants,
And seed the weeded fields.

14
நவம்பர்
November

யானைக்கறி உண்போர்!

புலிதொலைத்து உண்ட பெருங்களிற்று ஒழிஊன்,
கலிகெழு மறவர் காழ்க்கோத்து ஒழிந்ததை,
ஞெலிகோல் சிறுதீ மாட்டி, ஒலிதிரைக்
கடல்விளை அமிழ்தின் கணம்சால் உமணர்,
சுனைகொள் தீம்நீர்ச் சோற்றுஉலைக் கூட்டும்
சுரம் பல கடந்த நம்வயின் படர்ந்து! (அகம். 169: 3–8)

தொண்டியாமூர்ச் சாத்தனார்

பொருள்:

புலி உண்டது போக எஞ்சிய, ஆண் யானையின் தசையை ஆரவாரத்துடன் மறவர், தம்முடைய கோலில் கோத்து எடுத்துச் செல்வர். எஞ்சிய தசையை, கடலில் விளைந்த அமிழ்தம் போன்ற உப்பினை விற்கும் உமணர்கள், தீக்கடை கோலைக் கடைந்து உருவாக்கிய தீயில் வாட்டி, சுனையிலிருந்து கொண்டு வந்த நீரில் வேகவைத்த சோற்றுடன் சேர்த்து உண்பர்.

A tiger kills a tusker in a fight and eats its flesh,
And the remains are picked up by the *maravars*;
What is still left out is collected by the salt merchants
Who roast the flesh in the fire and cook it with rice and water,
Secured from the spring.



வெ. ஜயனேஷ்வர்
இலயோலா கல்லூரி, சென்னை.

நவம்பர்
NOVEMBER **15**

தூண்டில்காரர்கள் வாழும் ஊர்

வானம் வேண்டா வறன்இல், வாழ்க்கை
நோன்ஞாண் வினைஞர் கோள்அறிந்து ஈர்க்கும்,
மீன்முதிர் இலஞ்சிக் கலித்த தாமரை,
நீர்மிசை நிவந்த நெடுந்தாள் அகல்இலை
இருங்கயம் துளங்க, கால்உறு தொறும்
பெருங்களிற்றுச் செவியின் அலைக்கும் ஊரன்! (அகம். 186:1–6)

பரணர்

பொருள்:

வலிய தூண்டில் கயிற்றை உடைய மீன் பிடிப்பவர், மழையை வேண்டி நிற்காத வறுமையில்லாத வாழ்வை உடையவர். அவர்கள், தூண்டிலில் கோத்த இரையை மீன் பற்றிக்கொண்டதை உணர்ந்து, தூண்டிலை இழுப்பர். இத்தகைய மீன்வளம் கொண்ட நீர்நிலையில் நீண்ட காம்புடைய தாமரை இலை படர்ந்துள்ளது. அது காற்று வீசும்போதெல்லாம் யானையின் காது அசைவதுபோல் நீரில் அலையை ஏற்படுத்தும் வளமிக்க ஊருக்குத் தலைவன்.

He is the lord of a village
Where the fisherfolk, who are ignorant of poverty,
Pull out the fish with the fishing rods fitted with strong cords;
It also abounds in lotus whose leaves are beheld above the water
And shake like the ears of huge tusker when the wind blows.

ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.

16
நவம்பர்
November

ப. ப்ரணவ்
ஓவியர், மாமல்லபுரம்.

அவள் ஏதுமறியாதவள்

திரைஉழந்து அசைஇய நிரை வளை ஆயமொடு,
உப்பின் குப்பை ஏறி, எல்பட
வருதிமில் எண்ணும் துறைவனொடு, ஊரே
ஒரு தன் கொடுமையின் அலர் பாடும்மே!
அலமரல் மழைக்கண் அமர்ந்து நோக்காள்! (அகம். 190: 1–5)

உலோச்சனார்

பொருள்:

அலையில் விளையாடிய களைப்பு நீங்கும்படியாக வளையலை அணிந்த மகளிர் கூட்டத்துடன் உனது மகள் உப்புக் குவியலின் மீது ஏறி நின்றாள். அந்த மாலைவேளையில் கரைக்கு மீண்டுவரும் படகுகளை எண்ணினான் துறைவன். ஆனால் இந்த ஊரில் உள்ளோர், உன் மகளையும் அந்தத் துறைவனையும் இணைத்து, கொடுமையாக அலர் தூற்றுகிறார்கள். உண்மையில் உன் மகள், தன் கண்ணால் அவனைப் பார்க்கவே இல்லை.

This village, unmatchably nefarious,
Speaks slanderously of your daughter
Linking her with the chief
Who, at sunset counts the boats returning to the shore
Where young girls play and when tired, climb the heaps of salt,
Know that your daughter never even willingly looked at him.

நவம்பர் NOVEMBER 17

ப. லோகப்ரியன்
மரபுக் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி
மாமல்லபுரம்.

தலைவனது தாய் வரவேற்பாள்

அருஞ்சுரம் இறந்த என் பெருந்தோள் குறுமகள்
திருந்துவேல் விடலையொடு வரும்எனத் தாயே,
புனைமாண் இஞ்சி பூவல் ஊட்டி,
மனைமணல் அடுத்து, மாலை நாற்றி,
உவந்து இனிது அயரும் என்ப! (அகம். 195: 1–5)

கயமனார்

பொருள்:

அரிய பாலை வழியைக் கடந்து தலைவனுடன் சென்ற உன் மகள், இன்று வேல் தாங்கிய அவனுடன் வருவாள் என்று, அவனுடைய தாய், தன் வீட்டுச் சுவரில் செம்மண் பூசினாள்; இல்லத்தின் முன்பக்கத்தில் மணலைப் பரப்பச் செய்தாள்; மாலைகளை வீட்டில் தொங்கவிடச் செய்து மகிழ்ச்சியுடன் வீட்டினை அலங்கரிக்கச் செய்தாள் என்று தலைவியின் தாய்க்குத் தெரிவித்தனர்.

It is said that the lad's mother
Decorates in great delight her house;
It is thus she means to receive my young daughter and her son,
Who crossed the impassable wilderness.

18
நவம்பர்
November

கரை ஒதுங்கிய சுறா

குறியிறைக் குரம்பைக் கொலை வெம் பரதவர்
எறிஉளி பொருத ஏமுறு பெருமீன்
புண் உமிழ் குருதி புலவுக் கடல் மறுப்பட,
விசும்பு அணி வில்லின் போகி, பசும் பிசிர்த்
திரை பயில் அழுவம் உழக்கி, உரன் அழிந்து,
நிரைதிமில் மருங்கில் படர்தரும் துறைவன்! (அகம். 210: 1–6)

உலோச்சனார்

பொருள்:

சிறிய தாழ்வாரம் கொண்ட குடிசையில் வாழ்பவர்கள் மீன்பிடிக்கும் தொழில் செய்யும் பரதவர்கள். அவர்கள் சுறா மீனைப் பிடிப்பதற்காகக் கடலில் எறி உளியை எறிந்தனர். அந்த உளி தாக்கியதால் சுறாவின் இரத்தம் கடல் நீர் முழுவதும் கறைப்படுத்தியது. அது, இரத்தத்துடன் தண்ணீரின் மேலே குதிக்கும்போது வானவில் போல் தோன்றியது. அந்தச் சுறா, கடல் நீரைக் கலக்கி, தன் வலிமை குறைந்ததும் கரையில் நிற்கும் படகுகளுக்கு அருகில் வந்து ஒதுங்கும் கடற்கரைக்குத் தலைவன்.

In the shores of the chieftain,
The murderous fishermen attack a huge fish
From whose wounds the blood oozes,
Changing the colour of the ocean;
The fish loses its strength and veers toward rows of boats.

ம.ச. ஜோசப்
ஓவிய ஆசிரியர் (ஓய்வு), சேலம்.

நவம்பர்

NOVEMBER **19**

இளம் கவிகள் நிறைந்த மதுரை

பொதுமொழி பிறர்க்கு இன்றி முழுது ஆளும் செல்வர்க்கு
மதிமொழி இடல் மாலை வினைவர் போல், வல்லவர்
செதுமொழி சீத்த செவி செறுஆக,
முதுமொழி நீரா, புலன் நா உழவர்
புதுமொழி கூட்டுண்ணும், புரிசை சூழ் புனல் ஊர! (கலி. 68: 1–5)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

மண்ணுலகம் முழுவதையும் பிற மன்னர்க்குப் பொது என்று இல்லாமல் தானே ஆளும் அரசர்க்கு அறிவுரை வழங்குவோர் அமைச்சர்கள். அவர்களைப் போல் புலவர்கள், நுண்ணறிவுடன் கேட்போரின் காதுகளை வயலாகவும் நல்ல அறிவுரையை நீராகவும் தங்கள் நாக்குகளை ஏராகவும் கொண்டு சொல்லேர் உழவுத் தொழில் செய்வார்கள். அவர்கள் படைத்த அறிவுடை நூல்களைக் கேட்டு மகிழும் மதில் சூழ்ந்த நீர் நிலைகளைக் கொண்ட மதுரையின் தலைவன்.

Madurai surrounded by water and walls,
Where people enjoy the verses of poets
Who use their tongues as plows,
Ancient words of the wise as water and people's ears as fields.
They remove undesirable words as the men of counsel do
While guiding kings.



ஜின்காட் டெக் ஆர்ட்
சென்னை.



ச. கார்த்திகேயன்
ஓவியர், சென்னை.

20
நவம்பர்
November

யானைப் போர் அரங்கம்

**கோணம் தின்ற வடுவாழ் முகத்த,
சாணம் தின்ற சமந்தாங்கு தடக்கை,
மறம்கொள் சேரி மாறுபொரு செருவில்,
மாறாது உற்ற வடுப்படு நெற்றி,
சுரும்பு ஆர் கண்ணிப் பெரும்புகல் மறவர்
கடுங்களிறு ஓட்டலின், காணுநர் இட்ட
நெடுங்கரைக் காழகம் நிலம் பரல் உறுப்ப,
கடுங்கள் தேறல் மகிழ்சிறந்து திரிதர!** (மதுரை. 592–599)

மாங்குடி மருதனார்

பொருள்:

அங்குசத்தால் உண்டான வடுவுடைய முகத்தையும், தழும்பையுடைய பெரிய கையையும் கொண்ட யானைகளின் கொம்பு அழுந்திய வடு உடைய நெற்றியுடன், போரில் புறமிடாத மறவர்கள் சேர்ந்து வாழும் ஊர். அவர்கள், அங்கே ஆண் யானைகளை ஒன்றோடு ஒன்று போரிடச் செய்வர். அந்த யானைப்போரைக் காணவந்தோர், தாங்கள் அணிந்துள்ள நீண்ட கரையுடைய ஆடைகள் நிலத்தில் உள்ள பருக்கைக் கற்களில் புரளும்படி, கள்ளை அருந்தியபடி அங்கும் இங்கும் திரிவர்.

In the settlement of *maravars* with faces scarred,
There are elephant fights between the rival groups,
And spectators, quite drunk with toddy, reel
Ignoring nails laid down to protect them from the beasts
That run amuck.

நவம்பர்
NOVEMBER 21

க. சிவசாமி
ஓவியர், புதுக்கோட்டை.

கர்ப்பிணிகள் வழிபடும் தெய்வம்

திவவுமெய்ந் நிறுத்துச் செவ்வழி பண்ணி,
குரல்புணர் நல்யாழ் முழவோடு ஒன்றி,
நுண்ணீர் ஆகுளி இரட்ட, பலவுடன்,
ஒண்சுடர் விளக்கம் முந்துற, மடையொடு,
நன்மா மயிலின் மென்மெல இயலி,
கடுஞ்சூல் மகளிர் பேணி, கைதொழுது,
பெருந்தோள் சாலினி மடுப்ப ஒருசார்! (மதுரை. 604–610)

மாங்குடி மருதனார்

பொருள்:

சாலினி என்பவள் அருள் வந்து ஆடுபவள். அவள் நிறைமாதப் பெண்களுடன், தெய்வத்தை வணங்கும்போது யாழ் மீட்டப்பட்டது; முழவும் உடுக்கையும் சிறுபறையும் முழக்கப்பட்டன. படையலுக்கு உரியவற்றோடு விளக்கு வெளிச்சத்தில் அவள், கருவுற்ற பெண்களுடன் கை இணைத்து மெதுவாக நடந்தாள். அப்போது கற்பினை உட்பொருளாகக் கொண்ட செவ்வழிப்பண் இசைக்கப்பட்டது.

The young mothers in early days of pregnancy
Go with their kindred close, to pray to gods.
They play the *sevvali* tune on fair sweet *yaal*
And march to shrines, carrying offerings like food.

22
நவம்பர்
November

பாசறையில் மன்னன்

புடை வீழ் அம் துகில் இடவயின் தழீஇ,
வாள் தோள் கோத்த வன் கண் காளை
சுவல் மிசை அமைத்த கையன், முகன் அமர்ந்து,
நூல் கால் யாத்த மாலை வெண் குடை
தவ்வென்று அசைஇ, தா துளி மறைப்ப,
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்,
சிலரொடு திரிதரும் வேந்தன்,
பலரொடு முரணிய பாசறைத் தொழிலே! (நெடுநல். 181–188)

மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்

பொருள்:

தோளிலிருந்து வழுக்கி விழுந்த அழகிய ஆடையை இடதுபுறமாகத் தழுவியபடி, வாளைத் தோளில் தொங்கவிட்ட வலிமையான இளைஞனின் தோள் மேல் கையை வைத்திருந்த மன்னன், தன்னுடைய மறவர்களுக்கு மகிழ்ச்சி ஏற்படுமாறு வந்தான். நூலால் தொடுத்த முத்துச் சரங்களையுடைய மன்னனின் குடை, மழைத் துளிகளை அவன் மேல் விழாதவாறு மறைத்தது. பகை மன்னர் பலருடன் பகைத்துப் போருக்கு வந்து பாசறையில் இருக்கும் பாண்டிய மன்னன், நள்ளிரவிலும் தூங்காமல் மறவர்களுடன் திரிகின்றான்.

The king, in the warfare camp,
Walks about attended by a few at dark midnight.
His left hand holds up his costly robes
And the other, he rests on the shoulders of a sturdy youth.
Over him shines an umbrella decked with strings of pearl,
That shields him from the rains that fall.

ப. சிவசுதன்
வெள்ளைச்சாமி நாடார் கல்லூரி, மதுரை.

நவம்பர் NOVEMBER 23

வேட்டை நாய்களை அடக்கிய தலைவன்

...இம்மென இமிரும்
மாதர் வண்டொடு, சுரும்பு நயந்து இறுத்த,
தாது அவிழ் அலரித் தா சினை பிளந்து,
தாறு அடு களிற்றின் வீறு பெற ஓச்சி,
கல்லென் சுற்றக் கடுங்குரல் அவித்து, எம்
சொல்லல் பாணி நின்றனன் ஆக! (குறிஞ்சி. 147–152)

கபிலர்

பொருள்:

'இம்' என்று இசைத்தபடி பெண் வண்டுகளுடன் ஆண் வண்டுகள் விரும்பி வந்து தங்கும் மலர்கள் மலர்ந்த மரக்கிளையை, பாகனின் கட்டளையை மீறிய களிற்று யானை ஒடிப்பதைப் போல் ஒடித்து, குரைக்கும் தன்னுடைய வேட்டை நாய்கள் மேல் வீசி அவற்றை அடக்கியபடி, நாங்கள் சொல்லும் பதிலுக்காகக் காத்து நின்றான்.

As a ruttish tusker wild breaks branches down,
He tore a flowering twig, in which amative bees wish to mate,
And silences the harsh bark of his hounds.
He waited then for our reply.



பு. கீர்த்திவாசன்
வேலம்மாள் வித்யாலயா பள்ளி, சென்னை.

24

நவம்பர்

November

யானையை விரட்டிய தலைவன்

...வார் கோல்
உடுஉறும் பகழி வாங்கி, கடு விசை,
அண்ணல், யானை அணி முகத்து அழுத்தலின்,
புண் உமிழ் குருதி முகம் பாய்ந்து இழி தர,
புள்ளி வரி நுதல் சிதைய, நில்லாது,
அயர்ந்து புறங்கொடுத்த பின்னர் நெடுவேள்
அணங்கு உறு மகளிர் ஆடுகளம் கடுப்ப,
திணி நிலைக் கடம்பின் திரள் அரை வளைஇய,
துணைஅறை மாலையின், கை பிணி விடேஎம்!

(குறிஞ்சி. 169–177)

கபிலர்

பொருள்:

தலைவன் நீண்ட கோலைக் கணையோடு ஏவி, யானையின் நெற்றியில் செலுத்தியதால் அது புண்ணாகியது. அந்தப் புண்ணிலிருந்து கொட்டும் குருதி முகத்தில் பரவிக் கீழே வடிந்தது. அந்த யானை, வெறியாட்டக் களத்தைவிட்டு ஓடிய பின்னரும், கடம்ப மரத்தின் அடிப்பகுதியில் மாலையைச் சூட்டிய மகளிராகிய நாங்கள் கைகளைப் பிடித்தபடி நடுக்கத்துடன் நின்றோம்.

He shot his long arrows and hurt the elephant's fair forehead.
The beast retreated dazed as from its wounds blood flowed on its face.
We linked our hands together quite secure as dancers do in lists
When under Muruga's spell.

ஆர். உதயகுமார்
அரசு கவின் கலைக் கல்லூரி, ஓசூர்.

நவம்பர்
NOVEMBER 25

மு. இதயா
பிரைனிபுளூம்ஸ் பள்ளி, புதுச்சேரி.

காதணியால் கோழி விரட்டும் மகளிர்

அகல் நகர் வியன் முற்றத்து,
சுடர் நுதல் மட நோக்கின்,
நேர் இழை மகளிர் உணங்கு உணாக் கவரும்
கோழி எறிந்த கொடுங்கால் கனங்குழை,
பொன்கால் புதல்வர் புரவி இன்று உருட்டும்,
முக்கால் சிறு தேர் முன் வழி விலக்கும்,
விலங்கு பகை அல்லது கலங்கு பகை அறியா,
கொழும் பல் குடிச் செழும் பாக்கம்! (பட்டின. 20–27)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

பெரிய இல்லத்தின் முற்றத்தில், பெண்கள் காய வைத்த நெல்லை உண்ண வரும் கோழி மீது கனமான குழை என்னும் காதணிகளைக் கழற்றி எறிந்தனர். அந்தக் குழைகள், சிலம்பினைக் காலில் அணிந்த சிறுவர்கள் இழுத்துச் செல்லும் மூன்று உருளைகளையுடைய சிறிய தேரின் வழியைத் தடுக்கும். இவ்வாறு தடுக்கும் பகை மட்டுமே அன்றி வேறு மனம் கலங்கும் பகையை அறியாத பெரிய பல குடிகளையுடைய கடற்கரை ஊர்களைக் கொண்டது காவிரிப்பூம்பட்டினம்.

On spacious fronts of houses wide, bejewelled maids
Scare fowls away that come to feed on drying grains
By throwing pendants which bar the way of tiny cars
Which boys with golden anklets drive.
Save trifling brawls, no stirring hate disturbs
The rich coast town of Kaaviripoompattinam.

26
நவம்பர்
November

பண்டகச்சாலை முன்றில்

நீரினின்றும் நிலத்து ஏற்றவும்
நிலத்தினின்று நீர் பரப்பவும்
அளந்து அறியா, பல பண்டம்
வரம்பு அறியாமை வந்து ஈண்டி,
அரும் கடி, பெரும் காப்பின்,
வலி உடை வல் அணங்கின் நோன்
புலி பொறித்து புறம் போக்கி! (பட்டின. 129–135)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

கப்பலிலிருந்து நிலத்திற்கும், நிலத்திலிருந்து கப்பலுக்கும் கொண்டு செல்வதற்காக வைக்கப்பட்டிருக்கும் அளவில்லாத பல வகையான பொருள்கள் பண்டகச்சாலையில் திரண்டிருந்தன. அவற்றைப் பாதுகாப்பதற்காகப் பெரிய அளவில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. அந்தப் பொதிகளின் மீது, வலிமையான புலியின் சின்னத்தைப் பதித்தனர்.

Countless variety of goods
Are offloaded from sea to land
And loaded from land to sea.
Innumerous are the goods piled
In well–guarded warehouses
With strong guards marking them
With the powerful Tiger seal.

வெ. வைஷ்ணவி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

நவம்பர்
NOVEMBER 27

கானவர் குடியிருப்பில் பெறும் உணவு

தேனினர், கிழங்கினர், ஊன் ஆர் வட்டியர்,
சிறு கண் பன்றிப் பழுதுளி போக்கி,
பொருது தொலை யானை கோடு சீர் ஆக,
தூவொடு மலிந்த காய கானவர்
செழும் பல் யாணர் சிறு குடி படினே,
இரும் பேர் ஒக்கலொடு பதம் மிக பெறுகுவிர்!

(மலைபடு. 152–157)

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

பொருள்:

மலையில் உள்ள கானவர் குடிக்குச் சென்றால் தேனும் கிழங்கும் இறைச்சியும் பெறலாம். சிறிய கண்களைக் கொண்ட பன்றியைக் கொன்று அவற்றின் வேண்டாத பகுதிகளைப் போக்கிப் பக்குவம் செய்து தருவர். மேலும் அவர்கள் போர்செய்து வீழ்த்திய யானைத் தந்தங்களை, அவர்கள் கொடுக்கும் பொருள்களை எல்லாம் சுமந்து செல்லப் பயன்படுத்தும் காவுதடியாக வழங்கும் சிறப்பையும் பெறுவீர்கள்.

The jungle men who live on high hill slopes
Have honey, roots, crates filled with meat and pork.
They carry these on poles made of the elephants' tusks.
You and your kin will receive this food
If you wish to stay in their hamlet.



ப. கௌசிகாஸ்ரீ
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

28
நவம்பர்
November

ம.ச. ஜோசப்
ஓவிய ஆசிரியர் (ஓய்வு), சேலம்.

குறவர் தரும் விருந்து

வழை அமை சாரல் கமழத் துழைஇ,
நறு மலர் அணிந்த நாறு இரு முச்சிக்
குறமகள், ஆக்கிய வால் அவிழ் வல்சி,
அகம் மலி உவகை ஆர்வமொடு அளைஇ,
மகமுறை தடுப்ப, மனைதொறும் பெறுகுவிர்!

(மலைபடு. 181–185)

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

பொருள்:

மோரை உலையாய் இட்டு, சுரபுன்னை மரங்கள் நிறைந்த மலைச்சாரலில் குறமகள், வெண்மையான சோற்றைச் சமைப்பாள். நீங்கள் அங்கே சென்றால், விருந்தினரைப் பெற்றோம் என்ற மகிழ்ச்சியுடன், தங்கள் பிள்ளைகளைக் கொண்டு முறை கூறித் தடுத்து அழைத்து அச்சோற்றை அளிப்பர். இதனை நீங்கள் அங்கே உள்ள குறவர் வீடுகள் எல்லாவற்றிலும் பெறுவீர்.

The hillman's wife, with flowers on her tresses
Spreading fragrance over the hills with *surapunnai* trees,
Cooks the food with boiled white rice.
You will receive this food in every house,
Joyously invited by the children there,
Who address you as their kin.

நவம்பர் NOVEMBER 29

சு. கோபிகா
கைலாஷ் மகளிர் கல்லூரி, சேலம்.

பன்றிப்பொறிகள் நிறைந்த வழி

விளை புனம் நிழத்தலின், கேழல் அஞ்சி,
புழைதொறும் மாட்டிய இருங் கல் அடாஅர்,
அரும் பொறி உடைய ஆறே! நள்ளிருள்
அலரி விரிந்த விடியல் வைகினிர், கழிமின்!

(மலைபடு. 193–196)

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

பொருள்:

கானவர், தினைப்புனத்தைப் பன்றி அழித்தலைத் தடுக்கும் விதமாக அது வரும் வழியில், அவற்றைக் கொல்வதற்குக் கல்லால் ஆன பெரிய பொறிகளை அமைத்திருப்பர். ஆதலால் அவ்வழியில் இருளில் செல்ல வேண்டாம். இருள் அகன்று ஞாயிறு தோன்றிய விடியற்காலையில் செல்வீராக.

As there are stone traps laid along the paths
To check wild boars that ruin *tinai* ripe,
Take rest at night and travel after dawn.

30

நவம்பர்

November

குறவர் வீசும் கவண் கற்கள்

புலந்து, புனிறு போகிய புனம் சூழ் குறவர்,
உயர் நிலை இதணம் ஏறி, கை புடையூஉ,
அகல் மலை இறும்பில் துவன்றிய யானைப்
பகல் நிலை தளர்க்கும் கவண் உமிழ் கடுங்கல்
இரு வெதிர் ஈர் கழை தத்தி, கல்லெனக்
கரு விரல் ஊகம் பார்ப்போடு இரிய,
உயிர் செகு மரபின் கூற்றத்து அன்ன,
வரும் விசை தவிராது! மரம் மறையாக் கழிமின்! (மலைபடு. 203–210)

இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

பொருள்:

கதிர் தோன்றி முற்றிய தினைப்புனத்தைப் பாழ்படுத்த வரும் யானைகளை விரட்டுவதற்காக, குறவர்கள் உயர்ந்த பரணிலிருந்து கவண் கல் வீசுவர். அக்கல் பட்டு, மூங்கில்கள் முறிந்து விழும். இதைக்கண்டு, அச்சம் கொண்ட கரிய விரல்களைக் கொண்ட குரங்குகள் அங்கிருந்து தம் குட்டிகளுடன் இடம் பெயரும். அவ்வழியே நீங்கள் செல்லும்போது உயிரைப் பறிக்கும் எமனைப் போல் வரும் கவண் கல் படாமல், மரங்களில் மறைந்து செல்லுங்கள்.

The jungle men to guard the mature *tinai* crops
Ascend lofty platforms and scare away the elephants
With stones from catapults. These stones
Are sped with force past bamboo stems where monkeys sit.
Behind the trees take shelter to be safe from these, and then
Go on your way.

ச. செந்தில்குமார்
ஓவியர், சென்னை.

டிசம்பர் DECEMBER 01

எங்கும் முல்லைப் பூக்களே!



அவரோ வாரார்! முல்லையும் பூத்தன!
பறியுடைக் கையர் மறியினத்து ஒழிய,
பாலொடு வந்து கூழொடு பெயரும்
ஆடுடை இடைமகன் சென்னிச்
சூடிய எல்லாம் சிறுபசு முகையே! (குறுந். 221)

உறையூர் முதுகொற்றனார்

பொருள்:

அவர் இன்னும் வரவில்லை. முல்லையும் பூக்கத் தொடங்கிவிட்டது. பனைஓலையால் ஆன குடையைக் கையில் வைத்திருக்கும் இடையர்கள், தங்கள் ஆட்டு மந்தையை விட்டு, ஆட்டுப் பாலை விற்கச்சென்று பாலுக்குப் பதிலாகக் கூழைப் பெற்று வருவார்கள். அவர்கள் தலையில் சூடியிருப்பவையும் முல்லைப் பூக்களே.

Our lover has not yet returned,
But the mullai vines have blossomed;
The herdsmen, who carry palm fronds as rain guards
And exchange milk for porridge,
Wear in their head the tiny *mullai* buds.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.



செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

02
டிசம்பர்
December

திரும்பத் தந்துவிடு

விட்டென விடுக்கும் நாள் வருக; அது நீ
நேர்ந்தனை ஆயின், தந்தனை சென்மோ!
குன்றத்து அன்ன குவவு மணல் அடைகரை
நின்ற புன்னை நிலம் தோய் படு சினை
வம்ப நாரை சேக்கும்
தண் கடல் சேர்ப்ப! நீ உண்ட என் நலனே! (குறுந். 236)

நரிவெரூஉத்தலையார்

பொருள்:

மணல் நிறைந்த கடற்கரையானது குன்றைப் போல் தோன்றும். அதில் நின்ற புன்னை மரத்தின் தாழ்ந்த கிளையில் புதிய நாரை வந்து தங்குகின்ற குளிர்ந்த கடற்கரையின் தலைவனே! தலைவியை, நீ கைவிடும் நாள் வரும் என்றால், நீ நுகர்ந்த அவளது பெண்மை நலத்தை மீண்டும் எம்மிடம் தந்துவிட்டுச் செல்.

O' lord of the cool shores where a newly arrived stork
Roosts on a low branch of a *punnai* tree
On sand dunes as tall as mountains!
When the day of departure comes
And you are willing to leave her,
Please return her femininity that you partook!

டிசம்பர் DECEMBER 03

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

ஒளி திரும்பியதா?

இனமயில் அகவும் மரம்பயில் கானத்து,
நரைமுக ஊகம் பார்ப்பொடு பனிப்ப,
படுமழை பொழிந்த சாரல் அவர் நாட்டுக்
குன்ற நோக்கினென், தோழி!
பண்டை யற்றோ, கண்டிசின், நுதலே! (குறுந். 249)

கபிலர்

பொருள்:

தோழி, மயில்கள் தோகையை விரித்து ஆரவாரிக்கும் காட்டில், குரங்கு, தன் குட்டியுடன் குளிரால் நடுங்கும்படி பெருமழை பொழிந்த மலைச் சாரலை உடையது தலைவனின் நாடு. ஒளியிழந்து பசலை படர்ந்திருந்த என் நெற்றி, அவர் நாட்டின் குன்றத்தைப் பார்த்ததும், ஒளி பொருந்தியிருக்கும் பழைய நிலையில் இருப்பதைக் காண்!

O' friend! Has my brow become lovely like
It used to be in the past,
Since I looked at his mountain
Where heavy rain pours down,
Peacocks cry and white–faced monkeys
Tremble in the cold with their young?

04

டிசம்பர்

December

குருகு மட்டுமே சாட்சி

யாரும் இல்லை, தானே கள்வன்!
தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?
தினைத்தாள் அன்ன சிறு பசுங் கால
ஒழுகு நீர் ஆரல் பார்க்கும்
குருகும் உண்டு, தான் மணந்த ஞான்றே! (குறுந். 25)

கபிலர்

பொருள்:

தலைவன் என்னுடன் கூடியிருந்தபோது, அதற்குச் சான்றாக அந்த இடத்தில் யாரும் இல்லை. அப்போது அங்கே கால்வாயில் ஓடிய நீரில் நீந்தும் ஆரல் மீனை உண்பதற்காகப் பார்த்துக் கொண்டு, தினைத்தாள் போன்ற கால்களைக் கொண்ட குருகு மட்டுமே இருந்தது. தலைவன் கூறிய உறுதிமொழிகள் பொய்யானால் நான் என்ன செய்வேன்.

There was no one else but himself;
And, if he refutes his words, what can I do?
Only a Heron, with millet stalk like tender legs,
Was there watching for slippery eels in running water,
When we were together.

வே.ம.ஹேமஸ்ரீ
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

டிசம்பர்
DECEMBER 05

பலாப்பழங்களுக்குக் காவல்

கலை கை தொட்ட கமழ்சுளைப் பெரும் பழம்
காவல் மறந்த கானவன், ஞாங்கர்,
கடியுடை மரம்தொறும் படு வலை மாட்டும்
குன்ற நாட! தகுமோ, பைஞ் சுனைக்
குவளைத் தண் தழை இவள் ஈண்டு வருந்த,
நயந்தோர் புன்கண் தீர்க்கும்
பயம் தலைப்படாஅப் பண்பினை எனினே? (குறுந். 342)

காவிரிப்பூம்பட்டினத்துக் கந்தரத்தனார்

பொருள்:

மணம் கமழும் பெரிய பலாப்பழத்தை ஆண் குரங்கு ஒன்று பிளந்தது. அதனைக் கண்ட கானவர், பிற பலாப் பழங்களை அவற்றிடமிருந்து காப்பாற்றும் நோக்கில், குரங்குகளை அகப்படுத்தும் வலைகளை விரித்திருந்தார். அப்படிப்பட்ட குன்றத்தை உடைய தலைவனே! தழை உடை அணிந்த தலைவி, இங்கே வீட்டுக் காவலில் வைக்கப்பட்டு வருந்துகிறாள். நீயோ உன்னை விரும்பியோரின் துன்பத்தைப் போக்கும் பண்பு இல்லாதவனாக இருக்கிறாய். இது உனக்குத் தகுதி ஆகுமோ?

O' lord of the mountain country
Where male monkeys tear apart large jackfruits.
In response the forest dweller sets net traps around every fruit.
My friend wearing a garment made from leaves and flowers
From the lush pond, is sad.
Does it suit you not to remove the
Pain and fear of the one who loves you?

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

சு. தமிழ்மணி
ஓவியர், சேலம்.

06
டிசம்பர்
December

பலி ஏற்குமோ!

பல்வேறு உருவின் சில் அவிழ் மடையொடு,
சிறு மறி கொன்று, இவள் நறுநுதல் நீவி,
வணங்கினை கொடுத்திஆயின், அணங்கிய
விண்தோய் மாமலைச் சிலம்பன்
ஒண்தார் அகலமும் உண்ணுமோ, பலியே? (குறுந். 362: 3– 7)

வேம்பற்றூர்க் கண்ணன் கூத்தனார்

பொருள்:

வெறியாடும் வேலனே! பல நிறமுடைய சோற்றுப் பலியைச் சிதற விட்டுள்ள வெறியாட்டுக்களத்தில் வெறியாடி, சிறிய ஆட்டுக்குட்டியைக் கொன்று, அதன் இரத்தத்தைத் தலைவியின் நெற்றியில் தடவி, முருகனை வழிபட வைக்கிறாய். ஆட்டுக்குட்டியைப் பலியாகக் கொடுப்பதென்றால், இவளுடைய துன்பத்துக்குக் காரணமான மலைப்பகுதியைச் சேர்ந்த மாலைகள் அணிந்த தலைவனின் மார்பும் அப்பலியை ஏற்குமோ? சொல்.

O' fortune teller! You smear her fragrant forehead
With the blood of sacrificial kid goat
And offer various coloured rice as ritualistic offering;
Will the broad chest of the Lord of the rising hills,
Who is the reason for her ailment, accept this?

டிசம்பர் DECEMBER 07

பா. செந்தில்குமார்
ஓவியர், சென்னை.

தலைவன்தான் கள்வன்

'எந்தை எனக்கு ஈத்த இடுவளை, ஆரப் பூண்
வந்தவழி நின்பால் மாயக் களவு அன்றேல்,
தந்தானைத் தந்தே, தருக்கு!'
'மாலை அணிய விலை தந்தான், மாதர்நின்
கால சிலம்பும் கழற்றுவான், சால
அதிரல் அம்கண்ணி! நீ அன்பன், எற்கு அன்பன்!
கதுவாய்! அவன் கள்வன்! கள்வி நான் அல்லேன்! (பரி. 20: 76–82)

நல்லந்துவனார்

பொருள்:

'என் தந்தை எனக்குத் தந்த வளையலையும் முத்து மாலையும் உன்னிடம் இருக்கிறது என்றால் அது களவினால் அல்லாமல் எப்படி வரும்? அப்படி இல்லை என்றால் அதைத் தந்தவன் யார் என்று எனக்குச் சொல்லிவிட்டுப் பேசு' என்றாள் தலைவி. அதற்கு, 'நான் உன்னுடைய அணிகலன்களைக் களவுகொண்ட கள்வி அல்லேன். இவையே அல்லாமல் உன் காலில் உள்ள சிலம்புகளையும் எனக்குத் தரும் பொருட்டுக் கழற்றும் தன்மை உடையவன் தலைவன். உனது தலைவனே எனக்கும் தலைவன்! அவனே கள்வன். அவனை நீ பிடிப்பாயாக!' என்றாள் பரத்தை.

Wife: 'How did you get these jewels that my father gave me,
If you didn't steal it, tell me who gave it to you?'
Mistress: 'Your lover is mine too, my girl!
He gave these as a gift for the joy we had;
He will take your anklets too for me; he's the thief, not me.'

08
டிசம்பர்
December

கள்ளுக்கு நெல்

வளன் உடைச்செறுவின் விளைந்தவை உதிர்ந்த
களன் அறு குப்பை காஞ்சிச் சேர்த்தி,
அரியல் ஆர்கை வன்கை வினைநர்,
அருவிஆம்பல் மலைந்த சென்னியர்,
ஆடுசிறை வரிவண்டு ஓப்பும்! (பதிற்று. 62: 14–18)

கபிலர்

பொருள்:

வளமான வயலில் விளைந்த கதிரிலிருந்து, களத்தில் உதிர்ந்த நெல்மணிகளைச் சேர்த்து, அவற்றைத் தூசு நீக்காமல் காஞ்சி மரத்தின் அடியிலே ஒன்றாய்த் தொகுத்து வைத்தனர் உழவர்கள். அந்நெல்லைக் கொடுத்துக் கள்ளினைப் பெற்றுக் குடித்த வலிய கையைக் கொண்ட உழவர், வண்டுகள் மொய்க்கும் ஆம்பல் மலரினைச் சூடியிருப்பர்.

Farmers let their cows graze in meadows
While they heap excess grains under trees
And drink toddy; Bees buzz around lilies
That adorn these strong farmer's heads.



யோகவிஸ்வா
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

டிசம்பர்
DECEMBER 09

கழுவுள் அடி பணிந்தான்

கன்றுடை ஆயம்தரீஇப் புகல்சிறந்து,
புலவு வில் இளையர் அங்கை விடுப்ப,
மத்துக்கயிறு ஆடா வைகல்பொழுது நினையூஉ,
ஆன்பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்க,
பதிபாழாக வேறுபுலம் படர்ந்து! (பதிற்று. 71: 14–18)

அரிசில் கிழார்

பொருள்:

கன்றுடன் கூடிய ஆநிரைகளை நீ கைப்பற்றி உன் வீரர்களுக்குத் தந்தாய். அதனால் ஆர்வம் கொண்ட அவ்வீரர்கள் மீண்டும் மீண்டும் அம்பு விட்டனர். தயிர் கடையும் மத்தில் கயிறு இடாத அதிகாலையிலேயே வந்து உன் அடி பணிவதற்காக கழுவுள் என்னும் இடையர் தலைவன் வணங்கி நின்றான். அதனால் வேறு ஊர்கள் பலவும் பாழாகும்படியாய்ப் பகைவர் நாட்டை நோக்கிப் புறப்பட்டாய்!

Cattle herders who live with fear gave oxen, cows and calves to
Your soldiers who carry flesh–reeking bows.
Kazhuvul, the leader of cattle herders, bowed to you in the early morning
And gave tributes, to guard his kin from raids.
Thus you turned to lands afar.



கு. மோகன்ராஜ்
ஓவியர், கோயம்புத்தூர்.

வெ. ச. ராஜலட்சுமி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

10
டிசம்பர்
December

ஊழித்தீப் போன்றவன்

நிலம் பொறை ஒராஅநீர் ஞெமர வந்து ஈண்டி,
உரவுத்திரை கடுகிய உருத்து எழு வெள்ளம்,
வரையா மாதிரத்து இருள்சேர்பு பரந்து,
ஞாயிறுபட்ட அகன்றுவரு கூட்டத்து
அம்சாறு புரையும் நின்தொழில் ஒழித்து,
பொங்குபிசிர் நுடக்கிய செஞ்சுடர் நிகழ்வின்!

(பதிற்று. 72: 9–14)

பொருள்: **அரிசில் கிழார்**

உயிரினங்கள் ஒருங்கே அழிவதற்குரிய ஊழிக்காலம் வரும்போது, நீர் பெருகும். வலிய அலைகள் மேலெழுந்து அனைத்துத் திசைகளிலும் இருளுடன் பரவும். இந்த இருளைப் போக்குவதற்கு ஊழி முடிவில் பன்னிரண்டு சூரியனும் தோன்றும். அச்சூரியன் இருளையும் வெள்ளத்தையும் வற்றும்படி செய்வதைப் போன்ற நீ, பகைவரை எதிர்க்கும்போது, ஊழிக்காலத்தில் தோன்றும் வடவைத் தீயைப் போலச் சினத்துடன் தோன்றுவாய்.

During apocalypse, all living beings perish
Sea waves roar and floods spread across the land,
Darkness engulfs the world; then, the Sun's rays will spread
To evaporate flood waters with their heat;
Like that apocalyptic fiery sun are you, my Lord!
To your enemies.

டிசம்பர்
DECEMBER 11

கு. மகேஷ்வரிப்பிரியா
ஓவியர், சிவகாசி.

அயிலைமலைக் கொற்றவை

கொல்களிற்று யானை எருத்தம் புல்லென,
வில்குலை அறுத்து, கோலின் வாரா
வெல்போர் வேந்தர் முரசு கண் போழ்ந்து, அவர்
அரசு உவா அழைப்பக் கோடுஅறுத்து இயற்றிய
அணங்குடை மரபின் கட்டில் மேலிருந்து,
தும்பைசான்ற மெய்தயங்கு உயக்கத்து
நிறம்படுகுருதி புறம் படின் அல்லது,
மடை எதிர்கொள்ளா அஞ்சுவரு மரபின்
கடவுள் அயிரையின் நிலைஇ! (பதிற்று. 79: 10–18)

அரிசில் கிழார்

பொருள்:

உன் பகை மன்னரின் யானையை வீழ்த்தி அதன் தந்தத்தை வெட்டி, இருக்கை அமைத்து அதில் வீற்றிருந்தாய். உனது ஆட்சிக்குக் கீழ்ப்படியாத அவர்களுடைய முரசின் கண்ணைக் கிழித்தாய். தும்பை மலரைச் சூடிப் போரிட்ட உன் வீரர்களின் உடலில் உண்டான புண்களிலிருந்து ஒழுகும் குருதியால் மடைகொடுத்தும் ஏற்காத அச்சம் தருபவளாகத் திகழ்ந்தாள் அயிலை மலைக் கொற்றவை.

My lord! You broke your enemy's war drum
Killed his royal elephant, and carved a seat out of its tusks
For the fearsome war goddess of Ayirai hills,
Who is not satisfied with offerings of warriors' blood alone.

12
டிசம்பர்
December

நீடு வாழ்க!

எரிமருள் வேங்கை இருந்த தோகை,
இழையணி மடந்தையின் தோன்றும் நாட!
இனிது செய்தனை யால், நுந்தை வாழியர்!
நன்மனை வதுவை அயர, இவள்
பின்னிருங் கூந்தல் மலர் அணிந்தோயே! (ஐங். 294)

கபிலர்

பொருள்:
வேங்கை மரத்தில் அமர்ந்திருக்கும் மயில், அணிகளை அணிந்த மகளிர் போல் தோன்றும் நாடனே! நல்ல மனையில் மணம் நிகழும் இவ்வேளையில், இவளுடைய பின்னப்பட்ட கரிய கூந்தலில் மலரை அணிவித்தாய். இதை முன்னமே செய்தாய் என்றாலும், இப்போது இனிதே செய்தாய். இப்படிப்பட்ட உன் பெற்றோர் நீடு வாழ்வாராக!

O' hero of the country, where the peacock, seated
On the *venkai* tree that has flame-like flowers,
Seems like a belle, bedecked with jewels,
You adorned her braided dark tresses
With blooms to celebrate the wedding in good house,
You did the pleasant thing,
May your father live long!

செ. கணேசமூர்த்தி
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

டிசம்பர் DECEMBER 13

குன்றமே நீ வாழ்க!

அறம் சாலியரோ! அறம் சாலியரோ!
வறன் உண்டாயினும், அறம் சாலியரோ!
வாள் வனப்புற்ற அருவிக்
கோள்வல் என்னையை மறைத்த குன்றே! (ஐங். 312)

கபிலர்

பொருள்:

உடன்போக்கில் தலைவனுடன் சென்றபோது, எங்களைத் தொடர்ந்து வந்த எம் உறவினர் அறியாதபடி தலைவனை மறைத்து உதவிய ஒளி பாயும் அருவிகளையுடைய குன்றமே! எங்கும் வறட்சி உண்டாயினும், இம்மலையில் வறட்சி ஏற்படாமல் அறம் நிறைந்து வளம்பெற்று ஓங்குக.

Let virtue abound; even during famine!
In the hill of bright charming waterfalls
Which concealed my hero from my kin
When we eloped.



மு. ரெங்கதுரை
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

14

டிசம்பர்

December

உயிர் தப்புவாளோ!

யாங்கு ஆகுவள்கொல் தானே, ஓங்குவிடைப்
படுசுவல் கொண்ட பகுவாய்த் தெள்மணி
ஆபெயர் கோவலர் ஆம்பலொடு அளைஇ,
பையுள் நல்யாழ் செவ்வழி வகுப்ப,
ஆர்உயிர் அணங்கும் தெள்இசை
மாரி மாலையும் தமியள் கேட்டே! (அகம். 214: 10–15)

வடம வண்ணக்கன் பேரி சாத்தனார்

பொருள்:

காளையின் கழுத்தில் கட்டிய பெரிய மணியின் ஓசையையும், பசுக்களை அழைத்துவரும் கோவலர் மீட்டும், பிரிந்துள்ளவர்களுக்குத் துன்பத்தைத் தரும் ஆம்பல் குழலோசையையும், யாழில் செவ்வழிப்பண் இசையையும் மாலைக்காலத்தில் தலைவனைப் பிரிந்திருக்கும் தலைவி கேட்டால் எந்நிலையை அடைவாளோ?

The cowherds would go homeward with their cattle
When the big bells tied to the necks of the huge bulls would tinkle;
The cowherds would play their pipe and also their goodly *yaal*.
Alas, what would be the plight of her when she hears this music
That causes grief to the lonely?



ந. சிவானந்தி
ஓவியர், செங்கல்பட்டு.

டிசம்பர் DECEMBER 15

த. மதிநிறைச்செல்வன்
ஓவியர், கோயம்புத்தூர்.

தந்தைக்கு உணவுதரும் மகள்

நாண்கொள்நுண் கோலின் மீன்கொள் பாண்மகள்,
தான் புனல் அடைகரைப் படுத்த வராஅல்,
நார்அரி நறவுஉண்டு இருந்த தந்தைக்கு,
வஞ்சி விறகின் சுட்டு வாய் உறுக்கும்
தண்துறை ஊரன் பெண்டிர்! (அகம். 216: 1–5)

ஐயூர் முடவனார்

பொருள்:

கயிற்றையுடைய தூண்டிற்கோலால் மீனைப் பிடிக்கும் பாணர் மகள், அவள் பிடித்து, கரையில் இழுத்துப் போட்ட வரால் மீனை வஞ்சி மர விறகால் சுடுவாள். அம்மீனை, வடிகட்டிய கள்ளைக் குடித்த, தன் தந்தைக்கு ஊட்டுவாள். இப்படிப்பட்ட நீர்த்துறையைக் கொண்ட தலைவன்.

A lass of the Paanar clan
Catches a *varaal* fish from the bank of a stream nearby;
She roasts it in the fire and lovingly feeds her father,
Who is intoxicated with filtered liquor.

16
டிசம்பர்
December

தலைவனோடு செல்

...நின்
தண்நறு முச்சி புனைய, அவனொடு
கழை கவின் போகிய மழைஉயர் நனந்தலை,
களிற்று இரை பிழைத்தலின், கயவாய் வேங்கை
காய்சினம் சிறந்து குழுமலின் வெரீஇ,
இரும்பிடி இரியும் சோலை
அருஞ்சுரம் சேறல் அயர்ந்தனென் யானே! (அகம். 221: 9–14)

கயமனார்

பொருள்:

'மழை பெய்யாததால் மூங்கில்கள் அழகிழந்து காணப்படும் பாலைநிலத்தில், வேங்கைப்புலி ஒன்று ஆண் யானையைத் தாக்குவதற்குக் குறிபார்த்தது. அந்தக் குறி தப்பிவிட்டதால், சினத்தோடு முழங்கும் வேங்கைப்புலியின் குரல் கேட்டு, கரிய பெண் யானைகள் அஞ்சி ஓடும் கொடுமையான வழியில், உனக்கு பூச்சூட்டிய தலைவனுடன் நீ, உடன்போக்கில் செல்' என்றாள் தோழி.

Our lover, who adorned your treeses with honey–dripping blooms,
Will go with you crossing the well–nigh impassable path
Where the bamboo clusters have lost their beauty
And where the dark–hued she–elephants run scared
On hearing the growl of an angered tiger.

ப. லோகப்ரியன்
மரபுக் கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைக் கல்லூரி
மாமல்லபுரம்.

டிசம்பர் DECEMBER 17

எம் தலைவனைப் போன்றது இது!

அரும்புழை முடுக்கர் ஆள்குறித்து நின்ற
தறுகண் பன்றி நோக்கி, கானவன்
குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி
மடைசெலல் முன்பின்தன் படைசெலச் செல்லாது,
அருவழி விலக்கும்எம் பெருவிறல் போன்ம் என,
எய்யாது பெயரும் குன்றநாடன்! (அகம். 248: 5–10)

கபிலர்

பொருள்:

வேட்டையாடுபவரை எதிர்நோக்கிக் காத்திருந்தது காட்டுப்பன்றி. அதனை வேடன் ஒருவன் அருகில் நின்று பார்த்தான். 'பகைவர் படையைத் தடுப்பதற்குச் செல்லும் ஆற்றல் வாய்ந்த தன் படை வீரர் புறமுதுகுகாட்டி ஓடிவிட, தான் ஓடாமல் பகைவர் வரும் வழியில் தடுத்து நிற்கும் என் வலிமையான தலைவனைப் போல் இப்பன்றி உள்ளது' என எண்ணி வியந்து, அதன்மீது அம்பு எய்யாமல் திரும்பிப் போனான்.

A boar stands poised to attack men.
A hunter nears the boar aiming at it a sharp dart
But moves away without attacking as it recalls to his mind
His valorous chief, who would not move away from the battlefield
Even when his warriors of immense strength retreated.



தே. இரவிக்குமார்
ஓவியர், கரூர்.

18

டிசம்பர்

December

குற்றமிழைத்தவனுக்குத் தந்த தண்டனை

த. மதிநிறைச்செல்வன்
ஓவியர், கோயம்புத்தூர்.

தொல்புகழ் நிறைந்த பல்பூங் கழனி,
கரும்பு அமல் படப்பை, பெரும்பெயர்க் கள்ளூர்,
திருநுதல் குறுமகள் அணிநலம் வவ்விய
அறனிலாளன், அறியேன் என்ற
திறன்இல் வெஞ்சூள் அறிகரி கடாஅய்,
முறிஆர் பெருங்கிளை செறியப் பற்றி,
நீறு தலைப்பெய்த ஞான்றை,
வீறுசால் அவையத்து ஆர்ப்பினும் பெரிதே! (அகம். 256: 14–21)

மதுரைத் தமிழ்க்கூத்தனார் கடுவன் மள்ளனார்

பொருள்:

கள்ளூர் என்னும் ஊரில் வாழ்ந்த இளம்பெண் ஒருத்தியை, ஒருவன் தன் வலிமையினைக்காட்டி அவளுடைய விருப்பத்துக்கு மாறாக அவள் பெண்மையை நுகர்ந்துவிட்டு, அவளை எனக்குத் தெரியாது என்று சொல்லிவிட்டான். அப்பெண், ஊர்ப் பெரியவர்களிடம் கூறிட, குற்றம் மெய்ப்பிக்கப்பெற்றதைத் தொடர்ந்து, குற்றமிழைத்தவனை ஒரு பெரிய மரத்தில் கட்டி வைத்து, அவன் தலையில் சாம்பலைக் கொட்டினர். அச்சமயம் அருகிலிருந்த அவ்வூர்க்காரர்கள் ஆரவாரம் செய்தனர்.

In Kallur, when the elders heard the plaint of a girl of tender age,
And punished the lad who had despoiled her feminine charm
By pouring buckets of ash as a way of chastisement,
The townsfolk aroused an uproar with excitement.

டிசம்பர் DECEMBER 19

பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மறக்குடிப் பெண்

மேல்நாள் உற்ற செருவிற்கு இவள்தன்ஐ,
யானை எறிந்து களத்து ஒழிந்தனனே!
நெருநல் உற்ற செருவிற்கு, இவள்கொழுநன்,
பெருநிரை விலங்கி, ஆண்டுப்பட் டனனே!
இன்றும், செருப்பறை கேட்டு, விருப்புற்று, மயங்கி,
வேல் கைக் கொடுத்து, வெளிதுவிரித்து உடீஇ,
பாறுமயிர்க் குடுமி எண்ணெய் நீவி,
ஒருமகன் அல்லது இல்லோள்,
செருமுக நோக்கிச் செல்க! என விடுமே! (புறம். 279: 3–11)

ஒக்கூர் மாசாத்தியார்

பொருள்:

முதல்நாள் போரில் இவளுடைய தந்தை, யானையை வீழ்த்தித் தானும் இறந்தார். நேற்றைய போரில், இவளுடைய கணவன் ஆநிரைகளைக் கவர்ந்து செல்பவர்களிடம் போரிட்டு அவற்றைக் காத்து இறந்தான். இன்றைய போருக்கு வீரர்களை அழைக்கும் பறையொலி கேட்டு, தன்னுடைய ஒரே மகனை அழைத்து, அவன் தலைக்கு எண்ணெய் தேய்த்து, வெள்ளுடை உடுத்தி, கையில் வேலைக் கொடுத்து, 'போர்க்களம் நோக்கிச் செல்வாயாக' என்று சொல்லி அனுப்புகிறாள்.

Her father was killed in the battle two days before, slaying an elephant;
Her husband was killed yesterday, protecting the cow herd;
Yet today, when she hears the roll call for battle,
She hands the spear to her only son and sends him forth.

20
டிசம்பர்
December

உயிர்த் துணையானவன் தலைவன்

இடையன் பொத்திய சிறுதீ விளக்கத்து,
பாணரொடு இருந்த நாணுடை நெடுந்தகை
வலம்படு தானை வேந்தற்கு
உலந்துழி உலக்கும் நெஞ்சறி துணையே! (புறம். 324: 11–14)

ஆலத்தூர் கிழார்

பொருள்:
இடையர் கொளுத்திய சிறிய விளக்கொளியில் பாணர் சூழ்ந்திருக்க, அவரிடையே வீற்றிருந்த அடக்கமுடைய தலைவன், வெற்றியையுடைய மன்னனுக்கு உயிர் போகும்படியான துன்பம் வந்தால் தானும் உயிர் கொடுக்கும் துணையானவன். அவன் வாழ்க!

My lord, who sits amiably with bards
Amidst lamps lit by herdsmen,
Will treat his king's troubles as his own
And stand with him, such a true ally is he.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

டிசம்பர் DECEMBER 21

தலைவன் ஊரின் வீரமும் ஈகையும்

அலந்தலை இரத்தி அலங்குபடு நீழல்,
கயந்தலைச் சிறாஅர் கணை விளையாடும்
அருமிளை இருக்கை அதுவே! வென்வேல்
வேந்து தலைவரினும் தாங்கும்,
தாங்கா ஈகை, நெடுந்தகை ஊரே! (புறம். 325: 11–15)

உறையூர் முதுகண்ணன் சாத்தனார்

பொருள்:

வெற்றி வேல் கொண்ட மன்னர், பெரும்படையுடன் எதிர்த்து வந்தாலும் தாங்கும் அளவு வலிமையுடைய காவல் காடுகளையும் அளவற்ற வகையில் பிறருக்கு வழங்கும் வளத்தையும் உடையது தலைவனின் ஊர். அந்த ஊரின் மன்றத்தில் உள்ள இலந்தை மர நிழலில் சிறிய தலையுடைய சிறுவர்கள் அம்பு எய்து விளையாடுவர்.

In the shade of the swaying tree in public square
Kids play with bows and arrows in this impregnable town;
Even if mighty Kings enter with their great armies,
This town led by the generous chief can provide for them all.

செ. சிவபாலன்
ஓவியர், விருதுநகர்.

சு. தமிழ்மணி
ஓவியர், சேலம்.

22
டிசம்பர்
December

காளைப் போர்

இனத்தின் தீர்ந்த துளங்கு இமில் நல் ஏறு,
மலைத் தலைவந்த மரைஆன் கதழ் விடை,
மாறா மைந்தின் ஊறு படத் தாக்கி,
கோவலர் குறவரோடு ஒருங்கு இயைந்து ஆர்ப்ப,
வள் இதழ் குளவியும் குறிஞ்சியும் குழைய,
நல் ஏறு பொரூஉம் கல்லென் கம்பலை!

(மலைபடு. 330–335)

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

பொருள்:

தன் மந்தையை விட்டு நீங்கிவந்த எருதும் மலையிலிருந்து இறங்கி வந்த மலை எருதும் பின் வாங்காமல் ஒன்றை ஒன்று தாக்கும். அதனைக் காட்டுமல்லி மாலை அணிந்த ஆயரும் குறிஞ்சி மாலை அணிந்த குறவரும் ஆரவாரத்துடன் கண்டு களிப்பர். இவ்வாறு போர் செய்யும் எருதுகளால் அந்த ஊரே ஆரவாரத்துடன் விளங்கியது.

A bull with a moving hump, that strayed from its herd
And another bull that came from the mountains, fine males,
Fought with each other with strength without backing down,
Causing wounds to each other,
Ruining thick–petaled *kulavi* flowers and *kurinji* blossoms.
To this, the cattle herders and mountain dwellers raised uproars.

டிசம்பர் DECEMBER 23



க. யோகேஷ்
அரசு கவின் கலைக் கல்லூரி, சென்னை.

பெண் கேட்டு நடக்கும் போர்

நுதிவேல் கொண்டு நுதல்வியர் துடையா,
கடிய கூறும், வேந்தே! தந்தையும்
நெடிய அல்லது பணிந்து மொழி அலனே!
இஃது இவர் படிவம் ஆயின், வைஎயிற்று
அரிமதர் மழைக்கண் அம்மா அரிவை,
மரம்படு சிறு தீப் போல,
அணங்கு ஆயினள் தான் பிறந்த ஊர்க்கே! (புறம். 349)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

வேந்தனும் தன் கை வேலின் முனையால் நெற்றியின் வியர்வையைத் துடைத்தபடி, அச்சம் தரும் சொற்களைச் சொல்கிறான். இவளுடைய தந்தையும் வஞ்சினச் சொற்களைத் தவிரப் பணிவைப் புலப்படுத்தும் சொற்களைச் சொல்லவில்லை. இது இவர்களுடைய கொள்கையாகும். இதை ஆராய்ந்து பார்க்கின், கூர்மையான பற்களையும் வரிகள் பொருந்திய கண்களையும் அழகிய மாநிறத்தையும் உடைய பெண், மரத்தைக் கொண்டு தீக்கடையும்போது தோன்றும் தீ அம்மரத்தையே அழிப்பதைப் போன்று, தான் தோன்றிய ஊருக்கே துன்பத்தை ஏற்படுத்திவிட்டாள்.

The king, who wipes the sweat from his forehead
With the tip of his spear, speaks words that are fierce.
Her father says nothing to ingratiate himself but only mouths curses.
So they stand, and the lovely woman,
Like a wood burning itself out of sparks while being sawed,
Brings sorrow now to her native city.

24
டிசம்பர்
December

பன்னாட்டுப் பொருள்களுடைய புகார் வீதி

நீரின் வந்த நிமிர் பரிப் புரவியும்,
காலின் வந்த கருங்கறி மூடையும்,
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்,
குடமலைப் பிறந்த ஆரமும் அகிலும்,
தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்,
கங்கை வாரியும், காவிரிப் பயனும்,
ஈழத்து உணவும், காழகத்து ஆக்கமும்,
அரியவும் பெரியவும் நெரிய ஈண்டி,
வளம் தலை மயங்கிய நனந்தலை மறுகின்! (பட்டின. 185–193)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

கப்பலில் வந்த நிமிர்ந்த நடைகொண்ட குதிரைகளும், வண்டிகளில் வந்த கரிய மிளகு மூட்டைகளும், வடமலையில் கிடைத்த பொன்னும், குடகு மலையில் கிடைத்த சந்தனமும் அகிலும், கங்கைக் கரையில் கிடைத்த பொருள்களும், காவிரிக் கரையில் கிடைத்த பொருள்களும், ஈழத்தில் கிடைத்த உணவு வகைகளும், மியான்மரில் கிடைத்த பொருள்களும் அரியவையாகவும் பெரியவையாகவும் காவிரிப்பூம்பட்டினத்துத் தெருக்களில் நிறைந்திருந்தன.

Swift horses which arrive on ships from abroad,
Sacks of black pepper that arrive by carts,
Gold that comes from northern mountains,
Sandalwood and *akil* that come from the western mountains,
Materials that come from the Ganges, and the yields of river Kaaviri,
Things from Eezham, products made in Myanmar,
And many rare and big things are seen piled up
On the wide streets of Kaaviripoompattinam.



பழந்தமிழர் வாழ்வியல் காட்சிக்கூடம்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை.

டிசம்பர்
DECEMBER 25

குறவர் தந்த பரிசுகள்

கருங்கோல் குறிஞ்சி அடுக்கம் பாட,
புலிப்பல் தாலிப் புன்தலைச் சிறாஅர்
மான்கண் மகளிர், கான்தேர் அகன்று உவா
சிலைப்பாற் பட்ட முளவுமான் கொழுங்குறை,
விடர்முகை அடுக்கத்துச் சினைமுதிர் சாந்தம்,
புகர்முக வேழத்து மருப்பொடு மூன்றும்,
இருங்கேழ் வயப்புலி வரிஅதள் குவைஇ,
விருந்துஇறை நல்கும்! (புறம். 374: 8–15)

உறையூர் ஏணிச்சேரி முடமோசியார்

பொருள்:

குறிஞ்சி மரம் பொருந்திய மலையைப் போற்றிப் பாடினேன். எனக்குப் புலிப்பல் கோத்த தாலி அணிந்த குறச் சிறுவர்களைப் பெற்ற மான்போன்ற கண்களையுடைய மகளிரின் கணவர், தங்கள் வில்லினால் வீழ்த்திய முள்ளம்பன்றியின் கொழுத்த ஊனையும், மலையில் கிடைத்த சந்தனக் கட்டைகளையும், புள்ளிபொருந்திய முகத்தையுடைய யானையின் தந்தங்களையும், வலிமையான புலியின் தோல் மீது குவித்துக் கொடுத்தனர்.

As I sang the praises of his hill country,
The hill chieftain plied me with gifts of
Chunky meat of porcupine, sandal wood pieces
And elephant tusks, spread over a rug of tiger skin.



அச்சுதன் ரவி
ஓவிய ஆசிரியர், தென்காசி.

ஜி. ஜெயகீர்த்தனா,
கிரீன் ஃபீல்ட் இண்டர்நேசனல் பள்ளி
மாதவரம்.

26
டிசம்பர்
December

நம்பிக்கை தந்தான்

'நேர் இறை முன் கை பற்றி, நுமர் தர,
நாடு அறி நன் மணம் அயர்கம் சில் நாள்,
கலங்கல் ஓம்புமின், இலங்கு இழையீர்!' என
ஈர நல் மொழி தீரக் கூறி,
துணை புணர் ஏற்றின் எம்மொடு வந்து,
துஞ்சா முழவின் மூதூர் வாயில்
உண் துறை நிறுத்துப் பெயர்ந்தனன்! (குறிஞ்சி. 231 – 237)
கபிலர்

பொருள்:

தலைவியின் முன்கையைப் பற்றி, 'உன்னை உன் உறவினர் எனக்குத் தர, நாடறியும்படி இன்னும் சில நாளில் திருமணம் செய்து கொள்வேன், கலங்காதே!' என்று நல்ல சொற்களைத் தலைவியின் துன்பம் தீருமாறு கூறி, பசுவைப் புணர்ந்த எருது போல், எங்களுடன் வந்து, முழவின் ஓசை நிற்காத நம் ஊரின் வாயிலில் நீர்த் துறையில் எங்களை நிறுத்திவிட்டுச் சென்றான்.

To soothe our grief, he spoke to us these gracious words:
'Oh maid, hear! We'll wed thee with public rites performed right.'
Like a bull that pursues a cow, he came close after us,
And left us at the gates of our busy ancient town.

டிசம்பர் DECEMBER 27

ஆ. மகாதேவன்
ஓவியர், ஈரோடு.

போர் வரினும் அஞ்சேன்

வினை அமை பாவையின் இயலி, நுந்தை
மனை வரை இறந்து வந்தனை ஆயின்,
அமர் வரின் அஞ்சேன், பெயர்க்குவென்!
நுமர் வரின், மறைகுவென் மாஅயோளே! (நற். 362: 1–2, 9–10)

மதுரை மருதன் இளநாகனார்

பொருள்:

பாவை ஒன்று உயிர்பெற்று நடப்பதுபோல் உன் தந்தையின் வீட்டைவிட்டு என்னுடன் வந்த மாமை நிறம் கொண்டவளே! நம்மை எதிர்த்து யாராவது வந்தால் அஞ்சாமல் அவர்களுடன் போரிட்டு வெல்வேன். உனது உறவினர் யாராவது வந்தால் நான் மறைந்து கொள்வேன்.

O' damsel,
Like a doll that walks, you have crossed
The boundaries of your father's house
To be with me;
If strangers come to take you away,
I will chase them.
If your relatives come, I will hide!

28

டிசம்பர்

December

துறைமுகத்தில் சுங்கவரி

நல் இறைவன் பொருள் காக்கும்
தொல் இசைத் தொழில் மாக்கள்,
காய் சினத்த கதிர்ச் செல்வன்
தேர் பூண்ட மாஅபோல,
வைகல்தொறும் அசைவு இன்றி,
உல்கு செயக் குறைபடாது! (பட்டின. 120–125)

கடியலூர் உருத்திரங்கண்ணனார்

பொருள்:

சோழ மன்னனின் பொருட்களைக் காக்கும் பழமையான தொழிலான சுங்கத் தொழில் செய்பவர்கள், காவிரிப் பூம்பட்டினத்தில் உள்ள அகன்ற தெருவில், கதிரவனின் தேரில் கட்டப்பட்ட குதிரைகளைப் போல, நாள்தோறும் சோம்பல் இல்லாமல் சுங்க வரியைக் குறையாமல் கொள்வர்.

The good King's servants guard his goods
In store-rooms built on streets that skirt the sea.
Prompt as the sun-god's fast steeds, they daily do
Their work with care and levy dues.

ஜெ. பவித்ரா
ஓவியர், சென்னை.

டிசம்பர்
DECEMBER 29

காட்டாற்று வழி

உரவு களிறு கரக்கும் இடங்கர் ஒடுங்கி,
இரவின் அன்ன இருள் தூங்கு வரைப்பின்,
குமிழி சுழலும் குண்டு கய முடுக்கர்,
அகழ் இழிந்து அன்ன, கான்யாற்று நடவை
வழூஉம் மருங்கு உடைய! வழாஅல் ஓம்பி
பரூஉக் கொடி வலந்த மதலை பற்றி,
துருவின் அன்ன புன் தலை மகாரோடு,
ஒருவிர் ஒருவிர் ஓம்பினிர் கழிமின்! (மலைபடு. 211 – 218)

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

பொருள்:

காட்டாற்று மடுக்களில் முதலைகள் இருக்கும். அவை ஆண் யானைகளையும் விழுங்கும் தன்மையானவை. பகலிலும் இரவைப் போல் தோன்றும் அந்த மலையின் ஆழமான மடுக்களில் நீர்ச்சுழிகள் இருக்கும். அந்தக் காட்டாற்றின் ஓரமாகச் சென்றாலும் வழுக்கும் இடங்கள் உண்டு. அங்கெல்லாம் பருமனாக உள்ள காட்டுக் கொடிகளைப் பற்றிக்கொண்டு செல்ல வேண்டும். குழந்தைகளை நடக்க விடாமல் தூக்கிக் கொண்டு ஒருவர் கடந்தபின் மற்றொருவர் என நடந்து செல்லுங்கள்.

There is a path along the river wild
That runs through forests as dark as the night
In which crocodiles live. There are whirlpools and pits too.
Protect your children while walking along this slippery path,
Holding the strong creepers that twine round trees.



கி. தக்ஷ்னா
செந்திகுமார நாடார் கல்லூரி
விருதுநகர்.

30
டிசம்பர்
December



க. கணேசன்
ஓவியர், திண்டுக்கல்.

மலையுச்சியில் உள்ள கோவில்

உயர் நிலை மாக் கல் புகர் முகம் புதைய,
மாரியின் இகுதரு வில் உமிழ் கடும் கணை,
தாரொடு பொலிந்த, வினை நவில் யானைச்
சூழியின் பொலிந்த சுடர் பூ இலஞ்சி,
ஓர் யாற்று இயவின், மூத்த புரிசைப்
பராவு அரு மரபின் கடவுள் காணின்,
தொழாநிர் கழியின் (மலைபடு. 225 – 231)

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

பொருள்:

மழைபொழிவது போன்று பகைவர் வில் வெளிப்படுத்திய கடிய அம்புகள் பட்டபோதும், அதற்கு அஞ்சாமல், பகைவரின் தூசிப்படையுடன் போரிட்ட பொலிவுடைய யானைப்படையை உடையது நவிரமலை. அதன் உச்சியில் பூக்கள் நிறைந்த பொய்கையும் பழமையான மதிலை உடைய திருக்கோவிலும் உள்ளன. வழிபடத்தக்க அக்கோவிலில் உள்ள கடவுளை வணங்கிச் செல்லுங்கள்.

On your way lies the lofty mountain of Nannan,
Guarded by elephants tall whose faces scarred
With the arrows shot like pouring rains by the foes.
On its crest, in an ancient shrine,
If you do see the god, worship him before you go.

டிசம்பர்
DECEMBER 31

ஜே. ரெக்ஸ்லின் ஷோபனா
ஓவியர், திருவண்ணாமலை.

மலைத்தேன் எடுக்கும் கானவர்

கலை கையற்ற காண்பு இன் நெடு வரை,
நிலை பெய்து இட்ட மால்பு நெறி ஆக,
பெரும் பயன் தொகுத்த தேம் கொள் கொள்ளை,
அரும் குறும்பு எறிந்த கானவர் உவகை! (மலைபடு. 315–318)

இரணியமுட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்

பொருள்:

முசு என்னும் ஆண் குரங்குகள் ஏறமுடியாத, காண்பதற்கு அழகிய மலை உச்சியில் ஏணியை நிலைபெற நாட்டி, அதில் ஏறி, தேனீக்கள் திரட்டி வைத்த மிகுதியான தேனை எடுத்த கானவர்கள், அரண்களை அழித்தவர்கள் போல் மகிழ்ச்சியில் ஆரவாரிப்பர்.

The hillmen joyously shout as they pilfer honey sweet
Stored up by bees for profitable use
On high attractive hills beyond the reach
Of monkeys wild, by climbing ladders tall.